அமைப்புப் பொருண்மையியலும் தொல்காப்பிய இலக்கண மரபும்

ரா. செயராமன்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தொல்காப்பியர் ஆய்வு இருக்கை தமிழக அரசு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 2013ஆம் ஆண்டு ஐம்பது இலட்சம் ரூபாயினை வைப்பு நிதியாக வைத்து, தொல்காப்பியர் ஆய்வு இருக்கையினை ஏற்படுத்தியுள்ளது. 2014 ஆகஸ்டு முதல் செயல்படத் தொடங்கியுள்ள இவ்விருக்கையின் மூலமாகத் தொல்காப்பியம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல், தொல்காப்பியத்திற்கும் அதன் உரைகளுக்கும் ஆய்வுப் பதிப்பினை உருவாக்குதல், உரைவளப் பதிப்பினை விரிவாக்குதல், ஆண்டுதோறும் கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள் நடத்துதல், சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தி நூலாக்குதல், தொல்காப்பியம் தொடர்பாகப் பல்வேறு ஆய்விதழ்களில் வெளியான கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்குதல் ஆகிய பணிகள் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அமைப்புப் பொருண்மையியலும்
தொல்காப்பிய இலக்கண மரபும்

தொல்காப்பியர் ஆய்வு இருக்கை வெளியீடு: 8

அமைப்புப் பொருண்மையியலும் தொல்காப்பிய இலக்கண மரபும்

ரா. செயராமன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113

2016

நூல் விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	அமைப்புப் பொருண்மையியலும் தொல்காப்பிய இலக்கண மரபும்
ஆசிரியர்	:	ரா. செயராமன்
வெளியீட்டாளரும் பதிப்புரிமையும்	:	தொல்காப்பியர் ஆய்வு இருக்கை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை - 600 113.
தொலைபேசி எண்	:	044 - 2254 2992
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2016 முதல் பதிப்பு
பயன்படுத்திய தாள்	:	16 கிகி டி.என்.பி.எல். வெள்ளை
நூலின் அளவு	:	1/8 டெம்மி
எழுத்தின் அளவு	:	11.5 புள்ளி
பக்க எண்ணிக்கை	:	xvi + 168
அச்சுப் படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	₹130/ (ரூபாய் நூற்றி முப்பது மட்டும்)
ISBN no.	:	978-93-85165-18-4
பொருண்மை	:	இலக்கணமும் மொழியியலும்
அச்சகம்	:	ரியல் இம்பேக்ட் சொல்யூஷன்ஸ், சென்னை.

பொருட்குப் பொருள் தெரியின்
அது வரம்பின்றே

-(தொல். உரியியல். 93)

முனைவர் கோ. விசயராகவன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 113.

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செயல்பட்டு வரும் தொல்காப்பியர் ஆய்வு இருக்கையில் பேராசிரியர் ரா. செயராமன் அவர்களின் அமைப்புப் பொருண்மையியலும் தொல்காப்பிய இலக்கண மரபும் என்னும் நூல் ஆய்வு இருக்கை வெளியீட்டு வரிசையில் ஏழாவதாக வருகிறது.

இந்நூல் தொல்காப்பியம் என்னும் பேரிலக்கண நூலையும் அந்நூல் வழி வந்த இலக்கண மரபுகளையும் தொல்காப்பியத்துக்கு முன்னும் பின்னும் வெளியான இலக்கிய மரபுகளையும் மொழிப் பார்வையில் புதிய வெளிச்சங்களைப் பாய்ச்சுகிறது.

மொழியியல் பார்வையில் தொல்காப்பியத்தை அணுகும் முறையியல் தமிழில் விரிவாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனினும் மொழியியலின் அபரிமிதமான வளர்ச்சியையும் புதிய புதிய சிந்தனைகளையும் அவ்வக்காலத்தில் உள்வாங்கி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தமிழில் மிகவும் குறைவாகவே நடந்துள்ளன. இந்நிலையில் இந்நூல் மொழியியலின் சமகாலச் சிந்தனைகளை அதன் புதிய அடியெடுப்புகளை உள்வாங்கி "அமைப்புப் பொருண்மையியல்" என்னும் கோட்பாட்டுப் பார்வையில் தொல்காப்பிய அறிவு மரபுகளை ஆராய்கிறது.

இந்நூலில் உள்ள 11 கட்டுரைகளும் செறிவான நடையில் ஆழமான கருத்துக்களைத் தாங்கி நிற்கின்றன. இக்கட்டுரைகள் தொல்காப்பிய ஆய்வு வரலாற்றில் புதிய விவாதங்களை மேல் கிளப்புகின்றன. இனி நடைபெறவேண்டிய ஆய்வுகளைக் சுட்டிச் செல்கின்றன. புதிய

இலக்கண நூல்கள் உருவாக வேண்டிய தேவையையும் அதற்கான முறையியலையும் முன்வைக்கின்றன.

பலவகையிலும் சிறப்புடைய இந்நூலினைத் தொல்காப்பியர் ஆய்வு இருக்கையில் வெளியிடக் கொடுத்த பேராசிரியர் ரா.செயராமன் அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற சிறந்த நூல்களை வெளியிட முதன்மையான காரணமாக அமைந்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தொல்காப்பியர் பெயரில் ஆய்வு இருக்கையை உருவாக்க ஆணைபிறப்பித்துத் தொல்காப்பிய ஆய்வுகளுக்கு அடித்தளமிட்ட அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிறுவன வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் செயல்படும் தமிழ் வளர்ச்சித்துறை செயலாளர் முனைவர் த. உதயச்சந்திரன் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல நூல்களைத் தேர்வுசெய்து தொல்காப்பியர் ஆய்வு இருக்கைவழி வெளியிடும் ஆய்வு இருக்கைப் பொறுப்பாளர் அ. சதீஷ் அவர்களுக்கும் நூல் உருவாக்கப் பணியில் ஈடுபட்ட நிறுவனப் பணியாளர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

இயக்குநர்

இலக்கண உருவாக்கத்தின் கோட்பாட்டு பின்புலங்களும் கோட்பாட்டுப் பார்வையில் மரபிலக்கணங்களும்

பேராசிரியர் ரா. செயராமன் அவர்களின் அமைப்புப் பொருண்மை யியலும் தொல்காப்பிய இலக்கண மரபும் என்னும் இந்நூல் தொல்காப்பிய - சங்க இலக்கிய - பிற்கால இலக்கண இலக்கியக் கருத்தியல் வளர்ச்சிகளை - இலக்கணக் கூறுகளை அமைப்புப் பொருண்மையியல் என்னும் கோட்பாட்டுப்பார்வையில் அராய்கிறது. இந்நூலில் இடம்பெற்றுள்ள 11 கட்டுரைகளும் புதிய கோட்பாடுகளை உருவாக்குவதற்கான வலுவான அடித்தளத்தைக் கட்டமைக்கின்றன.

மொழியின் அமைப்பாக்க அடிப்படையில் தொல்காப்பியத்தை புரிந்துகொள்ளும் முயற்சியில் தொடக்கால மொழியியலாளர் பெரிதும் இடர்பட்டதை அவர்களின் ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன. எழுத்து, சொல்,பொருள் என்றும் மூன்றதிகாரங்களில் எழுத்து, சொல் என்பவற்றை மொழியின் இலக்கணமாகவும் பொருளதிகாரத்தை இலக்கியத்தின் இலக்கணமாகவும் பார்த்தனர். பின்னர் மொழிப்பொருண்மை நோக்கில் ஆராய்ந்த அறிஞர்கள் சிலர் தொல்காப்பியத்தின் செய்யுளியலை மட்டும் நீக்கிவிட்டு பிற அனைத்தையும் ஒரு அமைப்பாகக் கொண்டனர். எழுத்து, சொல், பொருள் ஆகிய அதிகாரங்களுக்கிடையே நிலவும் ஒருமைத்தன்மையை அதன் உள்ளார்ந்த மொழி அமைப்பு நிலையை அமைப்புப் பொருண்மையியல் நோக்கில் காண்கிறது இந்நூலிலுள்ள கட்டுரைகள். ஒருவகையில் மொழியியல் ஆய்வின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சி மற்றும் சமகால சிந்தனை மரபுகளை உள்வாங்கி தொல்காப்பியத்தை மீள வாசிக்கும் முறையியலை அறிமுகப்படுத்துகிறது.

இந்திய இலக்கண மரபுகளில் பல்வேறு பொதுமைக்கூறுகள் காணப்பட்டாலும் தமிழ்மொழிக்காண தனித்துவமான சில இலக்கணக்கூறுகளை தமிழிலக்கணிகள் முன்னிருத்துவர். சமஸ்கிருத இலக்கணங்களையும் தமிழிலக்கணங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்த

அறிஞர்கள் சமஸ்கிருத மரபில் இல்லாத திணைப்பாகுபாட்டை தமிழுக்குரியதாக முன்னிருத்துகின்றனர். சொல்லதிகாரத்தில் உள்ள திணைக்கும் பொருளதிகாரத்திலுள்ள திணைக்கும் பொருளடிப்படையில் வேறுபாடு இருப்பது போன்று தோன்றுகிறது. திணை என்னும் சொல் பல்பொருளொருசொல்லாகக் காணப்பட்டு இரண்டு அதிகாரங்களிலும் இருவேறு பொருள்குறிப்பதாகக் கருதினர். மொழி அமைப்புநிலையில், பொருண்மைநிலையில் இணைத்துப்பார்க்கும் இந்நூலின் முதல் கட்டுரை இரு அதிகாரங்களிலும் இடம்பெற்றிருக்கும் திணை என்னும் சொல் அதிகாரப்படிநிலையைக் கட்டமைக்கும் தன்மையில் ஒருமைத் தன்மைஉடையதாக அடையாளங்காணுகிறது. திணை ஆய்வில் புதிய திறப்பினை இக்கட்டுரை வழங்குகின்றது.

தொல்காப்பியச் செய்யுளியல் முப்பத்து நான்கு உறுப்புகளுள் ஒன்றாக பொருள் என்னும் உறுப்பையும் குறிப்பிடுகின்றது. இப்பொருளுறுப்பு முதல், கரு, உரி என்னும் மூன்று பொருட்களின் வேறானதாக அமைகிறது. எல்லாப்பாடல்களிலும் உரிப்பொருள் இருக்கவேண்டியது அவசியம். ஆனால் அதனை விடவும் முதன்மையானதாக செய்யுளியல் குறிப்பிட்டுள்ள பொருள் அமைகிறது. இதனை இந்நூல் இலக்கியப் பொருள் என்று அடையாளப்படுத்துகிறது. உரிப்பொருளைக்காட்டிலும் முதன்மையானதாக இப்பொருள் அமைந்துள்ளதை தக்க சான்றுகளுடன் விளக்குகிறது. மேற்கத்திய மரபுகளில் இருந்து உள்வாங்கப்படும் கோட்பாடுகளைக்காட்டிலும் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மரபைப் புரிந்துகொள்வதற்கான கோட்பாடுகளை வளர்த்தெடுக்கவேண்டிய தேவையையும் இந்நூலிலுள்ள கட்டுரைகள் முன்னிருத்துகின்றன.

வெட்சி, கரந்தை போர்முறைகள் குறித்தும் அதன் பல்வேறு நிகழ்வுகளை இலக்கணப்படுத்தும் தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் முழுமையாக உள்வாங்கியதா என்னும் கேள்வி முதன்மையாக அமைகிறது. அதற்குக் கல்வெட்டுச் சான்றுகள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள இவ்விரு போர்முறைகள் குறித்த தகவல்களையும் ஒருங்குதிரட்டி நுட்பமாக ஆய்வுக்கு உட்படுத்தி இலக்கண நூல்களின் முழுமையற்ற தன்மையை அடையாளப்படுத்துகிறது வெட்சி கரந்தை இலக்கண உருவாக்கமும் பொருண்மை இடைவெளியும் என்னும் கட்டுரை. இலக்கணத்தில் இடம்பெற வேண்டிய பொருண்மைகள் குறித்த தெளிவான முறையியலை முன்னெடுக்கிறது என்பதுடன் இலக்கண உருவாக்கத்தின் கோட்பாட்டு அடிப்படைகளையும் தெளிவாக்குகிறது.

பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையிலுள்ள பொருண்மை வேறுபாடுகளைப்பேசும் கட்டுரை பேச்சு மொழியில் வெளிப்படும் பொருண்மைகளை எழுத்துமொழியில் புரிந்துகொள்வதற்கு இலக்கண உத்திகள் எவ்வாறு பயன்பட்டுள்ளன என்பதை ஆராய்ந்து தெளிவான முடிவினை அளிக்கிறது. வேற்றுமைகள் குறித்த ஆய்வில் தனிக்கவனம் செலுத்தும் இந்நூலாசிரியர் இந்நூலில் வேற்றுமைப் பொருண்மைகள்: வகைமையும் பட்டியலும் என்னும் கட்டுரையை இணைத்துள்ளார். வேற்றுமை உருபுகளின் கருப்பொருளை ஆராய்ந்து அவற்றின் முறையியலை விளக்குவதோடு அவற்றின் இடர்களையும் விளக்குகின்றார். வேற்றுமைகள் குறித்த ஆய்வில் நுட்பமான பொருள்கோடலை நிகழ்த்துகிறது இக்கட்டுரை. இத்தொகுப்பிலுள்ள மற்றுமொரு முதன்மையான கட்டுரை இருளர் விளையாட்டு: மெய்ப்பாட்டியல் பொருண்மைகள் என்பதாகும். சங்ககால தென்னிந்திய அறிவுமரபுகளை புலம் தொகுத்தது தொல்காப்பியம். இன்று தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்ளுவதற்கு சங்ககாலத்து வாழ்முறையின் பண்பாட்டுத் தொடர்ச்சியின் மாறாத தற்கால பதிவுகளை ஆராயவேண்டிய தேவையுள்ளது. கேரளத்தின் பலபகுதிகளில் இன்றும் சங்ககாலப் பண்பாடு நிலவிலுள்ளது. தமிழகத்தில் பழங்குடி சமூகத்தில் அத்தகையப்பதிவினை இருளர் விளையாட்டில் அடையாளங்காணுகிறது இக்கட்டுரை. பண்ணை என்பதற்கு விளையாட்டு ஆயம் என்று இளம்பூரணர் கூறுவது எவ்வளவு பொருட்பொருத்தமுடையது என்பதை அறியமுடிகிறது.

இந்நூலிலுள்ள கட்டுரைகளை கவனமாக வாசிக்கும் பொழுது அமைப்புப் பொருண்மையியல் என்னும் கோட்பாட்டை அறிமுகப்படுத்தி அணுகும் முறையியலுக்கு மாற்றாக அக்கோட்பாட்டை இழையோடவிட்டுத் தமிழ் மரபை அதன் தனித்தப் பண்புகளை ஆழமாக விளக்க முற்பட்டுள்ளது என்பதுவே இந்நூலின் பெரிய பலம் அதற்காகவே தொல்காப்பியர் ஆய்வு இருக்கை இதனை வெளியிடுகிறது.

அ. சதீஷ்
பொறுப்பாளர்
தொல்காப்பியர் ஆய்வு இருக்கை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 113.

புற உரை

மனம் ஒரு பேரண்டம் போல இருந்துகொண்டிருக்கிறது. அது ஒரு வெற்றுக் கண்ணாடி அறை. அதில் மையம், விளிம்பு எதுவுமில்லை. பொருண்மை எதுவுமில்லை. உடல், புலன்கள், அவை உணரும் புற உலகு பற்றிய நினைவுகள், புரிதல் எல்லாம் மனதில் பதிவாகியுள்ளன. புற உலகுதான் மனது. புற உலகைத் தனக்கு ஏற்கவும் முடியவில்லை என்றால் புற உலகிற்கு ஏற்பத் தன்னையும் ஒரு உடல் மாற்று வதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. இந்த இரு மாறுதல்களுக்கு உட்பட்டுத்தான் மனதில் உள்ள பொருண்மைகள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. மனிதனால் உருவாக்கிக்கொள்ளப்படும் பொருண்மைகள் மனிதனுக்கு உடனடியாகவோ, நாள்பட்டோ நன்மை செய்யக்கூடியனவாக இருக்கும். எது சரி என்று தெரியாதபோது பொருண்மை மயக்கங்கள் நிகழ்கின்றன. இலக்கியமும் மொழியும் புற உலகப் பொருள்களும் நிகழ்வுகளும் பொருண்மை மயக்கத்திற்கு உள்ளாகிக்கொண்டிருக்கின்றன. பொருண்மையைத் தவிர்த்துவிட்டு மனம் இயங்கமுடியாது. உணர்வு மொழிக்கு முந்தையது என்றபோது அது உடல் சார்ந்ததாகிவிடுகிறது. மனிதர்கள் உணர்ந்தாலும் உணர வில்லை என்றாலும் இயற்கை இயங்கிக்கொண்டிருக்கிறது. தற்சார்பற்றுப் பொருண்மையின் எல்லாக் கூறுகளையும் விளங்கிக்கொள்ளமுடியாது. எண்களைப் போலவே பொருண்மை என்பதும் தொடக்கமும் முடிவும் இல்லாமல் விரிந்து சென்றுகொண்டிருக்கிறது. ஒரு முழுமை எனபதற்குள் பொருண்மைகள் முடிவற்ற பின்னங்களாகப் பல்கிப் பெருகுகின்றன.

பொருண்மையை உணர்ந்துகொள்வதற்கும் விளக்குவதற்கும் மொழியை விட்டால் வேறு ஒரு வழி இல்லை. பொருள்களையும் நிகழ்வுகளையும் போலச் செய்தலின் மூலம் உருவாக்கும் வழி எளிது அன்று. தன் உடல் என்ற பொருள், அதன் நிகழ்வு மூலம் எல்லாவற்றையும் பகுத்து நடந்துகொள்ளவேண்டியிருக்கிறது. மற்ற பொருள்கள், நிகழ்வுகளுக் குக் கொடுப்பது போலத் தனக்கும் ஒரு இடத்தைக் கொடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. தன்னைக் கற்பதன் விரிவாக்கமாக மொழியையும்

இலக்கியத்தையும் சமூகத்தையும் இயற்கையையும் கற்பது நிகழ்கிறது. மொழியையும் இலக்கியத்தையும் சமூகம் உருவாக்குவது தனக்கு ஏற்ற நிகழ்வுகளை உருவாக்குவதன் ஒரு ஒத்திகையாக, முன்திட்டமிடலாக இருக்கிறது. மனித உறவுகளும் சடங்குகளும் நிறைவான ஒரு சூழலை உருவாக்க முடிந்ததில்லை. இலக்கியமும் கலையும் ஒரு உரையாடலாக இருந்துகொண்டிருக்கின்றன. அவை பலரது கருத்துப் பரிமாற்றத்தைப் பொது வெளியில் நிகழ்த்திக்காட்டுகின்றன. இலக்கியமே ஒரு மெய்ப்பாடு. விளையாட்டு ஒரு மெய்ப்பாடு.

எந்த ஒரு ஆய்விலும் பேருண்மை என்பது முரண் வடிவில் இருந்து கொண்டிருக்கிறது. ஒற்றைக் கருத்து வடிவில் அந்த முடிவு இல்லை. உண்மை என்பது எதிர் எதிராகப் பிளவுபடுவதில் இருந்துகொண்டிருக் கிறது. மேலும் அது நிலையில்லாமல் இயங்கிக்கொண்டும் இருக்கிறது. தனக்கு ஏற்றபடித் திரிக்கப்படும்போது இயற்கை மனிதார்த்த நிலையில் மீண்டும் பிளவுபடுகிறது. மனிதனும் இயற்கையாக இருப்பதால் எந்த ஒரு மனிதரும் செய்யும் திரிபு இயற்கையின் திரிபாகச் சென்று சேர் கிறது. எந்த ஒரு புரிதலும் கோலம் போடுவதற்காக வைக்கப்படும் புள்ளிகள் போலத் தொடர்ச்சி அற்றதாக இருக்கிறது. புள்ளிகளைத் தொடர்புபடுத்திக் கருதுவதன் மூலம் அமைப்புகளும் முழுமைகளும் வடிவங்களும் புரிந்துகொண்டதாகக் கருத்து உருவாகிறது. உடல் தன்னைப் பற்றியும் தனது புரிதல் பற்றியும் கருத்துகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. அல்லது வெளியிடாமல் இருக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறது. அல்லது வேறு பொருண்மைகளுக்குரிய குறியீடுகளை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது. பொருண்மை மயக்கம் தற்சார்பான நன்மைக்காக நிகழ்த்தப்படுகிறது.தொல்காப்பியம் ஒரு அறிவார்ந்த படைப்பு. நாள்தோறும் படிக்கப்படும் புனித நூல் போல, மொழி, இலக்கியம் குறித்துப் புரிந்துகொள்ளவேண்டியவர்கள் படிக்கவேண்டிய நூல் அது. அமைப்பியல் விதிகள் இயல்பிலேயே தொல்காப்பியத்தில் நிறைந்திருக்கின்றன.

இந்த நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பியர் ஆய்வு இருக்கை வழி வெளியிடும் நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கும் ஆய்வு இருக்கையின் பொறுப்பாளர் முனைவர் அ. சதீஷ் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரா. செயராமன்

உள்ளடக்கம்

0	அறிமுகம்	1
1	திணை: பொருண்மை வரையறை	6
2	இலக்கியப் பொருளும் உரிப்பொருளும்	29
3	வெட்சி, கரந்தை: இலக்கண உருவாக்கமும் பொருண்மை இடைவெளியும்	47
4	பொருண்மை வேறுபாடு: பேச்சும் எழுத்தும்	64
5	வேற்றுமைப் பொருண்மைகள்: வகைமையும் பட்டியலும்	79
6	இயைபுக் குறிகளும் மயக்கக் குறிகளும்	87
7	எச்சில்: குறிப்புப் பொருளில் முரண் பொருண்மைகள்	95
8	இருளர் விளையாட்டு: மெய்ப்பாட்டியல் பொருண்மைகள்	114
9	தொட்டில் சடங்கில் கொளல் மரபும் கொடை மரபும்	133
10	உம்: கருப்பொருண்மையும் கிளைப்பொருண்மைகளும்	141
11	சிலப்பதிகாரக் கதைப் பனுவல்களும் பொருள் மயக்கங்களும்	155

0. அறிமுகம்

அமைப்பாக இருப்பதும் அமைப்பாக இயங்குவதும் இயல்பாகவே இயற்கையில் இருந்துகொண்டிருக்கின்றன. முழுமை என்பது பின்னங்களால் ஆனதாகவும் பின்னம் என்பது தனக்குள் உள்ளுறுப்புகளைக் கொண்டுத் தான் ஒரு முழுமையாகவும் இருந்து கொண்டிருக்கின்றன. தொகுதி, பகுதி என்ற உறவு ஒப்பீட்டு அடிப்படையில் தீர்மானிக்கப்படவேண்டியதாக இருக்கிறது. அமைப்பு என்பது உள்ளுறுப்புகளால் ஆனது, அந்த உள்ளுறுப்புகள் குறிப்பிட்ட சூழலிலாவது குறிப்பிட்ட எண்ணிக்கையில் வரையறுக்கப்பட்டனவாக இருக்கும், அந்த உள்ளுறுப்புகளுக்கு இடையே வரையறுக்கப்பட்ட உறவுகள் இருக்கும் என்று ஒரு முழுமை விளக்கப்படவேண்டியதாகிறது. ஒரு வாக்கியம் முழுமையானது. பெயர், வினை, வேற்றுமை உருபு, கால இடைநிலை, எச்ச விகுதி, முற்று விகுதி, பெயரடை, வினையடை, பன்மை விகுதி, ஓட்டுகள் என்ற கூறுகள் ஒரு வாக்கியத்தின் உறுப்புகளாக அமைந்தபோதும் அந்த உறுப்புகளுக்கு இடையிலான உறவுகள் ஒரே தன்மையில் இருப்பதில்லை. பெயருடன்தான் வேற்றுமை உருபு வரும். வினையுடன்தான் கால இடைநிலை வரும். ஓட்டுகள் பெயரடையுடன் வரா. வினையெச்சத்துடன் வரலாம். ஒரு குடும்பத்தில் உடன் பிறந்தவர்கள் திருமணம் செய்துகொள்ளமுடியாது. கால இடைநிலை பெயருடன் வராது. வேற்றுமை உருபு வினையுடன் வராது. இறைச்சித் துண்டுகளைச் சாம்பாரிலோ, ரசத்திலோ போடுவது மரபில்லை. ரசம் என்பது ஒரு அமைப்பு. சாம்பார் என்பது ஒரு அமைப்பு. தமிழ்ப் பண்பாட்டில் வேட்டியையும் ரவிக்கையையும் ஒருவர் அணிந்துகொள்ள முடியாது.

அடுக்கியல் கூறுகளுக்கும் தொடரியல் கூறுகளுக்கும் இடையிலான உறவால் மொழி பின்னப்பட்டிருக்கிறது. இரு எழுத்துகளின் தொடர்ச்சி முதல் சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள், கூற்றுகள், பத்திகள் முதலானவற்றின் தொடர்ச்சி தொடரியல் உறவு (Syntagmatic relation) எனப்படுகிறது. ஒரு எழுத்து வருமிடத்தில் மற்றொரு எழுத்து வருவது

முதல் சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள், கூற்றுகள், பாத்திரங்கள் முதலானவற்றின் பதிலீடு அடுக்கியல் உறவு (Paradigmatic relation) எனப்படுகிறது. புணர்ச்சி, இயைபு-மயக்கம், மொழிபுணர்இயல்பு, வேற்றுமை-முற்றுவினை உறவு முதலான இலக்கண விளக்கங்கள் அடுக்கியல் கூறுகளின் தொடரியல் உறவாகும். பெயரியல், வினையியல், வேற்றுமையியல், இடையியல் முதலான இயல்களில் சொற்கள் பேசப்பட்டாலும் அவை தொடரியல் சூழலிருந்து பிரித்து எடுக்கப் பட்ட சொற்களின் இலக்கணமாகும். ஒரு இடைச்சொல்லுக்குச் சொல்லப்படும் பொருண்மைகள் பலவும் அடுக்கியல் உறவால் வருவனவாகும். அந்தப் பொருண்மைகள் தொடரியல் சூழலிருந்து பிரித்து எடுக்கப்பட்டுள்ளன. பெயரியலில் பேசப்படும் பெயர்கள் என்பவை பெயர்களுக்கு இடையிலான அடுக்கியல் உறவாக, பட்டியலாக, வகைப்பாடாக இருந்தபோதும் அவை எல்லாம் எழுவாய்களாகும். முற்றுவினை எல்லாம் வாக்கியத்தை முடிக்கும் சொல் என்ற தொடரியல் உறவில் வைத்துப் பேசப்படுகின்றன.

பொருள் இலக்கணத்திலும் தொடரியல், அடுக்கியல் உறவுகள் அப்படியே பின்பற்றப்பட்டிருக்கின்றன. கூற்று, கூறுபவர், கேட்பவர், இடம், காலம் என்பன ஒன்றுக்கு ஒன்று தொடரியல் உறவில் அமைவனவாகும். செய்யுளுக்குள்ளும் முதல், கரு, உரிப் பொருள் களுக்கு இடையிலான உறவு தொடரியல் உறவாகும். திணை தீர்மானிக்க நிலம் அடிப்படையா, உரிப்பொருள் அடிப்படையா என்று வரும்போது, கட்டாய உறுப்பு, விருப்ப உறுப்பு (Obligatory element, Optional element) என்ற இரண்டு வகைகள் செய்யுள் உறுப்புகளில் பிரிவுபடுகின்றன. கூற்று நிகழ்த்துபவர், கேட்பவர், கூற்றுகள் முதலானவற்றின் பட்டியல் அடுக்கியல் உறவுகளாகும். அசை, சீர், அடி முதலானவற்றைத் தொகுத்து, வகுத்து விளக்குவது அடுக்கியல் உறவுக்கான இலக்கணமாகும். மெய்ப்பாடுகள் எல்லாம் அடுக்கியல் நிலையில் வருகின்றன. உடலிலிருந்து வெளிப்படும் உணர்வு, செயல் முதலானவற்றின் தொகுப்பு என்ற நிலையில் மெய்ப்பாடுகள் அடுக்கியல் தன்மை கொண்டவை. உடலுக்கும் மெய்ப்பாட்டுக்கும் மெய்ப்பாடு தோன்றுவதற்கான சூழலுக்கும் அது பிறரால் உணரப்படுவதற்கான சூழலுக்கும் இடையிலான உறவு தொடரியல் உறவாகும். ஆயர், வேட்டுவர் என்றும் அந்தணர், அரசர் என்றும் செய்யப்படும் மக்கள் பாகுபாடுகள் அடுக்கியல் உறவுக்குரியனவாகும். மக்கள் குழுக்கள் தம்முள் கொள்ளும் உறவு தொடரியல் உறவாகும். மக்களுக்கும் இயற்கைக்கும் இடையில் உள்ள உறவு தொடரியல் உறவாகும். தொல்காப்பியம் குறிப்பிடும் செய்யுள் உறுப்புகள், இலக்கிய வகை

கள் பற்றிய விளக்கங்கள் அடுக்கியல் உறவுக்குரியன. அடுக்கியல் கூறும் தொடரியல் கூறும் இணையும்போது சூழல் தோன்றும். இரண்டையும் பிரித்துப் பார்க்கமுடியாது. இணைத்துப் பார்க்கும்போதுதான் அவற்றின் பொருண்மை விளங்கும். எந்த ஒரு கூறும், உள்ளுறுப்பும் தனித்து இருக்கும்போது, பொருண்மை அற்றதாகவும் சூழல் என்ற தொடரியல் உறவுடன் இருக்கும்போது பொருண்மை உடையதாகவும் ஆகின்றது. தேர்வுக் கட்டுப்பாட்டு விதிகளும் (Selectional restrictions rules), சேர்க்கை விதிகளும்(Collocation rules) சேர்ந்து மொழியைக் கட்டமைக்கின்றன.

இருமை (Binary opposition) அமைப்பியலின் ஒரு இன்றியமையாத கூறு. ஒரு அமைப்புக்குள் இருகூறுகள் மட்டும் இருக்குமானால் அவை பொதுவாக எதிரானவைகளாக இருக்கும். பல இருக்குமானால் அவை பட்டியலாக, வகையாக இருக்கும். தொல்காப்பியத்தில் பேசப்பட்டுள்ள இருமைகள் வருமாறு: தலைவன்-தலைவி, இனிதுறு கிளவி-துனியுறு கிளவி, பெயர்-வினை, இயற்கைப் பொருள்- செயற்கைப் பொருள், வினா -செப்பு, உயிர்-மெய், குறில்-நெடில், நிறுத்தசொல்-குறித்துவருகிளவி, உயர்திணை-அஃறிணை, ஆண்-பெண், ஒன்று-பல, தெரிநிலை-குறிப்பு, முற்று-எச்சம், அகம்-புறம், களவு-கற்பு, நகை-அழுகை, அச்சம்-வெகுளி, உணர்தல்-உணர்த்தல், நோக்கல் நோக்கம்- நோக்கிய நோக்கம், தற்கிழமை-பிறிதின் கிழமை, வெளிப்படை-குறிப்பு, இயல்பு- திரிபு, வழக்கு-செய்யுள், நாடக வழக்கு- உலகியல் வழக்கு, கைக்கிளை-பெருந்திணை, வெட்சி-கரந்தை, பாடாண்-கைக்கிளை, முதல்-சார்பு என்று பட்டியல் நீண்டுகொண்டு செல்லும். மூன்று உறுப்புகள் கொண்ட விளக்கங்கள் உள்ளன: இறப்பு-நிகழ்வு-எதிர்வு, தன்மை-முன்னிலை-படர்க்கை, அறம்-பொருள்-இன்பம், தோன்றல்- திரிதல்-கெடுதல் என்று பட்டியல் நீளும்.

வேற்றுமைப் பொருண்மைகள், மக்கள் வகைகள், உம்மின் பொருண்மைகள் எனபன பட்டியல்களாகத் தரப்பட்டுள்ளன. அவை இருமைக்குள்ளும் வகைமைக்குள்ளும் கொண்டுவரப்பட முடிந்தவை. உம்மின் மையப் பொருண்மை முற்றுப்பொருண்மை. அது எச்ச உம், எண் உம் என்று இருமையாகப் பிரியும். எச்ச உம் மேலும் சிறப்பு உம், எதிர்மறை உம் என்று இருமையாகப் பிரியும். ஆக்க உம், ஐய உம் என்று தொல்காப்பியம் சொன்ன பொருண்மைகள் அமைப்பியல் விதிப்படி தவறானவை. வேற்றுமைப் பொருண்மைகளை இருமைக்குள் கொண்டுவர முடியும். ஆல், ஓடு என்ற இரண்டும் இருமை வேற்றுமைகள். ஆல் செயலுக்குத் துணைப்படு பொருண்மையில் வரும். ஓடு பொருளுக்குத் துணைப்படு பொருண்மையில் வரும்.

வேற்றுமைப் பொருண்மைகள் எல்லாம் நான், அதன் செயல், அதனால் உறவுபடும் பொருள்கள் என்ற மூன்றுக்கு இடையிலான உறவுகள் பற்றியவை. இதன்படி பார்த்தால் எல்லா வேற்றுமைகளும் செயப்படுபொருள்கள். அவை அகச் செயப்படுபொருள்கள் என்றும் புறச் செயப்படுபொருள் என்றும் இரண்டாக வகைப்படும். எழுவாய், ஆல் இரண்டும் அகச்செயப்படுபொருள் வேற்றுமைகளாகும். கு, இல்லிருந்து புறச் செயப்படுபொருள்கள் வேற்றுமைகளாகும். இல் இடப்படு வேற்றுமையாக இருந்தாலும் புறச் செயப்படுபொருள் என்ற வகையில் வரும். ஒடு இரண்டு வகையிலும் சேரும் வேற்றுமையாகும். பொருண்மைகளை இவ்வாறு மேலும் மேலும் வகைப்படுத்திக்கொண்டு செல்லும்போது, அவற்றைக் கருப்பொருண்மை என்றும் கிளைப் பொருண்மைகள் என்றும் வகுத்துக்கொண்டு செல்லவேண்டும். பட்டியல் தரப்படுகிறது என்றால் வகைப்படுத்தப்படத் தெரியாமல் இருக்கிறது என்றாகும்.

ஒரு காலப் பார்வை (Snchronic study), இரு காலப் பார்வை (Diachronic study) என்ற காலப் பார்வைகளும் அமைப்பியல் ஆய்வில் முதன்மையானவை. ஒன்றுக்கு மேற்பட்ட காலப் பார்வைகள் இரு காலப்பார்வைகளின் தொடர்ச்சிகளாகும். மாறுதல்களைப் பற்றிப் பார்ப்பது ஒன்றுக்கு மேற்பட்ட காலப்பார்வையாகவும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் பொருள், நிகழ்வு குறித்த புரிதல் ஒரு தளப் பார்வையாகவும் கொள்ளப்படும். இருந்தது வழக்கொழிவது, இல்லாதது வழக்கிற்குப் புதிதாக வருவது, இருந்தது தொடர்ந்து இருப்பது என்ற மூன்று நிலைகள் காலப்பார்வையில் தெரியவரும் மூன்று மாற்றங்களாக இருக்கும். ஒரு பொருள் சம காலத்தில் எவ்வாறு இருக்கிறது என்பதை வைத்துப் பொருண்மை பெறுகிறது. கடந்த காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதை வைத்து அல்ல. இரு வகையான காலப் பார்வைகளும் தொல்காப்பியத்தில் உள்ளன. நினைவு இல்லாமல் அறிவு இல்லை. மொழி மரபும் சமூக மரபும் தொல்காப்பியத்தில் போற்றப்பட்டிருக்கின்றன. நிகழ்வுகளை அடுக்கியல் உறவில் பிரித்துப் பட்டியலிட்டாலும் அவை கால அடிப்படையில் பட்டியலிடப்படுவது கூற்று மரபு, களவு-கற்பு மரபு, புறத்திணை மரபுகளில் உள்ளன. வெட்சி, கரந்தை என்ற பழங்குடிகளுக்குரிய திணைகள் முதலிலும் பாடாண் திணை என்ற வளர்ந்த அரசுக்குரிய, மனித சமூகம் நாகரிகமடைந்த திணை இறுதியிலும் வைத்துக் கால வளர்ச்சி அடிப்படையில் அவை வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மரூஉ, மொழித் திரிபு முதலானவை வரலாற்று அடிப்படையில் விளக்கப்பட வேண்டியனவாக உள்ளன. கிளை மொழி வழக்குகள் வெளி, மக்கள் பிரிவுகள் சார்ந்திருந்தாலும் அவை காலம் சார்ந்தும் பார்க்கப்பட வேண்டியவை.

மொழிக் கிடங்கு (Langue), மொழிப்பயன்பாடு (Parole) என்ற இருமைப் பண்பும் அமைப்பியலில் முதன்மையான விதி. மனதிற்குள் உள்ள மொழி குறித்த சமூகத்திற்கான பொது விதிகள் மொழிக்கிடங்கு என்றும் அந்த விதிகள் பேச்சிலும் எழுத்திலும் தனிமனிதர்களிடத்தில் வெளிப்படும் முறைகள் மொழிப் பயன்பாடு எனவும் கொள்ளப்படுகின்றன. வழக்குக்குத் தொல்காப்பியம் இலக்கணம் எழுதிச் சென்றுள்ளது என்றாலும் அது தகுதியான பேச்சு வழக்குத்தான். பேச்சு மொழித் திரிபுகள், கிளை மொழித் திரிபுகள், இழிந்த வழக்குகள் முதலானவற்றைத் தொல்காப்பியம் இலக்கணம்கூறத் தவிர்த்துவிடுகிறது. சங்க இலக்கியம் ஒழுக்கம், அறம் சார்ந்த சமூகத்தின் வெளிப்பாடுகள். நாட்டுப்புற இலக்கியம் முதலானவை செய்யுளியலில் பெயரளவில் குறிப்பிடப்படுகின்றன. அதேபோல, மூலப் பொருள் (Substance), வடிவம் (Form)என்ற இரு அமைப்பியல் விதிகள் மனதில் உள்ளவற்றின் வெளிப்பாடுகளாக மொழியையும் இலக்கியத்தையும் விளக்குகின்றன. ஒரு இலக்கியத்தில் உள்ள நிகழ்வுகளைப் பொதுவினைகளாக, மையக் கருத்துகளின் தொகுப்புகளாகப் பார்க்கும் பார்வையும் அமைப்பியலில் உள்ளது. புணர்தல், பிரிதல் முதலான உரிப்பொருள்களும் புறத்திணையின் துறைகளும் இவ்வாறு பிராப் அமைப்பியல் கொள்கைகளுடன் ஒப்பிட்டு ஆராயத்தக்கவை.

சொல் வகைகள் எல்லாம் ஒன்றோடொன்று பொருண்மைத் தொடர்பு கொள்வதன் மூலம்தான் விளக்க முடிந்தனவாக இருக்கின்றன. அடக்கு சொல் (Hyponomy), அடங்கு சொல் என்றும் உடன்பாட்டுச்சொல், எதிர்ச் சொல் என்றும் ஒருபொருள் ஒரு சொல், பலபொருள் ஒருசொல், ஒரு சொல் பலபொருள் என்றும் இந்தச் சொல் உறவுகள் மொழிக்குள் புழங்குவது அமைப்பியல் உறவு அடிப்படையில் என்று கொள்ளப் படுகிறது. அகராதியில் வரிசைப்படுத்தப்படும் எந்தச் சொல்லும் எல்லாச் சொல்லுடனும் ஏதேனும் ஒரு முறையில் தொடர்புபடுகிறது என்றாகும். தத்தம் குறிப்பில் பொருள் தரும் இடைச் சொற்கள், உரிச்சொற்கள் முதலானவும் பெயர், வினைகளுடன் இவ்வாறு விளக்கப்பட்டனவாகும். இலக்கணப் பொருண்மை, அகராதிப் பொருண்மை என்ற இருமையில் சொல்லியல் நிலையில் உள்ள மயக்கத்தைத் தொடரியல் நிலையில் நீக்குவதையே தொல்காப்பியச் சொல்லிலக்கணம் முழுவதும் பேசுகிறது. அது இலக்கிய அமைப்பைக் கூறுகள் வழியே கூறி அந்த அமைப்பில் உள்ள மயக்கத்தை நீக்குவதாகவும் இருக்கிறது.

1

திணை: பொருண்மை வரையறை

சொல் இலக்கணத்திலும் சங்க இலக்கியப் பொருள் இலக்கணத்திலும் திணை என்ற கலைச்சொல் இன்றியமையாத இடத்தைப் பெற்றிருக்கிறது. சங்க இலக்கியத்தில் அகராதிச் சொல்லாகவும் இடம் பெற்றிருக்கிறது. திணை என்ற சொல்லுக்குச் சொல்லப்பட்ட ஒழுக்கம், நிலம், உள்ளடக்கம், குடி, குடியிருப்பு, குலம், திண்ணை முதலான பொருண்மைகள் மீள் பார்வைக்கு உரியனவாக உள்ளன. திணை என்ற சொல்லின் பொருண்மை உயர்வான வகை என்பதே ஆகும்.

ஒரு மொழியில் வேறு வேறு பொருள்களைக் குறிக்கும் சொற்கள் ஒரே வடிவில் இருந்தால் அவ்வடிவம் பல பொருண்மைச் சொல். ஒரு பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லையே அடுத்தடுத்து வேறுவேறு பொருள்களையும் குறிப்பதற்கு வழங்கிக் கொண்டே சென்றால் கிடைக்கும் அப்பொருண்மைகள் அச்சொல்லின் விரிவுப் பொருண்மைகள். ஒரு பொருண்மை பல பொருண்மைகளாகப் பிரிந்து வழங்கினாலும் அப்பொருண்மைகளில் எல்லாம் அந்த ஒரு பொருண்மையே பொதுவானதாக இருக்கும் என்றால் கிடைத்த பல பொருண்மைகள் கிளைப் பொருண்மைகள். அந்த ஒரு பொருண்மை கருப்பொருண்மை.

திணை என்ற சொல்லிற்கு நிலம் (தொல்-3; 5) என்றும், இலக்கிய உள்ளடக்கம் (தொல்-3; 1) என்றும் இளம்பூரணர் பொருண்மை கூறியுள்ளார். அச்சொல்லிற்கு ஒழுக்கம் (தொல்-3; 1) என்றும்

1. அ) ஐம்பால் திணையும் கவினி அமைவர (மதுரைக்காஞ்சி. 326)
   ஆ) அவன் தொல்திணை மூதூர் (மலைபடுகடாம். 401)
   இ) வசைஇல் வான் திணைப் புரையோர் கடும்பொடு (குறிஞ்சி. 205)

என்ற இலக்கிய அடிகளில் உள்ள திணை என்ற சொல்லிற்கு நிலம், உயர்ந்த ஒழுக்கம், உயர்ந்த குலம் என்றும் நச்சினார்க்கினியர் பொருண்மை கூறியுள்ளார். திணை என்ற சொல் தொடக்கத்தில் குடும்பம், குழு (குலம்), குடியிருப்பு முதலான பொருண்மைகளைக்

குறித்துப் பிறகு சொல் இலக்கணத்தில் பிரிவு,குழு முதலானவற்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. இதற்கு இடையில் அச்சொல் மக்களின் ஒழுக்க நடவடிக்கைகளைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டது என்று கா.சிவத்தம்பி (1998: 41-2) சங்க இலக்கியம், தொல்காப்பியம், உரைகள் முதலானவற்றைக் கொண்டு வரலாற்றியல் நோக்கில் விளக்குகிறார். இறையனார் அகப்பொருள் உரை (நூற்பா. 1) ஒழுக்கம், ஒழுக்கம் நிகழும் இடம் என்ற இரண்டும் சேர்ந்தே திணை என்று விளக்குகிறது. பெருந்தேவனார் (வீரசோழியம். 88) திணை என்ற சொல்லிற்கு நிலம் என்றே பொருண்மை கொண்டுள்ளார். தொல்காப்பிய அகராதியும் (2004;13) தொல்காப்பியச் சிறப்பகராதியும் (2000; 177-78) ஒழுக்கம், நிலம், பொருளடக்கப் பகுப்பு பொருள் வகை முதலான பொருண்மை களைத் தந்துள்ளன. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியிலும் (2001; 542) பொருள் பகுப்பு, இலக்கியத்தில் ஒழுக்கம் என்ற பொருண்மைகள் தரப்பட்டுள்ளன. மேலும், இன்றைய ஈழத் தமிழ் வழக்கில் அரசுத் துறையைக் குறிக்க இச்சொல் வழங்கப்படுவதற்குத் தபால் திணைக் களம், கல்வித் திணைக் களம் என்ற சான்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் இக்காலத் தமிழில் தமிழகத்தில் இச்சொல் வழங்கப்படுவதற்கான சான்றுகள் தரப்படவில்லை.

தமிழ்ச் சொல் இலக்கணத்தில் திணை என்ற சொல்லின் பொருண்மை வகை என்பதாகவே கொள்ளப்பட்டிருக்கவேண்டும். திணைப் பாகுபாடு பொருள் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டது. திணைப் பாகுபாட்டை மொழி அமைப்பில் ஏற்படுத்தப் பொருள் பாகுபாடே அடிப்படையாக இருக்கிறது. பொருள் பாகுபாட்டில் திணைப்பொது இல்லை. சொல் பாகுபாட்டில் உண்டு. பால் பாகுபாட்டில் ஆண், பெண் இரண்டிற்கும் பொதுவான பொருள்களும் சொற்களும் உள்ளன. திணை என்ற சொல்லின் பொருண்மை தொடக்கத்தில் உயர்வான வகை என்பதாக இருந்தது என்றாலும் பிறகு, உயர் என்ற அடைமொழியைப் பெற்று 'உயர்திணை' என வரத் தொடங்கியுள்ளது. அதாவது திணை, அல்திணை என்ற பாகுபாடுதான் தொடக்கத்தில் இருந்திருக்க வேண்டும். அல் என்ற பெயரடையின் ஒப்புமையாக்கத்தாலும் திணை என்ற சொல்லின் பொருண்மை. உயர் என்பதை இழந்து, வகை என்று குறைவு பட்டதாலும் உயர் என்ற அடையைத் திணை என்ற சொல்லின் முன்பு கொடுக்கவேண்டியதாயிற்று. உயர்திணை என்ற சொல் மக்களைக் குறிக்கிறது. உயர்திணை என்ற சொல்லின் பொருண்மை உயர்வகை என்பதாக இருக்கிறது. இவற்றை முறையே (human being, high class) என்று குறிப்பிடலாம். பகுத்தறிவு வகை (rational class) என்பது சரியான விளக்கமாகாது.

பொருள் இலக்கணத்தில் திணை என்ற சொல் இலக்கிய வகை என்ற பொருண்மையில் ஆளப்படுகிறது. இலக்கியம் என்பதே ஒரு உயர்தகுதியுடைய பொருளாகக் கருதப்பட்டுள்ளது. அதன் வகைகள் திணைகள் என்று குறிக்கப்பட்டுள்ளன. குறிஞ்சி, வெட்சி, கரந்தை முதலான ஒவ்வொரு பெயரும் இலக்கிய வகையைக் குறிக்கும் பெயராகும். ஒவ்வொரு இலக்கியமும் அந்த இலக்கியத்தில் உள்ள உரிப்பொருளுக்குப் பின்புலமாக அமைந்த நிலத்தில் உள்ள ஒரு கருப்பொருளான தாவரத்தின் மலரின் பெயரால் சுட்டப்படுவதாக இருக்கிறது. குறிப்பிட்ட உரிப் பொருள் (ஒழுக்கம்), குறிப்பிட்ட முதற் பொருளில் (நிலம், பொழுது) நிகழ்வதாகப் பாடல் எழுத வேண்டும் என்பது சங்க இலக்கிய மரபு. நிலம் என்பதோடு அதன் பொருள்களான கருப்பொருள்களும் உடன் நிற்கும் பாடலில் முதல், கரு, உரி என்ற மூன்று பொருள்களுக்கும் இடையிலான இயைபு அல்லது கட்டுப்பாடு மாறாதிருக்கும். சங்க இலக்கியத்தில் ஒவ்வொரு பாடலும் ஒரு தனி இலக்கியம். எல்லாப் பாடல்களையும் தொகுத்து வகைக்கு உட்படுத்தும்போது ஒவ்வொரு வகைக்கும் பெயரிட வேண்டிய தேவை இருக்கிறது. ஒரு பாடலுக்கும் பாடல்களின் ஒரு வகைமைக்கும் இடும்பெயர்கள் ஒன்றாகவே இருக்கின்றன. ஒவ்வொரு பாடலிலும் அப்பாடலின் இலக்கிய வகைப்பெயருக்குக் காரணமான மூலப்பெயரான கருப்பொருள் பெயர்(தாவரப்பெயர், மலர்ப்பெயர்) இருக்க வேண்டிய கட்டாயமில்லை. பெரும்பாலும் இடம்பெறாமல்தான் இருக்கிறது. மலர்ப்பெயர் அல்லது தாவரப்பெயர் பாடல்களில் ஒரு வகைமைக்குப் பெயராவதன் மூலம் முதல், கரு, உரி என்ற மூன்றும் அப்பெயரால் குறிக்கப்படுமாறு அடங்கிவிடுகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்தும் நிலங்களைக் குறிக்கும் பெயர்களாக கற்றோர்களுக்கு இருக்கின்றன. தொகுதி, அதன் உறுப்புகள் மூலம் தொகுதியின் பெயர் உள் உறுப்புகளுக்கு எல்லாம் ஆகி வருகின்றன.



குறிஞ்சி வகை

குறிஞ்சி என்ற இலக்கிய வகைப்பெயர் புணர்தல் உறவு, மலை சார்ந்த பகுதி, வெற்பன், கொடிச்சி, இசை, பண் முதலான பொருள்களையும் குறித்து நிற்க முடியும். உள்ளுறுப்புக்களான இவற்றில் ஒன்றைக் கொண்டு பிறவற்றை அண்மை உறுப்புத் தொடர்பு அல்லது தொடரியல் கூறுகள் தொடர்பால் உணர்ந்து கொள்ள முடியும். மயங்காத உறுப்பாக அந்த ஒன்று இருக்க வேண்டியது கட்டாயம். திணை என்ற சொல் குறிஞ்சி என்ற பெயர்போல உறுப்புகளை உணர்த்தி வரமுடியாது. குறிஞ்சி என்ற இலக்கிய வகைப்பெயர் அதன் உள்ளுறுப்புகளைக் குறித்து வரப் பயன்படுத்தப்படலாம். உள்ளுறுப்புகள் எல்லாம் சினைகள் ஆகும். முதல்பொருள் பெயர் குறிஞ்சி என்றால் அதன் உள்ளுறுப்புப் பொருள்களைக் குறிஞ்சி என்ற பெயர் குறித்து வரும்போது அது முதல் ஆகுபெயர் எனப்படும். குறிஞ்சி என்ற சொல்லுக்குப் புணர்தல், மலை நிலம், நாடன், கொடிச்சி என்ற பொருண்மைகள் இவ்வாறு ஆகுபெயர் இலக்கண அடிப்படையில் தோன்றும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் திணை என்ற சொல்லிற்கு இந்தச் சினைப்பொருள்களைக் குறித்துவரும் வாய்ப்பு இல்லை.

பொருள் இலக்கணத்தில் திணைக்கு நிலம், ஒழுக்கம் என்று பொருண்மை கொண்டது குறிஞ்சி, முல்லை முதலானவை இலக்கிய வகைகளைக் குறிக்கும் பொதுப்பெயர் என்று புரிந்துகொள்ளாததால் வந்ததாகும். திணை என்ற சொல்லிற்கு நிலம் என்று பொருண்மை கொண்டவர்கள் குறிஞ்சி, முல்லை முதலானவை நிலங்களின் பிரிவு களைக் குறிக்கும் சிறப்புப் பெயர் என்றும் திணை என்பது நிலத்தைக் குறிக்கும் சிறப்புப் பெயர்கள் என்றும் கருத்துக் கொண்டவர்களா கிறார்கள். திணை என்ற சொல்லிற்கு ஒழுக்கம் என்று பொருண்மை கொண்டவர்கள் குறிஞ்சி, முல்லை முதலானவை புணர்தல், இருத்தல் முதலான ஒழுக்கம் குறிக்கும் சிறப்புப் பெயர்கள் என்றும் திணை என்பது ஒழுக்கத்தைக் குறிக்கும் பொதுப்பெயர் என்றும் கருத்துக் கொண்டவர்களாவார்கள். ஒழுக்கம், நிலம் என்ற பொருண்மைகளைத் திணை என்ற சொல்லிற்குக் கொள்ளாதிருக்க வேண்டும்.

குறிஞ்சி, முல்லை, மருதம் முதலான பெயர்கள் நிலத்தின் வகையையும் திணை என்ற பெயர் நிலத்தையும் குறித்து வருகின்றன என்ற கருத்து நிலம், ஒழுக்கம் என்று சொன்ன இரு பொருண்மைகளிலும் உள்ளடங்கி இருக்கிறது. உள்ளுறுப்புகளுக்கு இடையிலான கட்டுப்பாடே இதற்குக் காரணம். குறிஞ்சி, முல்லை முதலான பெயர்கள் தொடக்கத்தில் கருப்பொருள்களைக் குறித்தன என்றும் நிலப்பெயரைக் குறித்தன என்றும் ஒழுக்கத்தைக் குறித்தன என்றும் பிறகு, அவை பிறவற்றையும்

குறிக்க விரிவடைந்தன என்றும் மூன்று வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. கருப்பொருள் பெயர் பிறகு, நிலத்திற்கும் அடுத்து ஒழுக்கத்திற்கும் பெயராகி வந்திருக்கும் என்பதே ஏற்புடையதாகும். பருப்பொருள், அருவப் பொருள் என்ற இரண்டும் ஒரே பெயர் பெற்றிருக்குமானால் பருப்பொருளின் பெயர் முந்தையது என்று பொதுவாகக் கருதலாம். குறிஞ்சி என்ற தாவரத்தின் பெயரால் அத்தாவரத்தைக் கொண்ட நிலம் அழைக்கப்பட்டிருக்கிறது.

இலக்கணத்தில் திணை என்ற சொல்லிற்கு நிலம், ஒழுக்கம் என்று பொருண்மையைக் கொண்டவர்கள் முதல், கரு, உரி என்ற மூன்று உறுப்புகளுக்கு இடையிலான உறவுகளை மட்டும் கருதியவர்களாக இருக்கிறார்கள். அந்த உள்ளுறுப்புகளின் ஒட்டுமொத்தத் தொகுதியான ஒரு இலக்கியம் என்பதைக் கருத்தில் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். இலக்கியங்களை உள்ளடக்கி நிற்கும் இலக்கிய வகை என்பதைக் கருத்தில் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள்.

நச்சினார்க்கினியரின் உரிய விளக்கம் வெவ்வேறு இலக்கியங்களின் உறுப்புகளுக்கு இடையிலான தொடர்பு பற்றிய விளக்கமாகவும் அமைந்து விடுகிறது. திணை மயக்கம் என்பது முதற்பொருளான நான்கு நிலங்களிலும் கைக்கிளை, பெருந்திணை என்ற இரு திணைகளின் உரிப்பொருள்கள் இடம்பெறுதல் என்ற உறுப்புகளுக்கு இடையிலான தொடர்பு விளக்கமாக அமைகிறது (தொல்-3; 15). இங்கு இலக்கியத்தில் வாழ்க்கை என்ற தளம் இயல்பு வாழ்க்கை என்ற வேறான தளத்துடன் மயக்கமாகவும் உணரப்பட்டிருக்கிறது. இயல்பில் உள்ள நிறைவேறாத காதல், முறைகேடான பாலுறவுகள் பற்றிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் இல்லை. நான்கு நிலப்பாகுபாடு இலக்கியத்திற்குரியது. திணை மயக்கம் என்பது இலக்கிய வகைக்கும் அதன் உள்ளுறுப்புகளுக்கும் இடையிலான உறவைப் பற்றிய விளக்கமே ஆகும். திணை மயக்கம் என்பதை இருவேறு இலக்கிய வகைமைகளின் உள்ளுறுப்புகளுக்கு இடையிலான உறவு விளக்கம் என்று விளக்குவது பொருந்தாது. இயற்கையில் உள்ள நிலம். இலக்கியத்தில் பின்புலமாக அமைந்த நிலம், இலக்கிய வகை (தொகுதி) என்ற மூன்றையும் பிரித்து அறியாததால் சங்க இலக்கியப் பொருள் இலக்கணத்தை விளக்குவதில் சில பிறழ்வுகள் நேர்ந்துள்ளன.

நில வகைகள் குறிஞ்சி, முல்லை முதலான பெயர்களில் அழைக்கப்படும் மரபு இலக்கியத்திலிருந்துதான் வழக்குக்கு வந்துள்ளது. இலக்கியத்தில்கூட அச்சொற்கள் பொதுவாகக் கருப்பொருள்களைக் குறித்து வருகின்றன; நிலம் என்ற முதற்பொருளைக் குறித்தது அல்ல. வழக்கில்கூட

இலக்கிய, இலக்கணப் பயிற்சி உடையவர்களிடம் அரிதான வழக்காக இருந்து வந்துள்ளன. அது உயர்ந்தோர் வழக்காகும். பேச்சு வழக்கில் அவர்கள் குறிஞ்சி, முல்லை முதலான சொற்களாலேயே நிலப்பிரிவுகளை வழங்கினர் என்பது இயல்புக்கு மாறானது. "காடு, நாடு, மலை, கடல் என்பதே பெருவழக்கு" (தொல்.- 3;5) என்று இளம்பூரணரே சொல் கிறார். சராசரி மனிதர்களுக்குக் குறிஞ்சி, முல்லை முதலான பெயர்கள் நிலப்பிரிவுகளைக் குறிக்கும் என்ற அறிவு இருந்திருக்க வாய்ப்பே இல்லை. இலக்கிய வழக்கை மக்கள் வழக்குடன் தொல்காப்பியம் இணைத்துக் கூறுகிறது. "காடுறை உலகு, மைவரை உலகு (மலை), தீம்புனல் உலகு, பெருமணல் உலகு என்ற நான்கும் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று சொல்லிய முறையால் சொல்லவும் படும்" (தொல். -3;5) என்பது தொல்காப்பியத்தின் கருத்து. அதாவது உம் எதிர்மறை உம்மை. ஆதலால் பெரும்பாலும் குறிஞ்சி, முல்லை முதலான பெயர்களால் அந்த நிலப்பிரிவுகள் குறிக்கப்படுவதில்லை என்றாகிறது.

இலக்கணம், இலக்கியம், வழக்கு என்ற மூன்று வேறு தளங்களிலும் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதன் மூலம் சங்க இலக்கியத்தின் மொழி, மக்கள், இலக்கியம் என்பனவற்றைப் புரிந்துகொள்ள முடியும். நிலம் என்பது இயற்கை நிலம், இலக்கிய நிலம் என்ற பாகுபாட்டுக்கு உட்படும் ஆதலின் இயற்கை நிலம் காடு என்றால் இலக்கிய நிலம் முல்லை என்று அழைக்கப்படும். காடு, முல்லை என்ற வேறுபாடு சொல்வடிவில் மட்டுமன்று. இலக்கிய நிலம் என்பது குறிப்பிட்ட காலம், குறிப்பிட்ட கருப்பொருள்கள், குறிப்பிட்ட மனித உறவுகள் முதலான வரையறைகளுக்கு உட்பட்டது. உரிப்பொருள் என்ற வரையறை இன்றி, நிலப்பாகுபாடு இன்றி இவற்றுள் தனக்குப் பொருந்துவனவற்றையும் இலக்கியத்திற்கு அப்பாற்பட்டனவற்றையும் இயற்கை நிலம் கொண்டிருக்கும். மேய்ச்சல் நிலம், புன்செய் நிலம் முதலானவை இலக்கண வரையறைக்கு உட்பட்ட முல்லைத் திணையில் பேசப்படவில்லை. காடு என்ற இயற்கை நிலத்திற்குக் கார், கூதிர், முன்பனி, பின்பனி, வேனில் என்ற எல்லாக் காலங்களும் உள்ளன. ஆனால், முல்லை என்ற இலக்கிய நிலத்திற்குக் கார்காலம் மட்டுமே உண்டு. முதல், கரு, உரி என்ற பாகுபாடுகூட முழுமையாக இயற்கை நிலத்திற்குப் பொருந்தி வராது. குறிஞ்சி, முல்லை என்ற தாவரங்கள் ஆண்டு முழுவதும் இருக்குமானாலும் அவை குறிப்பிட்ட காலப்பிரிவுக்கு, மனித உறவுப் பிரிவுக்கு மட்டுமே பொருந்தி வருமாறு இலக்கியத்தில் காட்டப்படுகின்றன.

இயற்கை, இலக்கியம் என்ற வேறுபாடு முதல், கரு, உரி என்ற மூன்றுக்கும் பொருந்தி வரக்கூடியதே. இலக்கணத்தின் மொத்தக் குறிக்கோள் தன்மை செய்யுளில் இருக்க வேண்டும் என்பதில்லை. அதாவது செய்யுளின் இயல்பான மொத்தத் தன்மை இலக்கணத்தின் மொத்தக் குறிக்கோள் தன்மையைத் தன்னுள் அடக்குவதாக இருக்காது. ஆனால், வழக்கு, செய்யுள், இலக்கணம் என்ற மூன்றுக்குமிடையில் பொதுத்தன்மைகளும் வேறுபாடுகளும் இருக்கும். திணை என்ற பொதுவகைமைப் பெயரிலும் குறிஞ்சி, முல்லை முதலான இலக்கிய வகைமைப் பெயர்களிலும் அந்தந்தத் தன்மைகளைக் காணமுடியும்.

தொல்காப்பியம் இலக்கியப் பகுப்புகளை வெவ்வேறு இடங்களில் வெவ்வேறாகப்பட்டியலிடுகிறது. பாட்டு, உரை, நூல், வாய்மொழி (நாட்டுப்புறக் கதை), பிசி(விடுகதை), அங்கதம், முதுசொல் என்ற ஏழும் (தொல்.-3;384) இலக்கிய ஆக்கமுறையை அடிப்படையாகக் கொண்ட வகைகள். நூல், உரை, பிசி(விடுகதை), முதுமொழி(பழமொழி), மந்திரம், கூற்றிடை வைத்த குறிப்பு என்ற ஆறும் (தொல்.3:467) பொதுவாக அடிவரையறையை, அதாவது இலக்கிய வடிவை அடிப்படையாகக் கொண்ட வகைகள். இவற்றுள் பாட்டு என்ற வகை மட்டும் திணை என்று சொல்லத்தக்க உயர்வான இலக்கிய வகைமையில் அடங்கும். பிற இலக்கியப் பகுப்புகள் எல்லாம் பொதுவாக அல்திணை என்ற இலக்கியப் பகுப்பில் அடங்கும். வனப்புகளுள் அம்மை, அழகு முதலானவை திணை இலக்கியத்திலும், புலன், விருந்து முதலானவை அல்திணை இலக்கியத்திலும் சேரத்தக்கவைகளாக உள்ளன. திணை இலக்கியம் என்ற சொல் உயர்வகை இலக்கியம் என்ற பொருண்மையில் இங்கு பயன்படுத்தப்படுகிறது. நூல் என்பது இலக்கணம் என்பதால் உயர்வகை இலக்கியத்திற்கும் மேலான ஒரு மதிப்பைப் பெறக்கூடியது. ஆனாலும், அது அல்திணை வகையில் சேரும். அறநூல். அரசியல் நூல், கணித நூல், கட்டிடக் கலை நூல், போர் நூல், வணிக நூல் முதலானவை இருந்திருக்க உள்ள வாய்ப்புகளை ராஜ் கௌதமன் (2006;75) நினைவுபடுத்துகிறார். தெய்வம், சூரியன், நிலா, காலம் முதலான இயற்கைப் பொருள்கள் மனிதரால் உயர்வாக மதிக்கப்படுகிறபோதும் பொருள் பாகுபாட்டில் அல்திணைப் பொருளில் சேர்கிறவைகளாக உள்ளன. இதன் அடிப்படையில் மந்திர வகை இலக்கியங்களும் அல்திணை இலக்கியங்களாகும். யாப்பு வடிவில் இல்லாததால் உரை இலக்கியம் அல்திணையில் வைக்கப்பட்டது. முதுமொழி, விடுகதை, நாட்டுப்புறக் கதை முதலானவை அல்திணை இலக்கியங்களாக வைக்கப்பட்டதற்கு யாப்பு, உயர்மொழி, உயர் பாத்திரங்கள், உயர்ந்த ஒழுக்கம் முதலானவை எதிர்க் காரணங்களாக உள்ளன. பாட்டு என்ற உயர்வகை இலக்கியத்தில்

இவை உடன்பாடான காரணங்களாகும். திணை என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்று நச்சினார்க்கினியர்(தொல்.-3;3) பொருண்மை சொல்வதற்குப் பாடலின் அமைப்பும் மனிதனின் மனிதச் சார்பான நோக்கமும் காரணங்களாகின்றன. முதல்பொருள், கருப்பொருள் இல்லாத உரிப்பொருள் மட்டுமே உள்ள பாடல்கள்உள்ளன என்பதால் இலக்கிய வகைமையைத் தீர்மானிக்க உரிப்பொருளை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. உரிப்பொருள் அல்லாத பாடலே இல்லை என்பதால் பாடலின் நோக்கம் மனித ஒழுக்கத்தைப் பாட வேண்டும் என்பதாக இருக்கிறது. திணை என்ற சொல்லுக்குச் சொல்லப்படும் பொருண்மை பாடலின் இலக்கிய வகையைத் தீர்மானிக்கும் முறையோடு இணைத்துக் கருதப்பட்டுள்ளது. உள்ளுறுப்புகளான முதல், கரு, உரி என்ற மூன்றும் இணையான அண்மை உறுப்புகள் ஆகும். உரிப்பொருள் தவிர்த்த பிற உள்ளுறுப்புகளுள் ஒன்றோ, இரண்டோ அல்லது அவற்றின் கிளை உறுப்புகளோ மறைந்து வந்தாலும் அவை வெளிப்பட்டிருக்கும் நிலையில் கொள்ள வேண்டும். இளம்பூரணரின் கருத்து "முதற்பொருளும் கருப் பொருளும் உரிப்பொருளும் வரின் முதற்பொருளால் திணையாகும். முதற்பொருள் ஒழிய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகும். உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும்" (தொல்.-3;3) என்பதாகும். தொல்காப்பியத்தைப் பொருத்தவரையில் முதல், கரு, உரிப்பொருள்களுக்கு இடையிலான உறவு வரையறுக்கப்பட்டது. திணைமயக்கம் என்பதுகூட அந்த வரையறைக்குள் உள்ளடங்கிய, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால், பல சங்க இலக்கியப் பாடல்களில் முப்பொருள் உறவுகள் தொல்காப்பிய இலக்கணத்திலிருந்து வேறுபடுகின்றன.

சங்க இலக்கியப் பாடல்களின் அமைப்பு, உள்ளடக்க வளர்ச்சிப் போக்குகள் முதலானவற்றைத் தொல்காப்பிய இலக்கணத்திற்குள் அடக்கிக் காட்டும் உரையாசிரியர்களின் முயற்சியாலும் திணை என்ற சொல்லின் பொருண்மை பிறழ்ந்துவிட்டிருக்கிறது. முதல், கரு, உரி என்ற மூன்று பொருள்களின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைத் தொகுத்து வகைப்படுத்தினால்

1. வகைமை (திணை) இலக்கியம்
2. வகைமைக் (திணை) கலப்பு இலக்கியம்
    2.1. தனிப்பொருள் வகைமைக் (திணை) கலப்பு இலக்கியம்
        2.1.1. அகப்பொருள் வகைமைக் (திணை) கலப்பு இலக்கியம்
        2.1.2. புறப்பொருள் வகைமைக் (திணை) கலப்பு இலக்கியம்

2.2. பல பொருள் வகைமைக் (திணை) கலப்பு இலக்கியம்
2.3. அகப்பொருள், புறப்பொருள் வகைமைக் (திணை) கலப்பு இலக்கியம்
3. வகைமை (திணை) முறிவு இலக்கியம்
3.1.வகைமைக் (திணை) கூறுகள் கலந்த புதிய இலக்கியம்
3.2. வகைமைக் (திணை) கூறுகள் இல்லாத புதிய இலக்கியம்

என்ற மூன்று வகைகள் அல்லது ஐந்து கிளைப் பகுப்புகள் கிடக்கும். சங்க இலக்கிய மொழிப் பொருண்மைகளுக்கு இலக்கணம் எழுதி, அதைத் தொல்காப்பியத்தில் கூறிய மொழி இலக்கிய, இலக்கணங் களுடன் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டியுள்ளது. சங்க இலக்கியத்தைத் தொல்காப்பியத்தின் வரையறைக்குள் அடங்கிவிடுகின்ற ஒன்றாகக் கருதுவதைத் தவிர்க்க வேண்டும்.

முதற்பொருள், கருப்பொருள் என்ற இயற்கைப் பொருள்களை இலக்கியத்தில் பாடுபொருளாகக் கொள்ளத் தொல்காப்பியத்தில் இலக்கணம் இல்லை. பரிபாடலில் இடம்பெறும் வையை பற்றிய பாடல்கள் அவ்வாறானவை என்பதால் சங்க இலக்கியத்திற்குள் அவற்றை வகைமைக் (திணை) கூறு இல்லாத புதிய இலக்கியங்களாகக் (வகை 3.2) கொள்ள வேண்டும். முல்லைக்கலியில் பாடுபொருளாக அமைவது புணர்ச்சி ஒழுக்கமே. அதுவும் இயல்பு வாழ்க்கைக்குரியது. உயர்ந்த குறிக்கோள் வாழ்க்கைக்கும் இலக்கிய வாழ்க்கைக்கும் பொருந்தக் கூடியதாக இல்லை. உயர்வகை இலக்கியத்தின் பின்புலமான முல்லை நிலமும் கார்காலமும் அதில் பேசப்படவில்லை மாறாக மேய்ச்சல் தொழிலும் ஆநிரை தழுவுதலும் பேசப்படுகின்றன. முல்லைக் கலியை வகைமைக் (திணை) கூறுகள் கலந்த புதிய இலக்கியமாகக்(வகை 3.1) கருத வேண்டியுள்ளது. இவ்விரு வகையான இலக்கியங்களும் முதல், உரி, கருப்பொருள் என்ற தொல்காப்பிய இலக்கண விதிகளை மீறி எழுந்தவைகளாகும். அகப்பாடல் என்ற கட்டமைப்பிற்குள் புறப்பொருள் விரிவாகப் பேசப்படும் இலக்கியமாகப் பட்டினப்பாலை இருக்கிறது. அகநானூறு முதலான இலக்கியங்களில் இவ்வாறான போக்கு இருக்கின்றது என்றாலும் பட்டினப்பாலை எழுதப்பட்டதன் நோக்கம் புறப்பொருளைப் பற்றிப் பேசவேண்டும் என்பதேயாகும். பட்டினப்பாலை, நெடுநல்வாடை முதலான இலக்கியங்களை அகப் பொருளும் புறப்பொருளும் கலந்த இலக்கிய வகைகளாகக் (வகை 2.2) கருத வேண்டும். வேறான புறத்திணைத் துறைகள் கலந்த ஆனால், ஏதாவது ஒரு புறத்திணையில் வைக்கப்பட்டுள்ள, பாடாண் திணையாகவும் வைக்கப்படாத பல பாடல்கள் புறநானூற்றில் உள்ளன.

இவற்றைப் புறத்திணைக் கலப்பு இலக்கியங்களாகக்(வகை 2.1.2) கொள்ள வேண்டும். நெய்தல் நிலப் பின்னணியில் புணர்தல் ஒழுக்கம் நிகழ்வதாக நற்றிணையில் பல பாடல்கள் உள்ளன. புணர்தல் ஒழுக்கம் குறிஞ்சித் திணைக்கு உரியது. இரங்கல் ஒழுக்கம் நெய்தல் திணைக்கு உரியது என்ற விதிக்கு மாறானவைகளாக இப்பாடல்கள் உள்ளன. இவ்வாறான பாடல்களை அகப்பொருள் வகைமைக் கலப்பு இலக்கியங்களாகக் (வகை 2.1.2) கொள்ள வேண்டும். முதல், கரு, உரிப்பொருள் பற்றிய தொல்காப்பியத்தின் இலக்கணத்தோடு பொருந்தி வருகின்ற பாடல்களை வகைமை(திணை) இலக்கியம்(வகை 1) என்று கொள்ள வேண்டும். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, ஆற்றுப்படைகள் முதலான இலக்கியங்கள் அளவில் பெரிதாயினும் இந்த வகைக்குள் அடங்கும்.

தனிப்பாடல்கள் தொகுப்பாக இல்லாமல் தொகுப்பு என்ற திட்டத்தோடு ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகிய இலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன. கலித்தொகை ஐந்திணைகள் என்ற தலைப்பில் தனிப்பாடல் அமைப்பிலேயே எழுதப்பட்டுள்ளது. ஒரு மன்னரைப் பற்றிய ஒரு புலவர் பாடிய பத்துப்பாடல்கள் என்பதாகப் பதிற்றுப்பத்து அமைகின்றது. ஐங்குறுநூறு மட்டும் ஒருவரது வாழ்வில் தொடர்ந்து நடக்கும் நிகழ்ச்சிப் போக்குகளில் இலக்கியத்திற்குப் பொருத்தமானவைகளை எடுத்து வகைப்படுத்தியது போல இருக்கிறது. தஞ்சைவாணன் கோவை போல அக இலக்கணத்திற்கு எழுந்த எடுத்துக்காட்டு இலக்கியம் போலவும் இருக்கிறது. தனிப்பாடல்களை வரிசைப்படுத்தி அமைக்கும் இந்த மரபு இலக்கியத்தை வாழ்வின் வளர்ச்சிப் போக்காகவும் காணும் பண்பைக் காட்டுகிறது. காதல் வாழ்வில் தொடங்கி இல்லறம் நடத்திக் களைத்த பிறகு அறம் இயற்றுவது வரைக்குமான வரிசை மரபு அக இலக்கணத்திலும் இருக்கிறது. பொருள் இலக்கணம் இலக்கியத்திற்கான இலக்கணமாகவும் கருதி எழுதப்பட்டுள்ளது. இருந்தாலும், ஐங்குறுநூறு முதலான இலக்கியங்களை வகைமை (திணை) இலக்கியங்களாகவே கொள்ள வேண்டும்.

முதல், கரு, உரிப்பொருள்களுக்கு இயற்றிய இலக்கண விதிகளின் அடிப்படையில் சங்க இலக்கியத்தில் அவை காணப்படும் மாறுபாடுகளைக் கொண்டு அந்த இலக்கியம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டது. வகைமை (திணை) என்ற ஒரு வகைக்குப் பொருந்தும் பொருள் இலக்கண விதிகளை மட்டுமே தொல்காப்பியம் அளித்துச் சென்றுள்ளது. இவ்வாறான இலக்கியங்கள் சங்க இலக்கியத்திற்குள்

மிகுதியானவை. முல்லைக்கலியும் (வகை 3.1) நற்றிணையில் நெய்தல் திணைப் பாடல்களும் (வகை 2.1.2) உரிப்பொருளுக்குப் பின்புலமாக அமைந்த நிலப் பின்னணியைக் கொண்டுதான் பெயரிடப்பட்டுள்ளன. உரிப்பொருளைக் கொண்டு பெயரிட்டால் அவை திணைப்பாடல்கள் என்றே பெயர் பெறும். உரிப்பொருளுக்கு முதற்பொருளுடன் உள்ள கட்டுப்பாடு இங்கு மாறியுள்ளது. பாடலின் இலக்கணப்பெயர் அதாவது இலக்கிய வகைப்பெயர் பாடலில் இடம்பெற்றுள்ள நிலப் பெயர்க்குரியதாகக் கருதப்பட்டுள்ளது. கைக்கிளை, பெருந்திணைத் தவிர்த்த அகத்திணைகளில் தொல்காப்பியருக்குப் பின் வந்தவர்களின் பார்வை மிகுதியாக குவிந்துள்ளது. புறத்திணைகளில்கூட அவ்வளவு பார்வை குவியவில்லை. தொல்காப்பியமும் புறத்திணை என்பது அகத் திணை அல்லாத பிறிது(தொல்.-3; 59) என்று பொதுவாகக் கூறிச் சென்றுள்ளது. அகவகைப் பாடல்களுக்கு அது முதன்மை அளித்துள்ளது ஒரு பொது இலக்கண மரபின் அடிப்படையில் அமைகிறது. இந்த வேறுபாடு உரையாசிரியர்கள் காலத்தில் மேலும் பெரிதுபடுத்தப் பட்டிருக்கிறது. சமூகத்தின் புறச்செயல்களைவிடக் குடும்பம், கற்பு முதலான அகச்செயல்கள் வலுவடைந்துவிட்டிருக்கின்றன. வழக்கு மொழி, இயல்பு வாழ்க்கை முதலானவற்றிலிருந்து இலக்கியம் மேலும் விலகிச்சென்றுவிட்டது. இடைக்கால ஒழுக்க விதிகள், இலக்கண விதிகள் தொல்காப்பியத்தின் மேல் ஏற்றிப் பார்க்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் திணை மயக்கம் (தொல்.-3;14-15) என்று குறிப் பிடுவது திணைக் கலப்பு (வகை 2) என்ற பொருண்மையில் அன்று. மயக்கம் என்பதை "இயல்பாக வரவேண்டிய ஒன்றுக்குப் பதில் வேறொன்று வந்து முன்னதன் தன்மை கெடாமல் இருப்பது" என்று இ.அண்ணாமலை(1988:6) வரையறுக்கிறார். திணை மயக்கத்தால் ஒரு இலக்கிய வகை பாதிக்கப்படாது. திணை மயக்கத்திற்குட்பட்ட பாடல் அது. திணை மயக்கத்திற்கு உட்படாத நிலையில் இருக்க வேண்டிய இலக்கிய வகையிலேயே இருக்கும். ஒரு இலக்கிய வகையில் அல்லது திணையில் மாறாத கட்டாய உறுப்புகளாக நிலமும் உரிப்பொருளும் இருக்கும். நிலத்தை அடிப்படையாகக் கொண்டு திணை தீர்மானிப்பவர்களுக்கு நிலம் மாறாத, கட்டாய அடிப்படை உறுப்பு. உரிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு திணை தீர்மானிப்பவர்களுக்கு உரிப்பொருள் மாறாத, கட்டாய அடிப்படை உறுப்பு. உரிப்பொருள் அடிப்படை உறுப்பு என்றால் நிலம் மாறும் உறுப்பாக வரலாம். நிலம் அடிப்படை உறுப்பு என்றால் உரிப்பொருள் மாறும் உறுப்பாக இருக்கலாம். எப்போதும், இரு முறைகளிலும் பொழுதும் கருப்பொருளும் மயக்கத்திற்கு உரிய உறுப்புகள். ஒன்று

மற்றொன்றுக்கும் வருவது, ஒன்று ஒன்றுக்கு மேற்பட்டவற்றிற்கும் பொதுவாக இருப்பது என்று இரண்டாகத் திணை மயக்கத்தை வரையறுக்கலாம். திணை மயக்கத்தில் இயற்கையில் இருக்கும் காலம், இயற்கையில் இருக்கும் கருப்பொருளின் விரவல் தன்மைகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. கருப்பொருளும் காலமும் இலக்கிய வகையுள் மாறியும் பொதுவாகவும் வருவது திணை மயக்கம். உரிப்பொருளும் நிலமும் மாறியும் பொதுவாகவும் வருவது திணைக் கலப்பு.

நச்சினார்க்கினியர் (தொல்.-3; 14) குறிப்பிடும் ஒரு நிலப் பின்புலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உரிப்பொருள்கள் வருவது, ஒரு நிலப்பின்புலத்தில் வேறு உரிப்பொருள்கள் வருவது என்ற இரண்டும் திணைக் கலப்புகளாகும். மயங்கி வராத ஒரே பொருள் நிலம். அதாவது ஒரு உரிப்பொருள் என்பதில் புறத்திணைகளின் ஆநிரை கவர்தல் முதலானவைகளும் அடங்கும். உரிப்பொருள் மட்டுமே உள்ள பாடல்கள் திணைக் கலப்பு இலக்கிய வகையுள் சேர்க்க முடியாதவையாக, திணை இலக்கிய வகையுள் சேர்க்க முடிந்தவையாகவே இருக்கும். கைக்கிளை, பெருந்திணை என்பனவாகவும் இல்லாது, ஆனால், புறத்திணையில் வைக்கப்பட்ட சில அகப்பாடல்களை உரிப்பொருள் என்ற ஒன்றுக்கும் பொருந்திவராத பாடல்கள் என்று கொள்ளவேண்டும். தொல்காப்பியம் குறிப்பிடும் பொருள் என்ற செய்யுள் உறுப்புத் திணை என்ற இலக்கிய வகைமைக்கு உட்படாத பொதுவான இலக்கிய வகைமையைப் பற்றியது. உரிப்பொருள் என்ற வகைப்பாடுகளுக்குப் பொதுவானது அது. அகத்திணைகளுக்குப் பொதுவாக இருப்பது. குறிஞ்சி முதலான எந்த இலக்கிய வகையிலும் சேராத ஒரு இலக்கியமாக இருக்கலாம் என்று விதிவிலக்காகக் கொள்ளப்படவேண்டிய இலக்கிய வகைகளுக்காகவே பொருள் என்ற செய்யுள் உறுப்பைத் தொல்காப்பியம் உருவாக்கியுள்ளது. குறிஞ்சி முதலான இலக்கிய வகைமைகளில் உள்ள இலக்கிய வகைமைகளைக் கடந்து நிற்கிற இலக்கியம் என்பதற்கான பொதுப் பண்பைச் சுட்டிக்காட்டவே பொருள் என்ற செய்யுள் உறுப்பைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுச் சென்றிருக்கிறார். திணைக் கலப்பு, திணை முறிவு நிலைகளில் உயர் இலக்கிய வகைமை மறைந்து புதிய இலக்கிய வகைமை தோன்றுவதற்கான தன்மைகளைக் காண முடிகிறது. திணை மயக்கம் என்பதன் பொருண்மை உரைகள் முதலாகத் திரிபுபடுத்தப்பட்டு வந்திருக்கிறது. உரைகளில் திணைக் கலப்பு, திணை மயக்கம் என்ற இரண்டும் ஒன்றுதான் என்றாகி விட்டன. தொல்காப்பியம் குறிப்பிடும் திணைமயக்கத்தை இளம்பூரணர் திணைமயக்கம் அன்று(தொல்.-3;21) என்று குறிப்பிடுகிறார். அவர்

திணைக் கலப்பையே திணை மயக்கம் என்று எடுத்துக்கொள்கிறார். திணைக் கலப்புக்கான விதியும் தொல்காப்பியத்தில் உள்ளது என்று எடுத்துக்கொள்கிறார். திணைக் கலப்புக்கான விதியும் தொல்காப்பியத்தில் உள்ளது என்று காட்டுவதற்காகவும் சங்க இலக்கிய முழுமையும் தொல்காப்பியம் என்ற இலக்கண நூலின் விதிகளுக்குள் அடங்கிவிடும் என்று கருதியதாலும் இவ்வாறு பிறழ்வு நேர்ந்துள்ளது. மாற்றத் தகுந்த உள்ளுறுப்புகள் பற்றிய வேறுபாடுகளே இந்தத் திணைக் கலப்பு, திணை மயக்கம் என்ற வேறுபாடுகளுக்குக் காரணமாகிவிட்டன. இலக்கிய அமைப்பு எது, அதன் உள்ளுறுப்புகள் எவை, அவற்றுக்கிடையிலான உறவுகள் எவை என்பன தீர்மானிக்கப்பட்ட பிறகுதான் இலக்கிய அமைப்பின் மயக்கம், சிதைவு பற்றிக் கூறமுடியும். நெய்தல் நிலத்தில் காதல் நிகழ்வது தொல்காப்பியம் கூறும் முதல், உரி, கருப்பொருள் உறவு இலக்கணத்திற்குப் பொருந்தாத ஒன்று. அது திணைக்கலப்பு. ஆனால், உரையாசிரியர்களுக்கு அது பொருந்தி வரக்கூடிய ஒன்று. அது திணைமயக்கம். அமைப்பின் உள்ளுறுப்புகள் அமைப்புக்குள் மாறி இருந்தாலும் அமைப்பின் செயல்பாடு மாறவில்லை என்றால் அந்த அமைப்பு மாற்றம் பெறாத அமைப்பு என்றே கொள்ளப்படும். அதேபோல அமைப்பின் உள்ளுறுப்புகள் நீக்கப்பட்டாலும் அல்லது மறைந்து வந்தாலும் அந்த அமைப்பின் செயல்பாடு மாறாது என்றால் அந்த அமைப்பு மாறவில்லை என்றே கொள்ளப்படும். உரிப்பொருள் மட்டுமே உள்ள பாடல்களை இவ்வாறு திணை தீர்மானிக்கலாம். திணை மயக்கம் என்ற சொல் உரிப்பொருள், கருப்பொருள், முதற்பொருள்களில் ஏற்படும் மாறுதல்களைக் குறித்து வருகிறது என்று உரைகளில் கொள்ளப்பட்டுள்ளது. அதாவது திணை என்ற சொல் நிலம், உரிப்பொருள், காலம், ஒழுக்கம் என்று கொள்ளப்பட்டிருக்கிறது. வகைமை என்று தொகுதியாகப் பொருண்மை கொள்வதே பொருத்த மானதாக அமையும்.

வழக்கு மொழியிலிருந்து சங்க இலக்கிய மொழி வேறுபட்டும் அமைகிறது என்பதன் அடிப்படையிலும் திணை என்ற சொல்லை விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. வழக்கில் உள்ள பெயர்களைத் தவிர்த்துவிட்டுப் பொருள்களுக்கு வேறு பெயரிட்டு இலக்கியத்தில் ஆளும் மரபு சங்க இலக்கிய மொழியின் பண்புகளுள் ஒன்று. மதிப்புக் குறைவான பொருள்களுக்கு வழக்கில் உள்ள பெயரும் மதிப்புக் குறைவாகக் கருதப்படுதல் இயல்பு. செய்யுள் வழக்கில் அப்பொருள்களை வழக்குப் பெயர்களால் குறிப்பிடுவது இழிவு அல்லது உயர்வற்றது என்று கருதப்பட்டுள்ளது. எனவே, வேறு பெயர் கொடுத்து அப்பொருள்கள் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. செம்படவர், கோனார், வலையர்

முதலான பெயர்கள் பரதவர், ஆயர், வேட்டுவர் முதலான பெயர்களால் பதிலீடு செய்யப்பட்டுள்ளன. பாணர், விறலியர் முதலான பெயர்களும் இலக்கியப்பெயர்கள் என்றும் வழக்கில் அவற்றிற்குப் பதிலாக வேறு பெயர்கள் இருந்திருக்க வேண்டுமென்றும் கருதமுடிகிறது. இலக்கிய மொழி உயர்ந்தோர் மொழியாகவும் இருக்கும் என்பதால் பரதவர், ஆயர், பாணர் முதலான பெயர்கள், உயர்ந்தோர் வழக்கில் இருந்த சொற்களாகவும் இருக்கவேண்டும் என்று கருதமுடிகிறது. பொதுவர், எயினர் முதலான சொற்கள் கற்றோர்களால் இலக்கியப் பயன் பாட்டிற்காகப் புதிதாக உருவாக்கப்பட்ட சொற்கள் என்று கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறான சொற்கள் திணை மரூஉப் பெயர்கள் (தொல்.-3;22) என்று தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ளன. திணை மரூஉப் பெயர்கள் என்பவை உயர் வழக்கு மொழிக்கான மாற்றுப்பெயர்களே ஆகும். ஒவ்வொரு திணை(வகைமை)யிலும் மருவி வந்து வழங்கும் பெயர்கள் பொருளின் பண்பு, அதன் செயல் முறை என்ற இரண்டின் காரணமாக நிகழும் என்று தொல்காப்பியம் (தொல்.-3;22) குறிப்பிடுகிறது. திணை மரூஉப் பெயர்கள், இடக் கரடக்கல், மங்கல வழக்குகள் போலப் பக்கக் கிளவிகளாகச் செயலாற்று கின்றன. திணைப் பெயர்கள் எனப்படும் செய்யுள் பெயர்களைச் செய்யுளிலும் உயர்வழக்கிலும் உள்ளவை, செய்யுளில் மட்டும் உள்ளவை என்று இரண்டாகப் பகுக்கலாம். பொதுவர், எயினர் முதலான சொற்கள் செய்யுள் வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை எனலாம். இந்தச் சொற்கள் வழக்கில் இருந்திருக்க வாய்ப்பு இல்லை. இலக்கிய வழக்கிலிருந்து இலக்கண வழக்கிற்கும் பிற்கால எழுத்து வழக்கிற்கும் உயர்ந்தோர் வழக்கிற்கும் இந்த சொற்கள் இடம் பெயர்ந்துள்ளன என்று கொள்ளவேண்டும். உயர் வழக்கிலிருந்து அவ்வாறே இலக்கியத்தில் எடுத்தாளப்படும் பெயர்கள் எந்த மாற்றமும் அடைவது இல்லை என்றாலும், அப்பெயர்கள் திணைப்பெயர்கள் என்று கொள்ளப் பட்டுள்ளன. திணை மருவாத இயல்பான பெயர்களாக இவை இருக்கும் போதும் இலக்கிய உயர் வழக்குத் தன்மைக்கு உயர்த்தப்பட்டவை எனலாம். செய்யுள், வழக்கு என்ற இரண்டிற்கும் பொதுவான பெயர்கள் இவை. வழக்குக்கு மட்டுமே உரிய பெயர்கள் என்று ஒரு வகையும் குழூஉக்குறி மரபுக்காக மருவி வழங்கும் பெயர்கள் என்று ஒரு வகையும் இவ்வாறு வேறுபல வகைகளும் வழக்கு மொழியில் உள்ளன. வழக்குப் பெயர்கள் மரூஉ உயர்வு காரணமாகவும் இழிவு காரணமாகவும் நிகழலாம். இழிவு காரணமாக நிகழ்வன இலக்கிய வழக்கிற்கு எடுத்துக் கொள்ளப்பட வாய்ப்பு இல்லை. திணைப்பெயர்(தொல்.-3;23) திணைநிலைப் பெயர் (தொல்.-3;22) என்ற இரு சொல்லாட்சிகளைத்

தொல்காப்பியத்தில் காணமுடிகிறது. இவ்விரு சொற்களும் நிலத்தில் வாழும் மேல் மக்களையும் கீழ்மக்களையும் முறையே குறித்து வருவன என்று இளம்பூரணர் விளக்குகின்றார். ஆயர், வேட்டுவர், பரதவர் முதலான பெயர்கள் கீழ் மக்களையும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பெயர்கள் மேல் மக்களையும் குறிக்கும் என்று அவர் கருதுகிறார். குறவர், பரதவர் முதலான குலப்பெயர்களைத் திணைப்பெயர்கள் என்றும் வெற்பன், நாடன், சேர்ப்பன் முதலான தலை மக்கள் பெயரைத் திணை நிலைப்பெயர்கள் என்றும் நச்சினார்க்கினியர் விளக்குகின்றார். திணைப்பெயர் என்ற சொல் உயர்ந்த குடி, உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர்களின் அமைப்பை, குழுவைக் குறிக்கும் பொதுச் சொல் என்றே கொள்ளவேண்டும். அந்தணர், அரசர் முதலான வருண அடிப்படையிலான சமூக வகைகள் என்று கொள்வது இங்கு பொருந்தாது. திணைநிலைப் பெயர் என்ற சொல்லில் உள்ள நிலை என்ற சொல் யாப்புக்காகக் கொடுக்கப்பட்ட இடைநிரப்பி ஆகும். பின்வரும் தொல்காப்பிய அடிகளில்,

2. அ) பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே (தொல். 2;162)
ஆ) திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே (தொல். 3;22)
இ) ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர் (தொல். 3;23)
ஈ) ஆனா வகைய திணைநிலைப் பெயரே (தொல். 3;24)

நிலை என்ற சொல் யாப்பு இடைநிரப்பியாகத் தனிச் சீராக்கத் தேவைக்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. நிலை என்ற சொல்லை எடுத்துவிட்டாலும் பொருண்மை கொள்வதில் பாதிப்பில்லை. வேறு பல இடங்களிலும் நிலை என்ற சொல் யாப்பு இடைநிரப்பியாகத் தொல்காப்பியத்தில் இருப்பதை,

3. அ) ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும் (தொல்.-2;4)
ஆ) பகுதிக் கிளவி வரைநிலை இலவே (தொல்.-2;17)
இ) ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி (தொல்.-2;454)

என்ற அடிகளில் காணமுடிகிறது. நிலை என்ற சொல் இடைநிரப்பியாக வராத பல இடங்களும் உள்ளன.

திணை என்ற சொல்லின் பொருண்மையை மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது. திணை என்ற சொல் "பிறவற்றை விட உயர்வான ஒன்று" என்ற பொருண்மையைத் தொடக்கத்தில் குறித்து வந்துள்ளது. ஒன்றும் பிறவும் என்ற பாகுபாடு இதில் கிடைக்கிறது. அதாவது திணை என்ற சொல்லால் அந்தப் பாகுபாட்டைக் குறிக்க வேண்டுமானால்

திணை, அல்திணை என்ற சொற்களால் முறையே குறிப்பிட வேண்டும். அஃறிணை என்ற சொல் ஒரு சொல் போல உருவாகிவிட்ட பிறகு, திணை என்ற சொல்லிற்கு உயர் என்ற அடையை அச்சொல்லின் பொருண்மையை விளக்கி வருமாறு கொடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. உயர்திணை, அஃறிணை என்ற வகைமைச் சொற்கள் சொல்லிலக்கணத்தில் தோன்றின. உயர்திணை என்ற சொல் சங்க இலக்கியத்தில்,

4. அ) ஒண்சுவர் நல்இல் உயர்திணை இருந்து பைங்கிளி மிழற்றும் (பட்டினப்பாலை. 263)

ஆ) நிறம் திகழ் பாசிழை உயர்திணை மகளிர் (பதிற்றுப்பத்து. 73)

என்று திணையையும் உயர்குடி அல்லது உயர் குலத்தையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. திண்ணை என்பது பிற இடங்களிலிருந்து வேறுபட்டுத் தான் மட்டும் மேடாக, திட்டாக இருக்கும் ஒரு பருப்பொருளைக் குறித்து வருகிறது.

5. ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணைப்பால் நாய் துள்ளிய (அகம். 167)

உயர்குலம், உயர் குடியைக் குறித்து வரும்போது அது பிறகுலம், பிற குடிகளில் இருந்து உயர்வானது என்ற அருவப் பொருளை, கருத்தியல் பொருண்மையைக் குறித்து வருகிறது. திண் என்ற வேர்ச் சொல்லுடன் -ஐ என்ற பெயராக்க விகுதியைச் சேர்க்கும்போது இயல்புப் புணர்ச்சியாக இருக்குமானால் திணை என்ற சொல்லே கிடைக்கும். குறில் ஒற்று இரட்டும் என்ற திரிபுப் புணர்ச்சியாக இருக்குமானால் திண்ணை என்ற சொல் கிடைக்கும். திண்ணை என்ற சொல் இன்று வழக்கில் உள்ளது. இயல்புப் புணர்ச்சியால் வந்த திணை என்ற சொல் வழக்கொழிந்துவிட்டது.

திணை என்ற சொல்லின் வேர்ச்சொல் திண் என்பதே ஆகும். திட் என்பதாகவும் இருக்கலாம். திட்டு, திட்டை, திண்டு முதலான சொற்கள் வேர்ச்சொற்களாக இருந்து ஒரு பொருளைக் குறித்துவருவதில் திணை என்ற சொல்லின் கருப்பொருண்மை அடங்கியுள்ளது. பரந்த நிலப்பரப்பில் இருந்து உயர்ந்து நிற்கும் ஒரு சிறு நிலப்பரப்புத் திட்டு, திட்டை எனப்படுகிறது. சமதளப் பரப்பிலிருந்து உயர்ந்த ஒரு சிறு பரப்பு திண்ணை எனப்படுகிறது. இதேபோல் பரந்த மக்களிடமிருந்து மக்கள் குழுக்களிடமிருந்து ஒரு குழு மட்டும் சமூக அரசியல் முதலான காரணங்களால் உயர்வாக மதிக்கத் தக்கநிலையில் அது திணை எனப்பட்டுள்ளது எனலாம். திணை என்ற சொல் குடி அல்லது குலத்தைக்

குறித்து வருமிடங்களில் அது பெறும் அடைகள் தொன்மை, சீர்மை, உயர்வு முதலான பொருண்மை குறித்தனவாக உள்ளன.

6. அ) தொல்திணை மூதூர் (மலைபடுகடாம். 401)
ஆ) முன்திணை முதல்வர் (பதிற்றுப்பத்து. 14, 72, 85)
இ) விழுத்திணைப் பிறந்து (புறநானூறு. 27, 159)
ஈ) வான்திணைப் புரையோர் (குறிஞ்சிப்பாட்டு. 205)

திணை என்ற சொல் இவ்வாறு உயர் குழுவினரை மட்டும் பிறரிடமிருந்து தனியே பிரித்துக் கூறுவதற்குப் பயன்பட்டுள்ளது. இன்றைய கருத்தில் இதைக் கூற வேண்டுமானால் அன்றைய உயர் சாதியினரைக் குறித்து வந்துள்ளது எனலாம். குடும்பம், சாதி அமைப்பிலுள்ள செறிவையே அடைகள் காட்டுகின்றன. உயர்சாதி திணை என்றால் பிற சாதியினர் அல்திணைகளாகும். திணை என்ற சொல் உயர்ந்த பண்பு என்ற பொருண்மையில்,

7. அ) அகவர் நீல்நிற முல்லைப் பல்திணை நுவல (பொருநராற்று. 221)
ஆ) துளங்குடி விழுத்திணை திருத்தி (பதிற்றுப்பத்து. 31)
இ) நின் ஆடுகுடி மூத்த விழுத் திணைச் சிறந்த (புறநானூறு. 24)

என்ற அடிகளில் இடம்பெற்றுள்ளது என்று கருத வாய்ப்பு உள்ளது. தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தால் தலைவி பாதிக்கப்படுவது எல்லாக் குலங்களிலும் நடக்கும் ஒன்றன்று. திணை என்ற சொல் குறிப்பிட்ட குலம் என்ற பொருண்மையில்,

8. தெறுவது அம்ம இத்திணைப் பிறத்தல்லே (குறுந்தொகை. 45)

என்ற அடியில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. திணை என்ற சொல் உயர்குலப் பெண் இனத்தைக் குறித்து வந்தது என்றுகூடக் கருத வாய்ப்புள்ளது. பரத்தமை ஒழுக்கம் எல்லாக் குலங்களுக்கும் உரியது அன்று. பொருளாதார, சமூக மதிப்புள்ள உயர் குலத்தவர்க்கே உரியது. திணை என்ற சொல் உயர்ந்து நிற்கும் ஒரு பருப்பொருளைக் குறித்து வந்தது என்பதற்குச் சான்றாக மேலும் சில சான்றுகள் சங்க இலக்கியத்தில் வந்துளளன. அவை வருமாறு;

9. அ) அளக்கர் திணை விளக்காகக் கனை எரி பரப்ப (புறநானூறு. 229)
ஆ) விளங்கு திணை வேந்தர் களம்தொறும் சென்று (புறநானூறு. 373)

என்ற அடிகளில் திணை என்ற சொல் நிலம் அல்லது பூமி, நாடு என்ற

பொருண்மைகளில் வந்துள்ளது. நிலப்பரப்புக் கடல் பரப்பிலிருந்து திட்டுப் போல உயர்ந்து இருப்பது என்ற பொருண்மையை இங்குக் கொள்ள வேண்டியிருக்கிறது. நிலம் என்பது கடலால் சூழப்பட்ட பெரிய திட்டு.

திணை என்ற பருப்பொருள் பெயரானது அருவப் பொருள் பெயராக மாறி வழங்கியதற்கும் பொருள் மற்றும் சொல் இலக்கணங் களுக்கும் தொடர்பு இருக்கிறது. தமிழில் தொடக்கத்தில் ஆண்பால் மட்டும் உயர்திணையாக இருந்திருக்கிறது. பெண்பால் அஃறிணையில் இருந்தது என்றும், பிறகு பெண்பாலும் உயர்திணையில் சேர்த்துக் கொள்ளப் பட்டது என்றும் தெ.பொ.மீனாட்சிசுந்தரன் *(1982; 29-30)* விளக்குகிறார். தெலுங்கில் இன்றும் உயர்திணைப் பெண்பால் என்பது அஃறிணை ஒன்றன்பால் வகைப்பாட்டிலேயே வைக்கப்பட்டுள்ளது. சில திராவிட மொழிகளில் மனிதன், மனிதன் அல்லாதன என்ற பாகுபாடற்ற நிலையே காணப்படுகிறது. தொடக்கத்தில் ஆண்பால் உயர்திணை என்று கொள்ளப்பட்டதற்கும் உயர்சாதி அமைப்புகள் திணை என்று கொள்ளப்பட்டதற்கும் ஒற்றுமை இருக்கிறது. திணை என்ற சொல் தொடக்கத்தில் ஆண்பாலையும் உயர்குடியினரையும் குறிக்கப் பயன்படுத்தப்படுவதில் ஒரு பொதுத்தன்மை இருக்கிறது. அந்தப் பொதுத்தன்மையை ஆதிக்கம் அல்லது சமூக மதிப்பில் உயர்வு நிலை என்று குறிப்பிடலாம். அதாவது ஆதிக்கம் என்ற பண்பு பொருள் பாகுபாட்டிற்கும் சமூகப் பாகுபாட்டிற்கும் பொதுவான ஒன்றாக இருக்கிறது. இயற்கையுடன் கொள்கின்ற வேறுபாட்டால் தம்மைப் பற்றி மனிதன் தோற்றுவித்துக் கொள்ளும் எண்ணங்களையே பிற மனிதர்களுடன் கொள்கின்ற வேறுபாட்டின் போதும் தோற்று வித்துக் கொள்கிறான். திணை என்ற சொல் இயற்கையுடன் மனிதன் கொண்டுள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுவது போல, பிற மனிதர் களுடன் கொள்கின்ற வேறுபாட்டையும் குறித்து நிற்கிறது. பெண் என்பவள் இயற்கையின் அங்கமாகக் கருதப்பட்டவளாக இருக்கிறாள். ஆண் இயற்கையை ஆளுமை செய்பவனாக இருக்கிறான். அப்போது ஆண் மட்டுமே உயர்திணை, அவனது இயற்கை ஆளுமைக்குத் துணை யாக இருக்கும்போது பெண்ணும் இயற்கையிலிருந்து பிரிகிறாள். பிரிக்கப் படுகிறாள். நிபந்தனைக்கு உட்பட்டு அவளும் உயர்திணையாகிறாள். சமூகம் என்பது ஆடவர்களால் ஆனது. சமூகம் என்பது குழுக்களின் தொகுதி. அந்தந்தத் தொகுதிகளுக்குள் ஆளுமை செய்யும் குழு, ஆளுமை செய்யப்படும் குழுக்கள் என்ற இரண்டும் உண்டு. ஆளுமை செய்யும் குழு ஆண் எனப்படும். ஆளுமை செய்யப்படும் குழுக்கள் பெண் எனப்படும். ஆண் உயர்திணை அதாவது ஆளுமை செய்யும் குழு

உயர்திணை. ஆளுமை செய்யப்படும் குழுக்கள் அல்திணை. ஆளுமை செய்யும் குழு, ஆளுமை செய்யப்படும் குழு இரண்டிலும் ஆண், பெண் இருவரும் கலந்தே இருப்பார்கள். ஆனால் ஆளுமை என்பது ஆண் தன்மை. ஆளப்படுதல் என்பது பெண் தன்மை.



பொருள் பாகுபாடும் மக்கள் பாகுபாடும்

பொருள் மற்றும் மனித சமூகத்தின் இருத்தல் பண்பை இந்தப்படம் அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டுள்ளது. செயல் பண்போ, வரலாற்று வளர்ச்சியோ அடிப்படையாகக் கொள்ளப்படவில்லை. திணை என்ற சமூக உயர் வகைப்பாட்டில் மக்களுக்குள் ஒரு சில பிரிவினரே அடக்கப்பட்டுள்ளனர். சமூக வகைப்பாட்டில் அல்திணையாக இருக்கும் மக்கள் பிரிவினர் பொருள் வகைப்பாட்டில் உயர்திணையாக இருக்கின்றனர். இந்த வகைப்பாடுகள் ஒன்றுக்கு மற்றொன்று கொடுத்து வாங்கும் தன்மை கொண்டவை. அஃறிணையாகக் கருதப்படும் மக்களும் உயர்திணையாகக் கருதப்படும் மக்கள் அல்லாதனவும் மொழியில் இருக்கவே செய்கின்றன. மனித சமூகம், மனித சமூகம் அல்லாதன என்ற பொருள் பாகுபாடும் உயர் சமூகப் பிரிவினர், உயர் சமூகப் பிரிவினர் அல்லாதவர் என்ற சமூகப் பாகுபாடும் பொருந்தி அமைகின்றன. தமிழ் மொழி அமைப்பில் பொருள் பாகுபாட்டு விதிகள் வலுவானவை. சமூகப் பாகுபாட்டு விதிகள் பொருள் பாகுபாட்டு விதிகள் அளவிற்கு வேறுபாடுகளைத் தோற்றுவிப்பதில்லை. மொழிப்பயன்பாட்டிலும் சூழலிலும் அவை வேறுபாடுகளைத் தோற்றுவிக்கின்றன. எனவே மொழி இலக்கணத்தில் உயர்திணைப்பொருள் என்ற மனிதன், அஃறிணைப் பொருள் என்ற மனிதன் அல்லாதன என்ற பொருள் பாகுபாடும் உயர்திணைச் சொல் என்ற மனிதரைக் குறிக்கும் சொல், அஃறிணைச்

சொல் என்ற மனிதரைத் தவிர்த்த பிறவற்றைக் குறிக்கும் சொல் என்ற சொல்பாகுபாடும் பேசப்பட வேண்டியவையகளாகின்றன. மொழிப் பயன்பாட்டிலும் சூழலிலும் வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் உயர் சமூகப்பிரிவு, உயர் சமூகப்பிரிவு அல்லாதன என்ற சமூகப்பாகுபாடு சமூகத்தைப்பற்றிய இலக்கியத்தில் பேசுவதற்கு உரியவைகளாகின்றன. திணைக்கோட்பாடு என்பது பொருள்நிலையில் மனித ஆதிக்கக் கோட்பாடாகவும் அமைகிறது. பால்பாகுபாடு பொருள் பாகுபாடு, சமூகப் பாகுபாடு, இலக்கியப் பாகுபாடு முதலான அனைத்திலும் ஆதிக்க ஆண் உயர்வு பெற்றிருப்பதால் திணைக் கோட்பாடு என்பது அடிப்படையில் ஆண் ஆதிக்கக் கோட்பாடாகும்.

தமிழ்ச் சூழலில் திணை என்ற சொல்லும் அதன் விளக்கமும் உணர்ச்சிக்கும் மிகைப்படுத்தலுக்கும் உள்ளாகி வந்துள்ளன. நிலம் என்றும் உரிப்பொருள் அல்லது ஒழுக்கம் என்றும் உரையாசிரியர்கள் தொடங்கி வைத்த பிறழ்வுபட்ட விளக்கம் இன்று மேலும் பெரிதுபடுத்தப்பட்டிருக்கிறது. சான்றாகத் திணை என்ற சொல் இடம்பெறும் மூன்று கூற்றுகள் வருமாறு;

"சங்கப்பாடல்கள் அனைத்தும் அகம் புறமாகிய திணை பற்றியனவாதலின் அவற்றைத் திணையிலக்கியம் என்று வகைமை சுட்டுதலே பொருத்தமுடையதாகும்" (தமிழண்ணல், 1982, 78)

அ) "திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படைகள்" (கா.சிவத்தம்பி 1998;25). ஆ) கா. சிவத்தம்பியின் திறன் பற்றி நா. வானமாமலை கருத்து: "திணைக் கோட்பாட்டைப் புவியியல் பிரிவுகளோடு ஒப்பிட்டு ஒவ்வோர் புவியியல் பிரிவோடும் ஒவ்வோர் இலக்கிய மரபை இணைத்தும்." (கா.சிவத்தம்பி, 1998; 49)

"இலக்கிய நயமும் கற்பனைத் திறனும் கவிதை உணர்வும் தோன்றப் பாடுவதற்கென ஒரு மரபை வகுத்துக்கொண்ட அடிப்படையில்தான் இந்தத் திணைத் தத்துவம் தோன்றியது. இத்திணைத் தத்துவத்தில் தோன்றியவைதான் அன்றைய இலக்கியங்கள், அந்த இலக்கியங்களுக்காகத் தோன்றிய இலக்கிய உத்திதான் இந்தத் திணைத் தத்துவம்" (ச.அகத்தியலிங்கம், 2001:31)

திணை என்ற சொல்லின் சரியான பொருண்மை உயர்வான வகை என்பதாகும். இந்தப் பொருண்மையைத் திணை இலக்கியம். திணைக் கோட்பாடு, திணைத் தத்துவம் என்ற சொல்லாட்சிகளில் பதிலீடு செய்தால் அந்தச் சொல்லாட்சிகளுக்குக் கருதப்பட்ட எந்தச் சிறப்பும்

இல்லாதுபோகும். வகை இலக்கியம், வகைக் கோட்பாடு, வகைத் தத்துவம் என்ற பொருண்மைக்கு என்ன பொருண்மை இருக்க முடியும். எல்லா இலக்கிய வகைகளுள்ளும் உள் வகைகள் உள்ளன. அவற்றைத் திணை என்றும் குறிப்பிடலாம். திணை இலக்கியம், திணைக் கோட்பாடு, திணைத் தத்துவம் என்ற சொல்லாட்சிகள் பேருணர்ச்சியால் வந்த மிகைச் சொற்களாகும். கலம்பகத் தத்துவம், காப்பியத் தத்துவம், புதுக்கவிதைத் தத்துவம் என்றெல்லாம் சொல்வதற்கு வாய்ப்புகள் வந்துவிடும். உலகில் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் அது அதுக்கென்று ஒரு தத்துவம் இயற்கையில் இருந்துகொண்டிருக்கிறது என்பது வேறானது.

திணை என்ற சொல் பெரும் பகுப்பையும் துறை என்ற சொல் புறத்திணையில் உட்பகுப்பையும் அகத்திணையில் கிளைப்பகுப்பையும் குறிக்க வருகின்றன. இயல், அதிகாரம், மாலை, பத்து, நூறு முதலான சொற்கள் தொகுப்புகளைக் குறித்து வருவன. அகத்திணை, புறத்திணை என்ற சொற்களின் பொருண்மைகள் அகப்பொருள், புறப்பொருள் அகவொழுக்கம், புறவொழுக்கம் என்பன அல்ல. அகவகை, புற வகை என்பனவாகும். இயல், திணை என்ற சொற்கள் முரண்பட்ட பொருண்மை கொண்டவை. இயல் தொகுப்பையும் திணை பகுப் பையும் குறித்து வந்தன என்றாகும். அகத்திணை, புறத்திணை என்ற இரு சொற்களில் திணை என்ற சொல் அடைபெற்றுவரும் பொதுப்பெயராக இருப்பதால் அவ்விரு சொற்களும் திணை என்று சுருக்கிச் சொல்லிவரப்பட்டுள்ளன. அதனால் திணை என்ற சொல்லின் பொருண்மை அகம் என்றோ, புறம் என்றோ ஆகிவிடாது. திங்கள் கிழமை, புதன் கிழமை என்ற வழக்குகள் உள்ளன. ஆனால், கிழமை என்ற பொதுப்பெயருக்குத் திங்கள், செவ்வாய் என்ற பொருண்மைகள் கொடுக்கமுடியாது. அதுபோலத் திணை என்ற சொல்லுக்கும் திணைக்கு அடையாக வந்த சொற்களின் பொருண்மைகளைத் தரமுடியாது. ஆனால், உரைகளின் காலம் முதல் இன்று மொழியியல் காரர்களின், இலக்கியத் திறனாய்வாளர்களின் காலம் வரை திணை என்ற சொல்லிற்குத் தவறான பொருண்மை சொல்லிவரப்பட்டுள்ளன.

திணை என்ற சொல்லானது சொல், பொருள், நிலம், உரிப்பொருள், ஒழுக்கம், மக்கள், சாதி அல்லது குலம் முதலானவற்றின் வகைகளைக் குறிக்கும்போது அவற்றை அடைகளாகப் பெற்ற பொதுப்பெயராக வகைமை என்ற பொருண்மையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. பெயரடைகளின் பொருண்மை அடைகளை ஏற்றுவரும் பெயரின் பொருண்மை ஆகிவிடாது. வழக்கொழிந்த ஒரு சொல் அதன் சூழலில்

உள்ள பிற சொற்களின் பொருண்மைகளால் நிரப்பப்படுகிறது. சூழல் என்பது அடுத்துவரும் காலகட்டங்கள் என்பதாகக்கூட இருக்கலாம். அந்தச்சொல் அதன் சமகால வழக்கு அடிப்படையில் பொருண்மை காணப்படாமல் பொருண்மை திணை என்ற வழக்கொழிந்த சொல்லின் மேல் ஏற்றப்பட்டுள்ளது. திணைப்பாகுபாடு, திணைப் பிரிவு, திணை வகை என்ற பிற்காலச் சொல்லாட்சிகளில் திணை என்ற சொல் தன் பொருண்மையை முழுமையாக இழந்துவிட்டது.

துணைநூல்கள்

1. அகத்தியலிங்கம் ச., 2001, தொல்காப்பிய உருவாக்கம், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்
2. அண்ணாமலை இ., 1988, தொல்காப்பியரின் மூன்று மொழிக் கருத்துக்கள், மொழியியல் 11:1-4, அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகம், சிதம்பரம்.
3. அருணாசலம்பிள்ளை மு., 1975, தொல்காப்பியம் - பொருளதி காரம் - அகத்திணையியல்; உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
4. கோவிந்தராச முதலியார் கா. ர., 1970, வீரசோழியம் பெருந் தேவனார் இயற்றிய உரையுடன், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை
5. கோவிந்தராசனார் கா.ர., வேணுகோபாலனார் மே. வீ., 2006, களவியல் என்னும் இறையனார் அகப்பொருள் மூலமும் நக்கீரனார் உரையும், வசந்தா பதிப்பகம், சென்னை
6. சாமிநாதய்யர் உ.வே., 1961, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் (நகல் பதிப்பு), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
7. சிவத்தம்பி கா., 1998, பண்டைத்தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, மக்கள் வெளியீடு, சென்னை.
8. சுப்பிரமணியன் பா.ரா., முதன்மை ஆசிரியர், 1992, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா, சென்னை
9. தமிழண்ணல், 1982, புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு, சோலை நூலகம், மதுரை
10. நாகராசன் பா.வே., விஷ்ணுகுமாரன் தா., தொகுத்தோர், 2000, தொல்காப்பியச் சிறப்பகராதி, பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனம், திருவனந்தபுரம்.

11. மீனாட்சி சுந்தரன் தெ.பொ., 1982, தமிழ் மொழி வரலாறு, மொழிபெயர்ப்பு; ச.செயப்பிரகாசம், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை

12. ராஜ்கௌதமன், 2006, பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், தமிழினி, சென்னை

13. வெள்ளைவாரணன் க., 1983, தொல்காப்பியம் - பொருளதிகாரம் - புறத்திணையியல்: உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

2

இலக்கியப் பொருளும் உரிப்பொருளும்

ஒரு இலக்கியப்பொருள் என்பது அந்த இலக்கியத்தின் இலக்கிய வகைமையாக இருக்க முடியாது. இலக்கியத்தின் மொழி, மாந்தர்கள், மாந்தர்களின் மொழி, இலக்கியத்திற்குள் வரும் சூழலில் உள்ள கருப்பொருள்கள், நிலம், காலம் என்ற சூழல்கள், இலக்கியத்திற்குள் இடம்பெறும் செயல்கள் என்று எவையுமாக இலக்கியப் பொருள் இருக்கமுடியாது. ஒரு இலக்கியத்தின் கூறுகள் எவையோ, அவை யெல்லாம் இலக்கியப் பொருள் ஆகமுடியா. ஆனால் இலக்கியத்தின் கூறுகள் எல்லாம் இலக்கியப் பொருளுடன் தொடர்புடையன. இலக்கியப் பொருள் என்பது முற்றிலும் இலக்கியத்தின் உள்ளடக்கம் சார்ந்தது. இலக்கியத்தின் வடிவம், அமைப்பு முதலானவற்றுடன் சார்ந்தது அன்று. ஆனால் இலக்கியப் பொருளை அவற்றுடன் தொடர்புபடுத்தலாம். இலக்கியப் பொருளுக்கும் இலக்கியத்தின் கூறுகளுக்கும் உள்ள நேரடித் தொடர்புடையன என்றும் அடுத் தடுத்த படிநிலைத் தொடர்புடையன என்றும் இரண்டு வகைப்படும். பொதுவாகத் தனித்தனியே இலக்கியக் கூறுகள் வேறு இலக்கியப் பொருளுடன் தொடர்புபடுத்த முடிந்ததாக இருக்கும். இலக்கியக் கூறுகள் அமைப்புக்குள்ளாகும் முறையில் அந்த இலக்கியத்தின் இலக்கியப் பொருள் அமையும். இலக்கியக் கூறுகள் அமைப்புக்குள்ளாகும் முறையை வைத்து இலக்கியக் கரு, இலக்கிய நோக்கம் முதலானவும் உருவாகும். ஒரு இலக்கியத்தில் உள்ள எல்லாக் கூறுகளையும் ஒருங் கிணைத்து ஆராயும்போதுதான் இலக்கியப் பொருள் எது என்று தெரியவரும்.

இலக்கியக் கரு, இலக்கியப் பொருள், இலக்கிய நோக்கம், இலக்கியச் சுருக்கம், இலக்கிய வகைமை முதலானவை ஒரு இலக்கியத்திற்குள்

அமையும். பொருள் என்று தொல்காப்பியம் குறிப்பிடும் செய்யுள் உறுப்பு இலக்கியப் பொருள் ஆகும். இலக்கியச் சுருக்கம் என்பது இலக்கிய மொழியால் கூறமுடிந்ததாக இருக்கும். இலக்கிய மொழியைச் சுருக்கிச் செம்மையாக்கம் செய்வதன் மூலம் இலக்கியச் சுருக்கத்தைத் தரமுடியும். இலக்கியச் சுருக்கம் என்பது அதன் அமைப்பைச் சிதைக் காமல் தரப்படுவது, அதன் அமைப்பைச் சிதைத்துத் தரப்படுவது என்று இரு வகைப்படும். ஒரு இலக்கியத்தின் சுருக்கத்தை அந்த இலக்கியத்தில் இடம்பெறாத வேறு சொற்கள், வேறு வாக்கிய அமைப்பு களில் கூறமுடியும். அப்போதும் அதன் அமைப்பு சிதைக்காமல் பாதுகாக்கப்படமுடியும். இலக்கியச் சுருக்கத்தை வேறு மொழிகளில் கூடக் கூறமுடியும். இலக்கியச் சுருக்கம் என்பது ஒரு வாக்கியத்திலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்களில் அமையலாம். இலக்கியத்தின் வடிவ அளவை மேலும் குறைத்துச் சொல்வது இலக்கியச் சுருக்கம் ஆகும். இலக்கியக் கூறுகளை மேலும் குறைத்தாலும் எல்லாக் கூறுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கூறுகளைக் கொண்டதாக இலக்கியச் சுருக்கம் அமையும். இலக்கியக் கூறுகள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும்போது, நேரடிப் படிநிலையிலும் அடுத்தடுத்த அடுக்கடுக்கான படிநிலைகளிலும் இலக்கியக் கூறுகள் தொடர்புடையனவாக இருக்கும். மறைமுகமாகத் தொடர்புபடுவனவாக அவை இருக்குமானால் பொருள்கோள் முறை யில் வேறுபாடுகள் தோன்றும். இலக்கியச் சுருக்கம் என்பது இலக்கிய அமைப்பைப் பாதுகாத்திருக்க வேண்டிய தேவையில்லை. கதை, கதை அமைப்பு என்ற இரண்டும் வேறு வேறு. கதை அமைப்பைப் பாதுகாக்க வேண்டிய தேவை இலக்கியச் சுருக்கத்தில் இல்லை. கதை அமைப்பு



இலக்கியச் சுருக்கத்தில் வெளிப்படவேண்டியதில்லை. கதை அமைப்பும் இலக்கிய அமைப்பும் நெருங்கிய, நேரடித்தொடர்புடையன. கதை அமைப்புப் பாதுகாக்கப்பட்ட இலக்கியச் சுருக்கத்தில் இலக்கிய அமைப்பும் பாதுகாக்கப்பட்டதாகும். கதை அமைப்புக்கும் இலக்கிய அமைப்புக்கும் உள்ள உறவு நேரடியானது. கதை என்பது கால வரிசைக் குட்பட்டு நிகழ்வுகள் வரிசைப்படுத்தப்பட்டதாக இருக்கலாம். கதை அமைப்பு அந்த இலக்கியத்தில் உள்ள நிகழ்வுகள், இலக்கியப் பகுப்புகள் தொடர்பான வரிசை ஒழுங்குகளுக்கு உட்பட்டது. தொல்காப்பியர் கருத்தை இன்றைய கருத்துகளுடன் ஒப்பிட்டால் உரிப்பொருள் என்பது இலக்கியப் பொருள் ஆகாது. உரிப்பொருளை இலக்கியப் பொருளாகக் கொள்ளவேண்டுமானால் தொல்காப்பியம் உரிப்பொருளைவிடப் பொருள் என்ற செய்யுள் உறுப்பு அடிப்படையானது என்று குறிப் பிட்டுள்ளது. இலக்கியக் கரு என்பது வாக்கிய அமைப்பில் அமைய வேண்டியது. எனவே, உரிப்பொருள் இலக்கியக் கருவாக அமையாது. உரிப்பொருளினும் பொருள் விரிவு கொண்டது இலக்கியக் கரு.

இலக்கியத்தின் சூழலில் வரும் ஆசிரியர், வாசகர், அவர்கள் சூழலில் வரும் முதற்பொருள்கள், கருப்பொருள்கள், உரிப்பொருள்கள் இலக்கியப் பொருள் ஆகமுடியா. இலக்கியத்தின் சூழலிருந்து இலக்கியப் பொருள் தேர்ந்தெடுக்கப்படுவது இயல்பானது. இலக்கியப் பொருள் என்பது மொழிப்பொருள் ஆகிவிடும். புற உலகப் பொருள் என்பது ஒட்டு மொத்தச் சமூகத்தின், மக்களின் பொருண்மையாகும். இலக்கியப் பொருள் என்பது அந்த இலக்கியத்தை எழுதும் ஆசிரியரின் பாடுபொருள் ஆகும். நடப்பியல் உலகுக்கும் இலக்கிய உலகுக்கும் உள்ள வேறுபாடு இலக்கியப் பொருளிலும் வேறுபடும். இலக்கியப் பொருள் உலகப் பொருள்களுடன் ஒப்பிட்டு நோக்கப்படும். இலக்கியப் பொருள் உலகப் பொருள்களின் வகை மாதிரியாகவோ, தனித்த எடுத்துக்காட்டாகவோ அமைந்துவிடக்கூடும்.

இலக்கியக் கரு என்பது இலக்கியத்தில் வெளிப்படையாக இருக்க வேண்டியதில்லை. அது இலக்கிய நோக்கமுமல்ல. இலக்கிய நோக்கம் என்பது இலக்கியத்திற்கு வெளியில் இருப்பது. இலக்கிய ஆசிரியன் கருத்துடன் தொடர்புடையது. இலக்கியத்தின் சூழலுடன் தொடர் புடையது. இலக்கியக் கரு இலக்கியத்தில் சூழலுடன் அதாவது இலக்கியத்தின் அகப்பகுதிகளுடன் தொடர்புடையது. எடுத்துக் காட்டாக ஒரு சிறுகதையில் "முதியவர்கள் தங்கள் அதிகாரத்தை வாரிசு களிடம் விட்டுக்கொடுக்க விரும்புவதில்லை" என்பது கருவாக இருக்கு மானால் அந்தக் கதையின் நோக்கம் "வாரிசுகள் முதியவர்களை மதித்து

நடக்கவேண்டும்" என்றோ, "முதியவர்கள் பொறுப்புகளை வாரிசுகளிடம் விட்டுவிடவேண்டும்" என்றோ இருக்கலாம். இலக்கியக் கரு என்பது இலக்கியத்தின் எல்லாக் கூறுகளுடன் தொடர்புடையது.

குறிப்புப் பொருளாக அமைந்த இலக்கியத்தில் வெளிப்பட்டிருக்கிற நிகழ்வு, கதை, பொருள் முதலானவை இலக்கியத்தின் கருவையும் இலக்கியத்தின் பொருளையும் நேரடியாக உணர்த்த வாய்ப்பு இல்லை. குறிப்புப் பொருளாக அமைந்த இலக்கியத்தில் இலக்கியச் சுருக்கம் என்பதும் கதைச்சுருக்கம் என்பதும் இலக்கியப் பொருளுடனும் இலக்கியக் கருவுடனும் தொடர்பு இல்லாமல் இருக்கும். அதாவது குறிப்புப் பொருள் என்ற உறவுமூலம் இலக்கியக் கருவும் பொருளும் வெளிப்படும். அண்மைத் தன்மை அல்லது ஒப்புமைத் தன்மை உறவு அடிப்படையில் இலக்கியப் பொருளும் இலக்கியக் கருவும் வெளிப்படும்.

குறிப்புப் பொருள் இலக்கியத்தில் வெளிப்பட்டிருக்கிற இலக்கியச் சுருக்கமும் மறைந்து நிற்கிற இலக்கியச் சுருக்கமும் ஒன்றை ஒன்று முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கவேண்டியதில்லை. இதே போல வெளிப்பட்டிருக்கிற இலக்கியக் கருவும் மறைந்திருக்கிற இலக்கியக் கருவும் ஒன்றை ஒன்று முழுமையாகப் பிரதிநிதித்துவப் படுத்தி நிற்கவேண்டியதில்லை. இரு வேறு நிகழ்வு, இரு வேறு கதைகளாக அமையும் வெளிப்படைப் பொருளும் குறிப்புப் பொருளும் தமக்கான தொடரியல் உறவுக்கு முதன்மை அளிப்பவைகளாக அமைந்துவிடும். குறிப்புப் பொருள் கூறுகள் தம்முள் கொள்ளும் உறவுக் கட்டுப்பாடுகள், வெளிப்படையாக உள்ள மொழிக்கூறுகள் தம்முள் கொள்ளும் உறவுக்கட்டுப் பாடுகள் என்ற இரண்டும் தம் தம்மளவில் கட்டுப்பாடுகளை உடையன. இரண்டுக்கும் இடையிலான ஒன்றை ஒன்று பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் உறவுக் கூறுகள் மரபு இலக்கியத் திலும் நவீன இலக்கியத்திலும் வேறுபட அமைகின்றன. நவீன இலக்கியத்திலும் நேர்கோட்டுத் தன்மையில் அமையாத இலக்கியம் குறிப்புப் பொருளும் கொண்டதாக இருந்துவிடுமானால் வெளிப்படைப் பொருள், குறிப்புப் பொருள் என்ற இரண்டுக்கும் இடையிலான உறவுகள் சிக்கலானதாக இருக்கும். வெளிப்படையாக இருக்கும் எந்தக் கூறு மறைமுகமாக இருக்கும் எந்தக் கூறைப் பிரதிநிதித்துவப் படுத்தி நிற்கிறது என்பதில் பொருண்மை மயக்கம் ஏற்படும். மரபான இலக்கியங்களில் பொருண்மை மயக்கம் குறைவாக இருக்கும். மரபான இலக்கியங்களில் பொருண்மை மயக்கம் பொருளுக்கும் மொழிக்கும் இடையிலான வாய்பாட்டுத் தன்மையிலான உறவால் தீர்வதாக

இருக்கும். நவீன, நேர்கோட்டுத் தன்மையில் அமையாத இலக்கியங் களில் உள்ள பொருண்மை மயக்கம் வாய்பாட்டுத் தன்மைக்குக் கட்டுப்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்ளப் பழகாமலிருக்கலாம். சமகாலத் தன்மைக்கான புதிய உறவுப் பொருண்மை என்பதாலோ, குறிப்புப் பொருண்மை என்ற இலக்கியப் படைப்பு முறையியலுக்குப் பழகாததாலோ இந்தக் குறிப்புப் பொருண்மை புரிந்துகொள்ளக் கடினமாகலாம்.

நவீனத் திறனாய்வாளர்களைவிட மரபாக இருந்துவந்த உரையாசிரியர் களும் வியாக்கியானகாரர்களும் மூல இலக்கணகாரர்களும்கூடக் குறிப்புப் பொருண்மையை வரையறுப்பதிலும் விளக்குவதிலும் பயற்சி யுடையவர்களாக இருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. குறியியல், அமைப்பியல் அடிப்படையிலான இலக்கிய விளக்கங்கள் மொழியியலைத் தள்ளிவைத்து விட்டு, அல்லது மொழியியல் அல்லது மொழி அறிவு தெரியாமல் நிகழ்த்தப்படும்போது, மரபு அறிஞர்கள் இலக்கியத்தையும் மொழியையும் கூடுதலாகத் தெளிவாக விளங்கிக்கொண்டவர்கள் என்று தெரிந்துகொள்ளமுடிகிறது.

தொல்காப்பியத்தில் உள்ள இடைவெளிகளைத் தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்வதன் அடிப்படையிலேயே நிறைவு செய்யும் முறை யைக் கடைபிடிக்க வேண்டும். தொல்காப்பியம் கூறிச் சென்றுள்ள கருத்துக்கள் பல்வேறு கோட்பாடுகளுக்கு இடம் தரக்கூடிய வகையில் அமைந்துள்ளன. ஏதேனும் ஒரு கோட்பாட்டைத் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கிக் கொள்ளும் பொழுது அக்கோட்பாடு தொல்காப்பியத்தில் உள்ள இடைவெளிகளைக் காட்டிக் கொடுப்பதாக உள்ளது. மேற்கத்தியக் கோட்பாடுகளைவிடத் தமிழ் மரபிலிருந்து உருவாகும் கோட்பாடுகள் தமிழ்க் கலை, இலக்கியம், வாழ்வை விளங்கிக்கொள்ளப் பெரிதும் பயன்படும். தொல்காப்பியம், சங்க இலக்கியம் இரண்டிற்கும் பிறகு தமிழின் சொந்த சிந்தனைப் படிப்படியாகக் குறைந்து போய்விட்டது. இதை வளர்த்தெடுத்து இக்கால ஆராய்ச்சி முறைகளுக்கும் பயன்படுத்த வேண்டியது கட்டாயமாகும். தொல்காப்பியத்தைச் செம்மைப்படுத்துவதற்கும் வளர்த்தெடுப்பதற்கும் சங்க இலக்கியங்கள் முதல் துணையாகும். அதற்கு இணையாகப் பிற்கால இலக்கியங்களையும் கொள்ளவேண்டும்.

மொழி, இலக்கியம் என்ற இரண்டிற்கும் தொல்காப்பியம் அளித்துச் சென்றுள்ள விளக்கங்களில் பொதுத்தன்மைகள் பல காணப் படுகின்றன. மயக்கம் என்பது எழுத்து, சொல், பொருள் அதிகாரங் களில் விளக்கப்பட்டுள்ளது. இவ்விளக்கங்களில் பொதுத் தன்மைகளும்

வேற்றுமைத் தன்மைகளும் உள்ளன. மொழியைத் தொடரியல் உறவு, அடுக்கியல் உறவு என்ற அமைப்பியல் உறவில் பார்ப்பது போலவே இலக்கிய உறுப்பு களையும் தொல்காப்பியம் பார்த்துள்ளது. பொருள் என்ற செய்யுள் உறுப்பைத் திணை அடிப்படையிலான சொல் வகைப்பாட்டுடன் ஒப்பிட்டுப்பார்த்து, வகைப்படுத்தி விளக்குகிறது இக்கட்டுரை.

திணைப்பொதுச் சொல்லும், திணைப் பொதுப்பொருளும்

உயர்திணைச்சொல், அஃறிணைச் சொல், திணை மயங்கு சொல் என்று தொல்காப்பியம் பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் வகைப்படுத்தியுள்ளது. பேசும் செயலை மனிதன் மட்டுமே செய்ய முடியும் என்பதால் மனித மொழியில் தன்மைப் பெயர், தன்மை வினைகள் உயர் திணையில் வைக்கப்பட்டுள்ளன. படர்க்கைச் சொற்களில் பால், எண், திணை, இடம் என்ற இலக்கணக் கூறுகள் வெளிப்படுவதால் அவை உயர்திணையிலோ, அஃறிணையிலோ பிரித்து வைக்கப்படுகின்றன. ஆனால், முன்னிலைப் பெயர்களிலும் முன்னிலை வினைகளிலும் திணை, பால் என்ற இலக்கணக் கூறுகள் வெளிப்படுவதில்லை. அவை சூழலைப் பொருத்து உயர்திணைப் பொருளையோ, அஃறிணைப் பொருளையோ குறித்து வந்து இரு திணையையும் குறித்து வரும் சொற்களாக உள்ளன. இவை திணைப் பொதுச் சொற்கள் ஆகும்.

மொழிப் பயன்பாட்டில் உயர்திணைக்குரிய சொல் அஃறிணைப் பொருளைக் குறித்தும் வரலாம். கண்ணன் என்ற சொல் யானை யையும், கருப்பி என்ற சொல் நாயையும் குறித்து வரலாம். அதேபோல, அஃறிணைச் சொல் உயர்திணைப் பொருளைக் குறித்து வரலாம். மலர், காவிரி என்ற சொற்கள் ஒரு பெண்ணைக் குறித்து வரலாம். இவ்வாறான சொற்கள் உயர்திணை விரவுச் சொல், அஃறிணை விரவுச் சொல் எனப்படும். தொல்காப்பியம் குறிப்பிடும் இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதல் பெயர், ஆண்பால் பெயர், பெண்பால் பெயர், ஒருமைப் பெயர், பன்மைப் பெயர் முதலானவை இவ்வாறான திணை விரவுச் சொற்களாகும்.

சங்க இலக்கியத்தின் துணைகொண்டு பார்க்கும்போது, இவ்வாறான பாகுபாடுகள் தொல்காப்பியம் குறிப்பிடும் பொருள் என்ற செய்யுள் உறுப்பிலும் காணப்படுகின்றன. அகத்திணை, புறத்திணை என்பது ஒரு பாகுபாடு. அகத்திணைக்குள்ளும், புறத்திணைக்குள்ளும் ஏழு, ஏழு வகையான பாகுபாடுகள் உள்ளன. இந்தப் பாகுபாடுகளுக்குள்

ஏதேனும் ஒன்றுக்குப் பொருந்தி வருகிற சங்க இலக்கியப் பாடல்கள் திணை மயங்காதவைகளாகக் கொள்ளப்படவேண்டும். பொருள் என்ற செய்யுள் உறுப்பில் திணை மயங்கி வரும் பாடல்களைத் திணைப் பொதுப்பொருள் பாடல் என்றோ, திணை விரவுப் பொருள் பாடல் என்றோ வரையறுக்க வேண்டும். நெய்தல் திணையின் உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமித்தமுமாகும். ஆனால், சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலத்தைப் பின்னணியாகக் கொண்ட, நெய்தல் திணை என்ற வகைப்பாட்டில் வைக்கப்பட்ட பாடல்களின் உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகும். இவ்வாறான பாடல்கள் முதல், கரு, உரிப்பொருள்கள், ஒழுக்கம், அறவியல், இலக்கண மரபு அடிப்படையில் அமைந்தவை. இப்பாடல்கள் திணை மயக்கப் பாடல் என்று சொல்லப்படும். இவற்றைத் திணை விரவுப் பொருள் பாடல் என்ற பிரிவில் வைக்க வேண்டும். பட்டினப்பாலையில் அக இலக்கிய வடிவத்திற்குள் புறப்பொருள் நோக்கமாகவும் மிகுதியாகவும் உள்ளது. எனவே, பட்டினப்பாலையை அகமும், புறமும் கலந்த திணைக் கலப்புப் பொருள் என்று வகைப்படுத்த வேண்டும். நெடுநல்வாடை புறத்திணைப் பொருளில் சேராது. இரு வேறு அகத்திணை வடிவங்கள் கலந்து வரும்போது உரிப்பொருளை அடிப்படையாகக் கொண்டே அப்பாடலின் பொருள் வகைப்பாட்டினைத் தீர்மானிக்க வேண்டும். முதல், கருப் பொருள்களைவிட உரிப்பொருளை அடிப்படையாகக் கொண்டே திணை தீர்மானிக்க வேண்டும் என்ற ஒரு முடிவு உள்ளது. முதல், கருப்பொருள்களைவிட உரிப்பொருளே பொருள் என்ற செய்யுள் உறுப்புடன் நெருக்கமானது.

பொருள் என்ற செய்யுள் உறுப்புக்குத் தொல்காப்பியம் விளக்கம் அளிக்கும்போது அது உரிப்பொருளை மறுப்பதாகவும் மேலும் பொருளைப் பொதுமைப்படுத்துவதாகவும் உள்ளது.

> இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
> ஒழுக்கமும் என்றிவை இழுக்கு நெறி இன்றி
> இது ஆகித் திணைக்கு உரிப்பொருள் என்னாது
> பொதுவாய் நிற்றல் பொருள் வகை என்ப
>
> (தொல். பொருள். செய். 200)

புணர்தல், பிரிதல் என்ற இரு உறவு நிலைகளில் அற ஒழுக்கத்தோடு, இழுக்கு இல்லாத முறையில் செய்யுளின் பொருள் அமையலாம். அது குறிப்பிட்ட திணைப் பாடலாக இருக்க வேண்டிய கட்டாயமில்லை. இன்பம், துன்பம் என்ற இரண்டும் செய்யுளின் பொருளுக்கு அடிப்படை உணர்வுகளாக அமைந்திருக்கும்.

பொருள் என்ற செய்யுள் உறுப்புக்குத் தொல்காப்பியர் அளித்துள்ள விளக்கத்திற்குப் பொருந்தி வரும் சான்றுப் பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன.

குக்கூ என்றது கோழி; அதன் எதிர்
துட்கு என்றன் என் தூஉ நெஞ்சம்
தோள் தோய்க் காதலர்ப் பிரிக்கும்
வாள் போல் வைகறை வந்தன்றால் எனவே (குறுந்தொகை. 157)

என்ற செய்யுளுக்குப் பல விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. குறிஞ்சித் திணை, மருதத் திணை என்று இரு திணையிலும் இடை மயங்கி உரைக்கப்படும். இரவுக்குறியில் நிகழும் களவுப் புணர்ச்சியில் இந்தக் கூற்றுத் தலைவயின் கூற்றாக வைத்துப் பேசப்படும். பரத்தையர் கூற்றாக வைத்துப் பேசப்படவும் இதில் இடமிருக்கிறது. வைகறைப் பொழுதைக் கண்டு, ஒருத்தி தழுவியவனைப் பிரிய நடுங்குகிறாள் என்ற கருத்தளவில் இந்தப்பாடலை எடுத்துக்கொள்ள வேண்டும். முதல், கரு, உரிப்பொருள் என்ற அக இலக்கண மரபு அடிப்படையில் இந்தப் பாடலைப் பார்க்காமல் பொருள் என்ற செய்யுள் உறுப்பு அடிப்படையில் மட்டுமே பார்க்க வேண்டும்.

பொருள் என்ற செய்யுள் உறுப்புக்கு மேலும் பொருத்தமான ஒரு பாடல் பின்வருமாறு.

சுடர்த்தொடீஇ! கேளாய்! தெருவில் நாம் ஆடும்
மணல் சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப் பந்து கொண்டு ஓடி
நோ தக்க செய்யும் சிறுபட்டி, மேல் ஓர் நாள்
அன்னையும் யானும் இருந்தேமா, "இல்லிரே!
உண்ணு நீர் வேட்டேன்" என வந்தாற்கு, அன்னை
"அடர்பொற் சிகரத்தால் வாக்கி, சுடரிழாய்!
உண்ணுநீர் ஊட்டி வா" என்றாள்; என, யானும்
தன்னை அறியாது சென்றேன்; மற்று என்னை
வளை முன்கை பற்றி நலிய, தெருமந்திட்டு
"அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண்" என்றேனா
அன்னை அலறிப்படர்தர, தன்னை யான்,
"உண்ணு நீர் விக்கினான்" என்றேனா, அன்னையும்
தன்னை புறம்பு அழித்து நீவ, மற்று என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி,
நகைக் கூட்டம் செய்தான், அக்கள்வன் மகன் (கலித். 51)

இந்தப்பாடல் குறிஞ்சித் திணையில் வைக்கப்பட்டுள்ளது. காதலர் களாக இல்லாத இருவர் இங்கு சந்தித்துக் கொள்கிறார்கள். சிறுவர் களாக இருக்கும்போது அறிமுகமானவர்கள் என்றாலும் அவர்களுக்கு இடையிலான உறவுக் குழந்தைக் காதல் உறவு இல்லை. ஒரு சொல் கூடப் பேசாமல் கையைப் பிடித்து இழுக்கும் கிராமத்துப் பாணி யிலான பாலியல் செயல்தான் இது. இதற்குப் பிறகு அவர்கள் இருவரும் காதலிக்கக்கூடும் என்று கூறுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. ஆண், பெண் இருவருக்கு இடையிலான இவ்வாறான சந்திப்புத் திருமணத்தில் முடியும் என்ற ஒழுக்க, அறவியல் அடிப்படையிலான பார்வை இங்குத் தேவையில்லை. இந்தப் பாடலில் முதல், உரிப்பொருள்கள் என்ற பாகுபாடு பொருந்தாது. தொல்காப்பியம் குறிப்பிடும் பொருள் என்ற செய்யுள் உறுப்பே பொருத்தமானது. தொல்காப்பியம் இவ்வாறான பாடல்களும் இருப்பதைக் கருத்தில் கொண்டு பொருள் என்ற செய்யுள் உறுப்பைக் கூறிச் சென்றுள்ளது. இவ்வாறான பாடல்களைத் திணைப் பொதுப்பொருள் பாடல்கள் என்ற வகையில் வைத்து விளக்க வேண்டும். எந்த ஒரு திணைக்கும் சேராத சொற்களைத் திணைப் பொதுச்சொல் என்று சொல்வது போல, எந்த ஒரு திணைக்கும் சேராத இலக்கியப் பொருளை திணைப் பொதுப் பொருள் என்றே கொள்ள வேண்டும்.

பொருளும் அகமும் புறமும்

உரிப்பொருள் அனைத்தும் தலைவியை மையமாகக் கொண்டவை. அடையப்படும் தலைவி குறிஞ்சித் திணையில் மையப் பொருளாக இருக்கிறாள். முல்லைத் திணையில் காத்திருத்தல் தலைவிக்கு உரியது. பரத்தையர் பிரிவும் புணர்ச்சியைக் கருதியதாக உள்ளது. இருந்த போதும் தலைவியின் ஊடலே உரிப்பொருளாக உள்ளது. நெய்தல் திணையில் இரங்குபவள் தலைவியாக இருக்கிறாள். பாலைத் திணையில் பிரியப்படுபவள் தலைவியாக இருக்கிறாள். பாலைத் திணையில் பிரியப்படுபவள் தலைவி. அதிகாரம் இல்லாதவளாக இருந்தபோதும் பெண்ணை மையமாக வைத்து அகத்திணையின் உரிப்பொருள்கள் வகுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதிகாரம் உள்ள தலைவனை வைத்து அல்ல.

உடன்போக்கு அகப்பொருளுக்கு உரியது. உடன் போக்கின் போது தலைவன் புலியால் அடிக்கப்பட்ட செய்தியைக் கூறும் பாடல் புறப்பொருளாகிவிடுகிறது.

“ஐயோ“ எனின், யான் புலி அஞ்சுவலே.

அணைத்தனன் கொளினே, அகல் மார்பு எடுக்க வல்லேன்.
என்போல் பெரு விதிர்ப்புறுக, நின்னை
இன்னாது உற்ற அறன் இல் கூற்றே!
நிரை வளை முன்கை பற்றி
வரை நிழல் சேர்கம் நடத்திசின் சிறிதே (புறம். 255)

இது ஆசிரியர் கூற்றில் கூட அமையவில்லை. தலைவி என்ற பாத்திரத்தின் கூற்றிலேயே அமைந்துள்ளது. இருத்தல் என்ற உரிப்பொருளில் அமைந்த பாடல் வருமாறு;

மா வாராதே; மா வாராதே.
எல்லார் மாவும் வந்தன; எம் இல்
புல் உளைக் குடுமிப் புதல்வன் தந்த
செல்வன் ஊரும் மா வாராதே.
இரு பேர் யாற்ற ஒரு பெருங்கூடல்
விலங்கிடு பெருமரம் போல
உலந்தன்று கொல், அவன் மலைந்த மாவே? (புறம். 273)

தலைவன் போரில் இறந்துவிட்டான் என்ற கருத்து இப்பாடலில் உள்ளதாக் கொண்டு புறப்பொருளில் வைக்கப்பட்டுள்ளது. அகத்திணைக்கு விதிமுறைகள் மிகுதியாக உள்ளன.

அகத்திணை இலக்கிய மரபு, நானிலப் பாகுபாடு முதலானவை அன்றைய உயர் கட்டுமானக் கல்விச் சூழலில் மட்டுமே வழங்கியவை. சராசரி மக்களால் அறியப்படாதவை. புலவர்களால் அகத்திணை இலக்கியங்கள் பொருள் இலக்கணக் கண் கொண்டு பார்க்கப்பட்டுள்ளன. அது இலக்கியத் தூய்மை என்ற படைப்பாக்க நெறிக்கு உரியதாகிறது. இலக்கியத் தூய்மை என்பது பாத்திரங்களின் கூற்று, ஒழுக்கம், மொழித்தரம், நடத்தை முதலானவற்றால் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால்தான் தொல்காப்பியம்,

அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்
(தொல். பொருள். புறத்.1)

என்று புறத்திணையை அகத்திணைக்கு அடுத்த நிலையில் வைத்து விளக்குகிறது. குற்றமற அகத்திணையை உணர்ந்தவர்கள்தான் புறத் திணை எதுவென்று விளக்க வேண்டுமாம். தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் குறிக்கோள் நடப்பியலை, புனைவியலை எடுத்துத் தமிழரின் அக வாழ்வை விளக்க முற்பட்டதால் சங்கத் தமிழனின் உண்மையான பாலியல் வாழ்க்கை வெளிப்படாமல் போய்விட்டது.

பேகனின் பிரிவு பரத்தையர் பிரிவு என்றாலும், அவை உண்மை சார்ந்த பாடல்கள் என்பதால் புறத்திணையில் வைக்கப்பட்டுவிட்டன. குழந்தைப்பேறு குடும்பத்தின் பிரிக்க முடியாத ஒன்று. இருந்தபோதும் அறிவுடை நம்பியின் பாடல் புறத்திணையில் வைக்கப்பட்டு விட்டது. இளமை, முதுமை அனுபவங்களும் புறத்திணைகளாக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியரின் புறத்திணைப் பாகுபாடு குறைபாடுகளை உடையதாக உள்ளது. காஞ்சித் திணை, வாகைத் திணை, பாடாண் திணைகள் பல்வேறு துக்கடாப் பொருள்கள் கொண்டவை. காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் முதலான துறைகள் கரந்தைத் திணையில் வைக்கப் பட்டுள்ளன. அவை வேறு திணைகளில் வராதா? படை இயங்குவது எல்லாப் போர்களிலும் தொடக்க நிகழ்ச்சியாக அமையும். ஆனால், உழிஞை, தும்பைத் திணைகளில் இது வைக்கப்படவில்லை.

பொருள் என்ற செய்யுள் உறுப்பு அகப்பாடல்களைக் கருத்தில் கொண்டு வைக்கப்பட்டதாகப் பிற்காலத்தில் கருதப்பட்டிருக்கலாம். அகப்புறப் பாடல்களாகக் கருதப்படும் பாடல்களைப் பொருள் என்ற செய்யுள் உறுப்புடன் தொடர்புபடுத்தி விளக்க வாய்ப்பு உள்ளது. புறப்பாடல்களில் பொருள் என்ற செய்யுள் உறுப்பைப் பொருத்தி விளக்க முடியுமா என்று தெரியவில்லை. தொல்காப்பியம் கூறியுள்ள முதல் 24 செய்யுள் உறுப்புகள் அகப்பாடலுக்கு முதன்மை தந்து கூறப்பட்டனவேயாகும்.

வேறு இலக்கிய வகைப்பாடுகளும் பொருளும்

அகப்பொருள், புறப்பொருள் என்பதே தொல்காப்பியத்தின் முதன்மையான இலக்கிய வகைப்பாடு. அறம், பொருள், இன்பம் என்ற வடமொழிப் பாகுபாட்டையும் தொல்காப்பியம் குறிப்பிட்டுச் சென்றுள்ளது. காஞ்சித்திணை, பாடாண் திணைகளையும் கற்பியல் முடிவையும் நோக்கினால் வீடு என்ற பொருளையும் அது கருதியுள்ளதாகத் தெரிகிறது. சிலப்பதிகாரத்தில் பெரியதாகப் பேசப்படும் வேத்தியல், பொதுவியல் என்ற பாகுபாடுகூடப் புறத்திணைகளுக்குப் பொருந்தி வரலாம். மாந்தர்களை அடிப்படையாக வைத்து வருணம், நிலமக்கள் - தலைமக்கள் என்ற அடிப்படைகளிலும் இலக்கியத்தை வகைப்படுத்திப் பார்க்கத் தொல்காப்பியத்தில் வழிகள் உள்ளன. இன்பியல், துன்பியல் என்ற வகைமையைத் தொல்காப்பியம் சில இடங்களில் கூறிச்செ ன்றுள்ளது. அது உள்ளுறை உவமை

> இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
> உவம மருங்கில் தோன்றும் என்ப
>
> (தொல்.பொருள். உவமவியல். 30)

என்று இரு உணர்வுகளின் அடிப்படையில் தோன்றும் என்கிறது. தொல்காப்பியம் மெய்ப்பாடுகளை வகைப்படுத்தும்போது நகை, அழுகை என்ற இரண்டையும் முதன்மையாக வைத்துச் சென்றுள்ளது. பொருள் என்ற செய்யுள் உறுப்பை விளக்கும்போது இன்பமும் இடும்பையும் என்றே இரு வகை உணர்வுகளையும் பிற உணர்வுகளுக்கு மையப்படுத்திச் சென்றுள்ளது. பொருள் என்ற செய்யுள் உறுப்பை விளக்கும்போது தொல்காப்பியம் திணை, உரிப்பொருளை நீக்கிவிட்டுப் பதிலாக இன்பம், துன்பம் என்ற உணர்வுகளை இணைத்துப் பார்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நகை, அழுகை முதலான மெய்ப்பாட்டியலில் பேசப்பட்ட மெய்பாடுகளைத் தவிர்த்துவிட்டு மாறாக இன்பம், துன்பம் என்ற மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியம் முதன்மைப்படுத்தி யுள்ளது. மெய்ப்பாடுகள் என்றால் நகை, அழுகை முதலானவைதான் என்றோ, இலக்கியப் பொருள் என்றால் உரிப்பொருள்தான் என்றோ கொண்டுகொண்டிருக்கவேண்டும் என்று தொல்காப்பியம் கருதவில்லை என்று தெரிகிறது.

செய்யுள் உறுப்புகளும் பொருளும்

தொல்காப்பியம் கூறிச் சென்றுள்ள செய்யுள் உறுப்புகள் யாப்பு, உள்ளடக்கம், இசை, இலக்கிய வகைமை, சூழல் முதலான வகை களுக்குள் அடங்கும். பொருள் என்ற செய்யுள் உறுப்பு உள்ளடக்க உறுப்புகளை அடக்கிக் கொண்டும், அதே நேரத்தில் இலக்கிய வகையாக இல்லாமலும் இருக்கிறது. முதல், கரு, உரி முதலானவற்றை ஒரு திணைக் குரிய சிறப்புப் பொருள் என்று கொள்ள வேண்டும் என்பது முன்பே விளக்கப்பட்டுள்ளது. திணைப் பொதுப் பொருளாகவும் பாடலின் பொருள் இருக்கலாம்.

கரு, உள்நோக்கம், அடிக்கருத்து, கிளைக் கரு மற்றும் துணைக்கரு, உள்ளடக்கம் முதலானவற்றுடன் பொருள் என்ற செய்யுள் உறுப்பைத் தொடர்புபடுத்த வேண்டி உள்ளது. பொருள் என்ற செய்யுள் உறுப்புப் பாடுபொருளுடன் ஒத்துப் போகக் கூடியது. பட்டினப்பாலையை எடுத்துக் கொள்வோம். அதன் கருத்துக்கள் வருமாறு: கரு - இனிய தலைவியை விட்டுக் கொடிய பாலையில் பிரியேன்; துணைக்கரு - திருமாவளவன் தன் குடிகளுக்கு இனியன்; பகைவர்க்குக் கொடியன்; உள்நோக்கம் - திருமாவளவன் சிறந்தவன்; பொருள் - செலவு அழுங்குதல்; உரிப்பொருள்- பிரிதலும் பிரிதல் நிமித்தமும்.

மாட்டு என்ற செய்யுள் உறுப்பையும் கருத்தில் கொள்ளலாம். "திருமாவளவனின் செங்கோலினும் இனிய தலைவியை விட்டு,

அவன் வேலினும் கொடிய கானத்தின் வழியே நெஞ்சே பிரியேன்" என்று பொருள் இயைபு கொள்வதை மாட்டு என்ற செய்யுள் உறுப்பாகக் கொள்ளலாம். உள் நோக்கம் என்பது பட்டினப்பாலையில் வெளிப்பட்டுள்ளது. வரைவு கடாவுதல், ஆற்றப்படை இலக்கியங்களில் இது வெளிப்படுவதில்லை. பாணன் என்ற பாத்திரக் கூற்றாக வைத்துப் பார்த்தால் வெளிப்படா. புலவன் கூற்றாக வைத்துப் பார்த்தால் வெளிப்படும்.

திணை, துறை என்ற உட்பிரிவுகளின் அடிப்படையில் ஒரு இலக்கியத்தை இலக்கணக் கண் கொண்டு பார்க்கும்போது பொருள் என்ற செய்யுள் உறுப்பைக் கடந்து விடுகிறோம். பொருள் என்ற செய்யுள் உறுப்பு ஒவ்வொரு இலக்கியத்தையும் தனித்தனியே பார்க்கிறது. இலக்கியங்களோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் நிலைக்கு அது இடம் கொடுப்பதில்லை. அவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கியங்களை ஒப்பிட்டு அவற்றின் இலக்கணங்களை, பொதுத் தன்மைகளை வரை யறுக்கும்போது அது இலக்கிய வகைமைக்குரிய திணை, கைகோள், துறை முதலான உட்பிரிவுகளுக்குச் சென்று விடுகிறது. பொருள் என்ற செய்யுள் உறுப்பை அந்த அளவிற்கானது என்றே புரிந்துகொள்ள வேண்டும்.

உலக வழக்கும் பொருளும்

பிறன் மனை நயத்தல், மணம் முன்பு குழந்தை பெறல், வாழா வெட்டியாக இருத்தல், தீர்த்து விடுதல், மறுமணம் செய்தல் என்று எத்தனையோ உலக வழக்குகள் இருந்திருக்கலாம். அவையெல்லாம் பாடுபொருளாகக் கொள்ளப்பட அற ஒழுக்கவியல் தடையாக இருந்துள்ளது. இருந்தபோதும் உலக வழக்கு வாழ்க்கை முறைகள் சில இடங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சிற்றில் நல்தூண் பற்றி "நின் மகன்
யாண்டு உளனோ?" என வினவுதி; என் மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன்; ஒரும்
புலி சேர்ந்து போகிய கல் அளைபோல
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன் மாதோ, போர்க்களத்தானே. -(புறம். 86)

என்ற பாடல் கைக்கிளைத் திணையில் அமைக்கப்பட்ட, நக்கண்ணையார் பாடலை ஒட்டி வைக்கப்பட்டுள்ளது. ஆண் மகனைப் பற்றி முதிய வனிடம் வினவுபவள் பெண் என்பதைத் தவிர வேறு குறிப்புகள் இருவரைப் பற்றியும் இல்லை. தூணைப் பற்றிக் கொண்டு வினவுபவர்

பெண் என்ற முடிவு அவரது உடல் மொழியை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டது ஆகும். ஆண், பெண் இருவரும் காதலர்கள், ஒருவர் மட்டும் மணம் ஆனவர். இரண்டுமில்லை, இருவரும் பாலியல் உறவுக்கு அல்லது பாலியல் ஈர்ப்புக்கு உரியவர்கள், இவற்றில் எந்த உறவுமில்லை, இருவரும் அருகில் உள்ள வீடுகளில் வாழ்பவர்கள், உறவினர்கள், வேற்றுச் சாதிக்காரர்கள் என்றெல்லாம் எண்ணிப் பார்க்க இடம் உள்ளது.

காதலர்களின் பாலியல் உறவால் தலைவி கருக்கொண்டு புலம்பும் நிலையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது(நற்.15). தலைவி தானே வலியச் சென்று தலைவன் தோளில் சாய்ந்து கொள்வதாகச் சொல்கிறாள்(கலித். 37). குறிப்பாக அல்லாமல் வெளிப்படையாகவே தலைவனிடமும் பெற்றோரிடமும் சொல்லி வரைவுக்கு ஏற்பாடு செய்யுமாறு தலைவி தோழியிடம் அறத்தொடு நிற்கிறாள்(கலித்.111).

பொருள் என்ற செய்யுள் உறுப்பை அடுத்துத் துறை என்ற செய்யுள் உறுப்பைத் தொல்காப்பியம் கூறிச் சென்றுள்ளது.

அவ்வவ மாக்களும் விலங்கும் அன்றிப்
பிற அவண் வரினும் திறவதின் நாடித்
தத்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறம் தானே துறை எனப்படுமே
(தொல். பொருள். செய். 201)

கருப்பொருள்கள், பாத்திரங்கள் முதலானவை ஒரு செய்யுளில் நடப்பியல் தன்மை கருதி இடம்பெறும் போது அவை திணை மயக்கமாகவும் அமைந்து விடலாம் என்பதே இதன் கருத்து. அதாவது முதல், கரு, உரி என்ற முப்பொருள் பாகுபாடு பிறழ்ந்து அமையும் பாடல்கள் உள்ளன என்பதாகும். மாக்கள் என்பது உரிப்பொருளுக்குரிய மாந்தர்களைக் குறிக்கவில்லை. உரிப்பொருளுக்குரிய மாந்தர்கள் மேன்மையானவர்கள். மாக்கள் என்பது கருப்பொருளாக வரும் மாந்தர்களைக் குறிக்கும். மரம், விலங்கு, பறவை போல அந்த நிலத்தில் வாழ்பவர்களாக மக்கள் இருப்பதால் மக்களும் கருப்பொருளாகிறார்கள். உரிப்பொருளில் வரும் மாந்தர்கள் இலக்கியத்தின் மையக்கருத்துடன், இலக்கியப் பொருளுடன் நேரடித் தொடர்புடையவர்கள். கருப்பொருளாக வரும் மாந்தர்கள் சூழல் பொருளாக வருகிறார்கள். ஒரு இலக்கியப் படைப்பில் தமக்குரிய நிலப்பின்னணியில் மட்டும் உரிய கருப்பொருள்கள் வரவேண்டும் என்று ஒரு இலக்கண நூல் வரையறுத்தபின்பு அந்த விதிக்கு மாறான இலக்கியப் படைப்புகள் தோன்றும்போது அவற்றை இயைபுபடுத்த வேண்டிய

தேவை அந்த இலக்கண நூலுக்கு எழுந்திருக்கிறது. கருப்பொருள்கள் மாறி வந்தாலும் மரபு மாறாமல் இருப்பது என்பது இலக்கியக் கட்டுப்பாடு மாறாமல் இருப்பது ஆகும். இந்த நூற்பாவில் பொருள் என்ற செய்யுள் உறுப்பு மாறாமல் கருப்பொருள் மாறி வந்திருக்கும் இலக்கியப் பண்பு பேசப்படுகிறது. மரபு என்பது உரிப்பொருள் மரபும் அது சார்ந்த ஒழுக்கக் கட்டுப்பாடுகளும் ஆகும்.

ஒரு இலக்கியத்தில் கருப்பொருள், முதற்பொருள் இரண்டும் இலக்கணப்படி செம்மையாக அமைந்து உரிப்பொருள் மட்டும் அல்லது பொருள் மட்டும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்கும் மரபுக்கும் மாறாக அமைந்துவிடுமானால் அந்த இலக்கியம் திணை இலக்கியம் எனப்படாது. இலக்கியப் பொருள் திரிபுகள் நவீன இலக்கியங்களில் நிறையவே நிகழ்கின்றன. இலக்கியப் பொருள், பாடுபொருள், பொருள் என்பதன் களம் விரிவடைந்துகொண்டே செல்கிறது.

பொருள் என்ற செய்யுள் உறுப்பை உரிப்பொருளுக்கு மாற்றாகத் தொல்காப்பியம் உரைத்துச் சென்றுள்ளது. அந்தத் திணைப் பொதுப்பொருள் இடம் பெற்ற பாடலின் சூழல் எவ்வாறு அமையலாம் என்பதற்கான ஒரு கருத்தைத் துறை என்ற செய்யுள் உறுப்பின் மூலம் தொல்காப்பியம் குறித்துச் சென்றுள்ளது.



பொருளும் உரிப்பொருளும்

உரிப்பொருள் எல்லாம் பொருள் என்ற செய்யுள் உறுப்பில் அடங்கும். பொருள் என்ற செய்யுள் உறுப்பு உரிப்பொருளில் அடங்காது. பொருள் என்ற செய்யுள் உறுப்பில் ஒரு உள் வகையாக உரிப்பொருள் கொள்ளப்பட வேண்டும். அல்லது உரிப்பொருள் பாகுபாட்டு அடிப்படையில் அகப்பாடல்களைக் காணாது இருக்க வேண்டும்.

இலக்கிய ஆக்க முறையும் பொருளும்

மொழிக்குப் பேசுபவர், எழுதுபவர் என்ற மொழியாக்க நிலையிலிருந்தோ கேட்பவர், படிப்பவர் என்ற பொருண்மையாக்க நிலையிலிருந்தோ விளக்கம் அளிப்பது தொல்காப்பியத்தின் வழக்கம். அது போலச் செய்யுளுக்கும் மொழியாக்கம் அல்லது பொருண்மையாக்கம்

என்ற நிலைகளிலிருந்து தொல்காப்பியம் விளக்கம் அளித்துச் சென்றுள்ளது. பொருள், துறை என்ற செய்யுள் உறுப்புகள் இலக்கிய ஆக்க நிலையிலிருந்து அளிக்கப்பட்ட விளக்கங்கள் ஆகும். திணை, கைகோள் முதலானவை பொருண்மையாக்க நிலையிலிருந்து அளிக்கப் பட்ட விளக்கங்களாகும். யாப்பு என்ற செய்யுள் உறுப்பு,

> எழுத்து முதலா ஈண்டிய அடியில்
> குறித்த பொருளை முடிய நாட்டல்
> யாப்பு என மொழிப யாப்பு அறி புலவர்
> (தொல். செய்யுளியல். 74)

என்று விளக்கப்படுகிறது. அசை, சீர், அடி அல்லது சொல், தொடர், வாக்கியம் என்று அடுத்தடுத்துக் கட்டமைக்கப்படுவதன் மூலம் அவற்றின் பொருளும் படிப்படியே சேர்ந்து இலக்கியப் பொருளாகிறது. இது மொழியாக்க, இலக்கிய ஆக்க நிலை விளக்கமாகும். நோக்கு என்ற செய்யுள் உறுப்புப் பொருண்மையாக்கத்தை அடிப்படையாகக் கொண்டது.

இலக்கிய ஆக்கத்தைப் பேசும்போது தொல்காப்பியம் கட்டுப்பாடு களை விதிக்கிறது. இந்தக் கட்டுப்பாடுகள் இல்லாத இலக்கியப் பகுதி களும் சங்க இலக்கியத்தில் உள்ளன. சான்றாக, தோழி தலைவனிடம் கூறும் கூற்று வருமாறு,

> என்பாணி நில் நில் - எலாஅ - பாணி நீ, நின்சூள்,
> சான்றாளர் ஈன்ற தகாஅத் தகா மகாஅன்
> ஈன்றாட்கு ஒரு பெண், இவள்,
> இருள் மை ஈர் உண்கண் இலங்கு இழை ஈன்றாட்கு
> அரியளோ? ஆவது அறிந்திலேன்; ஈதா
> வருபுனல் வையை, மணல் தொட்டேன்; தரு மணவேள்
> தண் பரங்குன்றத்து அடி தொட்டேன் என்பாய் (பரி. 8;56-62)

இந்தக் கூற்றில் தகுதியில்லாத மகன் என்று தலைவன் இழித்துரைக்கப் படுகிறான். தலைவனின் தந்தையும் சான்றாளர் என்று எள்ளப்படுகிறார். சூள் செய்தல் அன்பின் ஐந்திணையில் பொதுவாகத் தலைவன் பண்பாகக் காட்டப்படுவதில்லை. ஏண்டா என்ற சொல்போல எலா என்ற செ ால் மதிப்புக் குறைவான விளிச்சொல் ஆகும்.

பல தலைவியருடனான பாலுறவு நாட்டம் தலைவனுக்கு இருப் பதாகக் கூறப்பட்டு அவன் ஒரு தலைவியால் இடித்துரைக்கப்படுகிறான்.

> மா மருண்டன்ன மழைக்கண் சிற்றாய்த்தியர்

நீ மருட்டும் சொற்கண் மருள்வார்க்கு உரை, அவை;
ஆ முனியா ஏறு போல், வைகல், பதின் மரைக்
காமுற்றுச் செல்வாய்; ஓர் கட்குத்திக் கள்வனை
நீ எவன் செய்தி, பிறர்க்கு?
யாம் எவன் செய்தும் நினக்கு?

பொலிகாளையைப் போல, நாள்தோறும் பத்துப் பெண்களையாவது தலைவன் நாடிச்செல்பவனாக இங்குக் கூறப்படுகிறான். இவ்வாறான கருத்துக்களைத் தொல்காப்பியம் இலக்கியப்படுத்த வேண்டாம் என்றே கூறிச் சென்றுள்ளது.

அறக்கழிவு உடையன பொருட்பயன்பட வரினே
வழக்கு என வழங்கலும் பழித்தது என்ப
(தொல்.பொருள்.பொருள்.22)

உரிப்பொருள் என்ற செய்யுள் உறுப்பு அறவியலுக்கு உட்பட்டது. அதற்குப் பொருந்தாத சான்றுகள் சங்க இலக்கியத்தில் காணப் படுவதால் அவற்றையும் எடுத்துக்கொண்டு இலக்கணம் செய்ய வேண்டியுள்ளது. அதனால் பொருள் என்ற செய்யுள் உறுப்புத் தொல்காப்பியரால் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. இருந்தபோதும் பொருள் என்ற செய்யுள் உறுப்பையும் தொல்காப்பியர் அறநெறிக்கு உட்படுத்தியே இலக்கணம் கூறிச் சென்றுள்ளார் என்று கருதவேண்டும். இல்லையென்றால் நடப்பியல் உலகில் உள்ள இழிவான, கொடூரமான நிகழ்வுகளையும் பொருள் என்ற செய்யுள் உறுப்புக் கூறிச்சென்றுள்ளதாக விளக்கவேண்டியதாகிவிடும்.

யாப்பு வடிவத்திற்கும் அதில் சொல்லப்படும் பொருளுக்கும் தொடர்பு உள்ளது. பரிபாடல், கலிப்பாடல் இரண்டிலும் அகப்பொருள் பாடப்படும் என்பது தொல்காப்பியக் கருத்து. பரிபாடலின் இலக்கணம்.

பரிபாடல்லே தொகைநிலை வகையின்
இதுபா என்னும் இயல்நெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்து என மொழிப
(தொல்.பொருள்.செய்.116)

என்று தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ளது. யாப்புக் கட்டுப் பாடு இல்லாதபோது, அதில் அறம், ஒழுக்கம் சார்ந்த உள்ளடக்கக் கட்டுப்பாடுகளும் இல்லாது உள்ளன. கருத்துக்களை வெளிப்படுத்துவதில் அறம், ஒழுக்கம் பார்க்கப்பட்டபோது அவை யாப்பு ஒழுங்குக்குள்ளும் வைத்து வெளிப்படுத்த வேண்டும் என்ற நிலை வேண்டியுள்ளது எனலாம். முன்பிருந்த கலி, பரிபாடல் பாடுபொருள்களைத் தொல்காப்பியத்தின்

அடிப்படையில் பொருள் என்ற செய்யுள் உறுப்பால் குறிக்க வேண்டியிருக்கும். அவை திணைப் பொதுப் பொருள் என்ற உள் வகையைச் சேர்ந்தவையாகத் தற்போது வகைப்படுத்தலாம்.

தொல்காப்பியம் பொருள் என்ற இலக்கியப் பொருளை, பாடு பொருளை வகைப்படுத்திய முறையும் தொகைப்படுத்திய முறையும் தெரிந்தால் நவீன இலக்கியங்களின் பாடுபொருளை, இலக்கியப் பொருளைத் தொகுத்து, வகுத்து விளக்கமுடியும். தொல்காப்பிய முறையியல் மூலமாக அல்லாமல் நேரடியாக நவீன இலக்கியங்களின் பாடுபொருளைத் தொகுத்து, வகுத்து, விளக்கி அதைத் தொல்காப்பியத் துடன் ஒப்பிட்டு விளக்கமுடியும். வரலாற்றியல் நோக்கிலும் சமகால நோக்கிலும் ஒப்பிட்டு நோக்கும்போது தொல்காப்பியப் பாடுபொருள், பொருள் என்ற செய்யுள் உறுப்பு மேலும் விளக்கமடையும்.

துணைநூற்பட்டியல்

1. கடிகாசலம் ந., சிவகாமி ச., 1999, தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. பதிப்புக்குழு, 1981, கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
3. பதிப்புக்குழு, 1981, குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
4. பதிப்புக்குழு, 1981, தொல்காப்பியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
5. பதிப்புக்குழு, 1981, நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
6. பதிப்புக்குழு, 1981, பரிபாடல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
7. பதிப்புக்குழு, 1981, புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
8. ஜீன் லாறன்ஸ் செ., பகவதி கு., 1998, தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

3

வெட்சி, கரந்தை: இலக்கண உருவாக்கமும் பொருண்மை இடைவெளியும்

கோவிந்தையார் இலம்பகத்தில் ஆநிரை கவர்தலும் மீட்டலும் வருகின்றன. இவை வெட்சி, கரந்தை என்ற இலக்கணங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன. ஓர் இலக்கியப் படைப்பு உருவாக்கப் படும்போது, அதில் வைக்கப்படும் நிகழ்வுகள் ஒரு பொருளை உருவாக்கப் பயன்படும் பல்வேறு மூலப் பொருள்கள் போலவே உள்ளன. நிகழ்வுகளைத் தொகுத்துப் பட்டியலாகத் தருதல் என்பதாக இல்லாமல் கதைப் போக்கில் அவை நடப்பவைகளாகக் காட்ட வேண்டியிருக்கிறது. நிகழ்வுகளுக்கு இடையே ஒரு தொடர்ச்சியும் தொடர்ச்சியின்மையும், விடுபடுதல்களும் உள்ளன. சில நிகழ்வுகள் விரிவுபடுத்தப்பட்டும் சில நிகழ்வுகள் சுருக்கியும் குறித்த சில சொற் களாகவும்கூடத் தரப்படுகின்றன. இவை எல்லாமே ஒரு புனைவு என்ற தளத்தில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. எல்லா நிகழ்வுகளுமே வெவ்வேறு சூழல்களில் நடப்பில் உள்ளனவாக இருக்கலாம். ஒரு இலக்கியத்திலோ, இலக்கணத்திலோ அவை ஒரு கதை நிகழ்வுக்குள் கொண்டு வரப்படும்போது புனைவாகிவிடுகின்றன. இலக்கணம், இலக்கியம், வரலாறு, நடப்பியல், புனைவு இவை எல்லாவற்றிலிருந்தும் கலந்து எடுத்து ஒரு கதைக்கான நிகழ்வுகள் கட்டமைக்கப்படலாம்.

ஓர் இலக்கண நூல் நிகழ்தகவு (Probability) அடிப்படையில் நிகழ்வுகளையும் மொழியையும் விதிகளாகத் தொகுத்துத் தருகிறது. அது ஓர் அகராதியைப் போல இருக்க வாய்ப்புள்ள எல்லாப் பொருண்மைகளையும் பட்டியலிடுகிறது. சொற்களையும் இலக்கியத் தையும் இலக்கியக் கூறுகளான கதை, மொழி, மாந்தர், இடம்,

காலம், நிகழ்வு, கருப்பொருள்கள் முதலான எல்லாவற்றையும் அவற்றின் சூழலிலிருந்து பிரித்து எடுத்துத் தொகுத்து தருகிறது. அதாவது பட்டியலிடுகிறது. அந்தப் பட்டியலில் உள்ள ஒரு கூறு வாய்ப்புள்ள ஏதாவது ஒரு செயல்பாட்டின் அடிப்படையில்தான் இலக்கியத்தில் இடம்பெற முடியும். தொல்காப்பியமும் பிற இலக்கண நூல்களும் கூறும் செய்யுள் இலக்கணங்கள் எல்லாம் நிகழ்தகவுகளே ஆகும். அதாவது அவை அடுக்கியல் கூறுகள் ஆகும். அவற்றின் பொருண்மை மொழிப் பயன்பாட்டிலும் இலக்கியப் பயன்பாட்டிலும் அவை பயன்படுத்தப்பட்டுள்ள சூழலை வைத்து அறியப்பட வேண்டியவையாகும். அதாவது தொடரியல் உறவு அடிப்படையில் அவற்றின் பொருண்மை தீர்மானிக்கப்படும் என்பதாகும்.

ஒவ்வொரு நிகழ்தகவும் தனக்குள் பல்வேறு உட்கூறுகளைக் கொண்டிருக்கிறது. இலக்கியக் கதைத் தொடர்ச்சியில் ஒரு நிகழ்வைப் பேச எடுத்துக் கொள்ளும்போது, அதன் எந்த உட்கூறுகளை எல்லாம் பேச எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் எந்த உட்கூறுகளை எல்லாம் விட்டு விடலாம் என்றும் முடிவு செய்யவேண்டியுள்ளது. வெட்சி, கரந்தை என்ற இரண்டும் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களில் பல்வேறு உள் நிகழ்வுகள் கொண்டவைகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. வெட்சியைப் பற்றிப் பேசும்போது அது தொடங்கி, தொடர்ந்து முடிவதுவரை பல்வேறு நிகழ்வுகள் கால வரிசைப்படி, துறைகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. வெவ்வேறு இலக்கண நூல்களில் துறைகளின் எண்ணிக்கையும் அவற்றிற்குத் தரப்படும் தகுதியும் வேறுபடுகின்றன. இலக்கியத்தையும் நடைமுறையையும் கற்பனையையும் மதிப்பீடு செய்யும்போது இலக்கணம் அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டியதாகிறது. ஆனால், இலக்கண நூல்கள் தம்முள் வேறுபாடுகளைக் கொண்டிருக்கும்போது அவையும் கேள்விக்குள்ளாகின்றன.

ஓர் இலக்கண நூல் கட்டமைக்கப்படுவதற்கும் விதிகளைக் கூறிச் செல்வதற்கும் அடிப்படையாக அமைந்த தரவுகளில் வேறுபாடு இருந்திருக்கலாம். இலக்கண நூலை எழுதிய ஆசிரியரின் உற்று நோக்கலிலும் தேர்ந்தெடுப்பிலும் வேறுபாடுகள் இருந்திருக்கலாம். இலக்கண நூல்கள் இலக்கியங்களிலிருந்தும், நடைமுறைகளிலிருந்தும் தரவுகளை எடுத்துக் கொள்வதோடு வாய்ப்புள்ள நிகழ்வுகள் என்று நிகழ்தகவு அடிப்படையிலும் தரவுகளை எடுத்துக் கொள்கின்றன. இலக்கியம், நடைமுறை, புனைவு எல்லாவற்றிற்குமான விதிகளையும், அவற்றின் உட்கூறுகளையும் அளித்துவிடவேண்டும் என்பது இலக்கண நூல்களின் கொள்கையாக இருக்கிறது.

ஓர் இலக்கியத்திலும் புனைவிலும் நடைமுறையிலும் உள்ளவற்றை மட்டுமல்லாமல் இலக்கணத்தையும் நிகழ்தகவு அடிப்படையில் பார்க்க வேண்டியுள்ளது. பல்வேறு இலக்கண நூல்கள் கூறிச் சென்றுள்ள எல்லாவற்றையும் தொகுத்து விடுபடுதல்களைச் சேர்த்து முழுமையைக் கொண்டு வர வேண்டியுள்ளது. அடுத்தடுத்த காலகட்டங்களில் வருகிறவர்கள் தம் காலத்தில் இருந்துக்கொண்டு, சம காலத்தையும் கடந்த காலத்தையும் இந்தப் பார்வையில்தான் பார்க்க வேண்டியுள்ளது.

ஆநிரை கவரும் வெட்சி தன்னுறு தொழில், மன்னுறு தொழில் என்று இரண்டாக இலக்கண நூல்களில் குறிக்கப்படுகிறது. மன்னன் ஆணையின்றிப் படை தானே சென்று, பகைவர் ஆநிரை கவர்தலிலும் மன்னனே அடிப்படையாக இருக்கிறான். வெட்சி என்பது ஓர் அரச மைப்பின் படைப்பிரிவால் நிகழ்த்தப்படுவது என்று இலக்கண நூல்கள் வரையறுத்துள்ளன. ஆனால், இலக்கியத்திலும் நடை முறையிலும் அவ்வாறு இல்லாமலும் இருக்கிறது. ஆநிரை கவர்தல், மீட்டல் பற்றிய கல்வெட்டு ஆய்விலிருந்து பெறப்பட்ட கருத்துகளாகத் துரை. பட்டாபிராமன் (1990) தெரிவிப்பதாவது;

1. ஆநிரை கவர்தல், மீட்டல் என்ற இரண்டும் ஒரே நாட்டின் இருவேறு பகுதிக்குள் நிகழ்ந்துள்ளன. இது ஊர்ப் பூசல் எனப்படும் (1990; 60).
2. தருமபுரி, செங்கம் பகுதிகளில் ஆநிரை கவர்தல், மீட்டலால் இறந்தவர்களுக்கு நடுகற்கள் வைக்கப்பட்டுள்ளன(1990; 62). ஆநிரை கவரும்போது இறந்தவர்களுக்கு வைக்கப்பட்ட கோயில் வேடியப்பன் கோயில் என்றும் மீட்கும் போது இறந்தவர்களுக்கு வைக்கப்பட்ட கோயில் சிறைமீட்டான் கோயில் என்றும் அழைக்கப்படும்(1990; 79-80).
3. எருமை, ஆடுகளும்கூடக் கவரப்பட்டன(1990;73).
4. குறுநிலத் தலைவர், அவர் சேவகர் ஆநிரை கவர்ந்த செய்தி உள்ளது. போரின் தொடக்கச் செயலாகக் கல்வெட்டில் அது குறிக்கப்படவில்லை. தனிச் செயலே அது (1990; 73).
5. கல்வெட்டுகளில் நிரை கவர்தல் என்பது மன்னனோடு தொடர்பு படுத்தப்பட்டோ, அன்றிப் போர்த் தொடக்கமாகவோ சுட்டப் படவில்லை. அரசர், அவற்றின் மறவர் ஆகியோர் நிரை கவர்தல் செய்யவில்லை.
6. பதிற்றுப்பத்திலும் பாண்டியர், சோழர் பற்றிய பிற இலக்கியப் பகுதிகளிலும் போர் நிகழ்ச்சி பற்றிய கல்வெட்டுகளிலும் செப்பேடு களிலும் ஆநிரை கவர்தல் கூறப்படவில்லை(1990;62).

சிலப்பதிகாரத்திலும் சீவக சிந்தாமணியிலும் ஆநிரை கவர வருகிறவர்கள் வேட்டுவர் என்றும், கானவர் என்றும் அழைக்கப்படுகிற இனக்குழுவினர்கள் ஆவர். வெட்சி, கரந்தை என்ற திணைகள் ஆநிரை வைத்திருப்பவர், தேவைப்படுபவர்களுக்கு இடையில் ஆநிரையை மையப்படுத்தி நடக்கும் போர் பற்றிய இலக்கணமாகும். ஆநிரைகள் பெருஞ்செல்வமாகக் கருதப்படும் மனிதக் குழுக்களுக்கு இடையில் நடக்கும் போராகும். போர் என்பதைவிடச் சண்டை என்பதே சரி. நிலத்தையும் பொன்னையும் அதிகாரத்தையும் மக்களையும் வெல்ல நினைக்கும் வளர்ச்சி அடைந்த அரசுகளுக்கு ஆநிரைகள் முதன்மைப் பொருளாக இருக்க வாய்ப்பு இல்லை. பகைவரின் நாட்டுப் பகுதிகளில் உள்ள ஆநிரைகளைக் கவர்தல் என்பது வம்புக்கு இழுத்துப் போருக்கான ஒரு காரணத்தை, வலிந்து உண்டாக்குவதற்காக இருந்திருக்கலாம்.

சீவக சிந்தாமணியில் ஆநிரை கவர வருகிறவர்கள் வேற்று நாட்டுப் படையினராக இருந்திருப்பார்களானால் சீவகன் வேற்று நாட்டுப் படையினருடன் போரிட்டு வெல்வதாகக் கதை திரும்பிவிடும். கோவிந்தையார் இலம்பகத்தைப் பொருத்தவரையில் கட்டியங்காரனின் படையே தோற்கிறபோது, சீவகன் தன் நண்பர்களுடன் சேர்ந்து வெற்றி பெற்றவனாக இருக்கிறான் என்று காட்டுவதாகும். எனவே, கானவர் என்ற இனக்குழுவினர் நிரை கவர வந்தவர்களாகக் காட்டப் பட்டுள்ளனர். எதிரியாக அரசப் படையினர் வரவில்லை. கட்டியங்காரன் படையைவிட வலிமையானவன் சீவகன் என்பதை முதல் நிகழ்விலும் இறுதி நிகழ்விலும் காட்டவேண்டிய தேவை காப்பியத்தில் வருகிறது. இறுதியில் கட்டியங்காரன், சீவகன் இருவருக்கும் நடைபெற உள்ள பெரும்போர் முதலில் நிகழ்ந்துவிடுவதாகக் காட்டுவது கதை நிகழ்வுக்குப் பொருந்தாது. காரண, காரிய உறவு இருக்காது. சீவகன் தன்னை வலிமைப்படுத்திக் கொள்ளும் நிகழ்வுகளை அமைத்துக் கதையைத் தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டும். தொடக்கத்தில் எல்லா வலிமைகளையும் பெற்றுக் கட்டியங்காரன் படையை வென்று விட்டதாகக் காட்டுவது நடப்பியலுக்கும் ஏற்றதன்று. எனவே, கட்டியங்காரன் படை ஆநிரையை மீட்கமுடியாது தோற்பதாகவும் பிறகு சீவகன் அந்த ஆநிரையை மீட்டுவருவதாகவும் காட்டி, சீவகன் கட்டியங்காரன் படையிலும் வலியன் என்று காட்டப்படுவதாகிறது.

ஆநிரையைக் கவர்தல் அற நோக்கத்தின் அடிப்படையில் என்பது கேள்விக்குரியது. போரில் பிழையான தாக்குதலுக்கு உள்ளாகிவிடக் கூடாதவர்கள், கூடாதவைகளின் பட்டியலில் அந்தணர், சிறுவர், முதியோர், மகளிர் ஆகியோர் ஆநிரைகளோடு குறிக்கப்படுகின்றனர்.

சீவகன் தன்னால் பாதுகாக்கப்பட,

நன்பால் பசுவே, துறந்தார், பெண்டிர், பாலர், பார்ப்பார்
என்பாரை ஓம்பேன் எனின் யான் அவன் ஆக என்றான் (சீவக.443)

என்று ஒரு பட்டியல் தருகிறான். ஆநிரை கவர்தல், மீட்டல் என்ற இரண்டிலுமே ஆநிரைகள் பாதுகாக்கப்பட வேண்டியவை என்பது அறநெறியாகும். பால், பசுக்கன்று, காளைக் கன்றுகளைத் தரும் காரணமாகப் பசுக்கள் பாதுகாக்கப்பட வேண்டியவைகளாகிவிட்டன. தன்னைச் சார்ந்தவர்களைப் பாதுகாத்தல் என்பதிலிருந்து வேறானது இது. சுரத்துவழி ஆநிரைகளைக் கடத்தும்போது அவை நோகாதவாறு கடத்தப்பட வேண்டும் என்பது கவர்கிறவர்களுக்கும் உரிய இலக்கண மாகிறது. ஆநிரைகள் உடைமைகள் என்ற அடிப்படையில் பாதுகாக்கப் பட வேண்டியவை. அதை இழப்பது இழிவு. அது வலிமையற்ற பண்பின் வெளிப்பாடாகிறது.

நடைமுறையில் இலக்கியத்தில் வேறு மரபிலான நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. மழவர்கள் வாள், வில் கொண்டு ஆநிரை கவர்ந்து, வேம்பின் அடியில் தங்கிய தெய்வத்திற்குப் பலி கொடுத்து குருதிப்பலி தூவி, இறைச்சியை வேக வைத்து உண்டுள்ளனர் (அகம். 309). இந்த மரபு எல்லா இனக்குழுக்களுக்கும் பொருந்துவதன்று என்று ராஜ் கௌதமன் (2009;12) குறிப்பிடுகிறார். ஆயர், கோவலர், இடையர், அண்டர், குடவர், பூழியர் என்றெல்லாம் வேறு பெயர்களில் கால்நடைப் பராமரிப்புத் தொழிலைக் கொண்டவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்(2009; 44) குறிப்பிடுகிறார்.

எயினர்கள் பெருங்கற்கால நாகரிகத்திலிருந்து சங்க காலம் வரை மாறாத பண்பாட்டுடன் வாழ்ந்தனர் என்றும் ஆண்கள் வேட்டைத் தொழிலையும் பெண்கள் உணவுச் சேகரிப்பையும் தொழிலாகக் கொண்டிருந்தனர் என்றும் எயினர்கள் ஆநிரை கவரவில்லை என்றும் அவர் (2009; 45) குறிப்பிடுகிறார்.

வேட்டுவர், எயினர், ஆநிரைக் கள்வர் இது போன்ற பெயர்கள் தமிழ் மொழிப் பரப்பு முழுமையும் ஒரே கருத்தில் வழங்கப்படாமலும் இருந்திருக்கலாம். சிலப்பதிகாரத்தில் எயினர்தான் ஆநிரை கவர்வதாக வருகிறது. சீவக சிந்தாமணியில் கானவர், வேட்டுவர் என்று வருகிறது. ஆநிரைகளின் இறைச்சியை உண்ணும் பழக்கம் தமிழகத்தில் சில சாதிகளுக்குரியதாக தொன்றுதொட்டு இருந்து வருகிறது.

குறிப்பிட்ட இனக்குழுவின் பெயரைக் குறிப்பிடாமல் வெட்சியார் என்று ஆநிரை கவர்கின்றவர்களையும் கரந்தையார் என்று ஆநிரை

மீட்கிறவர்களையும் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது. ஆநிரையின் தேவை ஆயர்களுக்கு மட்டுமின்றிப் பிறருக்கும் உரியதாக மாறி வருகிறபோது ஓர் இனத்தைக் குறிப்பிட்டுக் கூற முடியாது. அரசன் அந்தணருக்கும் பிறருக்கும் ஆவைக் கொடுத்தாலும் செல் வந்தர்களும் அவ்வாறு செய்தலும் நிகழ்ந்து வந்துள்ளன. மன்னன் தன் உடைமைகளுள் ஒன்றாக ஆநிரைக் கூட்டத்தைப் பெற்றிருக்கலாம். அதன் பொறுப்பு வேறு இனத்தவரிடம் இருந்திருக்கலாம். அல்லது பணிக்கு அமர்த்தப்பட்டவர்களால் நகருக்கு வெளியில் ஆநிரைகள் பாதுகாக்கப்பட்டிருக்கலாம். கிடைக்குரியவர்கள் ஆயர்களாக இருக்க வேண்டிய கட்டாயமில்லை.

இனக்குழுக்கள் அரசுகள் உருவாகிறபோது அரசின் குடிகளாகின்றன. இனக்குழுவினரின் பாதுகாப்பும் அரசனுக்குரியதாகிறது. கோவிந்தையார் இலம்பகத்தில் நந்தகோன் முதலான ஆயர் குலத்தவர் தம் ஆநிரை கவரப்பட்டதையும் மீட்க முடியாததையும் நகருக்குச் சென்று கட்டியங்காரனிடம் தெரிவிக்கின்றனர். எனவேதான் கட்டியங்காரன் படை ஆநிரை மீட்க வருகிறது. கோவிந்தையார் இலம்பகத்தில் கரந்தைப் போர் மூன்று நிகழ்கிறது. ஆயர் படை, கட்டியங்காரன் படை, சீவகன் படை என்ற மூன்றும் முறையே அடுத்தடுத்து ஆநிரைகளை மீட்கப் போராடுகின்றன. சீவகன் படைக்கே வெற்றி கிட்டுகிறது. சீவகனின் ஆநிரை மீட்புப் போர் பின்வரும் நிகழ்வுகளாக வரிசைப்படுத்தப் படுகிறது.

1. ஆநிரை கவரப்பட்ட பின் உளரினர் துன்பத்தைச் சீவகன் அறிதல் (சீவக.442)
2. சீவகன் ஆநிரை மீட்க வஞ்சினம் கூறுதல் (சீவக.443)
3. அவன் தேரில் புறப்பட்டுச் செல்லுதல் (சீவக.444)
4. கானவர்களின் நிமித்திகன் போரைத் தவிர்க்கக் கூறுதல் (சீவக.445)
5. காட்டில் தாமே வலியர், சீவகன் ஒருவனே என முடிவு செய்து வெட்சியார் போரிடல் (சீவக.446)
6. கானவர்கள் புறமுதுகிட ஒலியெழுப்புதல் (சீவக.447)
7. சீவகன் போர் விளையாட்டுச் செய்தல் (சீவக.448)
8. வளைக்கப்பட்ட கானவர் படை மறம் ஒடுங்குதல் (சீவக.449)
9. விரைவால் சீவகன் ஒருதேர் பலதேர் எனக் கானவர்க்குத் தோன்றல் (சீவக.450)
10. வேடர் அம்புகளைச் சீவகன் தன் வில்லால் தடுத்தல் (சீவக.451)

11. சீவகன் அம்பு மழை பெய்தல், ஆநிரை திரும்ப, ஆயர் ஆரவாரித்தல் (சீவக.452)

12. 56,000 வேடர்களின் உடல்களை 100 கூறாக்கவல்ல அம்புகளைச் சீவகன் எய்தல், அவை வேடரின் அம்பு, வில்களை அறுத்தல் (சீவக.453)

13. வாள், அம்புக் காயங்கள் இன்றி ஆநிரை மீட்டல் (சீவக.454)

14. ஆள் கொலை இன்றிச் சீவகன் தோழருடன் ஆநிரை மீட்ட செய்தியைக் கட்டியங்காரன் அறிதல், சீறுதல், நகரம், மகிழ்தல் (சீவக.455)

15. நகரினை அலங்கரித்துச் சீவகனை வாழ்த்தல் (சீவக.456)

16. நகரம் மகிழ்தல் (சீவக.457)

17. மகளிர் தெருவில் நின்று மீளும் சீவகனைக் காணுதல் (சீவக.458)

18. சீவகனைக் காண்பதில் மகளிரின் பல்வேறு நிலைகள் (சீவக.458-73)

சீவகன் ஆநிரை மீட்டதை 12 பாடல்களிலும் நகர மகளிர் சீவகனைக் கண்டதை 16 பாடல்களிலும் திருத்தக்க தேவர் பாடியுள்ளார். ஒப்பீட்டிற்காகப் புறப்பொருள் வெண்பா மாலை தரும் கரந்தைப் போர் நிகழ்வுகள் பின் வருமாறு தரப்படுகின்றன. (புறப்பொருள். 2)

1. ஆநிரை மீட்பது கரந்தையாகும்.
2. கரந்தையார் ஆநிரை மீட்கச் செல்வது.
3. ஆநிரை கவர்ந்து செலுத்தப்பட்ட வழியில் கரந்தையார் செல்வது
4. வெட்சியாருடன் கரந்தையார் போரிடுதல்
5. கரந்தை மறவர் விழுப்புண் படுதல்
6. கரந்தை மறவன் போரில் இறத்தல்
7. ஒரு கரந்தை மறவன் தனியனாகப் போரிடுதல்
8. விழுப்புண் பட்டவன் துடிக்கு ஏற்ப ஆடியது
9. வெட்சியார் குடலைக் கரந்தையார் சூடி ஆடியது
10. வாட்போரில் இறந்த கரந்தையனை எண்ணிய இரவலர் புலம்பல்
11. கரந்தையன் தன்னை உயர்த்திக் கூறல்
12. தீ நிமித்ததையும் பொய்ப்பிக்கும் வகையில் வென்ற கரந்தையனை மன்னன் சிறப்பித்தல்
13. கரந்தை மறவர் மன்னனைப் புகழ்வது
14. மறவர் தம்குலச் சிறப்பை உரைப்பது

கரந்தைப் போர் என்பது மன்னர் படையால் நிகழ்த்தப்படுவதால் அது ஒரு குழுப்போராக இருக்கிறது. சீவகன் தனி ஒருவனாகச் செல்வதாக, சில நண்பர்களுடன் சென்றதாக இறுதியில் சொல்லப் படுகிறது. குழுப் போரில் பலருக்கும் பல நேரிடுகின்றன. விழுப்புண் படுதல், இறப்பு, வெற்றி எல்லாம் கிட்டுகின்றன. கல்வெட்டுகளில் ஆநிரை கவர்வதும், மீட்பதும் தனி ஆட்களால் நிகழ்த்தப்படுவதாகவும் வருகிறது. கட்டியங்காரன் படையால் முடியாதது; சீவகன் என்ற தனி ஒருவனால் முடிகிறது என்று காட்டுவதன் மூலம் சீவகன் கட்டியங்காரனின் நால் வகையான ஓட்டுமொத்தப் படைக்கும் வலிமையால் மேலானவன் என்று கூறப்பட்டதாகிறது. இக்காலத் திரைப்படக் கதைத் தலைவனைப் போன்றவனாகிறான் சீவகன்.

புறப்பொருள் வெண்பாமாலை கூறும் கரந்தைத் திணை இலக்கணத்தில் விழுப்புண்படுதல். இறத்தல், குடல் மாலை சூடி ஆடுதல் முதலான வன்முறைகள் கூறப்படுகின்றன. வன்முறையை எதிர்க்கும் சமண சமயக் காப்பியமாதலாலும் சீவகன் சமணன் என்பதாலும் புண், உயிர்க்கொலை இல்லாமல் ஆநிரைகளை மீட்டான் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் அவன் போர் செய்ததை விளையாடுதல் என்று கூறியது அவனது வலிமைக்கு முன் வேடர் படை மிக எளியது என்று காட்டுவதற்காகும்.

கட்டியங்காரனின் படை நிகழ்த்திய கரந்தைப் போரில் அவனது படைகள் கானவர் வில் படைகளால் சிதைக்கப்படுகிறது. அரசன் படை கானவர் படையின் வில்லை மட்டுமே முறிக்க முடிகிறது.

அரசன் படைநிலை		வேடர் படை நிலை
1. மற்போர் வீரர் மார்பில் அம்பு தைத்தல்	-	விற்கள் வாள்களால் உடைக்கப்படுகின்றன. (சீவக. 435)
2. வாட்படை வீரரைக் கானவர் அம்பால் அழிக்கின்றனர். குதிரை அழிதல், யானை சாய்தல், தேர் கவிழ்தல்	-	பாதிப்பு இல்லை (சீவக.436)
3. அரசன் படை மீண்டும் ஒன்று சேர்ந்து போரிடல், பொன் முகபடாம் யானை, குதிரை, வெண்குடை, கொடி கைவிட்டுப் புறமுதுகிடல்	-	பாதிப்பு இல்லை (சீவக. 437)

கானவர் படைகளும் அரசனின் படைகளும் வன்முறை உணர்வோடு

போரிடுகின்றன. வில், அம்புகள் அரசனின் படையினரிடம் இல்லை. யானை, தேர், கால், குதிரை என்ற நான்கு வகைப்படைகள் இருந்தும் கானவரை அரசன் படையால் வெல்ல முடியவில்லை. சீவகன் தேரையும் வில்லையும் போருக்குப் புறப்படும்போது எடுத்துச் செல்கிறான். வேட்டுவரை வெல்ல வேண்டுமானால் வில்படையால் மட்டுமே முடியும். தொலைவிலிருந்து தாக்கப் பயன்படும் போர்க்கருவி வில்லும் அம்புமாகும். வேல் பற்றி இங்கு பேசப்படவில்லை. நகரப் படை, காட்டுப்படை என்ற நாகரிகம், காட்டுமிராண்டித்தனம் என்ற வேறுபாடு அரசனின் படைக்கும் கானவர் படைக்கும் இடையில் இருக்கிறது. அதாவது இந்த வேறுபாடு 20ஆம் நூற்றாண்டிற்குரியது என்று கருத வேண்டியதில்லை. பழங்கால அரசர்கள் காலத்திற்கும் உரியதாக இருந்திருக்கிறது. போருக்கு இலக்கணம் எழுதுகிறபோது மனிதர், ஊர்திகள், போர் முறைகள், போர்க்கருவிகள், போரில் விலங்குகளைப் பயன்படுத்துதல், போரின் இடம், காலச் சூழல்கள் என்று எல்லாவற்றையும் தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். திணை என்றும் துறை என்றும் இலக்கணம் வகுக்கிறபோது பெரும் பாலும் நிகழ்வுகளே பொதுவாக வகைப்படுத்தலில் மையமாக உள்ளன. கருவிகள் பொருத்தமில்லாதனவாக இருப்பதால் கட்டியங்கார அரசனின் படையில் உள்ள மற்போர் வீரர்கள் கானவர் படையின் அம்புக்கு எளிதில் இலக்காகி விடுகின்றனர். மற்போர் வலிமையானது என்றாலும் விற்போர் முன் தோல்வியடைந்துவிடுகிறது.

போரில் தொடர்புடைய எல்லாக் கூறுகளையும் எடுத்துக்கொண்டு போருக்கு இலக்கணம் வகுப்பது என்பது இலக்கண நூலை விரிவாக எழுதப்படும் ஒரு கட்டத்திற்குக் கொண்டு சென்றுவிடும். தொல்காப்பியத் தைவிடப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் துறைகளின் எண்ணிக்கை கூடுதலானது. அடுத்து வரும் இலக்கண நூல்களில் இந்த வளர்ச்சி விரிவுபடுத்தல்கள், விடுபட்டனவற்றைச் சேர்த்தல், புதியனவற்றைப் புகுத்தல் முதலானவற்றின் காரணமாக நிகழ்கின்றன. ஒவ்வொரு போரிலும் இசைக் கருவிகளின் பயன்பாடு இருக்கிறது. ஒரு கருவியைப் பயன்படுத்துதல், அந்தக் கருவியில் வெவ்வேறு இசை ஒலிகளை எழுப்புதல் என்ற முறைகளில் போரிடுவதற்கான கருத்துப் பரிமாற்றத்தை அல்லது ஆணையைப் பரப்ப முடிந்திருக்கிறது. அரசன் படை வெண் சங்கை முழக்கியும் வேடர் படை ஊதுகொம்பையும் துடியையும் ஆரவாரித்தும்(சீவக. 434) போர் நடைபெறுகிறது. முரசு ஒலி வேடர் படைக்குரியதன்று. அரசன் படைக்குரியது. சீவகனிடம் போரிட முடியாது, வேடர் படையினர் பின்வாங்கவும் புறமுதுகிடவும் செய்யும்போது, துத்தரிக்கொம்பை ஊதுகின்றனர். வேடர் படையில்

உள்ள எல்லாருக்குமான செய்தியைக் குரல் மூலமும் மொழி மூலமும் உணர்த்த முடியாத போர்ச் சூழலில் துத்தரிக் கொம்பே அறிவிப்பானாகச் செயல்படுகிறது (சீவக.447). துடி, முரசு, பறை முதலான கருவிகள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் போர்க் காலக் கருவிகளாகப் பேசப்படுகின்றன.

நடைமுறையில் உள்ள எல்லாவற்றையும் ஓர் இலக்கியமோ, இலக்கணமோ தனது எல்லைப் பரப்புக்குள் கொண்டுவந்து விடுவ தில்லை. கல்வெட்டுகள் நடப்பியலுடன் நெருங்கியவைகளாக உள்ளன. இலக்கண நூல்கள் எல்லாத் துறைகளையும் பதிவு செய்யவில்லை. தொல்காப்பியம் கூறும் கரந்தையின் துறைகளுள் ஆகோள், ஆபெயர்த்துத் தருதல், ஆரமர் ஓட்டல், பூசல் மாற்று, வருதார் தாங்கல், வாள் வாய்த்துக் கவிழ்தல் என்பனவற்றையும் இவற்றோடு புறப்பொருள் வெண்பாமாலை கூறும் போர்க்களத்தொழில் என்ற துறையும் கல்வெட்டு களில் பதிவாகியுள்ளதாகத் துரை. பட்டாபிராமன் (1990; 67) குறிப்பிடுகிறார். அதாவது கல்வெட்டுப் பதிப்பிக்கிற அரசர் அல்லது பிறரும் இலக்கண நூல்களின் செல்வாக்கிற்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரியவருகிறது. இலக்கண நூல்களின் செல்வாக்கிற்கு இலக்கியங் களும் உள்ளாகியிருக்கின்றன. சீவக சிந்தாமணியில் வரும் வெட்சி, கரந்தைப் போர்கள் இலக்கண மரபிலிருந்தும் எடுத்துப் பயன்படுத்தப் பட்டவையாகும்.

சீவக சிந்தாமணியில் வரும் ஆநிரை கவர்தல் தன்னுறு தொழில் இல்லை என்றாலும் அதுவே தன்னுறு தொழிலுக்கு அடிப்படையாக உள்ளது. இனக்குழு, குறுநிலத் தலைமை, திணைக் குழுக்கள் இவற்றின் முரண்பாடுகளும் சண்டைகளும் அரசு உருவாக்கத்திற்கு முன்பே நிகழ்ந்து விட்டவைகளாகும். இவற்றின் செயல்கள் அரசு உருவாக்கத்திற்குப் பிறகு அரசு அமைப்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இருவேறு அரசுகளுக்குரிய நிலப்பரப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இரு வேறு அரசுகளுக்குரிய நிலப்பரப்புக்குள் அடங்காத மக்கள் குழுக்களின் செயல்கள் தனியே வைத்துப் பேசப்படாதவை என்பதில் புலவர்களின் அரசியல் நோக்கம் வெளிப்படுகிறது. அரசு அமைப்புக்குள் எல்லா மக்களையும் கொண்டு வந்துவிடக் கருதும் அரசனின் உள்நோக்கத்தைப் புலவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். ஆநிரை கவர்தல், மீட்டல் என்ற புறக்கருத்துப் பாணர் மரபுக்குரியதாக இருந்து, அரசர் எழுச்சியில் புலவரால் பாடப்படும் திணை, துறை மரபுக்கு மாற்றப்பட்டுவிட்டது என்று ராஜ்கௌதமன் (2009;10) குறிப்பிடுகிறார். கரந்தைத் திணையின் துறைகளுள் தொல்காப்பியம் மூவேந்தரை உட்படுத்தியிருக்கிறது.

பனம்பூ, வேப்பம் பூ, ஆர்ப்பூ (அத்திப்பூ) என்ற மூன்று பூக்களும் சூடுதல் கரந்தையின் துறைகளாகும் (தொல். புறத்.3). மாயோன் புகழ் பேசும் பூவை நிலைத்துறையும் கரந்தைக்குரியது. அது ஆயர்களின் கடவுள் மாயோன் என்ற கருத்துருவாக்கத்தைப் பதிவு செய்துள்ளது. முருகனுக்குரிய வெறியாட்டுக் கரந்தையில் வைக்கப்பட்டுள்ளது. நடுகல் என்பது இனக்குழு நிலையிலிருந்து அரச மரபுக்கு வரும்போது வேறுபடுகிறது. காட்சி, கால்கோள், நீர்ப்படை என்ற சடங்குமுறை விரிந்த துறைகளாக அது வளர்ச்சி பெறுகிறது. சீவக சிந்தாமணியின் கதைப்போக்கிற்குச் சீவகனே மையமானவன். பிறரின் இறப்பும், வெற்றியும் முதன்மைப்படுத்தப்பட வேண்டியவைகளல்ல. எனவே இவ்வாறான தொடர்பில்லாத துறைகள் தவிர்க்கப்பட்டுள்ளன. பிற திணைகளுக்கும் பொதுவாக அமையும் சில துறைகளை முதல் திணையில் அதாவது கரந்தைத் திணையில் வைத்துத் தொல்காப்பியம் பேசியுள்ளது எனலாம்.

சிலப்பதிகாரத்தில் ஆயர்கள் பெருநகரை ஒட்டி வாழ்வதாகவும் வேட்டுவர்கள் விலகி வாழ்வதாகவும் பதிவாகியுள்ளது. ஆநிரை கவரப்பட்ட செய்தி முல்லை நிலமும் மருத நிலமும் நகரவாயிலும் கடந்து நகர மக்களிடம் ஆயர்களால் பரப்பப்பட்டுப் பேசப்படுகிறது. (சீவக. 426-430). ஆயர்கள் வேட்டுவர்களைவிட அரசு நிர்வாக மரபுக்கு எளிதாகவும் முன்பாகவும் உட்பட வேண்டியதானது. ஆக்களின் பயன் பொருள்கள் விற்பனை செய்ய ஒரு நகரம் தேவை.

போர் நிகழ்வுகளைப் பேசும் புறத்திணை இலக்கணத்தில் வாழ்வியல் நிகழ்வுகள் பேசப்பட இடமில்லை. கலித்தொகையில் வரும் ஏறு தழுவுதல், ஆநிரை மேய்த்தல் முதலான செயல்கள் கரந்தையில் பேசப்பட வாய்ப்பு இல்லை. சீவகசிந்தாமணியிலும் ஆய்ச்சியர் ஆநிரை கவரப்பட்டதை அறிந்து கன்றுகளிடம் கதறி அழுகின்றனர்.

எம் அனைமார் இனி எங்கனம் வாழ்குவிர்
நும் அனைமார்களை நோவ அதுக்கி
வெம்முனை வேட்டுவர் உய்த்தனரே (சீவக. 425)

ஆயர்குலப் பெண்டிர் கால்நடைப் பராமரிப்பையும் பயிடுவதையும் ஆண்கள் குடியேற்றப் பகுதியைப் பாதுகாத்தலையும் செய்தனர் என்று கா.சிவத்தம்பி (1998;167) குறிப்பிடுகிறார். கலித்தொகையில் ஆண், பெண் ஆயர் குல இளைஞர்கள் மேய்ச்சல் தொழில் செய்ததாக வருகிறது. சங்க இலக்கியத்தையும் தமிழ் அகம் மற்றும் புற இலக்கணங்களையும் ஒப்பிடும்போது இரண்டுக்கும் இடையில் இடைவெளிகள் இருப்பது

தெரியவருகிறது. பல்வேறு வாழ்வியல் செய்திகள் இலக்கண நூல்களில் வெளிப்படுத்த வாய்ப்புகள் இல்லாமல் போயுள்ளன. காப்பியங்களின் இலக்கணங்களில் அந்தச் செய்திகள் காப்பிய உள்ளடக்கக் கூறுகளாக இடம் பிடித்துள்ளன.

தொடர்ச்சியான நிகழ்வுகளில் எது துறையாகிறது, எது முறையாக எடுத்துக் கொள்ளப்படாமல் தவிர்க்கப்படுகிறது என்றும் பார்க்க வேண்டியுள்ளது. பாதீடு என்று தொல்காப்பியம் கூறும் வெட்சித்துறை கணியன், மறவன், ஒற்றறிந்தோன் என்று பல துறைகளாகப் புறப்பொருள் வெண்பா மாலையில் பிரித்துச் சொல்லப்படுகிறது. கொடை என்று தொல்காப்பியம் கூறும் துறையையும் இரவலர்க்கு, பாணருக்கு, விறலிக்கு என்று பல துறைகளாகப் பிரிக்கலாம். சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் இவ்வாறான உள்பகுப்புகள் கூறப்பட்டுள்ளன. சமயம், அரசியல், சடங்கு முதலானவையும் துறைகளுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதைக் கரந்தைத் திணையின் துறைகளைக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம். தமிழ்ச் சமூகத்தின் பெருவேந்தர்களும் சமயக் கடவுளர்களும் கரந்தைத் திணைக்குள் நுழைக்கப்பட்டுள்ளனர்.

அரசு நிர்வாகத்துடன் தொடர்பு இல்லாமல் நிகழும் ஆநிரை கவர்தலும், மீட்டலும் தமிழ் இலக்கண நூல்களில் பாடுபொருள் களாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. கோவிந்தையார் இலம்பகம், வேட்டுவவரி என்ற இரண்டிலும் வரும் ஆநிரை கவர்தல் இலக்கண மரபுக்கு உட்பட்டவைகளல்ல. சீவகனுடன் தொடர்புபடுத்தப்படுவதற் காகவே ஆநிரை மீட்பு என்பது கோவிந்தையார் இலம்பகத்தில் அரசு நிர்வாகத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. முத்துப்பட்டன் இறக்கிறான். ஆநிரை திருடும் வன்னியர் குழுவை எதிர்த்து மாண்டு போகிறான். வேட்டுவர், ஆயர் என்ற இரு இனத்தவர்களுக்கு இடையிலான போராக இது இங்கு இல்லை. நெடுங்குருதி (எஸ்.ராமகிருஷ்ணன், 2003, 260-261) என்ற புதினத்தில் காளைகள் திருடப்படுகின்றன. வேளாண்மைச் சமூகத்தில் உழைப்பின் அடிப்படையில் பசுக்களைவிடக் காளைகள் மதிப்புப் பெற்றவைகளாகிவிடுகின்றன. கவரப்படும் ஆநிரைகள் பணம் பெற்றுக்கொண்டு மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படுவது ஒரு திருட்டு மரபாகவே உருவாகி இன்றுவரை பின்பற்றப்பட்டுவருகிறது. அரசின் நிர்வாக, போர் மரபுடன் மட்டும் ஆநிரை கவர்தலும், மீட்டலும் இணைத்துப் பேசப்படுவது இலக்கண மரபில் மட்டும் உள்ளது. நடைமுறை மரபும் இலக்கிய மரபும் அதிலிருந்து வேறுபடுகின்றன.

தொடர்ந்து நிகழும் செயல்களில் ஓர் இலக்கண நூலில் துறை களாகக் கொள்ளப்பட்ட செயல்கள் வேறு இலக்கண நூலில் வெவ்வேறு

துறைகளின் பகுதிகளாகப் பிரித்து வைக்கப்படவும் வாய்ப்புள்ளது. அதாவது துறை என்பது முழுமையானதாக இல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளின் பகுதிகளுள் சில பிரித்து இணைக்கப் பட்டிருக்கலாம். இந்த நோக்கிலும் இலக்கண நூல்களின் துறைகள் நடைமுறையிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் வேறுபடுவதும் ஒன்று படுவதும் ஆராயப்பட வேண்டும். விராட நாட்டில் பஞ்சபாண்ட வர்கள் வேற்று உருவில் மறைந்து வாழ்கிறார்கள் என்பதை ஒற்றர் மூலம் அறிந்த துரியோதனன் அந்த நாட்டு ஆநிரைகளைக் கவரத் திரிகர்த்தனை ஏவுகிறான். மேலும் தானே ஆநிரை கவரச் செல்கிறான். ஆநிரை கவரப் படை செலுத்துவதன் நோக்கம் மறைந்து வாழும் பஞ்ச பாண்டவர்களை வெளிப்படுத்தி ஒழிக்க வேண்டும் என்பதாகும். விராட மன்னனும் அவன் மகன் உத்தரனும் ஆநிரை மீட்கச் செல் கின்றனர். இந்த இருவருக்கும் துணையாக ஆநிரை மீட்புப் போரில் அர்ச்சுனன் முதலானவர்கள் மாற்று உருவில் இருந்தவாறு பங்கேற்று, வெற்றிக்குப் பிறகு வெளிப்படுகின்றனர். வில்லிபாரதத்தின் 22ஆம் சருக்கம் நிரை மீட்சிச் சருக்கம் ஆகும். சமஸ்கிருத மகாபாரதத்திலிருந்து தழுவி எழுதப்பட்டது வில்லிபாரதம். மகாபாரத இதிகாசத்திலேயே ஆநிரை கவர்தலும் மீட்டலும் இருக்குமானால் இந்த மரபு இந்திய இலக்கிய, இலக்கணப் பொதுமையில் சேரும். தழுவல் என்பதால் தமிழ்ப் புற இலக்கண மரபுக்கு ஏற்பவும் கதை மாற்றி அமைக்கப் பட்டிருக்கலாம்.

சமூக வரலாற்று நோக்கில் இலக்கணங்கள் வாழ்வியல் செய்தி களைப் பதிவு செய்திருக்க வேண்டும். ஒரு சம காலகட்டத்தில் பல்வேறு குழுக்களின் வளர்ச்சி நிலைகளும் ஒரே அளவில் இருக்க வாய்ப்பு இல்லை. தம்முள் வேறுபட்டே இருக்கும். வேந்தன் ஏவலுடன் போரைத் தூண்டுவதற்காக நிகழ்த்தப்பட்ட ஆநிரை கவர்தல் பிற்காலத்தில் வேந்தனின் ஏவலின்றியும் தனி மனிதர்களாலும் குழுக்களாலும் நிகழ்த்தப்பட்டுள்ளது (கு.வெ.பாலசுப்பிரமணியன். 2007;43) என்று விளக்குவது சமூக வரலாற்றை எதிர்முகமாகத் திருப்பி விடுகிறது. திருட்டு என்பதுதான் தொடக்கமானது. அது குழுவாலும் தனி மனிதராலும் நிகழ்த்தப்பட்டுள்ளது. அரசு உருவாக்கத்தில் ஆநிரை கவர்தல் என்பது தவிர்க்கப்பட வேண்டிய அல்லது பிற செயல்களோடு ஒப்பிடும்போது பொருட்படுத்தப்பட வேண்டாத செயலாகியிருக்கிறது; மனிதர்களை ஆளுமைக்குள் கொண்டுவரும்போது அவர்களது இடமும் உரிமைகளும் பிற உடைமைகளும் வெல்லப்பட்டனவாகும். ஆநிரைகளும் வெல்லப் பட்டனவாகும். இந்த அடிப்படையில்தான் ஆநிரை கவர்தலின் வளர்ச்சி நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கானவர்கள் ஆநிரை கவர எழுந்த வெட்சிப்போர் பின்வருமாறு கோவிந்தையார் இலம்பகத்தில் வருணிக்கப்படுகிறது.

1. ஆயர் சேரியில் பசுக்கள் பால் சொரிந்தன. முல்லைகள் மலர்ந்தன (சீவக. 413)
2. இதை அறிந்த வேடர்கள் கூடுகின்றனர். (சீவக. 414)
3. ஆநிரை கவர முடிவு செய்கின்றனர். (சீவக. 415)
4. புள் நிமித்தம் தெரிய வருகிறது: முதலில் வெற்றியும் பிறகு ஒருவனால் தோல்வியும் கிடைக்கும். (சீவக. 416)
5. கானவர்கள் நிமித்தத்தை மறுத்துப் புறப்படுகின்றனர். (சீவக. 417)
6. கள் அருந்துகின்றனர். இசை முழக்கிக் கொற்றவையை வணங்கிப் புறப்படுகின்றனர். (சீவக. 418)
7. ஆயர் சேரியில் நிமித்திகன் குறி சொன்னான். (சீவக. 419)
8. புள் நிமித்தம் கருதி ஆநிரைகளைக் காக்கச் சொன்னான். (சீவக. 420)
9. ஆநிரை மேய்கையில் கானவர் அம்பால் தாக்கினர். (சீவக. 421)
10. இடையர் ஆநிரையைவிட்டு ஓடி ஆயர் சேரி புகுந்து கதறினர். (சீவக. 422)
11. ஆய்ச்சியர் கூடி அழுதனர். (சீவக. 423)

ஓர் இலக்கண நூல் குறிப்பிடும் வெட்சித் திணைக்குரிய துறைகளை எல்லாம் பொருத்தமுற அமைத்து இலக்கியம் எழுதப்பட வேண்டும் என்பதில்லை. இலக்கண நூலில் துறை பற்றிச் சொன்ன கலைச் சொற்களை அப்படியே பயன்படுத்த வேண்டும் என்றில்லை. சீவக சிந்தாமணி புற இலக்கணத்தைப் பார்த்து, அதற்கு ஏற்ப எழுதப்பட வேண்டும் என்று வரையறுத்துக் கொண்டு எழுதப்பட்ட நூலுமன்று. புற இலக்கண நூல்கள் குறிப்பிடும் தன்னுறு தொழில் அன்று சீவக சிந்தாமணி குறிப்பிடும் ஆநிரை கவர்தல்.

புறப்பொருள் வெண்பா மாலை வெட்சித் திணையில் இருபது துறைகளை வரிசைப்படுத்திக் கூறியுள்ளது. அவை வருமாறு,

1. மன்னுறு தொழில், தன்னுறு தொழிலாக ஆநிரை கவர்வது வெட்சியாகும்.
2. ஆநிரை கவரச் செல்வது வெட்சி அரவம்
3. விரிச்சி (நற்சொல்) கேட்கப்படுகிறது.
4. கானவர் கானம் கடந்து செல்லுதல்

5. ஆநிரை இடம் பற்றி ஒற்று அறிதல்
6. ஆயர் குறும்பைச் சூழுதல்
7. குறும்பை அழித்தல்
8. ஆநிரை கவர்தல்
9. மீட்கும் கரந்தையாரைக் கொல்லுதல்
10. ஆநிரைகளைச் சுரத்து வழி நடத்துதல்
11. வேட்டுவர் குடி ஆநிரை கண்டு மகிழ்தல்
12. மன்றத்தில் ஆநிரைகளை நிறுத்துதல்
13. தகுதிக்கு ஏற்ப ஆநிரைகளைப் பகுத்துக் கொடுத்தல்
14. வெட்சியார்கள் உண்டு மகிழ்தல்
15. ஆநிரைகளைக் கொடையாக வழங்குதல்
16. ஒற்று அறிந்து சொன்னவர்க்கு ஆநிரை வழங்குதல்
17. புள் நிமித்தம் சொன்னவர்க்கு ஆநிரை வழங்குதல்
18. துடி அடித்தவருக்கு ஆநிரை கொடுத்தல்
19. கொற்றவையின் அருள் நிலையை உரைத்தல்
20. வெறியாட்டு நிகழ்த்துதல்

சீவக சிந்தாமணியில் ஆநிரை கவர்தல் என்பது தோல்வியில் முடிந்த ஒன்று. சிலப்பதிகார வேட்டுவ வரியில் ஆநிரை கவர்தல் என்பது வெற்றியடைந்த ஒன்று. கொல்லன், துடியன், பாணன், கள் விற்பவள், ஒற்றன், புள் நிமித்தம் கூறியவன். முதிய எயினர், எயிற்றியர் முன்றில் களில் ஆநிரைகள் நிறைந்தன (சிலப். 12;2-14-16) என்று அதில் பட்டியலிட்டுக் கூறப்பட்டுள்ளது.

ஓர் இலக்கண நூல் ஒவ்வொரு திணையையும் முதல் நிகழ்விலிருந்து இறுதி நிகழ்வுவரை முழுமையாக இறுதி வரை நடப்பதாக எடுத்து விளக்கும். அதாவது எதிர் எதிராக உள்ள இரு திணை நிகழ்வுகளும் முழுமையுடன் எடுத்து விளக்கப்படும். இலக்கியத்தில் இரண்டுள் எதாவது ஒரு புறத்திணை ஒழுக்கம் தான் இறுதிவரை நிகழ்வதாகக் கூறப்படும். கூற எடுத்துக் கொள்ளப்படும் திணை முழுமையடையும் வரை இலக்கண நூல் துறைகளை விரித்துச் செல்லும். அதனால் அது முழுமையானது. எதிர் எதிராக அமையும் திணைகளுள் ஒன்றை மட்டும் வெற்றிபெற்ற நிலைக்கு இலக்கியம் எடுத்துச் செல்லும். சீவக சிந்தாமணியில் கானவர்கள் ஆநிரை கவரப் புறப்படுதல், புள் நிமித்தம் அறிதல், அதைப் பொருட்படுத்தாது செல்லுதல் முதலான

நிகழ்வுகள் கூறப்படுகின்றன. வெட்சியின் செயல்களை வரிசைப் படுத்திக் கூறும்போதே அதற்குச் சமமான நேரத்தில் ஆயர் சேரியில் நிகழ்ந்த நிகழ்வையும் இலக்கியம் கூறிச் செல்கிறது. இலக்கண நூல் இவ்வாறு இரு எதிரிடங்களில் நடப்பனவற்றை ஒன்றாக வரிசைப் படுத்துவதில்லை. அது நிகழ்வுகளை அதன் சூழலிலிருந்து, பிரித்து எடுத்துப் பட்டியலிடுகிறது; வரிசைப்படுத்துகிறது. அதாவது தொடரியல் உறவு அடிப்படையில் நிகழ்வுகள் பேசப்படுவதில்லை. அடுக்கியல் உறவு அடிப்படையில் பேசப்படுகின்றன. திணை இலக்கணம் என்பது கதைத் தன்மையிலிருந்து வேறானது. கதையைப் பல்வேறு நிகழ்வுகளாகவும் கூற்றுகளாகவும் பகுக்கிறது. அக இலக்கியங்களைப் பொருத்தவரையில் பெரும்பாலும் நிகழ்வுகள் பகுக்கப்பட்டுள்ளன. சில கூற்றுகள் புறத்துறைகளாக வருகின்றன. சில நிகழ்வுகள், உணர்வுகள் அகத்திணைக் கூற்றுகளாக வருகின்றன. சீவகசிந்தாமணியில் இதை ஒத்த நிகழ்வுகளும் கூற்றுகளும் அகமாகவும் புறமாகவும் மாறி அமைந்துள்ளன. இதனால்தான் கூற்றுகள் என்றும் துறைகள் என்றும் அக, புற இலக்கிய உட்கூறுகள் இலக்கணங்களில் வேறுபட அமைந் துள்ளன. புற இலக்கியத்தைப் பொருத்தவரையில் அப்படி இல்லை. இது பாத்திரக் கூற்றுகள் என்றும் புலவர் கூற்றுகள் என்றும் வேறுபட அமைந்துள்ளன. காப்பிய இலக்கணங்களில் அகமும் புறமும் இணைந்து வாழ்வியல் என்ற பேரமைப்புக்குள் புகுந்துவிடுகின்றன. காப்பியங்களுக்குள் சென்று புற இலக்கணத்தைக் கூற்றுகள் அடிப்படை யிலும் அக இலக்கணத்தைத் துறைகள் அடிப்படையிலும் கட்டமைக்க முடியும். ஒரு கல்விச் சமூகம் அல்லது புலமைச் சமூகம் இரண்டுள் எதற்கு முதன்மை கொடுத்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

சீவகன் என்ற தலைமையின் பண்பு நலன்களை வெளிப்படுத்த வெட்சி, கரந்தை என்ற திணைகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன. கட்டியங்காரனைவிடச் சீவகன் சிறந்தவன் என்று காட்டவே இருவகைப் போர் முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏறு தழுவுகிறவனுக்கு ஆயர் குலப் பெண் மனைவி ஆவாள். ஆநிரை மீட்பது என்பதும் ஏறு தழுவுதல் போல ஒரு வெற்றியாகும். நந்தகோன் தனது ஆநிரைகளை மீட்டு வருவோனுக்குத் தன் மகளை மணம் முடித்துத் தருவதாக நகரில் அறிவிக்கிறான். சீவகன் ஆநிரைகளைக் காப்பதற்காக மட்டுமே போருக்குச் செல்கிறான். கட்டியங்காரனை இழித்துப்பேசுகிறான்.

> தன்பால் மனையாள் அயலான் தலைக்கண்டு பின்னும்
> இன்பால் அடிசிற்கு இவர்கின்றகைப்பேடி போலாம் (சீவக. 443)

அதாவது தம் நாட்டுப் பசுவைக் காப்பாற்ற முடியாத ஓர் அரசனின்

நிலையைத் துரோகம் செய்யும் மனைவியிடம் உணவு இரந்து உண்ப வனுடன் ஒப்பிடுகிறான் சீவகன். சீவகன் அழகிலும் கலைகளிலும் வலிமையிலும் போரிலும் கருணையிலும் சிறந்து விளங்கினான் என்று காட்டுவதற்கு வெட்சி, கரந்தைப் போர்கள் பயன்பட்டுள்ளன. சாதிக் கலப்பு, வருணக் கலப்புக் கூடாது என்ற ஒழுக்கமும் கோவிந்தையார் இலம்பகத்தில் வலியுறுத்தப்படுகின்றது. பெண் ஈடுபாடு எவ்வளவு இருந்தாலும் தகுதிக் குறைவான குலத்தினருடன் உறவுகளைத் தவிர்த்துவிட வேண்டும் என்பது கருத்தாக உள்ளது.

துணைநூல்

1. சரவணன். ப, 2008, சிலப்பதிகாரம், சத்தியா பதிப்பகம், சென்னை.
2. சிவத்தம்பி. கா, 1998, பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, மக்கள் வெளியீடு, சென்னை.
3. சுந்தரபாண்டியன். க, 2010, தமிழில் பொருளிலக்கண வளர்ச்சி, அய்யனார் பதிப்பகம், சென்னை.
4. பட்டாபிராமன். துரை, 1990, தமிழ்க் கல்வெட்டுகளில் புறப் பொருள் இலக்கணம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சி தம்பரம்.
5. பதிப்புக்குழு, 1959, வில்லிபாரதம், மார்ரே அண்டு கம்பெனி, சென்னை.
6. பாலசுப்பிரமணியன். கு. வெ., 2007, சங்க இலக்கியத்தில் புறப்பொருள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
7. வானமாமலை. நா. (பதிப்பாசிரியர்), 2006, முத்துப்பட்டன் கதை, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
8. ராஜ்கௌதமன், 2009, ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும், தமிழினி, சென்னை
9. ராமகிருஷ்ணன். எஸ், 2003, நெடுங்குருதி, உயிர்மை பதிப்பகம், சென்னை.

4

பொருண்மை வேறுபாடு: பேச்சும் எழுத்தும்

ஒரு சொல் வேறுபட்ட பல பொருண்மைகளைக் கொண்டிருந்தால் அவ்வேறுபட்ட பல பொருண்மைகளுக்கு ஏற்ப அச்சொல் வேறு பட்ட பல ஓசையியல்புகளைக் கொண்டிருக்க வேண்டிய கட்டாய மில்லை. ஓசை இயல்பில் வேறுபட்டு அதற்கேற்பப் பொருண்மையை உணர்த்துவதிலும் வேறுபாடு இருக்குமானால் அந்த வேறுபாடுகளை வரிவடிவில் வெளிப்படுத்தி எழுதிக் காட்டமுடியாமல் இருக்கலாம். ஒலியன்களோடு ஓசையியல்புகளையும் (Supra Segmental Features) வரிவடிவக் குறியீடுகளில் கொடுக்கும்போது, ஒரு சொல்லின் வேறு பட்ட பலபொருண்மைகளையும் குழப்பமின்றித் தெளிவாகத் தனித் தனியே உணர்த்த முடியும். சொற்களின் உச்சரிப்பு முறைகளை விளக்குவதற்கென்று தோன்றிய அகராதிகளில் ஓசையியல்புகளையும் சேர்த்து விளக்கும் குறியீடுகள் இடம்பெற்றிருக்கின்றன. இவ்வகராதி களில் பல பொருள்களுக்கு ஏற்பத் தனித்தனி ஓசை இயல்புக் குறியீடுகளால் சொற்கள் குறிக்கப்பட்டிருக்கும். ஒலியன் குறியீடுகளால் ஒன்றுபட்டு நின்றாலும் ஓசை இயல்புக் குறியீடுகளால் அச்சொற் களின் வரிவடிவங்கள் பொருள் மாற்றங்களுக்கு ஏற்ப ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டு நிற்கும். இலக்கியம் முதலான துறைகளில் பலபொருள் தரும் ஒரு சொல்லைப் பயன்படுத்தும்போது பொருளுக்கு ஏற்ப வேறுபட்ட ஓசையியல்புக் குறியீடுகளையும் சேர்த்துப் பயன் படுத்தும் வழக்கம் இன்னும் வரவில்லை.

எழுத்து மொழியின் பொருண்மையைவிடப் பேச்சு மொழியின் பொருண்மையை எளிதாக விளங்கிக்கொள்ள முடியும். பேச்சு மொழியில் பேசுபவரும், கேட்பவரும் ஒரே சூழலில் இருக்கின்றனர். பேசுபவரின் கருத்து மொழிக்கூறுகளான ஒலியன், சொல், தொடர்,

வாக்கியங்களில் புலப்படுவதோடு அவரின் நோக்கம், உணர்வு முதலான உட்கருத்துக்களும், பேச்சின் ஓசையியல்பு, மெய்ப்பாடு, சூழல் போன்றவற்றால் புலப்படும். வரிவடித்தில் மொழிக்கூறுகளை மட்டுமே புலப்படுத்த முடிகிறது என்பதால் பேச்சு மொழி எழுத்து மொழியாகும்போது ஒவ்வொரு மொழிக்கும் உரிய ஓசைக்கூறுகள், மொழிக்கு அப்பாற்பட்ட சூழலால் பொருள் தெரிதல் போன்ற சிறப்புக் கூறுகள் மறைந்து வரிவடிவத்தில் பொதுத்தன்மை தோன்றிவிடுகிறது. இவ்வரிவடிவப் பொதுத் தன்மைதான் ஒரு புறவடிவமாக நின்று பல பொருண்மைகளுக்குக் காரணமாகிவிடுகிறது. வரிவடிவில் மொழி எழுதிப் பதிவு செய்யப்படும்போது, அதன் பொருண்மைகளை மயக்கமின்றித் தெளிவாக வெளிப்படுத்துமாறு விரிவான மொழிக் கூறுகளைக் கொண்டு வெளிப்படுத்திக்கூற வேண்டியிருக்கும்.

நடப்பியல் மரபில் மொழி அவ்வாறே பேச்சு வடிவில் உள்ளபடி எழுதிப் பதிவு செய்யப்படவேண்டும் என்பது ஒரு விதியாகும். பேச்சு மொழி மரபு திரிபுபடுத்தப்படாமல் பதிவுசெய்யப்படும்போது, அதன் இயல்பு பாதுகாக்கப்பட்டது என்ற நோக்கம் நிறைவேற்றப் பட்டிருக்கலாம். ஆனால், கருத்துப் பரிமாற்றம் தெளிவாக நிகழவேண்டும் என்ற நோக்கம் முழுமையாக நிறைவேறாமல் போய்விடுகிறது. வட்டார வழக்கு, பேச்சு வழக்குகளைப் பயன்படுத்தி எழுதப்படும் இலக்கியங்களில் எழுதுபவரும் வாசகரும் முறையே மொழியை ஆக்குபவராகவும் மொழியை உணர்பவராகவும் உள்ளனர்; இலக்கிய மாந்தர்கள் அல்லர். இலக்கியத்திற்குள் இலக்கிய மாந்தர்களுக்குள் நிகழும் உரையாடல்களில் நடப்பியல் பண்பு அமையும் என்றால் அந்த மாந்தர்களுக்கு இடையிலான உரையாடல் மரபை, மொழி வழக்கு மரபை வாசகர் தெரிந்திருந்தால் மட்டுமே உரிய இலக்கியப் பொருண்மையையும் மொழிப் பொருண்மை யையும் உணர்ந்துகொள்ளமுடியும். வேற்றுப் பண்பாட்டைக் கொண்ட ஒருவரால் அந்த உரையாடல் பொருண்மையைப் புரிந்துகொள்ள முடியாமல் போகும். ஓசை இயல்பால் உணர்த்தப்படும் கூடுதல் பொருண்மைக்குரிய ஓசைக்கூறுகள் மொழிக்கூறுகளிலிருந்து வேறுபடுத்தி வாசகரால் படிக்கப்படுவதாக இருக்கவேண்டும். மொழி பேசுகிறவரின் உடல்மொழி அமையும் முறை குறித்து வாசகர் அறிந்துவைத்துப் படிக்கும்போது புரிந்துகொள்வதுபோல, மொழி பேசுகிறவரின் குரல் மொழியையும் அறிந்துவைத்துப் படிக்கும்போது, இணைத்துப் புரிந்து கொள்ளவேண்டும். மொழியைப் புரிந்துகொள்ளவேண்டிய முயற்சியில் கூடுதல் தேவை உரையாடல் சூழலைவிடப் படிக்கும் சூழலுக்கு இருக்கிறது. ஆனால், எழுதுபவர் இந்தத் தேவையை உணர்ந்து, ஓசை இயல்பால் உணர்த்தப்படவேண்டிய பொருண்மைகளையும்

சூழல் பொருண்மைகளையும் சேர்த்து மொழி வடிவில் புலப்படுத்திச் சென்றுவிடுவது நடக்கிறது. அதனால் எழுத்துமரபு, பேச்சு மரபைவிடப் பொருண்மை விளக்கம் மிகுதியாகக் கொண்ட மரபாகிவிடலாம். பேச்சு மரபில் தெளிவாகவும் எழுத்து மரபில் மயக்கமாகவும் இருக்கும் பொருண்மைப் பரிமாற்றம் தலைகீழாக மாறிவிடலாம். எழுத்து மரபில் மிகுதியாகவும் பேச்சு மரபில் மயக்கமாகவும் குறைவாகவும் நிகழும் கருத்துப்பரிமாற்றம் ஆகிவிடலாம். பேச்சு மரபில் பேசுபவர் கேட்பவருக்குக் கருத்தைப் புரியவைத்துவிடவேண்டும் என்ற நோக்கில் சூழல் பொருண்மைகளையும் ஓசை இயல்புப் பொருண்மைகளையும் மொழிக் கூறுகளால் வெளிப்படுத்திக் கூறநேரலாம். அப்போது, கருத்துப் பரிமாற்றம் தெளிவானதாக அமையும்.

ஒலியன் முதலான மொழிக்கூறுகளோடு ஓசையியல்பு முதலான வற்றையும் கொண்டு விளங்கும் பேச்சு வழக்கில் ஒவ்வொரு பொருண்மையும் தனக்கு மட்டும் உரிய ஒரு புறப்பேச்சு வடிவத்தைப் பெற்று, அதாவது ஒவ்வொரு பொருண்மையும் ஒவ்வொரு சொல்லைப் பெற்று விளங்க வாய்ப்பிருக்கிறது. பேச்சு மொழியில் ஓசையியல்புகளும் சேர்ந்து இருப்பதால் ஒரு புற வடிவம் ஒரே ஒரு புதை வடிவத்தைப் பெற்று விளங்குகிறது. மொழிக் கூறுகளை மட்டும் கொண்ட எழுத்து மொழியில் ஒரு புற வடிவம் ஒன்றுக்கு மேற்பட்ட புதை வடிவங்களைப் பெற்று விளங்குகிறது.

பேச்சு மொழி அவ்வாறே இலக்கியம் முதலானவற்றில் இடம்பெற வேண்டும் என்ற நடப்பியல் போக்குத் தொடங்கியபின் திரிபுபட்ட சொற்களும் குறைவுபட்ட சொற்களும் இடம்பெற்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை உணர்த்தும் வரிவடிவப் புற வடிவங்கள் மொழிப் பயன்பாடுகளில் மேலும் கூடுதலாகிவிட்டன; ஓசையியல்புக் குறியீடுகளைப் பதிவுசெய்யாமல் எழுதுவது இயல்பானது. திரிபு பட்ட ஒலியன் குறியீடுகளையும் எழுத்துவடிவில் எழுதவும் வேண்டியதாயிற்று. தமிழ் மொழியின் பண்புகளுள் ஒன்று இரட்டை வழக்கு (diglossia)த் தன்மையாகும். அதாவது பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்ற வேறுபட்ட, முரண்பட்ட மொழிப் பயன்பாடு ஆகும்.எழுத்து வழக்கையும் பேச்சு வழக்கையும் தொடர்புபடுத்தாமல் படித்துப் பழகிய வாசகர்களுக்கு எழுத்துமொழித் திரிபுகளைப் படித்துப் புரிந்துகொள்வதில் இடர்ப்பாடு இருக்கிறது. திரிந்த சொல் வழக்கு எந்தச் செம்மையான சொல் வழக்கின் திரிபு என்று இணைத்துப் புரிந்துகொண்டவராக இல்லையென்றால் அவரது படிப்புப் பொருண்மை மயக்கம் கொண்டதாக இருக்கும். செம்மையான சொல் வடிவமும் தெரியாமல் திரிந்த சொல் வடிவின்

பொருண்மையும் தெரியாமல் படிப்புப் பொருண்மைப் பரிமாற்றம் இன்றி நிகழ்வதாகிவிடும்.

திரிந்த பேச்சு வழக்கிலிருந்து எழுத்து வடிவம் பெற்ற "போகலே" என்ற சொல்லுக்கு,

அ. போகவில்லை - நான் போகலெ
ஆ. போகவில்லையா? - நீ போகலெ?
இ. போனோம் அல்லவா? - அன்னிக்கு நாம போகலெ. அந்த வீடு தான்
ஈ. புகையிலை - போகலெ வாங்கிட்டுவா

முதலான பல பொருட்களைத் தரும் புற வடிவங்கள் கிடைக்கின்றன. தரமான எழுத்து மொழி வழக்கைவிடக் கேட்பவருக்கு எளிதில் விளங்கும் பேச்சு வழக்கு அவ்வாறே எழுத்து வடிவம் பெறும்போது தரமான எழுத்து மொழி வழக்கை விளங்கிக் கொள்வதற்குச் செய்யும் முயற்சியை விடக் கூடுதலான முயற்சியைப் பேச்சு வழக்கிலிருந்து வந்த அவ்வெழுத்து வழக்கை விளங்கிக் கொள்வதற்குச் செய்ய வேண்டியுள்ளது.

திரிபு, குறைவுகளுக்கு உட்படாத சொற்களைக்கொண்ட தரமான மொழி வடிவங்களிலும் பல பொருண்மை தரும் சொற்கள் இருந்து வருகின்றன. ஒரு சொல்லின்வேறுபட்ட பல பொருண்மைகளை அப்பொருள்களுக்கேற்ப அச்சொல்லின் வேறுபட்ட ஓசை இயல்பு களால் விளக்கும் முயற்சியைத் தமிழ் மரபிலக்கணமும் சிறிது மேற்கொண்டுள்ளது. இருந்தாலும் இவ்விளக்கம் முழுமையானதாகவும் ஒரு சொல்லின் அனைத்துப் பொருண்மைகளையும் தனித்தனியே பிரித்து விளக்குவதாகவும் இல்லை. மாறாக இலக்கணக்குறிப்புக் கூறுதல் முதலான முறைகளில் ஒரு சொல்லின் பல பொருண்மை வேறுபாடுகளை மரபிலக்கணம் நுட்பமாக விளக்கிச் சென்றுள்ளது. பொருண்மை வேறுபாடுகளுக்கு ஏற்ப இலக்கணக் குறிப்பில் வேறுபாடு காட்டுவது பொருண்மையில் வேறுபாடு காட்டுவது போலத்தான். இலக்கணக் குறிப்பாலோ, ஓசை இயல்பாலோ ஒரு வடிவத்தின் பல பொருண்மைகளை வேறுபடுத்திக் காட்டும் முயற்சி புறவயப்பட்டதாகும். ஓசை இயல்பு விளக்கமும் இலக்கணக் குறிப்புப் போலப் புறவயமானது என்று கூறவேண்டியுள்ளது. மொழியின் இலக்கணத்தை இயல்பாக உள்ளுணர்வின் அடிப்படையில் புரிந்து வைத்திருப்பது வேறு. இது அகநிலைப்பட்டது. அறிவுமுறையில் மொழியின் இலக்கணத்தை விதிகளாக வகுத்துப் புரிந்து வைத்திருப்பது வேறு. இலக்கணத்தை விளக்கத் தெரியாமல் மொழியின் பொருண்மை

யைப் புரிந்துகொள்வதற்கும் இலக்கணத்தை விளக்கத் தெரிந்து மொழியின் பொருண்மையைப் புரிந்துகொள்வதற்கும் இடையிலான வேறுபாடாக இது இருக்கிறது.

பேசுபவரும் எழுதுபவரும் பொருண்மையிலிருந்து சொல்லையும் கேட்பவரும் படிப்பவரும் சொல்லிருந்து பொருண்மையையும் பெற வேண்டியிருக்கும். பொருள் (object), பொருண்மை (meaning, அர்த்தம்), சொல் (word) என்ற வரிசை முறையில் மொழி மொழியாக்கு பவருக்கு அமையும். சொல், பொருண்மை, பொருள் என்று மொழி பொருண்மையாக்குபவருக்கு அமையும்.பொருண்மை சொல்லைப் போல் புறவயப்படாமல் மனத்தில் புதை நிலையில் இருக்கும். பொருளின் புறவயத் தன்மை என்பது சொல்லால் குறிக்கப்படும் புற உலகப் பொருள்நிலைதான்.

புலப்படுத்துபவருக்கு மொழியை ஆக்குவதிலும் புரிந்துகொள் பவருக்கு மொழியை விளங்கிக் கொள்வதிலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இருவருக்கும் இடைப்பட்டு நிற்பது பொதுவான மொழி வடிவம் என்பதால் உணர்த்தும் கருத்தையும் உணரப்பட்ட கருத்தையும் வேறுபடுத்தாது ஒன்றாக நிலை நிறுத்துமாறு பேச்சு, எழுத்து வழக்கு களில் மொழி மேலும் மேலும் திருத்தி அமைக்கப்பட்டுக்கொண்டே வருகிறது. பேச்சு வழக்கில் மொழியின் கூடுதலான பொருண்மை ஓசை இயல்பாலோ, ஒலியன் சேர்த்து உச்சரிக்கப்படுவதாலோ இயல்பாகப் புலப்பட்டு விடுகின்றது. எழுத்து வழக்கிலும் புலப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டுள்ளன. மேலும் அவை தேவைப்படுகின்றன. எழுத்து வழக்கில் ஒரு சொல்லின் பல பொருண்மை களை ஓசை இயல்புக் குறியீடுகளால் உணர்த்த முடியாதபோது அந்தப் பல பொருண்மைகளையும் விளங்கிக் கொள்வதற்கு நிறுத்தல் குறிகளைப் பயன்படுத்துதல் போன்ற வேறு முறைகளைக் கையாள வேண்டியுள்ளது. நிறுத்தல் குறிகளைப் பயன்படுத்துவதும் பொருண்மை வேறுபாடுகளைப் புலப்படுத்தும் ஒரு முறையாகும். நிறுத்தல் குறிகளைப் பயன்படுத்துவதற்கு மொழியின் இலக்கணம் தெரிந்திருக்கவேண்டியிருக்கிறது. முற்றுப் புள்ளி வாக்கிய முடிவைக் குறிக்கும். வியப்புக் குறி வியப்பு முதலான உணர்ச்சிகளைக் குறிக்கும். வினாக் குறி கேள்வியைக் குறிக்கும். சொல்லிலக்கணம், தொடரிலக்கணம் முதலானவற்றை நிறுத்தல் குறிகள்மூலம் வெளிப்படுத்தமுடிகிறது.

இலக்கணக் குறிப்புக் கூறிச் சொல்லின் பொருண்மையை விளக்கும் புறநிலையிலிருந்து புதை நிலையை நோக்கிச் செல்லும் விளக்கமும் பொருண்மையை விளக்கி இலக்கணக்குறிப்புக் கூறும் புதை நிலையிலிருந்து

புற நிலையை நோக்கிச் செல்லும் விளக்கமும் தமிழ் இலக்கண, இலக்கிய உரைகளில் நிறைந்துள்ளன. பொருண்மையை விளக்கி இலக்கணக்குறிப்புக் கூறுவது முறையான விளக்கம் என்றாலும் இலக்கணக்குறிப்புக் கூறிப் பொருண்மையை விளக்கும் விளக்கத்திற்கு அடிப்படை, ஏற்கனவே மொழியின் பொருண்மை விளக்குபவரால் விளங்கிக் கொள்ளப்பட்டுப் பின்பே, அதற்கு ஏற்றவாறு இலக்கணக்குறிப்புக் கூறிப் பொருண்மை விளக்கப்படுகிறது என்பதால் அதுவும் ஏற்புடையதாகிறது. இலக்கணக் குறிப்புக் கூறுதல் என்ற மொழிக் கூறுகளுக்கு இடையேயுள்ள உறவு பற்றிய புறவடிவ விளக்கம் மொழிக் கூறுகளுக்கு இடையே உள்ள பொருள் உறவை, அதாவது புதை வடிவ விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதால் பொருண்மை, மொழிக் கூறுகளுக்கு இடையே உள்ள உறவு, இலக்கணக் குறிப்பு என்ற மூன்றும் பிரித்துப் பார்க்க முடியாதவைகளாகின்றன.

சான்றாக "உப்புமா" என்ற வரிவடிவின் வேறுட்ட பொருண்மை களை மரபிலக்கண வழியில் உள்ள இலக்கணக் குறிப்பாலும் ஓரளவு ஓசையியல்பாலும் விளக்கலாம். உப்புமா என்ற வடிவம் நன்னூல் குறிப்பிடும் பொதுமொழி என்ற வகைக்குரியது. அதாவது தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாக அமையும் ஒரு மொழி வடிவமாகும். உப்புமா என்று இவ்வரி வடிவிற்கு,

1. உப்புமா (1) - உப்புமா
2. உப்புமா (2) - உப்பு (பெருத்து வளரு)ம் -ஆ?
3. உப்புமா (3) - உப்பு (உ)ம் - ஆ?
4. உப்புமா (4) - உப்பு (விற்கும்)/வேண்டும்/த்தான் அம்) மா
5. உப்புமா (5) - உப்பு (ஆல் ஆகிய / இன் உடைய) மா (வு)
6. உப்புமா (6) - உப்பு (வும்) மா (வும்)
7. உப்புமா (7) - உப்பு (க்கரைத்த/ க்கலந்த) மா (வு)
8. உப்புமா (8) - உப்பு (பெருத்து வளர்) (அம்) மா
9. உப்புமா (9) - உப்பு (பெருத்து வளர்) மா
10. உப்புமா (10) - உப்பு (பெருத்து வளரு) ம் - ஆ (பசு)

முதலானவை அடிப்படை மூல வடிவங்களாகும். உப்புமா(1) என்ற வடிவம் கோதுமை உப்புமா, ரவை உப்புமா முதலான உணவுப் பொருள்களைக் குறிக்கும். உப்பிடப்பட்ட மாவு, உப்பிடப்பட்டுச் சமைக்கப்பட்ட மாவு என்ற பொருண்மைகள் உப்புமா(1) என்ற வடிவில் இல்லை. வரலாற்றுப் பொருண்மையியல் நோக்கில் நொறுக்கப்பட்ட அரிசி, ரவை முதலானவற்றை மாவு என்ற சொல் குறித்துவந்துள்ளது என்று தொடர்புபடுத்தலாம். மாவு, நொறுங்கிய உணவுப் பொருள்

என்ற இரண்டிற்கும் இடையில் பொருண்மைத் தொடர்பு உள்ளது. மாவு மிக நுண்மையாக நொறுக்கப்பட்ட உணவுப் பொருள் ஆகும்.

திரிபுபடாத சொற்களுக்குப் புறவடிவம், புதை பொருள் வடிவம் என்ற இரண்டையும் நேரடியாகத் தொடர்புபடுத்துவது போலத் திரிபுபட்ட சொற்களுக்கு தொடர்புபடுத்தாது திரிந்த புற வடிவம், திரியாத மூல வடிவம், புதை பொருள் வடிவம் என்ற மூன்றையும் அடுத்தடுத்துத் தொடர்புபடுத்தலாம். திரியாத மூல வடிவமும் பல பொருண்மைத் தன்மை கொண்டதாக அமைந்து விடலாம். சங்க இலக்கிய மொழி அமைப்பிலிருந்து தற்காலப் பேச்சு வழக்குவரை களமாகக் கொண்டு உப்புமா என்ற இவ்வரி வடிவத்தின் பல பொருண்மைகளும் தொகுக்கப்பட்டன.

மொழி வடிவத்தின் அமைப்பு அதன் பொருண்மையை அடிப் படையாகக் கொண்டு அமையும். ஒரு சொல்லின் பொருண்மையை அறிவது என்பது அப்பொருண்மையை அடிப்படையாகக்கொண்டு அச்சொல் ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்திருப்பதால் வரும் மீட்டுருவாக்கம் ஆகும். குறிப்பிட்ட ஒரு வடிவாகத் திரிபுபட்ட பல சொற்களின் மூல வடிவங்களை மீட்டுருவாக்க, அம்மூல வடிவங்களின் திரிபுகள்தாம் இக்குறிப்பிட்ட ஒரு வடிவம் என்பதை அறிந்திருக்க வேண்டும். ஒரு சொல் பல பொருண்மைகளை உணர்த்துவதற்கான காரணங்களைத் தேடுவதைவிடப் பல பொருண்மைகள் உணர்த்துமாறு ஒரு சொல் உருவான முறைகளைத் தேடுவது பொருத்தமானது. உப்பு, உம், ஆ, மாவு, அம்மா, மா ஆகிய சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளில் இணைந்தும் திரிபும் குறைவும் பெற்றதால் உப்புமா என்ற பல பொருண்மை தரும் ஒரு வடிவம் கிடைத்தது. திரிபும் குறைவும் பெற்றாலும் இவ்வாறான வடிவங்கள் மூல வடிவத்தின் கூறுகளை முற்றிலும் இழப்பதில்லை. பொருண்மை புலப்படாத அளவிற்குச் சொல் திரிந்துவிடுவதில்லை. சொல் திரியும் அளவிற்குப் பொருண்மை புலப்படாமல் போவதில்லை. மூல வடிவத்தின் கூறுகள் அதிக அளவில் திரிந்துபோனாலும் தம் சார்பாக, தாம் உணர்த்தும் பொருளின் சார்பாகச் சில கூறுகளையாவது திரிபு பெற்ற வடிவத்தில் நிறுத்தி வைத்திருக்கின்றன. சொல், பொருண்மை என்ற இரண்டும் ஒன்றையொன்று இழந்து விடாத அளவிற்காவது உறவு கொண்டுள்ளன. உச்சரிக்கும் நேரத்தில் சுருக்கம், முயற்சியில் எளிமை முதலானவை கருதி இவ்வாறான திரிபு வடிவங்கள் மொழியில் இயல்பாகவே தோன்றிவிடுகின்றன. திரிந்த பல மூல வடிவங்கள் திரியாத ஒரு வடிவத்தைப் போன்றும் அமைந்துவிடும்போது திரியாமலும், திரிந்தும்

ஒரு வடிவாக நிற்கும் சொற்களுக்கு இடையே பொருண்மை மயக்கம் ஏற்படும்.

மூலச்சொற்களின் இலக்கணப் பொருண்மை வேறுபாடுகளும் அகராதிப் பொருண்மை வேறுபாடுகளும் ஓசையியல்பு வேறுபாடுகளும் திரிபுபட்ட பொதுச்சொல்லின் பொருண்மை வேறுபாட்டிற்குக் காரணங்களாக இருக்கின்றன. உப்பு என்ற மூல வடிவம் ஏவல் வினை, பெயர், வினையடி என்ற வேறுபட்ட இலக்கண வகைமைக்குரியதாக இருக்கிறது. உம் என்ற மூல வடிவம் முற்று விகுதி, எச்ச விகுதி, எச்ச உம்மை என்ற வேறுபட்ட இலக்கண வகைமைகளுக்குரியதாக இருக்கிறது. உப்பு, உம் என்ற இரண்டும் இலக்கணப் பொருண்மைகளால் பொருண்மை வேறுபாடுகளைத் தோற்றுவிக்கின்றன. ஆ என்ற மூலவடிவம் பசு என்ற அகராதிப் பொருண்மையையும் வினா என்ற இலக்கணப் பொருண்மையையும் குறித்துப் பல பொருண்மைகளுக்குக் காரணமாகிறது. உப்பு என்ற சொல்லை ஓசை இயல்பாலும் பெயர், வினைப்பொருண்மைகளுக்கு ஏற்ப வேறுபடுத்தி உச்சரிக்க முடியும். இலக்கணக் குறிப்பு என்பது ஓசை இயல்புக்கு அடுத்ததாகவோ, புறமாகவோ நின்று விளக்கம் கொடுப்பது; ஓசை இயல்பு என்பது பொருண்மைக்கு அடுத்ததாகவோ, புறமாகவோ நின்று பொருண்மையைப் புலப்படுத்துவது. ஓசையியல்பைப் பொருண்மையும் இலக்கணக்குறிப்பை ஓசையியல்பு, பொருண்மை என்ற இரண்டும் தீர்மானிக்கின்றன. இலக்கணக்குறிப்பு, ஓசையியல்பு, பொருண்மை என்ற மூன்றும் முறையே அடுத்தடுத்து ஒன்றுக்கொன்று அகவயப்பட்ட நிலையில் அமைகின்றன. ஓசை இயல்பு பேச்சுமொழிக்கு அகநிலையிலும் எழுத்துமொழிக்குப் புறநிலையிலும் அமைகின்றன. பேச்சுமொழியில் ஓசை இயல்புக் கூறுகள் மொழியின் அகப்பகுதியில் அமைகின்றன. அதாவது மொழியாகவே இருக்கின்றன. எழுத்துமொழியில் அவை இடம்பெற முடியாததால் புறக்கூறுகளாகிவிடுகின்றன.

மொழித்திரிபு தரமான மொழி வழக்கிலோ, பொதுப் பேச்சு வழக்கிலோ காணப்படுவதைவிட அந்தந்த வட்டாரப் பேச்சு வழக்கில் அதிகம் காணப்படுகிறது. தரமான ஒரு வடிவம் ஒன்றுக்கும் மேற்பட்ட வடிவங்களாக அவ்வடிவம் வழங்கும் பகுதிகளுக்கு ஏற்பத்திரிபுபடலாம். ஒரு பகுதிக்குள்ளேயும் ஒருவருக்குள்ளேயும் திரிபுபடலாம். போகலே, உப்புமா என்ற குறிப்பிட்ட திரிபு வடிவங்களோடு போயிலே (ஈ), உப்பம்மா (4), உப்பும்மா (8) முதலான வேறு திரிபு வடிவங்களும் அவற்றின் மூல வடிவங்களின் திரிபுகளால் கிடைக்கலாம்.

உப்புமா என்ற வடிவம் உணர்த்தும் வேறுபட்ட பொருண்மைகளுக்கு ஏற்பத் தன் மொழிக்கூறுகளுக்கிடையே உள்ள உறவை அடிப்படையாகக்

கொண்டு, தனிச்சொல்(1), துணைநிலை அமைப்பு (subordinate construction 5,7, 8, 9, 10), இணைநிலைஅமைப்பு (co-ordinate construction 6), கலப்பு அமைப்பு (2,3,4) என்று நான்கு வகைப்படுகிறது. நான்கனுள் ஒரு வகையில் இடம் பெற்ற ஒரு வடிவம் மேலும் பல புதைபொருள்களைக் கொண்டிருக்கலாம். திரிபின் மூல வடிவங்களுள் ஒன்றான உப்புமா(4) என்ற வடிவம் சூழல், இலக்கணம், அகராதிப் பொருண்மை முதலான வேறுபட்ட காரணங்களின் அடிப்படையில் மேலும் பல பொருண்மைகள் கொண்டுள்ளதாக அமைகிறது. அம்மா என்ற சொல்லே பெண், தாய் என்ற இரு அகராதிப் பொருண்மைகளையும் விளிப் பெயர், படர்க்கைப் பெயர் என்ற இரு இலக்கணப் பொருண்மைகளையும் பெற்று, வேறுபட்ட நான்கு பொருண்மைகளுக்குக் காரணமாக நிற்கிறது. இரு வாக்கியங்கள் சுருங்கி உப்புமா என்ற வடிவம் இங்குக் கிடைத்திருக்கிறது.

பொருண்மை மாற்றமானது மொழிக் கூறுகளுக்கு இடையே உள்ள உறவு மாற்றமாகவும் இருப்பதால் மொழி அமைப்பிலும் மாற்றம் புலப்படுகிறது.

உப்புமா (8) - உப்பு அம்மா (1,8) உப்பு, அம்மா! (8,2)

துணைநிலை அமைப்பு(8,1), கலப்பு அமைப்பு(8,2) என்ற வேறுபட்ட இரு அமைப்புகள் உப்புகின்ற அம்மா; அம்மா உப்புவாயாக என்ற இரு வேறுபட்ட பொருண்மைகளால் கிடைக்கின்றன. மரபிலக்கணம் இவற்றைத் தொகையாகவும்(8,1) ஏவல், விளித்தொடர்களாகவும் (8,2) கொள்ளும்.

பண்புத்தொகை, வினைத்தொகை முதலானவை துணைநிலை அமைப்பிலும், உம்மைத்தொகை இணைநிலை அமைப்பிலும் அடங்கும். உப்புமா (7), உப்புமா (5) என்ற இருவடிவங்களும் பண்புத் தொகையாக இருந்தாலும் பெயர், பெயரடை என்ற உறவில் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டு நிற்கின்றன. உப்புமா (7) என்ற வடிவத்தில் உப்பு அடையாகவும் மா(வு) பெயராகவும் நிற்கின்றன. இங்கு அடை பெயராகவும் பெயர் அடையாகவும் மாறினால் பொருள் மாறிவிடும். மாவின் சுவைத் தன்மை உவர்ப்பு என்பது இங்குப் பொருள்; உப்புமா(5) என்ற வடிவில் உப்பின் வடிவம் மா(வு) என்பது பொருள். உப்பில் வடிவப் பண்பு மா(வு) என்பதால் மா(வு) உப்பு என்று தொகைச் சொல்லாகியும் வரும்; அடை பெயராகவும் பெயர் அடையாகவும் மாறியும் வரலாம். இதை விளக்கச் சேனாவரையர் வட மொழி இலக்கணத்தின் துணையை நாடி "ஒன்றனை ஒன்று விசேடித்து இரு சொல்லும் ஒரு பொருளின் மேல் வருமியல்பையுடைய எல்லாத் தொகைச் சொல்லும் பண்புத் தொகை" (தொல்.சொல்.சேனா. 416)

என்று விளக்கம் தருகிறார்.

உப்புமா (5) என்ற வடிவில் உப்பு என்ற சொல் மாவுத்தன்மையை உடைய பிற பொருள்களிலிருந்து உப்பையும் மா (வு) என்ற சொல் உப்பின் வேறு வடிவங்களிலிருந்து உப்பின் மாவுத் தன்மையையும் விசேடித்தன. மா(வு) உப்பு; உப்புமா(வு) என்பனபோல வழக்கிலும் கல் உப்பு; உப்புக்கல்; தூள் உப்பு; உப்புத்தூள் என்ற உறழ்ச்சி வடிவங்கள் காணப்படுகின்றன. ஒரு பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் அப்பொருளுக்கு அடையாக வருவது பொருத்தமானது என்ற அடிப்படையில் கல், தூள், மாவு முதலானவற்றை அடைகளாகப் பெற்ற பண்புத்தொகை வடிவங்களை மிகப்பொருத்தமான வடிவங்களாகக் கொள்ளலாம்.

உப்புமா(7) என்ற வடிவில் மா(வை) உப்பு விசேடித்தது; உப்பை மா(வு) விசேடிக்கவில்லை; மாவின் சுவைப்பண்புதான் சொல்லப் படுகிறதே தவிர உப்பின் வடிவப்பண்பு அல்ல. ஒன்றை ஒன்று விசேடிப்பது, ஒன்றால் ஒன்று மட்டும் விசேடிக்கப்படுவது என்று பண்புத்தொகையை இருவகைகளில் விளக்குகிறார் சேனாவரையர். "விசேடிப்பதும் விசேடிக்கப்படுவதுமாகிய இரண்டனுள் விசேடிப்பது விசேடியாக்கால் அது குற்றமாம்; விசேடிக்கப்படுவது விசேடித்தின் றென்றாலும் விசேடிக்கப்படுதலாகிய தன்றன்மைக்கிழுக்கின்மை யால், விசேடியாது நிற்பினும் அமையும்" (தொல்.சொல்.சேனா.416). விசேடித்தல் என்றால் ஒரு சொல் அடையாக நின்று மற்றொரு சொல்லைச் சிறப்பித்தல்; விசேடிக்கப்படும் என்றால் அடைபெறும் சொல்லாக நின்று அவ்வடையால் சிறப்பிக்கப்படும்.

வினைத்தொகையான உப்புமா(9) துணைநிலை அமைப்பிலும் உம்மைத் தொகையான உப்புமா(6) இணைநிலை அமைப்பிலும் அடங்கும். உப்புமா(9)வில் மா என்ற பெயரைச் சிறப்பிக்க உப்பு என்ற வினை அடையாக வந்துள்ளதால் இது துணைநிலை அமைப்பிலும் உம்மைத்தொகை தான் இணைக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர் களை அடை, அடைபெறும் பெயர் என்று சார்பு நிலைகளில் நிறுத்தாது, சம மதிப்புடையதாக இணைப்பதால் இது இணைநிலை அமைப்பிலும் அடங்கும். இவ்விரு சொற்களும் இரு சொற்களின் இணைப்பு என்ற அடிப்படையில் தொகைச்சொற்கள் என்ற வகையில் அடங்குகின்றன.

சொல்லின் உட்கூறுகள் பிரிக்கப்படும்பொழுது மேலும் வரிவடிவ ஒற்றுமை கொண்டனவாக இருப்பினும் அக்கூறுகளுக்கு ஏற்ப வேறுபட்ட இலக்கண உறவுகள் நிலவும். உப்பு-உம்-ஆ என்ற ஒரே வடிவிலான

பிரிப்புமுறை மூன்று வேறு பொருண்மைகளை உணர்த்துவதாக இருக்கிறது.

உப்புமா(10) - உப்பு-உம்-ஆ (உப்பும்: செய்யும் எனும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம் - ஆ: பெயர்)

உப்புமா(2)- உப்பு - உம் - ஆ (உப்பும்: செய்யும் என்னும் வாய்பாட்டுவினைமுற்று -ஆ: வினா)

உப்புமா(3) - உப்பு - உம்-ஆ (பெயர் - எச்ச உம்மை - வினா)

என்ற ஒரே வடிவிலான மூன்று பிரிப்பு முறைகளும் உணர்த்தும் உப்பு என்ற சொல் இம்மூன்று பகுப்புகளிலும் வினை, பெயர் என்ற இரு இலக்கணப் பொருண்மைகளைப் பெறுகிறது. உம் என்ற இடைச் சொல் செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்ச விகுதி, செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி, எச்ச உம்மை என்ற வேறுபட்ட இலக்கணக் குறியீடுகளைப் பெறுகிறது. ஆ பெயராகவும் வினாப்பொருள் தரும் இடைச்சொல்லாகவும் நிற்கிறது. உம் என்ற இடைச்சொல்லின் வேறுபட்ட இலக்கணக் குறியீடுகளை இடையியல், வினையியல், எச்ச வியல், கிளவியாக்கம் முதலானவற்றில் தொல்காப்பியர் தொகுத்துச் சுட்டியுள்ளார்.

உப்பு வினைப்பொருளாகவும் ஆ வினாப் பொருளாகவும் நிற்பதில் ஒன்றுக்கும் மேற்பட்ட சொற்களின் பிரிப்பு முறைகளில் ஒன்று பட்டு நின்றாலும் அவை அச்சொற்களின் மற்றப் பகுப்புகளுடன் கொண்டுள்ள உறவில் வேறுபட்டு நிற்கின்றன. ஆ வினாவாக நிற்பதில் ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்களின் பகுப்புகளுள் ஒன்றுபட்டு நின்றாலும் எச்ச உம்மை பெற்ற பெயர்(2) முற்றும்மை பெற்ற வினை(2) என்று வேறுபட்டு மற்ற இலக்கணக் குறியீடுகளுடன் உறவு கொண்டுள்ளது. வினைவடிவ உப்பு என்பதும் எச்சவினைப் பகுதி(10), முற்றுவினைப்பகுதி(2) என்ற வேறுபாடுகளைப் பெறுகிறது.

துணைநிலை அமைப்பு, இணைநிலை அமைப்புப் போன்ற மொழி அமைப்பு விளக்கங்களும், ஒரு வடிவின் வேறுபட்ட பொருள்களுக்கு அவ்வடிவின் புதைவடிவப் பொருள் பல என்பதைக் காரணமாகக் காட்டாது, வெளிப்பட நிற்கும் மொழிக்கூறுகளுக்கு இடையே உள்ள உறவையோ, வேறு காரணங்களையோ காரணங்களாகக் காட்டும் மரபு வழிப்பட்ட கருத்திற்குச் சார்பாக உள்ளன. அமைப்பு மொழியியலின் இது போன்ற குறைகளைக் கொண்டிராத மாற்றிலக்கணம் வேறுபட்ட பொருள்களைக் கொண்ட ஒரு வடிவிற்கு வேறுபட்ட புதைபொருள்கள் உள்ளன என்றும், அவ்வேறுபட்ட புதை பொருள் களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவ்வடிவங்கள் வேறுபட்ட சொற்கள்

என்றும் உணர்த்திச் செல்கிறது. சேனாவரையரும், "ஒரு சொல் இரு பொருட்கண்ணும் சென்றதெனப்படாது இரு பொருட்கும் உரிமையான் இரண்டு சொல்லெனவே படும். வேறு பொருளுணர்த்தலின் வேறு சொல்லாகவே துணிவாயினும், பல பொருளொரு சொல் என்புழி எழுத்தொப்புமை பற்றி ஒரு சொல்லென்றார்" (தொல்.சொல். சேனா.57) என்கிறார். படி என்று ஒரு வடிவாக நின்றாலும் (ஏணிப்) படி, (எழுதிப்)படி, (கீழ்ப்)படி(தல்), (முக்கால்) படி, (திருந்தாப்)படி, (சொன்ன) படி என்பன வேறுபட்ட சொற்களே; வடிவ ஒப்புமை கருதிப் பலபொருள் ஒரு சொல் என்று சொல்லப்பட்டது.

ஒரு மொழிக்குள் ஒரு பொருளை ஒரு சொல்லால் வழங்க வேண்டும் என்ற விதி பெரும்பாலும் இயல்பாகவே பின்பற்றப்படுகிறது என்றாலும் ஒரு பொருள் அனைத்துப் பகுதிகளிலும் குறிப்பிட்ட ஒரே சொல்லால் வழங்கப்படும் என்றோ, ஒரு சொல் அனைத்துப் பகுதிகளிலும் குறிப்பிட்ட ஒரு பொருளைக் குறிக்க வழங்கப்படும் என்றோ கட்டாயம் எதுவுமில்லை. ஒரு பகுதியிலோ, ஒரு சூழலிலோ, வேறு ஒருவராலோ, வேறு ஒரு பொருளைக்குறிக்க வழங்கப்படும் ஒரு சொல்வடிவமும் ஒன்றாக இருந்துவிடுமானால் ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல் வடிவம் தற்செயலாக உருவாகிவிடும். மொழி உருவாக்கத்தின் போதும் மொழிப்பயன்பாட்டின்போதும் இவ்வாறான பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல் வடிவங்கள் பிரித்து முழுமையாகப் பல பொருள் அடிப்படையில் அறியப்படுவதில்லை என்றாலும் பொருள் அடுத்து வடிவம் என்றமையும் மொழி உருவாக்கம், பயன்பாடு முதலானவற்றின் மறுதலையான, ஒவ்வொரு பொருளும் தனக்குரிய சொல்வடிவைக் கொண்டு வந்து பிரதிநிதித்துவப்படுத்திச் சொல்வடிவம் அடுத்துப் பொருள் என்றமையும் அகராதித் தொகுப்பின் போது பிரித்து முழுமையாக அறியப்படும்.

ஒரு சொல் பலபொருள், பல பொருள் ஒரு சொல் என்ற இருவகை வழக்குகளுக்கும் இடம், காலம் போன்ற சூழல், செய்யுள், பொது, திருந்தா, திருந்திய, வட்டாரம் முதலான வழக்கு வேறுபாடுகளைக் காரணங்களாகக் காட்டுவது அகராதிப்பொருளை அடிப்படையாகக் கொண்டதால் வந்ததாகும். குறிப்பிட்ட சூழலையோ, மனிதரையோ, இவ்வாறான பிற கூறுகளையோ மொழி அடிப்படையில் வரையறைப் படுத்திக் கொண்டால் அவ்வரையறைக்குள் ஒரு சொல் ஒரு பொருளைக் குறிக்கவே பெரும்பாலும் வழங்கப்படும். உருவாக்கம், பயன்பாடு களின்போது இக்கூறுகளை மொழி பின்புலமாகக் கொண்டிருப்பதால் ஒரு மொழி வடிவம் தான் உணர்த்தும் பொருளிலிருந்து விலகி அதாவது

தன் சூழல், மனிதர் முதலான தனக்குரிய வரையறையைக் கடந்து வேறு சூழல், வேறு மனிதர் என்ற எல்லைக்குள் நுழைந்து அங்குத் தன் வடிவில் உணர்த்தப்படும் பொருள்களை உணர்த்தாது. ஒரு வடிவம் ஒரு பகுதியில் குறிப்பிட்ட ஒரு பொருள் உணர்த்துவதை, அதே வடிவத்தை வேறு பொருளில் வழங்கும் இன்னொரு பகுதியினர் அறியாமலும் இருக்கலாம். ஒரு சொல் ஒரு பொருளைக் குறிக்க உருவாக்கப்பட்டுவிட்டது என்பதை அறியாமலோ, ஏற்காமலோ அச்சொல்லால் வேறு பொருள் வழங்கப்படுவதும், ஒரு பொருளைக் குறிக்க ஒரு சொல் உருவாக்கப்பட்டுவிட்டது என்பதை அறியாமலோ, ஏற்காமலோ அப்பொருள் வேறொரு சொல்லால் வழங்கப்படுவதும் சூழல், வட்டாரம், நாகரிகம் முதலானவற்றால் வேறுபட்டு நிற்கும் மக்களால் மொழிக்கு நேரிடும் விளைவுகளாகும்.

ஓசையியல்பு, சூழல் முதலானவை காரணமாகத் தோன்றும் சார்புப் பொருள்களையும் மொழியின் வரிவடிவில் கொடுப்பது எழுத்து வடிவின் பொருள் தெளிவிற்குத் துணை செய்யும். ஒரு சொல்லின் வேறுபட்ட பொருள்கள் அனைத்தையும் ஓசையியல்புக் குறியீடுகளால் உணர்த்துவது கடினம்தான். ஓசையியல்புக் குறியீடுகளால் வேறுபடுத்திக் காட்ட முடியாது இலக்கணக்குறிப்பு, அகராதிப் பொருள் முதலானவற்றால் வேறுபடுத்திக் காட்டவேண்டியும் நேரலாம்.

ஓசையியல்பால் பொருள் வேறுபடுவதைத் தமிழ் இலக்கணம் உணர்ந்தும், உணர்த்தியும் வந்திருக்கிறது. குன்று ஏறு ஆமா, குன்று ஏறாமா என்று குன்றேறாமா-வும் தாம் அரைக்கு அணியார், தாமரைக்கு அணியார் என்று தாமரைக்கணியார்-உம் இருவேறு பொருள்கள் தருவதற்கும் இவைபோன்று ஒரு வடிவம் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் தருவதற்கும் புணர்ச்சி வேறுபாடு காரணம் என்றும், அப்புணர்ச்சி வேறுபாடு மொழி வடிவங்களை உச்சரிக்கும் ஓசையியல்பால் புலப்படும் என்றும் கருத்துப்பட,

எழுத்து ஓரன்ன பொருள் தெரி புணர்ச்சி
இசையில் திரிதல் நிலைஇய பண்பே (தொல். எழுத், 141)

என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இசை என்பது இங்கு ஒலியன்களுக்குரிய பேச்சொலிகளையும் ஓசையியல்புகளையும் குறிக்கும் என்று கொண்டு, இவ்வாறான பல பொருள் ஒரு சொல் வடிவங்கள் பேச்சு மொழி அல்லது உச்சரிப்பு முறை அடிப்படையில் தொல்காப்பியரால் விளக்கப்படுவதை ஓசையியல்பு என்ற புறவடிவத்திலிருந்து புதை பொருளை விளக்கும் புறவயப்பட்ட விளக்கம் என்று கொள்ளவேண்டும். மனத்தின் புதைபொருளிலிருந்து பேச்சும் எழுத்தும் புறவயப்பட்டு

வெளிப்படும்போது கேட்பவர், படிப்பவர்களின் நிலைகளில் நின்று அவற்றை விளக்கும் விளக்கங்கள் புறவயப்பட்ட நிலை விளக்கங்களாக அமைந்துவிடும். பல பொருளால் ஒரு மொழி வடிவின் ஓசை இயல்பு வேறுபடும் என்பதும் வேறுபட்ட ஓசை இயல்பால் ஒரு மொழி வடிவின் பல பொருள்களும் புலப்படும் என்பதுமான இரு வேறுபட்ட விளக்கங்கள் உணர்த்துபவர், உணர்பவர் என்ற இரு வேறுபட்ட இடங்களிலிருந்து வரும் விளக்கத்தால் வந்தனவாகும்.

ஏறு-ஆமா, ஏறா-மா என்ற இரு வேறுபட்ட வடிவங்களின் புணர்ச்சி வடிவங்கள் ஏறாமா என்று ஒன்றாகிவிட்டன. உப்புமா என்ற வடிவிலும் இவ்வாறான வேறுபட்ட பல நிலைமொழி,வருமொழிகள் புணர்ந்து ஒரு வடிவாகத் திரிந்துவிட்டன. நிலைமொழி, வருமொழிகள் ஒன்றுக்கு மேற்பட்டு வேறுவேறானவையாக இருந்து அவற்றின் புணர்ச்சி வடிவங்கள் மட்டும் ஒரே வடிவம் பெறுமானால் அந்த ஒரு வரிவடிவம் உணர்த்தும் பொருள் புணர்ச்சிக்கு முற்பட்ட வடிவங்களின் பொருள்களுக்கு ஏற்ப ஒன்றுக்கு மேற்பட்டனவாகிவிடும்.

ஓசை இயல்பாலும் உப்புமாவின் வேறுபட்ட சில பொருள்களை உணர்த்த இயலும். உப்பு, மா(வு) என்ற இரு சொற்களும் ஏற்ற இறக்கமின்றி இடைவெளிவிட்டுச் சமமாக உச்சரிக்கப்படும்போது உப்பும் மாவும் என்ற பொருளில் உம்மைத்தொகை அதாவது இணைநிலை அமைப்புக் கிடைக்கும். எடுத்தல், படுத்தல், நலிதல் என்ற மூன்று உச்சரிப்பு முறைகளும் உரைகளில் சொல்லப்பட்டுள்ளன. தபு-வை எடுத்து உச்சரிக்கும்போது "நீ ஒன்றனைச் சாவப்பண்" என்று பிறவினைப் பொருளும் படுத்து உச்சரிக்கும்போது "நீசா" என்று தன்வினைப் பொருளும் கிடைக்கும்(தொல்.எழுத்.நச். 76). உப்பு என்ற வடிவத்தை இதழ்குவித்து, எடுத்து முற்றுகரமாக உச்சரித்தால் வினைப் பொருளும் இதழ் குவித்து, படுத்துக் குற்றுகரமாக உச்சரித்தால் பெயர்ப்பொருளும் கிடைக்கும். வினா, வியங்கோள், இழிவு முதலான வேறு கூடுதல் பொருள்களும் கிடைக்குமாறு உப்புமா(1) ஓசையியல்பால் வேறுபடும். தமிழ் மரபு இலக்கணம் விளக்கிச் சென்றுள்ள புணர்ச்சித் திரிபுகள், மரூஉப் புணர்ச்சிகள் எல்லாம் பேச்சுமொழித் திரிபுகள் ஆகும்.

"அவன் வந்தான்" என்பது இயல்பான வாக்கியம். அவன் என்ற சொல்லிற்கு அழுத்தம் கொடுத்து உச்சரிக்கும் போது அவன் மட்டும் தான் வந்தான், வேறு யாரும் வரவில்லை என்ற கூடுதல் பொருள் கிடைக்கும். இவ்வேறுபட்ட பொருள் பேச்சு, எழுத்து வழக்குகளில் ஏகாரம் பிரிநிலையாகச் சேர்க்கப்பட்டு "அவனே வந்தான்" என்று உணர்த்தப்பட்டிருக்கிறது. பேச்சு வழக்கில் ஏகார ஒலி சேர்க்காமல்

ஓசை வேறுபாட்டாலும் பொருளைப் புலப்படுத்திவிடலாம். கூடுதல் பொருளை விளக்க, எழுத்திலும் பேச்சிலும் தமிழ் நெடுங்கணக் குள்ளேயே இருந்து எடுக்கப்பட்ட இவ்வாறான குறிப்பிட்ட ஒலிகளைப் பயன்படுத்தும் மரபு தமிழ் இலக்கணத்தில் தொடக்கத்திலிருந்து வந்துள்ளது. பொருளை வேறுபடுத்திக் காட்டும் ஓசை இயல்புகளையும் குறியீடுகளாக்கிக் காட்டும் இம்மரபு உணர்த்தப்படும் கருத்துத் தெளிவாகப் புலப்படுமாறு, மொழி வடிவம் மேலும் மேலும் திருத்தம் பெறுவதால் தோன்றியதாகும்; அழுத்தம் போன்ற உச்சரிப்பு முறைகளைக் கடினமாக உணர்ந்து அவற்றைத் தவிர்ப்பதற்காகவும் ஓசையியல்பால் புலப்படும் பொருள் மாறுபடாமல் இருப்பதற்காகவும் இவ்வாறான ஒலிக்குறியீடுகள் தோன்றியிருக்கலாம்.

பிரிநிலை ஏகாரம், எதிர்மறை ஓகாரம், வினா என்றவாறு இலக்கணக் குறிப்புகளைப் பெறும் ஏ, ஓ, ஆ போன்ற சில இடைச்சொற்கள் தாம் சார்ந்து நின்ற சொற்களின் கூடுதல் பொருள்களையோ வேறுபட்ட பொருள்களையோ உணர்த்தவதற்காகக் கொடுக்கப்பட்ட ஓசை இயல்புக் குறியீடுகளே. ஓசையியல்புக் குறியீட்டு முறையும் தமிழ் இலக்கணத்தின் இலக்கணக் குறிப்புக் கூறும் முறையும் தமிழ்மொழி வரலாற்றில் தொடக்கத்திலிருந்தே இணைந்து வந்திருக்கின்றன.

துணை நூல்கள்

1. அரங்கன் கி., (1985), தொடரியல் மாற்றிலக்கண அணுகுமுறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2. இரவிசங்கர் க., இசையோட்டமும் உணர்ச்சி வெளிப்பாடும், மொழியியல்: ஜூலை-டிச. 1989
3. பரமசிவன் கு., (1984), இக்கால மொழியியல் - அறிமுகம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
4. பூவராகம்பிள்ளை ஆ., (விளக்),(1967), தொல்காப்பியம்-சொல்லதிகாரம்: சேனாவரையர் உரை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
5. சுந்தரமூர்த்தி கு., (பதிப்), (1967), தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்: நச்சினார்க்கினியம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

5

வேற்றுமைப்பொருண்மைகள்: வகைமையும் பட்டியலும்

புற உலகப் பொருள் பற்றிய ஆராய்ச்சி எழுந்தபோது மொழி பற்றிய ஆராய்ச்சியும் எழுந்தது. அறிவு என்பது மொழி பற்றிய அறிவைத் தன்னுள் ஒன்றாக உள்ளடக்குவதாக இருந்தது. மொழி தோன்றுவதற்கான காரணம் மொழிவழியே பொருண்மைகளாகக் குறிக்கப்படும் பொருள் களே என்றும் பொருள் காரணம், மொழி காரியம் என்றும் தமிழ் இலக்கண மரபில் கொள்ளப்பட்டிருக்கின்றன. பொருள் இடம் என்றும் அந்தப் பொருளைக் குறிக்கும் சொல் இடத்தில் உள்ள பொருள் என்றும் கொள்ளப்பட்டிருக்கின்றன. இலக்கணத்தில் பொருள்களை விளக்குவது என்பது மொழியை விளக்குவதன் ஒரு பகுதியாக மாறி இருக்கிறது. பொருளைப் பற்றிய ஆராய்ச்சியில் அந்தப் பொருள் தொடர்பான சொற்கள் அந்தப் பொருளின் உடைமையாகிவிடுகின்றன. பொருளுக்கும் சொற்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாதபோதும் மனிதக் கருத்தியலில் இவ்வாறு தொடர்புடையனவாகின்றன.

பொருளையும் பண்புகளையும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துப் பார்க்கமுடியாது. இருந்தாலும் பொருளை முதன்மைப்படுத்திப் பண்புகளும், பண்பை முதன்மைப்படுத்திப் பொருளும் உள்ளுறுப்பு களாகப் பார்க்கப்பட்டிருக்கின்றன. பண்புகளுள் ஒன்றான இருப்புநிலை, இயக்க நிலை என்ற இரண்டும் பொருளின் இரு வேறு செயல்பாடுகள். இச்செயல்பாடுகளை வினை என்ற ஒரு பொதுச் சொல்லால் குறிப்போம். பொருளுக்குள் உள்ள பொருள்களில் பொருளின் பண்புகளும் இருக்கும். தொகுதி, பகுதி என்ற முறையில் இருபுறமும் எதிர் எதிரே அவை விரிந்து செல்லும் நிலையில் மிகப்பெரும், மிகச்சிறு பொருள்களை நோக்கிச் செல்லமுடியும். வரையறுக்க முடியாத அண்டம், அதன் இயக்கம் அதன் உட்பொருள்களில் எல்லாம் ஊடுருவியிருக்கும்.

பொருளைப்பற்றிக் கொள்ளப்பட்டுள்ள இவ்வாறான அர்த்தங்கள் மொழிக்கு இலக்கணம் வகுப்பதிலும் கலந்திருக்கின்றன. உலகமும் உயிர்களும் பொருள்களும் இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கின்றன என்ற கருத்து வினைக்குள் பொருள்களை அடக்கிவிடுவதாக இருக்கிறது. வினை ஒரு தொகுதி எனவும் வினை நிகழ்த்தும் பொருள், தொடர்புபடும் பிற பொருள்கள் மற்றும் வினை என்ற மூன்றும் வினைத்தொகுதியில் அடங்கும் பகுதிகள் எனவும் கொள்ளப்பட்டிருக்கின்றன. வினைக்குள் வினையை உள்ளடக்கி வினையை முதன்மைப்படுத்திப் பார்க்கும் சிந்தனை இது. இவ்வினையால்தான் ஒரு பொருளும் அதன் வினையும் அப்பொருளை உள்ளடக்கியிருக்கிற பொருளிலும் வினையிலும் உள்ளடங்கி விடுகின்றன. இக்கருத்துக்கள் வேற்றுமைப் பொருண்மையை வரையறுப்பதிலும் பங்கு பெற்றுள்ளன.

வினை, செய்வது(வினைப்பொருள்), செயப்படுபொருள், நிலம், காலம், கருவி (தொல் - 2:109) என்ற ஆறும் வினைத்தொகுதியில் அடங்கும் பொருள்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றை மூன்றாகச் சுருக்க முடியும். ஒரு வினை நிகழ்வதற்கு வினை நிகழ்த்தும் பொருளைக் காரணமாகக் கொள்ளாது அவ்வினையையே காரணமாகக் கொள்வது அவ்வினை என்ற ஒன்றை அவ்வினையால் தொடர்புபடும் பொருள்களுக்கு உள்ளாக மட்டுமின்றி புறம்பானதாகவும் கருதுவதால் வருவதாகும். செய்வது என்ற வினை நிகழ்த்தும் பொருள், வினை, வினைப்பொருளுடன் உறவுபெறும் பிற பொருள்கள் என்ற மூன்றையும் வினைத்தொகுதி என்போம்.

வினையைத் தொகுதி எனவும் வினைப்பொருளை உள்ளுறுப்பு எனவும் கொள்ளவில்லை எனில், வினைப்பொருள் எழுவாய்ப் பெயர்ப் பொருள் என்ற வேற்றுமைப் பெயர்ப் பொருண்மையைப் பெறாது. வினை நிகழ்த்தும் பொருள் என்பதே முதன்மையாகித்தான் நிகழ்த்தும் வினையால் தான் பாதிக்கப்படாதது என்றாகும். தான் நிகழ்த்தும் வினையால் பாதிக்கப்படாத ஒன்று கடவுள் மட்டுமே. இதற்கு, கடவுள் பெயர் மொழியில் எழுவாயாக வராது என்று அர்த்தமில்லை. வினையால் வேறுபடுவதன் காரணமாகவே வினைப் பொருளும் எழுவாய்ப் பெயர்ப்பொருள் என்று வேற்றுமைக்குரியதாகக் கருதப்படுகிறது. வினை நிகழ்த்தாதன என்ற சிறப்பின்மை கருதியே, அதாவது வேற்றுமைப்பொருள் பெயர்கள் என்று கருதியே என், உன், எங்கள், உங்கள், நின் முதலான மாற்று வடிவங்கள் எழுவாய்ப்பெயர் நிலையிலிருந்து வேறுபட்டுத் தோன்றியுள்ளன.

வினைத்தொகுதியில் அடங்கும் உள்ளுறுப்புகளுக்குள்ளான

தொடர்பு என்பதை இரு வகையில் பிரிக்க முடியும்; அவை வினைக்கு வினைப்பொருளுடன் உள்ள உறவு, வினைப்பொருளின் வினையால் வினைப்பொருளுடன் ஏனைய பொருள்கள் பெறும் உறவு என்ற இரண்டுமாகும். வினைத்தொகுதியில் வினைப்பொருளுடன் ஏனைய பொருள்களும் சேரும்போது வினைப்பொருளுடன் உறவு பெறும் பிற பொருள்களையும் வேறுபடுத்திக்காட்டவேண்டியுள்ளது. வினைத்தொகுதிக்குள் அடங்கும் பொருள்களுக்கு இடையிலான உறவுகள் மொழி வழி அர்த்தப்படுத்தி வெளிப்படுத்தும் போது, உறவுகளைக் குறிக்கும் சொற்களாக, அதாவது வேற்றுமைச் சொற்களாக வெளிப்படுகின்றன. பெயர்ச்சொற்களுக்குப் பிந்து நிலைச் சொல்லாக வரும் உறவுச் சொற்கள் மட்டும் வேற்றுமைச் சொற்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. வேற்றுமைப் பொருண்மை என்பது வினைத்தொகுதியில் எழுவாய்ப் பெயர்ப் பொருளுடன் அதன் வினையால் பிற பெயர்ப் பொருள்கள் பெறும் உறவுப் பொருண்மையே ஆகும். பொருள் அமைப்பு வேறுபாடு பொருண்மை அமைப்பிலும் மொழி அமைப்பிலும் தோன்றுகிறது. பெயர்கள் தாம் குறித்து நிற்பதற்குப் பொருள்களைக் கொண்டிருப்பது போல வேற்றுமை உருபுகளும் தான் குறித்து நிற்பதற்கான பொருள் களாகப் புறப்பொருள் உறவுகளைப் பொருள்களாகப் பெற்றிருக்கின்றன. அந்த உறவுகள் அருவ நிலையிலானவை.

பொருள் என்பதை மொழி அமைப்பை விளக்குவதற்கு ஏற்ப, பொருள்-1; பருப்பொருள், அருவப்பொருள் என்றும் பொருள்-2; பொருளின் பண்பு, பகுதி, சினை என்றும் பொருள்-3; பொருளின்



பொருள்-சினை-பண்பு உறவுகள்

செயல் அதாவது தொழில்பெயர்கள் குறித்து நிற்கும் புற உலக நிகழ்வு என்றும் பொருள்-4; பொருள்களுக்கு இடையிலான உறவு என்றும் வகைப்படுத்திக்கொள்வோம். வினையாலணையும் பெயர் தொழில் பெயர் அன்று; அது பொருள்-1 ஐயே குறித்து நிற்கிறது. வேற்றுமைப் பொருண்மைகள் பொருள்-4 ஐச் சேர்ந்தவை. ஓடுதல், பாடுதல் என்ற பெயர்கள் பொருள்-3 ஐக் குறித்து நிற்பவை.

வேற்றுமைப்பொருண்மை என்பது புற உலகப்பொருள்களுக்கு இடையிலான உறவை அடிப்படியாகக் கொண்டது என்பதால் இது மொழிக்கு மொழி வேறுபடக்கூடியதன்று. ஆனால், வேற்றுமை உருபுகள் மொழிக்குமொழி எண்ணிக்கையிலும், வரிசையிலும் வேறுபடுகின்றன. தமிழில் உள்ள வேற்றுமைகள் தொல்காப்பியத்தின்படி "1. வினைப்பொருளுடன், 2. வினைப்பொருள் நிகழ்த்தும் வினையுடன், 3. வினைப்பொருள்-வினை என்ற இரண்டுடன் வினைத்தொகுதியில் அடங்கும் பிற பொருள்கள் கொள்கின்ற உறவைப் பொருண்மையாகக் கொண்டிருக்கிற உருபுகள்" என்ற அடிப்படையிலேயே வகைப்படுத்தப் பட்டுள்ளன.

தமிழில் உள்ள வேற்றுமை உருபுகளின் கருப்பொருண்மைகள்

1. ஐ - வினைப்படு பொருண்மை
2. ஓடு, ஆல் - துணைப்படு பொருண்மை
3. கு - இணைப்புப் படுபொருண்மை
4. இல்லிருந்து, இன் - பிரிப்புப்படு பொருண்மை
5. அது - உடைமைப்படுத்தும் பொருண்மை
6. இல், கண் - இடப்படுபொருண்மை
7. விளி- விளிக்கப்படும் பொருண்மை

என்பவையாகும். உருபுகள் மேலும் கிளைப்பொருண்மைகளைக் கொண்டிருக்கின்றன. கிளைப்பொருண்மைகளுள் ஓர் உருபின் பொருண்மை வேறு உருபின் பொருண்மையுடன் மயக்கம் கொள்ள வில்லை. ஏதுப் பொருண்மை ஐந்தாம் வேற்றுமையின் கிளைப் பொருண்மைகளுள் ஒன்றாகக் கொள்ளப்பட்டது பிறழ்வானது. வினைப் பொருண்மை இயக்கநிலை (2.1) இருப்பு நிலை (2.2) வினைப் பொருண்மைகள் என்று இரு வகைப்படும். இயக்க நிலை என்பது தெரிநிலை வினை; இருப்பு நிலை என்பது தெரிநிலை வினை அல்லாத பெயர்ப் பயனிலைகளையும், குறிப்பு வினைகளையும் குறிக்கும்.

ஆல், ஓடு இரண்டையும் ஒரே வேற்றுமையில் வைத்ததற்கான காரணம் தெரிகிறது. தொல்காப்பியர் வடமொழியைப் பார்த்து

வேற்றுமைகளை வகைப்படுத்தினார்; ஓடு, ஆல் என்ற இரண்டையும் காரணம் தெரியாமலேயே ஒரு வேற்றுமையாகக் கொண்டார் தொல்காப்பியர் என்று கருத இடம் ஏற்படுகிறது. வடமொழியில் இரு வேற்றுமை உருபுகளையும் ஒரு வேற்றுமைப் பொருண்மையில் வைத்தவர்கள் காரணம் தெரிந்தே வைத்திருக்கிறார்கள். ஆல் உருபு வினைக்குச் செயல் துணைப்படு பொருண்மை *(3.1.1)* என்றும் வினைக்குக் காரணத் துணைப்படு பொருண்மை *(3.1.2)* என்றும் இரு வகைப்படும். ஓடு உருபு வினைப்பொருளுக்கு இயக்க நிலைத் துணைப்படு பொருண்மை என்றும் *(3.2.1)* வினைப்பொருளுக்கு இருப்பு நிலைத் துணைப்படு பொருண்மை *(3.2.2)* என்றும் இருவகைப்படும். இயக்க நிலை*(3.2.1)*யில் உடனிகழ்ச்சி, உடனிருப்பு என்ற இரண்டும் அடங்கிவிடும். ஓடு உருபுக்குப் பிறகுதான் ஆல் உருபு வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

வினைப்பொருள், வினைப்பொருள்-வினை என்ற இரண்டுடன் வருவதற்காக ஆல், ஓடு போல வடிவால் இல் உருபு வேறுபடவில்லை. ஐ உருபு வினைக்கு மட்டும் வரும். அது உருபு ஒட்டி நிற்கும் பெயர்களை விரித்து உறவுபடுத்த வருகிறது. உருபு கொடுத்து விரித்த அல்லது விரிக்காத அது உருபுத்தொடர்களை (யானைக்கோடு) பயனிலையாகவே (அது யானைக்கோடு/ யானையினது கோடு) என்றே கருதவேண்டும். அது உருபு உடையது என்ற குறிப்புவினை விகுதியிலிருந்து பெறப்படவில்லை. ஆறாம் வேற்றுமை உருபாகக் கொள்ளப்பட்டு வரும் உடைய என்ற சொல் உண்மையில் பெயர் எச்சக் குறிப்பே ஆகும்; உருபு ஆகாது; உருபுப் பொருண்மையை உடைய சொல்லும் ஆகாது, கு, இல்லிருந்து என்ற இரண்டும் வினைப்பொருள், வினை, வினைப்பொருள்-வினை என்ற மூன்று நிலைகளிலும் வடிவால் வேறுபடாமலேயே வருகின்றன.

இணைப்புபடு பொருண்மையை மேலும் இரு வகைகளாகப் பிரிக்கலாம்; இணைதல்படு பொருண்மை *(4.1)*, இணைத்தல்படு பொருண்மை *(4.2)* என்று. இணைதல்படு பொருண்மையை இயக்க நிலை இணைதல்படு பொருண்மை*(4.1.1)*, இருப்புநிலை இணைதல் படு பொருண்மை *(4.1.2)* என்று இரு வகைகளாகப் பிரிக்கலாம். இணைத்தல்படு பொருண்மையில் வினைப்படு பொருண்மை கட்டுப்பாடுடைய வேற்றுமைப் பொருண்மையாக இருக்கும். இணைத்தல்படு பொருண்மை வினைக்கு மட்டும் வருவதாகும். வினைக்குச் செயல் துணைப்படு பொருண்மையில் *(3.1.1)* வரும் ஆல் உருபும் வினைப்படு பொருண்மையில் வரும் ஐ உருபும் கட்டுப்பாடு உடைய வேற்றுமைகள். பொருட்டு, குஆக, குப்பதிலாக முதலான பொருண்மைகளிலும் செயற்கு மற்றும் கொடுப்பதற்கு

என்ற எச்சத் தொடர்களை விரிவு நிலையிலும் கொள்ளும் கு உருபுப் பொருண்மை இணைத்தல்படு பொருண்மை வாக்கியத்தில் இணைத்தல் அல்லாத, ஆனால் வினைப்படுத்தும் வினையை கொண்டிருக்கிறதால் வரும் இணைத்தல்படு நோக்கப் பொருண்மை யாகும் (4.3).

பிரிப்புப்படு பொருண்மையையும் பிரிதல்படு பொருண்மை(5.1), பிரித்தல்படு பொருண்மை (5.2) என்று இரண்டாகப் பிரிக்கலாம். பிரிதல்படு பொருண்மை என்பது இயக்கநிலைப் பிரிதல் படு பொருண்மை (5.1.1) என்றும், இருப்புநிலைப் பிரிதல்படு பொருண்மை (5.1.2) என்றும் இருவகைப்படும். பிரித்தல்படு பொருண்மை(5.2) வினைப்படு பொருண்மையுடன் கட்டுப்பாடு உடைய வேற்றுமையாகும். இடப்படு பொருண்மையும் வினைப்பொருள்-வினை இடப்படு பொருண்மை (7.1), வினைக்கு இடப்பொருண்மை(7.2) என்று இரு வகைப்படும். வினைக்கு மட்டும் இடப்படு பொருண்மை என்பது வினைப்படு பொருண்மையைக் கட்டுப்பாடுடைய வேற்றுமைப் பொருண்மையாகக் கொண்டிருக்கும்.

அது உருபு தன்னை ஏற்கும் பெயர்ப்பொருளை உடைமைப் பொருளுக்குரியதாக்கும்(6.1). அ உருபு தன்னை ஏற்கும் பெயர்ப் பொருளை மற்றொரு பொருளுக்கும் உடைமையாக்கும். அது, அ என்ற இரண்டும் ஒரே வேற்றுமைப் பொருண்மையிலும் பயன்படுத்தப் பட்டுள்ளன. வேற்றுமைப் பொருண்மைகளுள் சில எதிர்ப் பொருண்மை களை உடையனவாகவும் இருக்கின்றன. கு, இல்லிருந்து என்ற இரண்டும் எதிர் எதிர்ப் பொருண்மை உடையவை; அது, அ என்ற இரண்டும் எதிர்ப்பொருண்மை உடையவைதான்.

வேற்றுமைப் பொருண்மைகளை வரையறுப்பதற்கும் தொகுத்து, வகுத்து விளக்குவதற்கும் மொழி அமைப்பைப் பொருத்தவரையில் எழுவாய், வேற்றுமைப்பெயர்கள், முற்றுச் சொல் என்ற மூன்றும் தேவை. சான்றாகப் பிரித்தல்படு பொருண்மையை(5.2) விளக்குவதற்குத் தேவையானவை:

கண்ணன் மரத்திலிருந்து பழத்தைப் பறித்தான்
கண்ணன் மரம் - இல்லிருந்து பழம் - ஐ பறித்தான்

வினைப்பொருள்-பிரிக்கும் பொருள்(கண்ணன்), பிரித்தல்படுபொருள் (மரம்), பிரிக்கப்படு பொருள்(பழம்), பிரித்தல் வினை(பறித்தல்), பிரித்தல் உறவு(இல்லிருந்து), பிரிக்கப்படுதல் உறவு (ஐ) என்று ஆறு கூறுகளாகும். கட்டுப்பாடுடைய வேற்றுமை(பழம்-ஐ) மறைந்து

நின்றாலும் பிரித்தல் வினையின் காரணமாக அது வெளிப்பட இடம் இருக்கும். வினைப்பொருள் வினைக்கும் பிற வேற்றுமைப் பொருண்மைகளுக்கும் ஏற்பப் பிரிக்கும் பொருள், துணைப்படுத்தும் பொருள், பிரியும் பொருள், இடப்படுத்தும் பொருள் முதலான வேறு வேறு நிலைகளில் நிற்கும்.

வேற்றுமைப் பொருண்மைகளை விளக்குவதற்கு வினைச்சொற் களையும் வகைப்படுத்த முடியும். ஓடு உருபு எழுவாய்ப் பொருள் பெயர் ஏற்கும் பயனிலைகளைத் தானும் பொருண்மைநிலையில் ஏற்கும். அ, அது உருபுகள் வினையில் பங்கு பெறுவதில்லை. வினையால் அன்றித் தான் மட்டும் கொள்ளும் உறவைக் குறிக்கும் வேற்றுமைப் பொருண்மைகள் வினைப்பொருளின் வினையில் பங்கேற்பதில்லை. ஆனால், வினைப்பொருள் பிறபொருளுடன் கொள்ளும் அவ்வாறான உறவு வேறு ஒரு வினையால் நடைபெறுவதாக இருக்கும். அவ்வாறான வாக்கியங்களை இருவேறு வாக்கியங்களாகக் கொள்ள வேண்டும். இரு வேறு வாக்கியங்கள் எனப்படுபவை இருவேறு வினைத்தொகுதி களாகக் கருதப்பட வேண்டியவை.

ஆல்(3.1.1), ஐ(2) என்ற இரண்டுக்கும் ஒரே வகை வினைதான். கு உருபுக்கு இணைதல் படுத்தும் வினை(4.1), இணைத்தல் படுத்தும்(கு+ஐ) வினை(4.2) என்று இரண்டு இருக்கும். இல்லிருந்து என்ற வேற்றுமைக்கு பிரிதல்படுத்தும் வினை (5.1), பிரித்தல்படுத்தும் (இல்லிருந்து+ஐ) வினை (5.2) என்று இரண்டு இருக்கும். பொதுவான வினைகளும் சில இருக்கும். இடப்படுத்தும் வினையை வரையறுப்பதில் சில சிக்கல்கள் உள்ளன. இடப்படுத்தும் பொருள், இடப்படும்பொருள் என்ற இரண்டையும் பிரித்தறிய முடியாத நிலையிலும் இடப்படு பொருளும் வினைப் படு பொருளும் பொருள் மயக்கமாகி விடுகின்ற நிலையிலும் எழும் சிக்கல்கள் இவை.

மொழியில் எந்த ஒரு பெயரும் (சில தவிர: அங்கு, இங்கு) எழுவாய்ப் பெயர், வேற்றுமைப்பெயர், முற்றுப்பெயர் என்ற மூன்று வேறுபட்ட அமைப்புகளைப் பெற முடியும் என்பதால் ஒரு வாக்கியத்தில் துணைப்படு பொருளாகவும் இருந்தது வேறுவேறு வாக்கியங்களில் எழுவாய்ப் பெயர்ப் பொருளாகவும் பிற வேற்றுமைப்பெயர்ப் பொருளாகவும் முற்றுப் பெயர்ப் பொருளாகவும் ஆக முடியும். இவ்வாறான மாற்றங்களால் வினைத் தொகுதி எனப்படும் புற உலகப் பொருள்களுக்கும் வாக்கியத்தில் இடம்பெறும் பெயர்ப் பொருண்மைகளின் அமைப்பு உறவுகளுக்கும் முரண்பாடுகளும் வேறுபாடுகளும் தோன்றிவிடும். எனவே, வேற்றுமைப் பொருண்மைகளை வரையறுப்பதற்கு அடிப்படை வாக்கியங்களைத்

தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறான வாக்கியங்கள் புற உலகப்பொருள் நிகழ்ச்சியை அதாவது ஒரு வினைத் தொகுதியை எடுத்துக் கொண்டு வினைப்பொருளை எழுவாயிலும் வினையை முற்றுச் சொல் நிலையிலும் பிற பொருட்களை உரிய வேற்றுமைப் பெயர்களாகவும் குறிப்பிடுவதாகவும் இருக்கும். வேற்றுமை உருபுப்பொருண்மைகளுக்கும் அதனை ஒட்டிப் பெயருக்கும் வினைக்கும் கொடுத்த பெயர்கள் புற உலகப்பொருள்களுக்கும் உறவுகளுக்கும் வினைக்கும் கொடுத்த பெயர்களேயாகும்.

துணைநூல்

1. சுந்தரமூர்த்தி கு., (விளக்கவுரை), 1979, தொல்காப்பியம் - சொல்லதிகாரம்: தெய்வச்சிலையார் உரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, .

6

இயைபுக் குறிகளும் மயக்கக் குறிகளும்

வெளிப்படை, குறிப்பு என்ற இரு பொருண்மைகளைத் தொல் காப்பியம் குறிப்பிடுகிறது. மொழி வழி வெளிப்படும் பொருண்மை களில் குறிப்பும் இருக்கிறது. மொழி அல்லாத வேறு வடிவிலான பொருண்மை வெளிப்பாடுகளில் குறிப்பு மட்டுமே இருப்பதாகத் தொல்காப்பியம் கருதியுள்ளது. ஒரு பொருள் தன்னை உணர்த்திக் கொண்டு நிற்கும்போது அதை இயைபு என்று எடுத்துக்கொள்ள லாமா. ஒரு பொருள் தன்னைத் தன் உறுப்பு, பண்புகள் வழியே உணர்த்திக்கொண்டு நிற்குமானால் அந்தப் பொருண்மை உணர்த்தல் முறை மயக்கம் என்றே கொள்ளப்படவேண்டும். பொருண்மையை உணர்த்தப் பயன்படும், பொருண்மையை உணர்ந்துகொள்ளப் பயன்படும் எந்த ஒன்றையும் குறியீடு எனலாம். மொழி வடிவிலான குறியீடுகள், மொழி வடிவில் அல்லாத குறியீடுகள் என்று பொதுவாக இருபெரும் பிரிவுகளாகக் குறிகளைப் பிரிக்கலாம். மொழிக் குறியீடு களும் அந்தக் குறியீடுகள் குறிக்கும் புற உலகப் பொருள்களும் மனதில் உள்ள அவற்றின் பொருண்மைகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகின்றன. எனவே, ஒரு பொருளும் அப்பொருளைக் குறிக்கும் சொல்போலக் குறியீட்டுப் பொருளாகவே உள்ளது. ஒரு பொருள் அந்தப் பொருளாக இருப்பதற்கான காரணங்கள் அல்லது அடையாளங்கள் பெற்றிருக்கும்போது, அந்தப் பொருளாக இருக்கிறது. அந்த அடையாளங்களை இழக்கிறபோது அந்தப் பொருளிலிருந்து திரிந்த ஒரு பொருளாகிவிடுகிறது. வேறு பொருளாகிவிடுகிறது. ஒரு சொல்லும் அந்தச் சொல்லாக இருப்பதற்கான அடையாளங்கள் பெற்றிருக்கும்போது அந்தச் சொல்லாக இருக்கிறது. அந்தச் சொல் திரிபுபட்டால்கூட, சில திரிபுகளின்போது அந்தச் சொல்லாக இருக்கிறது. வேறு சில திரிபுகளின்போது வேறு சொற்களாகிவிடுகின்றது. பொருளின்

திரிபுகளும் அந்தப் பொருள் என்ற எல்லைக்குள் நிகழுமானால் அந்தப் பொருளாகவே இருக்கிறது. மயக்கம் என்பது வேறு ஒரு பொருளைக் குறிப்பதாகாது. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களுக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட சொல் வகைகளுக்குப் பொதுவாக இருப்பது முறையே பொருள் மயக்கம் என்றும் சொல் மயக்கம் என்றும் சொல்லப்படும்.

மனிதனுக்கு அவனது மெய்ப்பாடுகளையும் பிற செயல்பாடுகளையும் போல, அவனது மொழியும் பொருண்மைகளை உணர்த்தும் ஒரு புலப்பாட்டு முறையாக உள்ளது. மொழியை மட்டும் செயற்கையானது என்று தனியே பிரித்துப் பார்க்கமுடியாது. பொருண்மையை உணர்த்துவதில் உடல்மொழிக்கு இயற்கைமொழியைவிட முதன்மை கொடுக்க வேண்டியுள்ளது. உடல்மொழி இயற்கைமொழிக்கு முன்பே தோன்றிவிட்டது. உடல்மொழி புலப்படுத்தவேண்டும் என்ற உந்துதலுடன் நிகழ்வதுபோல இயல்பாகவே நிகழ்வதும் நடக்கிறது. உடல்மொழியுடன் ஒப்பிடும்போது செயற்கையானது என்றபோதும் இயற்கை மொழியும் தன்னியல்பில் நிகழும்போது இயற்கைப் பொருளாகிறது. மரபு இயற்கை என்றும் அறிவியல் செயற்கை என்றும் கொள்ளமுடியாது. அறிவியல் மனித முயற்சியில் பயிற்சியில் இயல்பாக ஒன்றிணைந்துவிடமுடியும். உடல்மொழியும் திட்டமிட்ட உந்துதலுடன் வெளிப்படும் நிலை என்றும் இயல்பில் தோன்றும் உணர்ச்சி நிலை என்றும் இரண்டாகும். ஒரு பொருள் அடையும் பல்வேறு மாறுதல்கள் அந்தப் பொருள்வழியே வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு பொருளின் பல்வேறு மாறுதல்களும் அந்தப் பொருளின் ஏதேனும் ஒரு கூறின் வழியிலும் பல கூறுகளின் வழியிலும் முழுப் பொருளிலும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கலாம். உடல்மொழி வழி வெளிப்படும் பொருண்மைகளுக்கு மொழிக் குறியீடுகள் தேவையில்லை.

பொருண்மை என்பது குறைந்த அளவில் பொருளின் ஏதேனும் ஒரு பண்பாக இருக்கிறது. ஒரு பொருள் என்பது பல வேறுபட்ட, முரண்பட்ட பண்புகளின் தொகுதி. மனம், கருத்து, உணர்வு, மெய்ப்பாடு, செயல், உறவு என்று வேறுபட்ட எல்லைகளின் நீட்சியில் ஒரு பொருளின் பொருண்மைகள் பரந்துவிரிந்து செல்வதாக இருக்கின்றன. பொருண்மை என்பது தனிக் கூறு. பொருண்மை என்பது கலவை அமைப்பு. நிறம், வடிவம், தட்ப-வெப்பம், மணம், சுவை, அசைவு, வளர்ச்சி, தேய்வு, சுருக்கம் என்று பல்வேறுபட்ட நிலைகளில் ஒரு பொருள் தன் பொருண்மைகளைக் கொண்டிருக்கிறது. பின்னத் தன்மையில் ஒரு பொருளின் பொருண்மைகள் இருக்கும்போது அந்தப் பொருண்மைகளைக் குறித்து நிற்கும், அந்தப் பொருண்மைகளை வெளிப்படுத்திக்கொண்டு

நிற்கும் கூறுகள் அந்தப் பொருளின் பகுதிகளாகவே இருக்கின்றன. அந்தப் பகுதிகள் குறியீடுகள் ஆகும். அரும்பு, பிஞ்சு, காய், பழம், அழுகல் என்று ஒரு பொருள் அடையும் வளர்ச்சி நிலைகளில் மாறுவனவும் மாறாமல் இருப்பனவும் குறியீடுகளாக இருக்கும் அந்தப் பொருளின் கூறுகளே ஆகும். இவ்வாறு ஒரு பொருளின் பொருண்மை சம கால நிலையிலிருந்து வரலாற்று நிலைக்குச் செல்கிறது.

பொருளின் பண்புகளுள் ஒன்றோ, சிலவோ, பொருளின் செயல்களுள் ஒன்றோ, சிலவோ அந்தப் பொருளைக் குறிப்பதற்கான குறியீடாக மாறிவிடுகிறது. ஒரு பொருளின் எல்லாப் பண்புகளும் எல்லாச் செயல்களும் அந்தப் பொருளைக் குறிக்கும் குறியீடுகளாகி விடுவதில்லை. ஒரு பொருளின் எல்லாப் பண்புகளையும் எல்லாச் செயல்களையும் உணர்ந்துகொள்ள முடியாது. உணர்ந்துகொண்டவற்றை எல்லாம் குறியீடுகளாக வெளிப்படுத்தமுடியாது.

உடல் என்பது ஒரு மரமாகவும் விலங்காகவும் இருக்கலாம். இயல்பில் கண்ணுக்குத் தெரியாத உயிரியாக இருக்கலாம். உயிரில்லாத ஒரு பொருளாக இருக்கலாம். கல், மண், பாறை, வீடு, புழங்குபொருள் என்று எதுவுமாக இருக்கலாம். கடல், வானம், மலை, புவி என்று பரந்துபட்ட ஒரு இயற்கையாக இருக்கலாம். மனிதனைப் பொருத்தவரையில் காணும் பொருள்களை எல்லாம் தன் உடலின் ஒத்த வடிவங்களாகவே கருதவேண்டியிருக்கிறது.

மொழியும் ஒரு பொருளாக பருப்பொருள் உலகில் இருந்து கொண்டிருக்கிறது. பொருண்மைகளைப் புரிந்துகொள்வதற்குக் குறியீடுகளையும் பொருள்களையும் புரிந்துகொள்வது அடிப்படையானது. பொருண்மைகள் எவற்றின் வழியாகப் பெறப்படுகின்றனவோ அவை குறியீடுகள் ஆகும். ஊடகக் கருவிகள் குறியீடுகள் ஆகா. ஊடகக் கருவிகள் வேறுபடும்போது குறியீடுகளின் தன்மையும் வேறுபடும். குறியீடுகளின் தன்மைக்கு ஏற்பக் கருவிகள் கண்டறியப்பட்டு மேன்மைப்படுத்தப்படுகின்றன. குறியீடுகளை அழியாது நிலைப்படுத்துவது, பெருக்கி மிகுதிப்படுத்துவது, இட, கால எல்லைகளைக் கடந்து தொலைவுக்கும் அடுத்த கால கட்டத்திற்கும் கொண்டு செல்வது, ஒன்றுக்கு மேற்பட்ட குறியீட்டு வடிவங்களை ஒன்றாகக் கலந்து பொருண்மையைக் கடத்துவதில் செறிவுபடுத்துவது, ஒரு குறியீட்டு வடிவத்தை வேறு குறியீட்டு வடிவங்களுக்கு மாற்றிப் பெறுவது என்று இயல்பான குறியீடுகள் பல்வேறு மாறுதல்களுக்கு உள்ளாகியுள்ளன.

பொருண்மைகளை நேரடியாகப் புரிந்துகொள்ளுதல், நேரடியாக அல்லாமல் புரிந்துகொள்ளுதல் என்று இருவகைகள் உள்ளன. நேரடியாக

அல்லாமல் புரிந்துகொள்வதில் பொருண்மைகளை அடுத்த ஒரு படிநிலையிலோ, பல படிநிலைகளுக்குப் பிறகோ புரிந்துகொள்ள நேரலாம். மறைமுகமாகப் பொருண்மைகளைப் புரிந்துகொள்ளுதல் என்றும் நேரடியாக அல்லாமல் புரிந்துகொள்ளும் படிநிலைகளைப் பொதுவாகக் குறிக்கலாம். எனவே, பொருள்கள் வழிப் பொருண்மைகளைப் புரிந்து கொள்வதை மேலும்(அ) ஒரு பொருள் அதன் பொருண்மைகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கப்படுவதற்குத் தானே குறியீடாக இருக்கும் நிலை. (ஆ) ஒரு பொருள் மற்றொரு பொருளால் குறிக்கப்படும் நிலை என்று இரண்டாகப் பிரிக்கலாம். மொழிவழிப் பொருண்மைகளைப் புரிந்துகொள்வதை (இ) ஒரு பொருளைக் குறிக்க மொழி வடிவிலான ஒரு குறியீடு பயன்படும் நிலை; (ஈ) ஒரு பொருளைக் குறிக்க மற்றொரு பொருள் குறியீடாக இருந்து அந்த மற்றொரு பொருள் மொழி வடிவிலான குறியீட்டால் குறிக்கப்படும் நிலை என்று இரண்டாகப் பிரிக்கலாம். இந்த வகைகளுக்கு இடையே உள்கலப்புகளும் நேர்வதுண்டு. சைகை மொழியில்(வகை-ஆ) குறியீடுகள் மெய்ப்பாட்டை(வகை-அ) ஒத்த தன்மையைப் பெறுகின்றன. எழுத்து மொழிக் குறியீடுகள் பார்வையால் விளங்குபவை. பணம், காசுகளில் அச்சிட்ட எழுத்துக்களைப் பார்வை இல்லாதோர் தடவிப் பொருண்மையைக் கண்டுபிடிக்கின்றனர். பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டிய குறியீட்டு வடிவம் தொட்டு உணர்ந்துகொண்டு புரிந்துகொள்ளத் தக்கதாக மாறி இருக்கிறது.

(ஆ) வரி வடிவம், ஒலி வடிவம் என்ற இரண்டும் பொதுவாக மொழிவடிவக் குறியீடுகள் ஆகும். பிரெய்லி, சைகை என்பன இந்த வகைக் குறியீடுகளில் அடங்கும். ஓவிய எழுத்துகளும் இந்த வகையில் சேரும்.

(இ) ஒரு பொருள் தன்னைக் குறிக்கும் சொல்லால் குறிக்கப்படா விட்டால் வேறொரு பொருளைக் குறிக்கும் சொல்லால் குறிக்கப் படுகிறது. அந்த இரு பொருள்களுக்கும் இடையிலான உறவு அவற்றிற்கு இடையிலான ஒற்றுமை அடிப்படையிலோ, அண்மைத் தன்மை அடிப்படையிலோ அமைந்ததாக இருக்கிறது. உள்ளுறை, உவமை, இறைச்சி, உவமை ஆகுபெயர், பழமொழி முதலானவை பொருள்களுக்கு இடையிலான ஒற்றுமையையோ, நிகழ்ச்சிகளுக்கு இடையிலான ஒற்றுமையையோ அடிப்படையாகக் கொண்டவை. ஒரு பொருள் அதன் பண்புகளுள் குறைந்தது ஏதேனும் ஒரு பண்பால் ஒத்த வேறு பொருளின் பெயரால் குறிக்கப்படுவது உவமை ஆகுபெயர் எனப்படும். உள்ளுறை உவமை, இறைச்சி, பழமொழி முதலானவற்றில் ஒரு நிகழ்ச்சி அதனை ஒத்த வேறு நிகழ்ச்சியால் குறிக்கப்பட்டிருக்கும். ஒரு பொருள் அதற்கு அண்மைத்தன்மை பெற்ற பொருளால் குறிக்கப்படுவதாக இருப்பது

ஆகுபெயர்க்கு உரியதாகும். அண்மைத் தன்மை என்பது முதல்-சினை, இடம் - பொருள், காலம் - பொருள், பொருள் - பொருளின் பண்பு என்று ஏதேனும் ஒரு உறவுக்கு உரியதாக இருக்கும்.

மங்கல வழக்கு என்பது பொருள்களுக்கு இடையிலான ஒற்றுமை, அண்மைத்தன்மை என்ற இரு அடிப்படையிலும் அமையலாம். துஞ்சினார் (செத்தார்) என்ற மங்கல வழக்கு ஒற்றுமை அடிப்படையில் அமைந்தது. துஞ்சுவது போலும் சாக்காடு. "கால் கழுவல்" என்ற இடக்கரடக்கல் வழக்கு அண்மைத் தன்மை அடிப்படையில் தோன்றியது. "முலை" என்ற சொல் அவையல் கிளவியாகக் கருதப்படும்போது, அந்தப்பொருளை "மார்பு" என்ற சொல் குறிக்கப் பயன்படுகிறது. இது இட ஆகுபெயர் ஆகும்.

பொருள்-பொருள்-பெயர் என்ற படிநிலையில் வேறுபாடுகளும் உள்ளன. "முசுமுசுக்கை" என்ற மருந்துப் பொருள் "இரு குரங்குக்கை" என்று குழூஉக்குறியாக வழங்கப்பட்டிருக்கிறது. முசு என்ற சொல் குரங்கையும் குறித்து வருவதற்கு உரியதாகும். இங்குப் பொருள்-பெயர்-பொருள்-பெயர் என்ற படிநிலையில் பொருளுக்கும் குறியீட்டுக்கும் இடையிலான உறவு அமைகிறது. "கார்" என்ற சொல் மேகத்தைக் குறிக்கும். அந்தச் சொல் மேகம் திரளும் காலத்தையும் ஆகுபெயராக நின்று குறித்து வருகிறது. அந்தச் சொல் மேலும் அந்தக் காலத்தில் விளையும் நெல்லையும் ஆகுபெயராக நின்று குறித்து வருகிறது. இங்குப் பொருள்- பொருள்-பொருள்-பெயர் என்ற படிநிலையில் பொருளுக்கும் குறியீட்டுக்கும் இடையிலான உறவு அமைகிறது.

(ஈ) ஒரு பொருளை மற்றொரு பொருள் உணர்த்தப் பயன்படும்போது, அது குறியீட்டுப் பொருள் எனப்படும். ஒரு நிகழ்ச்சியை மற்றொரு நிகழ்ச்சி உணர்த்தப் பயன்படும்போதும், அது குறியீட்டுப் பொருள் எனப்படும். ஒரு அழகான பெண்ணைக் குறித்துவரும்போது, மலரோ, பட்டாம் பூச்சியோ, மானோ குறியீட்டுப் பொருளாகிறது. நாயகன், நாயகி இருவரும் தழுவிக் கொள்வதை உணர்த்தஇரு மலர்கள் உரசிக்கொள்வதோ, வண்டு மலரில் அமர்ந்து தேன் உண்பதோ காட்டப்படுகிறது. பெண் கற்பழிக்கப்படுவதை உணர்த்த புலி அல்லது சிங்கத்தால் மான் அடித்துச் சாப்பிடப்படுவதோ, கனி ஒருவரால் உண்ணப்படுவதோ காட்டப்படுகிறது. இரண்டும் பாலியல் உறவு என்றாலும் அவை தன்மை அடிப்படையில் வேறுபடுவது குறியீட்டுப் பொருள்களிலும் வேறுபாடு ஏற்படக் காரணமாகிறது. விளக்கு அணைந்து போவது இறப்பை உணர்த்தப் பயன்படும் குறியீடுகளுள் ஒன்றாகும். இவை உவமை அடிப்படையில் அமைந்த குறியீடுகளாகும். ஒரு காரியம் அதன் காரணத்தால் உணர்த்தப்படும்போது அல்லது உணரப்படும்போது, அந்தக்

காரணம் குறியீட்டுப்பொருளாகிறது. மழை பெய்தல் என்பது மேகம் திரள்தல் என்பதால் உணர்த்தப்படலாம். ஒரு காரியம் அதன்விளைவால் உணர்த்தப்படும்போது அல்லது உணரப்படும் போது அந்த விளைவு குறியீட்டுப் பொருளாகிறது. நெருப்பு உள்ளதை புகை வருவதால் அறிய முடிகிறது. தொடர்ச்சி உறவுடையன அடிப்படையில் குழந்தை பிறப்பதற்கு இடுப்பு வலி குறியீட்டுப் பொருளாகிறது. இவை அண்மைத் தன்மை அடிப்படையில் அமைந்த குறியீடுகள் ஆகும். இடுப்புவலி எல்லா நேரமும் குழந்தைப் பேற்றுக்குக் காரணமில்லை. புகை எல்லா நேரமும் நெருப்புக்குக் காரணமில்லை.

பொருள்களின் நிறங்களோடும் வடிவங்களோடும் பொருண்மைகள் உறவுபடுத்தி வரப்பட்டுள்ளன. இவற்றை வகை-ஆதில் வைப்பது பொருத்தமில்லை. குழு, நாடு, நிறுவனம், சங்கம் முதலானவை தங்களுக்குரிய அடையாளத்தைக் கொண்டிருக்கின்றன. இந்த அடையாளங்கள் காரணம், இடுகுறி என்ற இரு முறைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். மாநில வங்கியின் அடையாளம் சாவித்துளை ஆகும். இதைச் சினை ஆகுபெயர் எனலாம். சாவித்துளை என்ற சினை கதவையும் கதவை உடைய பெட்டகத்தையும் பெட்டகம் உள்ள வங்கியையும் வங்கி என்ற நிறுவனத்தையும் முறையே அடுத்தடுத்துக் குறித்து வருகிறது. குடும்பக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் அடையாளத்தில் உள்ள சிவப்பு மேலும் குழந்தை பெறுவதை நிறுத்தச் சொல்லி எச்சரிக்கிறது; கூர்ப்பகுதி கீழ்நோக்கி இருக்கும் முக்கோணம் என்ற வடிவம் பெண்ணிப் பிறப்புறுப்பைப் போல இருப்பதால் அடையாளமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அது பெண்ணின் பிறப்புறுப்பை இயல்பாகக் குறிக்கின்ற கோணத்திலேயே நிறுத்தப்பட்டிருக்கிறது. முக்கோணம் குடும்பத்தின் குறியீடாக உள்ளது என்று கூடச் சொல்லலாம். கருவுறுவதைத் தடுப்பதற்குரிய வழிமுறைக்கும் பெண்ணிற்கும் தொடர்பு உண்டு என்பது போலவும் ஆணுக்குத் தொடர்பு இல்லை என்பது போலவும் அந்த முக்கோணம் குறியீடாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. முக்கோணம் என்ற குறியீடு ஒப்புமைப் பண்பால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. குழந்தை உருவாதல் என்ற வினையுடன் தொடர்புடைய கருப்பையானது பிறப்புறுப்புக்கு அருகில் இருப்பதால் அது அண்மைத் தன்மை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் ஆகிறது.

வாழ்க்கை, இலக்கியம், கலைகள் எல்லாம் குறியீடுகளால் நிறைந்தவை. குறியீட்டு வடிவங்கள் தனித்தும் தமக்கென்றும் பொருண்மை உடையனவாக இருப்பதால் அவை புறப்பொருள் போன்றனவாகும்.

ஒவ்வொரு மனிதரும் தம்மையும் தமது நிகழ்ச்சிகளையும் கூடக் குறியீட்டுப் பொருள்களாகக் கையாள்கின்றனர். அன்பில்லாத ஒருவன் அன்புள்ள ஒருவனைவிட மிகவும் அன்புள்ளவனாக நடந்து கொள்ள முடிகிறது. தூய்மையானவர்களாக அரசியல்வாதிகள் தோற்றமளிக்கின்றனர். மக்களே போலும் கயவர். குறியீடுகள் முதன்மையானவைகளாகி அவற்றின் பொருண்மைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடுகின்றன. காலில் விழுகிறவன் அவ்வாறு காலில் விழுவது முதன்மையானதாகிறது. அவன் மனதில் மதிப்பு இருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லாததாகிறது. அரசியல் மயமான வாழ்வியல் புற வயமான உறவுகளும் பகைகளும் பொருட்படுத்தத் தக்கனவாகின்றன. குறியீடுகள் வழியே வெளிப்பாடுகளைக் கொண்டிராத எந்த ஒரு பொருண்மையும் பொருண்மை அற்றதாகப் போய்விடுகின்றது. செயல் வடிவம் பெறாத பொருண்மைகள் பொருண்மை அற்றவைகளாக இருந்துவிட்டுப்போகின்றன.

குறியீட்டு வடிவங்கள் பொய்யான பொருண்மைகளை உணர்த்தப் பயன்படுகின்றன. வெளியில் சாப்பிட்டுவிட்டு வந்த கணவனோ, மனைவியோ மற்றொருவரிடம் வீட்டிலும் சாப்பிடுவதற்கு விருப்பம் தெரிவிப்பதன் வாயிலாகவும், வீட்டிலும் சாப்பிடுவதன் வாயிலாகவும் தாங்கள் வெளியில் சாப்பிடவில்லை என்ற கருத்தை ஏற்படுத்துகிறார்கள். சாப்பிடுவது என்பது சாப்பிடாதவர்கள் நிகழ்த்தும் செயல் என்ற பொதுவான பொருண்மை மரபிலிருந்து வருகிறது. பெண் காவலன் ஒருவன் பெண்கள் தொப்பூழ்க் குழிக்குக் கீழே சேலையை இறக்கிக் கட்டுவதைக் கண்டித்துப் பேசுபவனாக இருக்கலாம். கற்புக்கரசிகள் சோரம் போவதையும் கன்னிப் பெண்கள் விரும்பி வழுக்கி விழுவதையும் எதிர்த்துப் பேசுபவனாக இருக்கலாம்; தவறு செய்கிறவர்கள் தங்களைத் தூய்மையானவர்களாகக் காட்டிக் கொள்வதன் வாயிலாக மேலும் தவறு செய்வதற்கான வாய்ப்புகளை பெறுபவர்களாகிறார்கள். பரந்த வெளியில் ஒன்றுக்கு இருக்கும்போது, யாரும் ஒன்றுக்கு இருந்து வைக்காத இடமாகப் பார்த்து ஒன்றுக்கு இருக்க நினைப்பது பொதுவான தேர்வாக உள்ளது. எதிரில் வருகிறவர் காறித் துப்புவது என்மேல் அவர் கொண்டுள்ள வெறுப்பால் நிகழ்கிறது என்றோ, இயல்பான அவரது வாயறையில் எச்சில் சுரந்த நெருக்கடியால் நிகழ்கிறது என்றோ நான் எடுத்துக்கொள்ள வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறு குறியீட்டு வடிவங்கள் பொருண்மை மயக்கமுடையனவாகவும் இருக்கலாம்.

பாஞ்சாலி சபதம் ஒரு குறியீட்டு இலக்கியம் என்றால் திரௌபதி பாரத மாதாவின் குறியீடு; பாண்டவர்கள் விடுதலைப் போராளிகளின்

குறியீடு; துரியோதனர்கள் ஆங்கிலேயர்களின் குறியீடு. பாரத மாதா ஏற்கனவே இந்திய தேசியத்தின் குறியீடு. தொன்மங்கள் வேற்றுக் குறியீட்டு வடிவங்களால் வெளிப்படுவனவேயாகும். புராணங்களிலும் குறியீட்டுக் கதைகள் இருக்கலாம். அம்மை-அப்பனைச் சுற்றி வந்து விநாயகன் ஞானப்பழம் பெறும் கதை குறியீட்டுக் கதையாகும். மொழி வழிப் பெறப்படும் அறிவு, அனுபவம் வழிப் பெறப்படும் அறிவு என்ற இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குவதற்காக ஞானப் பழக் கதை புனையப்பட்டுள்ளது. மொழி வழிப் பெறப்படும் அறிவு எனபது உரை அளவை, ஆப்த வாக்கியம் என்ற பிரமாணமாக இந்திய அறிவு மரபில் பேசப்பட்டுவருகிறது. நூல் வழியும் வாய்மொழி வழியும் இந்த உரை அளவை அறிவைத் தரும். விநாயகன் தன் பெற்றோரிடம் சார்ந்து உலக அறிவு பெறுகிறான். மூத்தோர் இளையோர்க்குத் தங்கள் அறிவைக் கற்றுத் தருதல் என்ற அணுகுமுறைப்படி இது அமைகிறது. இது ஞானம் சார்ந்தது. முருகன் தானே உலகியல் அனுபவங்களைப் பெற்று அறிவை வளர்த்துக்கொள்ள முயல்வது தன்முயற்சியினாலானது. அதனால் மயில் ஏறி உலகை வலம் வந்தான் என்று கதை புனையப் பட்டுள்ளது. இது கர்மம் சார்ந்தது. முன்னோர், மூத்தோர் மொழி வழியும் நூல் வழியும் அறிவு பெறுவதைத் தவிர்ப்பது இது.

துணை நூல்கள்

1. பதிப்புக்குழு, 1981, தொல்காப்பியம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை

2. Terence Hawkes, 1986, STRUCTURALISM & SEMIOTICS, Methum & Co. Ltd., London, Reprint 2

7

எச்சில்: குறிப்புப் பொருளில் முரண் பொருண்மைகள்

வெளிப்பட்ட மொழிக்கும் மறைக்கப்பட்ட பொருண்மைக்கும் இடையில் உள்ள உறவுகள் பொதுவாக நான்கு வகைப்படும். அவை 1. அண்மைத் தன்மை உறவு, 2. ஒப்புமை உறவு, 3. காரண, காரிய, விளைவு உறவு, 4. முரண் உறவு என்பனவாகும். மொழி வடிவில் அல்லாமல் பருப்பொருள் வடிவில் உணர்த்தப்பட்ட பொருளுக்கும் மறைக்கப்பட்ட பொருளுக்கும் இடையிலான உறவும் இந்த நான்கு வகைக்குள் அடங்கும். எச்சில் என்ற பருப்பொருள் வழியே தமிழ்ப் பண்பாட்டு மரபில் உணர்த்தப்பட்ட பொருண்மைகள் தொகுத்து, வகுத்து முரண் என்ற குறிப்புப் பொருண்மை அடிப்படையில் இங்குப் பார்க்கப்படுகின்றன.

எச்சில் பல்வேறு பொருண்மைகளை உடையதாகக் கருதப்படுகிறது. அந்தப் பொருண்மைகள் மருந்துப் பொருள் - நோய்ப் பொருள், உயவுப்பொருள் - பசைப்பொருள், உயர்வுப் பொருள் - தாழ்வுப் பொருள், விருப்புப் பொருள் - வெறுப்புப் பொருள், அதிகாரப் பொருள் - எதிர்ப்புப் பொருள், புனிதப் பொருள் - இழிவுப் பொருள், இணைப்புப் பொருள் - நீக்கும் பொருள், வறுமைப் பொருள் - வளமைப் பொருள் முதலான முரண் இணைகளாக அமைகின்றன. பரந்த அளவில் ஒப்பிட்டுப் பார்க்கத் தரவுகள் செவ்வியல் இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம் சடங்கு, கலை, மனித நடத்தை, நம்பிக்கை, திரைப்படப் பாடல்கள், தத்துவப் பாடல் முதலானவற்றிலிருந்து சேகரிக்கப்பட்டன.

மருந்துப்பொருள் - நோய்ப்பொருள்

பரு, கட்டி, ஆறும் புண், குழவிக் கொட்டுவாய், எறும்புக் கடிவாய் முதலானவற்றில் எச்சில் தடவப்படும் போது எச்சில் ஒரு மருந்துப்

பொருளாகச் செயல்படும் என்று கருதப்படுகிறது. அருகிலேயே இருப்பதால் உதட்டுக் காயம் எச்சில் பட்டு ஆறிவிடும் என்று நம்பப்படுகிறது. தொண்டைக் கரகரப்பு இருக்கும்போது அது நீங்க எச்சில் மூன்று முறை கழுத்தில் தேய்க்கப்படுகிறது. உடலுக்குள், உடலில் வரும் குறைபாட்டை உடலின் ஒரு பகுதியான, உடலின் ஒரு பகுதியிலிருந்து உருவாகும் பொருளான எச்சில் சரிசெய்யும் என்ற நம்பிக்கையில் இந்த முறை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. பிறர் எச்சில் படுதல், பல்லியின் எச்சில் படுதல் ஆகிய காரணங்களால் வரும் எச்சில் தழும்பு மறைய ஒருவர் தனது எச்சிலை அந்த இடத்தில் தொட்டுவைக்கிறார். கண்ணுக்குக் கண், முள்ளை முள்ளால் எடுப்பது என்ற பதிலீட்டு முறையால் இது நிகழ்கிறது. செறித்தலுக்குத் துணை செய்யும் பொருளாக உமிழ்நீர் தொன்று தொட்டுக் கருதப்பட்டு வருகிறது. இது ஊக்கப் பொருளாகும். பாலியல் விருப்பத்துடன் பெண்களை நெருங்கிப்பழக முயற்சிப்பவரைச் "ஜொள்ளு விடுபவர்" என்று சொல்வது மரபு. உடல் கட்டுப்பாட்டை இழந்தவர் என்ற முறையில் நோயாளிகளுக்கும் இது பொருந்தும். உடலைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் எச்சிலைத் தன்னை அறியாது ஒழுகவிடமாட்டார். மனக்கட்டுப்பாடு தளரும் போது உடல் கட்டுப்பாடும் தளர்ந்து எச்சில் தன்னை அறியாமல் ஒழுகக் காரணமாகிவிடுகிறது. பிறரது எச்சில் ஒருவருக்கு நோயைத் தரக்கூடியது என்று கருதப்படுவது பொதுவானது. விலங்குகள் எச்சில்களில் ஏற்கத் தக்கன, விலக்கத் தக்கன என்ற இரு பாகுபாடுகளும் உள்ளன. அணில், கிளி முதலானவை உண்டு விட்டுச் சென்ற பழத்தை அவற்றின் சுவை அறியும் திறமையால் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதால் மனிதர்கள் உண்கிறார்கள். பாம்பு, பல்லி, எலி, நாய் முதலானவற்றின் எச்சில்பட்ட பொருள்களை அவற்றின் நச்சுத் தன்மை கருதி யாரும் உண்பதில்லை. அணிலை விடக் குரங்கு புனிதமாகக் கருதப்படுகிறது என்றாலும் அதன் எச்சிலை யாரும் உண்பதில்லை. விலங்குகளின் எச்சில் பட்ட பொருள்களை மனிதர் தமது உணவாகத் தேர்ந்தெடுப்பதில் மருத்துவ, சமூக, சமய, பொருளாதாரக் காரணங்கள் முறையே பங்கு செலுத்துகின்றன.

உயவுப்பொருள் - பசைப்பொருள்

மட்டைப்பந்து ஏறிபவர்கள் பந்தை எச்சில் துப்பித் தடவிப் பிடித்து எறிகிறார்கள். மண்வெட்டி முதலானவற்றின் கைப்பிடியை இறுக்கிப்பிடிக்க எச்சிலைத் தொட்டுக்கொள்கிறார்கள். நடத்துநரும் பணம் எண்ணுகிறவர்களும் எச்சில் தொட்டுத்தான் தாளைப் பிரித்துத் தருகிறார்கள். தற்காலிகமாக ஒட்டுவதற்கும் எச்சில் பசைப்பொருளாகப்

பயன்படுகிறது. உணவுப் பொருள்களை வாயில் ஊறவைத்து எளிதாக தின்பதற்கு எச்சில் இளக்கியாகிறது. அஞ்சல் தலைகளில் தடவப்பட்ட பசையை மீண்டும் இளக்கி ஒட்டவும் எச்சில் பயன்படுத்தப்படுகிறது. கயிறு முதலான பொருள்களைப் பற்றி இழுக்கும்போது உள்ளங்கையில் துப்பப்படும் எச்சில் அந்தக் கயிற்றை மென்மைப்படுத்தப் பயன் படுகிறது. எச்சில் அளவை மிகுதியாக்கிப் பயன்படுத்தும்போது அது உயவுப் பொருளாகவும் ஆகிறது. எச்சில் உயவுப் பொருளாகப் பயன் படுத்தப்படுவதை உடலுறவுக் காட்சிகளில் காணமுடிகிறது.

வெளியேற்றும் பொருள் - உள் உண்ணும் பொருள்

எச்சில் எப்போதும் கழிவுப் பொருளாகவோ, உண்ணும் பொரு ளாகவோ உள்ளது என்பதைப் பிரித்து அறிய வேண்டியதாகிறது. இயல்பான நிலையில் எச்சில் ஒரு கழிவுப் பொருள் அன்று. வாய் தூய்மைப்படுத்தப்படாத நிலையிலும் விழுங்கக்கூடாத பொருள் வாயில் உள்ள அல்லது முன்பு இருந்த நிலையிலும் பல் குத்திய நிலையிலும் விரல் முதலான உறுப்புகள் வாயில்பட்ட நிலையிலும் உடல் பொதுவாக நோய்ப்பட்ட நிலையிலும் எச்சில் கழிவுப் பொருளாகிறது. நோயுற்ற நிலையில் எச்சில் கிருமிகளை வெளியேற்றும் என்பதால் கழிவுப் பொருளாகிறது. விரலும் வாயும் தனித்தனி நிலைகளில் தூய்மைக்கேடு உள்ளனவாகக் கருதப்படுவதில்லை. வாயில் விரல் படும்போது வாய், விரல் இரண்டுமே தூய்மைக்கேடு அடைந்துவிடுகின்றன. விரலின் போதாத தூய்மை நிலை எச்சிலைவிட மிகுதியான கழிவுப்பொருள் ஆகிறது. உடல்தோலின் வெளிப்புறத்தைவிட உட்புறம் தூய்மையாக உள்ளதாகக் கருதப்படுகிறது. உடலிலிருந்து உடலைவிட்டு வெளியேறும் பொருள்கள் கழிவுப் பொருளாகப் பார்க்கப்படுகின்றன. அன்னியப் பொருளாகி விடுகின்றன. ஒரு பொருள் உடலுக்குள் இருப்பதற்கும் அதே பொருள் வெளியில் கழிவுப் பொருளாக இருப்பதற்கும் இடையில் எல்லை உள்ளது. உற்பத்தியாகும் இடத்திலிருந்து புற உலகில் வெளியேற்றப்படும் எல்லை வரை ஒரு பொருள் இருக்கும் போது அது கழிவுப் பொருளுக்குரிய முழுமதிப்பைப் பெறுவதில்லை.

எச்சில் கழிவுப் பொருளாக இருப்பதில் நேரத்தின் பங்கும் உள்ளது. உடல் என்பது படிப்படியாக அசுத்தம் அடையக் கூடியது, காலையில் குளித்த ஒருவர் இரவு 10 மணிக்குக்கூடக் கோயிலுக்குள் நுழையலாம். ஆனால், இரவில் குளித்த ஒருவர் அடுத்த நாள் காலையில் குளிக்காமல் நுழைவதில்லை. பகலில் தூங்கி எழுந்தவர் குளிக்காமல் கோயி லுக்குச் செல்கின்றார். பகல், இரவு உணவுகளைப் பல் விளக்காமல்

சாப்பிடுகிறார்கள். காலை உணவை மட்டும் பல் விளக்கிச் சாப்பிட வேண்டும் என்று கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது உடலைத் தூய்மைப்படுத்துவதற்கான ஒரு நேரச்சுழற்சி முறையாகும்.

உடலைத் தூய்மைப்படுத்துவதில் இருநேரச் சுழற்சி முறையும் உள்ளது. வாயைத் தூய்மைப்படுத்துவதற்கான நேரங்களாக "நாள் அந்திக் கோல் தின்று" (ஆசாரக்கோவை 9) என்று இரு நேரங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஞாயிறு தோன்றும், மறையும் நேரங்களில் வேம்பு, ஆல் முதலான குச்சிகளைக் கொண்டு பல் விளக்க வேண்டுமாம். காலையில் தூய்மைப்படுத்தல் என்பது சமூகத்தில் ஒரு மனிதன் பழகத் தொடங்குவதற்கான முன் ஏற்பாடு; இரவில் இயல்பாகவே சேர்ந்த கழிவுகளை நீக்குவதற்கான ஏற்பாடு. மாலையில் தூய்மைப்படுத்தல் என்பது பகலில் ஏற்பட்ட தூய்மைக்கேட்டை நீக்கி வாழிடத்தில், குடும்பக் களத்தில் இருப்பதற்கான ஏற்பாடு. வெளிச்சம் இருக்கும்போது தான் மறைவிடங்களுக்கும் ஆறு, குளம் முதலான நீர்நிலைகளுக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு செல்ல முடியும். அச்சம் தரும் இரவில் வீட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடு இது. உழைப்பிற்குப் பிறகு உடலையும் காலையில் உண்பதற்கு முன்பு வாயையும் தூய்மைப்படுத்திக்கொள்வது உடல் உழைப்பாளிகளின் இயல்பாக உள்ளது. இவ்வாறு நேரத்திற்குக் கட்டுப்பட்ட திட்டமிட்ட வாழ்வியல் செயல்களும் உடல் நெருக்கடிகளுக்குக் கட்டுப்பட்ட திட்டமிடப்படாத வாழ்வியல் செயல்களும் சேர்ந்தே நாட்டுப்புறப் பண்பாட்டில் உள்ளன. ஒரு நேரம் பல் விளக்குபவர், குளிப்பவர் பெரும்பாலும் அவற்றைக் காலை நேரத்தில்தான் செய்கிறார்கள். குடும்பத்தைவிடச் சமூகத்தில் ஒரு மனிதன் தன்னை நாகரிகமானவனாகவும், சுகாதாரமுள்ளவனாகவும் காட்டிக் கொள்ள முயன்று வந்துள்ளான்.

உணவுப்பொருள் வயிற்றுக்குள் போகும்போது வாய் அழுக்கு களும் போய்விடக்கூடாது என்பதற்காகக் காலை நேரத்தில் பல் விளக்கப்படுகிறது. உண்ட பிறகு பல் விளக்கி வாயைத் தூய்மைப்படுத்திக் கொள்வது நாட்டுப்புறத்தில் அரிது. படுப்பதற்கு முன் பல் விளக்கியவர்கள் காலையில் வாய் காழுவாமல் அருந்துவதை நாட்டுப்புறத்தார் நலக் கேடான செயலாகக் கருதுகிறார்கள். உண்ட உணவு முழுவதும் வயிற்றுக்குள் போய்விட்டதாகக் கருதும் நாட்டுப்புறத்தார் அந்த உணவு பல்லிடுக்கு, பற்குழிகளில் தங்கி இருக்கும் என்று கருதும் நாகரிகர் இருவரும் ஒருவரை ஒருவர் அநாகரிகமானவர்களாகக் கருதிக் கொள்கின்றனர். சுவாசம், உமிழ் நீர் முதலானவற்றின் மூலமாகவும் வாய் அழுக்குகள் உள்புகும் என்ற அறிவு நாட்டுப்புறத்தாருக்குக் குறைவு.

எச்சில் சுரக்கும், நனைக்கும் அண்ணம், உள்கன்னம், உதடு முதலான பகுதிகளை யாரும் விளக்குவதில்லை. பல் விளக்கும்போது நாக்கைப் பிளவுபடுத்திய குச்சியாலும் உலோகக் கம்பித் தகடாலும் வழித்து எடுப்பவர்கள் இரு முரண்பட்ட பண்பாட்டு நிலைகளிலும் உள்ளனர். உமிழ் நீர் அழுக்கடைவதற்குப் பல் வரிசையே பெரும்பாலும் காரணமாக உள்ளது. வாய்ப்புண், வயிற்றுக் கேடு முதலானவை காரணமாகவும் எச்சில் கழிவுப் பொருளாகிறது. கெட்ட, விரும்பப்படாத உணவுப் பொருள்களுடன் சேரும்போது எச்சில் வெளியேற்றப்பட வேண்டிய பொருளாகிறது.

விருப்பப்பொருள் - வெறுப்புப் பொருள்

உடல் மொழியில் எச்சில் பொருண்மைகளை உணர்த்தும் குறியீட்டுப் பொருளாகிறது. வெறுப்பு, சினம், அதிகாரம் முதலான உணர்வுகளை வெளிப்படுத்த எச்சில் கழிவுப் பொருள் போலத் துப்பப்படுகிறது. நட்பு, காதல், அன்பு, பணிவு, விருப்பம், இச்சை முதலான ஆதரவு உணர்வுகளை வெளிப்படுத்த எச்சில் உணவுப் பொருள்போல விழுங்கப்படுகிறது.

சண்டைக்கும் வெறுப்புக்கும் உரியவர் முகத்தில் நேரடியாக எச்சில் துப்பப்படுவதும் உண்டு. ஒருவர் எச்சிலைக் காறினாலோ, காறித்துப்பினாலோ, துப்பினாலோ அந்தச் சூழலில் உள்ள மற்றவர்கள் தாங்கள் இழிவுபடுத்தப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் வாய்ப்பு உள்ளது. இயல்பிலேயே எச்சில் துப்பப்பட்டதா என்ற பொருள் மயக்கமும் அந்தச் சூழலில் ஏற்படும். "பாதகம் செய்பவரைக் கண்டால்... முகத்தில் காறி உமிழ்ந்து விடடி பாப்பா" என்று குழந்தைகள் பாரதியாரால் அறிவுறுத்தப்படுகின்றன. குறையுடைய, சுயநலமான மக்கள் சமூகத்தில் நல்லவர்கள் காறித்துப்பப்பட வாய்ப்புகள் உள்ளன. தங்கள் குழுவைச் சேர்ந்தவரையே ஒருவர் எச்சில் துப்பி இழிவுபடுத்தலாம். பால் விற்கும் கடைக்குச் சென்று அனாதைக் குழந்தைகளுக்குப் பால் உதவி தேவை என்று மீண்டும் மீண்டும் அன்னை தெரஸா வற்புறுத்திக் கேட்டபோது அந்தப் பால் உரிமையாளர் அன்னையின் முகத்தில் காறி உமிழ்ந்து விட்டார். இரவல், ஓசி கேட்பது இழிவு என்பதால் அவ்வாறு நடந்துள்ளது. தனக்குக் கிடைக்க வேண்டியது கிடைத்து விட்டது என்றும் அனாதைக் குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டியது இன்னும் கிடைக்கவில்லை என்றும் அன்னை தெரிவிக்கத் தவறுக்கு வருந்திய பால் கடைக்காரர் இன்றுவரை தொடர்ந்து பால் வழங்கி வருகிறார். குறைந்த கட்டணத்திற்குப் பேரம் பேசுகிறார்கள் என்று தானி (auto) ஓட்டுநரும் கூடுதல் கட்டணம் கேட்கிறார் என்று பயணியும்

ஒருவரை ஒருவர் இழிவுபடுத்த எச்சில் துப்புகிறார்கள். கண்டிக்கும் ஆசிரியருடைய வகுப்பில் மாணவன் வகுப்புக்கு வெளியில் சென்று எச்சில் துப்பி விட்டு இயல்பாக வந்து அமர்கிறான். குடும்ப உறுப்பினர் ஒருவரை ஒருவர் இழிவு படுத்த எச்சில் துப்புகிறார்கள். மல்லாக்கப் படுத்துக்கிட்டு எச்சில் துப்பினால் தன் மூஞ்சிலதான் விழும் - என்று ஒரு பழமொழி உள்ளது. தன்னைச் சேர்ந்தவரை இழிவுபடுத்தினால் அந்த இழிவு தன்னையும் வந்து சேரும்.

எச்சில் பட்ட உணவுப்பொருள்கள், கலன்கள் முதலானவற்றைப் பகிர்ந்து கொள்கிறவர்கள் நெருக்கமானவர்களாகிறார்கள். நெருக்க மானவர்களாகக் காட்டிக் கொள்வதற்காக அவ்வாறு பகிர்ந்து கொள்ளவும் செய்கிறார்கள். ஒரே கலனில் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சாப்பிடுவதும் குடிப்பதும் ஒரு பொருளை மாற்றி மாற்றிக் கடித்து உண்பதும் இயல்பாகிவிட்டன. ஒரு சிகரெட்டைப் பலர் புகைக்கிறார்கள். இவ்வாறு நுகர்வுப் பொருள்களைப் பகிர்ந்து கொள்ளும் உடல்கள் தங்களை ஒரே அமைப்பாகக் கருதுகின்றன. ஒரு உடலுக்கு நேரும் இன்ப, துன்பங்கள் பிற உடலுக்குத் தீங்குதரக் கூடியது என்ற சமூகத்தின் பொதுக் கருத்தை மீறுவதில் குழுவினர் நிறைவு அடைகிறார்கள். குழுவானது சமூகத்தைத் தனக்கு எதிரானதாகப் பார்க்கிறது. சமூகம் தவிர்த்துள்ள இழிவான செயலும் குற்றவியல் செயலும் அவற்றைச் செய்பவர்களை ஒருங்கிணைத்து விடுகின்றன. சமூகத்திடமிருந்து தங்களைப் பாதுகாக்க வேண்டிக் குழுவில் உள்ள ஒவ்வொருவரும் அந்தக் குழுவில் ஐக்கியமாகிவிடுகிறார்கள்.

நாகரிக, வர்க்க வேறுபாடுகள் நகர்ப்புறத்தில் உணவுக் கலன்களைப் பயன்படுத்துவதில் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன. முகாம், உணவு விடுதி, தங்கும் விடுதி முதலானவற்றில் உணவுக் கலன்களைப் பயன்படுத்துவதில் மனிதர்களுக்கு இடையே உள்ள பொறுப்பின்மை, அவ நம்பிக்கைகளைக் காணலாம். கழுவி வைக்கப்பட்ட தட்டு, கோப்பை களாக இருந்தாலும் பயன்படுத்தப் போகிறவர் மேலும் ஒரு முறை கழுவுவார். தட்டுமேல் இலை விரித்து அதன் மேல் உணவு பரிமாற அனுமதிப்பார். பயன்படுத்திய பிறகு எப்படி இருந்தால் என்ன என்று கலன்களைத் தூய்மையாகக் கழுவாது விட்டுவிடுகின்றனர் பலர். உணவு விடுதிகளில் கூலிக்குக் கலன் கழுவுகிறவர் பிறர் தானே சாப்பிடுகிறார்கள் என்று பொறுப்பற்ற முறையில் கழுவுகின்றனர். குடும்பத்தினர்கூட இது போன்று கழுவுவதால் முரண்பாடுகள், வருத்தங்கள் உறவு களுக்குள் வரவே செய்கின்றன. குடும்பத்தினரின் எச்சிலும் சகித்துக் கொள்ள முடியாததாக உள்ளது. குடும்பத்தினரின் எச்சில் உணவை

வீடு என்ற களத்திற்குள் சாப்பிடுகிறவர்கூடப் பொது இடங்களில் சாப்பிடுவதில்லை. சமூகத்திற்கு எவ்வளவு உயர்ந்தவராக இருந் தாலும் குடும்ப உறுப்பினரின் அன்புக்கு ஏங்குவதில் இயல்பானவர் களாகவே மனிதர்கள் உள்ளார்கள். எச்சில் உணவை உண்டு அதை வெளிப்படுத்துகின்றனர்.

திருமணத்தின் போது, கணவன் உண்ட கலனில் மனைவி உண்பது, இருவரும் மாறி மாறி ஒரு கலனில் அருந்துவது என்ற எச்சில் கலப்புச் சடங்குகள் செய்கின்றனர். ஆணின் எச்சில் உணவைப் பெண் சாப்பிடு வதற்கான கூடுதல் வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளன. நாட்டுப்புறப் பண்பாட்டில் மனைவியின் எச்சில் உணவைக் கணவன் உண்பது அரிது. மனைவியின் எச்சில் பொருளால் கோபம் கொண்ட ஒரு கணவனின் கதை வருமாறு: தான் வைத்த குழம்பு சுவையாக உள்ளதா என்று பார்க்க மனைவி மொச்சையைத் தின்று பார்க்கிறாள். ஒரு மொச்சை தவறிக் கணவன் சாப்பிட்ட தட்டில் போய் விழுந்துவிடுகிறது. அவன் மனைவியிடம் சண்டைபோட்டுக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறுகிறான். இரு நாள் அலைச்சலுக்குப் பிறகும் சினம் தீராது வீடு திரும்பாமல் இருக்கிறான். கடும்பசியால் ஒரு கிழவி வீடு சென்று கேட்டு வாங்கிச் சாப்பிடுகிறான். கிழவி கடித்துத் தரச் சொன்ன கொட்டைப்பாக்கை எளிதாகக் கடித்துக் கொடுத்துவிட்டு அதற்கான காரணத்தைக் கேட்கிறான். இரவு முழுவதும் தன் வாயில் ஊறவைத்திருந்த கொட்டைப்பாக்கு என்கிறாள். அவன் மேலும் வெறுத்து, அலைந்து, திரிந்து பசியுடன் மற்றொரு பாட்டியிடம் உணவு கேட்டுச் செல்கிறான். பெரிய இலையில் பரிமாறுகிறாள். இலையை மீண்டும் அவர் எடுத்துவைத்துக்கொண்ட போது காரணம் கேட்கிறான். வருகிறவர்கள் எல்லாரும் கழுவாது சாப்பிட்டதால் வாடாமல் இருக்கும் அதிசய இலை என்கிறாள் அவள். மேலும் நொந்து போன அவன் அலைந்து வேறு ஒரு வீட்டிற்குச் சென்று இலையைத் தவிர்த்துத் தட்டில் உண்கிறான். அவனை உண்ணவிடாமல் நாய் தொந்தரவு செய்து குரைப்பதற்கான காரணத்தைக் கேட்கிறான். அந்தத் தட்டு நாய் உண்ணும் தட்டு என்று தெரிய வந்து மனம் திருந்தி மனைவியின் எச்சிலே மேல் என்று வீட்டுக்குத் திரும்பி விடுகிறான் (டென்னிஸன் கஷ்மிர் ராஜா, 15.07.05). குடும்பத்தில் ஆண், பெண் என்ற பால் பாகுபாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகச் சொல்லப்பட்ட கதை இது. சாதிப் பாகுபாட்டிற்குள் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான நாட்டுப்புறக் கதைகளும் உள்ளன (ஆ. சிவ சுப்பிரமணியன், 2004; 24.7.49)

நாகரிக நிலையிலும் செவ்விலக்கியங்களிலும் ஆண், பெண் இருவரும் ஒருவர் எச்சிலை மற்றவர் விரும்புவதான நிலை பொதுவானதாக உள்ளது. ஆண்டாள் திருமாலின் எச்சில் சுவை அறிந்த சங்குவிடம் அதை விரும்பிக் கேட்கிறாள். நாட்டுப்புறப் பண்பாட்டில் எச்சில் என்பது ஆண், பெண் உறவில் பொதுவாக வெறுக்கத்தக்கதாகவே இருந்து வந்துள்ளது. ஒரு நாட்டுப்புற மனைவி,

"ஆத்துல ஊத்துத் தோண்டி
அவரும் நானும் பல்லுவெளக்கி
எச்சித் தண்ணி தெறிச்சதுன்னு
எட்டு நாளாப் பேசலையே"

(தே. ஞானசேகரன், 1984; பின்னிணைப்பு)

என்று வருந்திப் பேசுகிறாள். கலித்தொகையில் வரும் நாட்டுப்புற ஆயன் ஆய்ச்சியிடம் "மெல்ல முயங்கு, நின்முள் எயிறு உண்கும்" (கலித்தொகை112; 19-20) என்கிறான். எயிறு ஆகு பெயராக நின்று எச்சிலைக் குறிக்கிறது.

தலைவியின் எச்சில் தேன் கலந்த பாலை விட இனிய சுவை உடையது (குறள். 1121), ஆணின் ஐம்புலன்களுக்கும் இன்பம் தருவன பெண்களிடம் உள்ளன (குறள். 1101). அதாவது, தலைவன் வாய்ச் சுவைக்கு இன்பம் தருவது தலைவியின் வாய் எச்சில் ஆகும். எச்சில், எச்சில் பொருள் என்ற இரண்டிற்கும் தலைவியின் மேல் இருந்த விருப்பம் விரிவடைகிறது. நாட்டுப்புற மனிதன், நாகரிக மனிதன் இருவருக்கும் உடலைப் பேணுவதில், எண்ணத்தில், நடத்தையில் வேறுபாடுகள் உள்ளன. இவ்விரு மனித வேறுபாடுகள் தொன்று தொட்டே இருந்து வருவன. ஒரு புலனுக்கு இனிதாகவோ, இன்னாத தாகவோ உள்ள ஒன்று வேறு புலனுக்கும் எவ்வாறு இருக்கும் என்று அறியும் முயற்சியில் ஈடுபடக் கொஞ்சம் சிந்தனை வேண்டும். கண்ணுக்கு இனிய பட்டாம் பூச்சியைத் தொட்டுப் பார்க்கவும் நல்ல மணம் உள்ள பொருளைத் தின்று பார்க்கவும் ஆசைவரும். குழந்தைத் தன் கைக்குக் கிடைக்கும் பொருளைச் சுவை மூலம் அறிய விரும்புகிறது. பாலுறுப்பு ஈடுபாடு என்பது உடல் முழுவதையும் தொட்டு அறியத் தூண்டுகிறது. பாலுறுப்புக் காட்சி ஈடுபாடு என்பது பிற உறுப்புகளுக்கும் விரிவடைந்துள்ளது. உடல் உறுப்புகளுக்கு எந்தச் சுவையும் இல்லை. உடல் உறுப்புகள் வெளியேற்றும் பொருள்களில் திரவங்களில் குறைந்த கழிவு உடையது எச்சில்; அது கழிவுப் பொருளன்று. எனவே, அது பாலியல் சுவைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. தொடுதல், காட்சி, சுவை, மணம், ஓசை உணர்வுகள் மூளையின் வெவ்வேறு

இடங்களில் பதிவாகி ஒருங்கிணைக்கப்படுபவை. பாலுணர்வு என்பது அடிப்படையான வலுவான உணர்வு. எனவே, பாலுறுப்பால் உணர்ந்து அறியப்படும் ஒன்று பிற புலன்களாலும் உணர்ந்து அறியப் படுவது இயல்பு. வலுவான உணர்வுக்கு இனிதாக இருக்கும் ஒன்று பிற புலன்களாலும் இனிதாக இருப்பதாக ஏற்கப்பட்டு விடுகிறது. எச்சில் சுவை, வியர்வை நாற்றம் முதலான பிறவும் விரும்பத் தக்கனவாகின்றன.

நாட்டுப்புற மக்களிடம் எச்சில்மேல் இருக்கும் வெறுப்பு என்பது எச்சில் ஒரு கழிவுப் பொருள் போலப் பார்க்கப்படுவதால் வந்த தாகும். வாய், உடல் முதலானவற்றைச் சுகாதாரம், நாகரிகம், அழகியல் நோக்குகளில் அவர்கள் பராமரிக்க வாய்ப்புக் குறைவு. ஏழ்மையுடன், உடல் உழைப்புடன், மண்ணுடன், இயற்கையுடன் இயைந்த வாழ்வு அவர்களுடையது. அவர்கள் அழுக்கும் வியர்வையும் கவுச்சியும் கொண்டவர்களாக இருப்பது இயல்பு. பாலியல் உணர்வில் எச்சில் சுவையை அறிய முயற்சிக்கிறவரை நெறி பிறழ்ந்த வக்கிரமான பாலுறவுக்காரர் என்று அவர்கள் கருத வாய்ப்பு உள்ளது. பாலுறவுக்குரிய விலங்குகள் ஒன்றின் எச்சில் சுவையை மற்றொன்று அறியப் பொதுவாக முயற்சிப்பதில்லை.

அதிகாரப் பொருள் - அடங்கும் பொருள்

அதிகாரம் கொண்டோரையும், உயர்ந்தோர்களையும் தெய்வத்தையும் பலரைக் கொண்ட சமூகத்தையும் அணுகும்போது ஒருவர் தனது எச்சி லைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. மதிப்பு என்பது தனி மனிதர்களுக்கு அதிகாரம், அறிவு, பொருளாதாரம் முதலானவற்றின் செல்வாக்கால் வருகிறது. இவை எதுவுமில்லை என்றாலும் பலர் என்ற பன்மைத் தன்மை காரணமாகச் சமூகம் மதிப்புள்ளாகிறது. தமிழைப் பொருத்தவரையில் பலர்பால் உயர்வு ஒருமைப்பால் என்ற இரண்டிற்கும் ஒரே பாலறி கிளவிதான் பயன்படுத்தப்படுகிறது.

கடன் வாங்கியவன் வலுவானவனாக இருந்துவிட்டால் எச்சிலை விழுங்கிக் கொண்டுதான் கொடுத்தவன் பணத்தைத் திருப்பிக் கேட்க முடியும். அதிகாரம் படைத்தவர், உயர்ந்தோர் என்ற இரண்டிற்கும் இடையில் பெரிய வேறுபாடுகள் சராசரி சமூகத்தில் இருப்பதில்லை. அவர்கள் வரும்போது எச்சில் துப்பவோ, எச்சில் தண்ணீர் ஊற்றவோ செய்யக்கூடாது என்ற மரபு உள்ளது. "பெரியார் முன்பு தொண்டை காறிப்புச் செய்தால் நிலையான பழி வந்துவிடும்" (ஆசாரக்கோவை. 73) என்று கூறப்பட்டுள்ளது. பெரியார், மதிப்புக்குரியவர் இருக்கும்

சூழலில் எச்சில், சிறுநீர் முதலானவற்றை அடக்கிக் கொள்கின்றனர். உயர்வானவர்களிடத்தில் பேசும் போது எச்சில் கையை நீட்டிப் பேசுவதும் எச்சில் கையுடன் பிற வேலைகள் செய்வதும் கண்டிக்கப் பட்டுள்ளது.

தன் எச்சிலை ஒருவர் எதிர்ப்பைத் தெரிவிக்கவும் பயன்படுத்துகிறார். ஆசிரியர் தன்னை அடித்தவர் என்பதற்காக அவருக்குத் தேனீர் வாங்கிக் கொடுக்கும்போது அதில் உள்ள நுரையுடன் வேறுபாடு தெரியாதவாறு மாணவன் எச்சில் துப்பிக் கொடுத்துவிடுகிறான். வீட்டுச் சமையல்காரி உணவில் தன் எச்சில், தூ(ய்)மை முதலான கழிவுகளைக் கலந்துவிடுகிறாள். வீம்புக்குச் சண்டையைத் தொடங்கக் கருதும் ஒருவன் காறித்துப்புகிறான்.

எல்லாரும் பகிர்ந்து உண்ணும்பொருள், அந்தப் பொருள் உள்ள கலன்கள் முதலானவற்றை எச்சில்படுத்தக்கூடாது என்பது மரபாகும். தனது எச்சில் தெறித்துவிடக்கூடாது என்று சோறு, குழம்புக் கலன்களைச் சாப்பிடுகிறவர் தள்ளி வைத்துக் கொள்கிறார். "அடுக்களை எச்சில் படார்" (ஆசாரக்கோவை, 39) என்று சொல்வது குடும்பத்தினர் மட்டுமன்று, விருந்தினரும் பிறரும் உண்பதற்குரிய உணவு சமைக்கப்படும் இடம், கலன் என்பதனால் ஆகும். மனித நடத்தையோடு தொடர்புடையதாக எச்சில் ஆளுமைப் பழக்கங்கள் அமைகின்றன.

தனி மனிதர் வலுவற்றவராக இருந்தால் சமூகத்திற்கு அடங்கிப் போகிறார். சமூகத்தை ஆதிக்கம் செலுத்தும் தனி மனிதனிடம் அந்தச் சமூகம்தான் அடங்கிச் செல்ல வேண்டியுள்ளது. சமூகம் தனது நடத்தை முறைகளை அவனுக்கு ஏற்ப வளைத்துக் கொள்கிறது. அரசர், தலைவர், அமைச்சர் முன்னிலையில் மக்கள் பலராக இருந்தாலும் எச்சிலைக் காறித்துப்புவது கண்டிக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மை எப்போதும் சிறுபான்மைக்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்ள வேண்டும் என்ற நிலை உள்ளது.

தெய்வ வழிபாடுகளில் எச்சிலுக்கான கட்டுப்பாடுகள் வலுவானவை. உண்ணாமல் விரதம் இருப்பவர்கள் தெய்வத்திற்குப் படையல் செய்து வழிபடுவது வரைக்கும் எச்சிலை விழுங்கக் கூடாது. விழுங்கினாலும் விரதம் அன்று முறிந்ததாகிவிடும். ஏற்கனவே இருக்கும் பசியை மேலும் மிகுதியாக்கிவிடும் என்பதற்காக எச்சிலை விழுங்கக்கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளதாகச் சிலர் தெரிவிக்கிறார்கள். எச்சிலை விழுங்குதல் என்பது உணவின்றிப் போனதன் அடையாளம் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். தெய்வ வழிபாட்டிற்குச் சமைக்கும் போது, படையல் செய்து வழிபடும்போது உணவில் எச்சில் தெறித்துவிடக்கூடாது

என்பதற்காக வாயைத் துணியால் கட்டிக்கொள்கிறார்கள். பால்பல் விழுவதற்கு முன் பருவம் வரைக்கும் சிறுவர்களுக்கு இந்த எச்சில் கட்டுப்பாடு கட்டாயமானதன்று. படையல் பொருளை வழிபாட்டுக்கு முன் தவறுதலாகச் சிறுவர்கள் எடுத்துச் சாப்பிட்டுவிட்டாலும் தெய்வம் மன்னிக்கும் என்பர். படையல் பொருளைப் படைப்பதற்கு முன் சாப்பிடுவது எச்சில்படுத்தியதாகிவிடும்.

திரி விளக்கை அணைக்கும் போது வாயால் ஊதி அணைப்பது கண்டிக்கப்படுகிறது. எச்சில், வாய்க்காற்று தெய்வமாகக் கருதப்படும் விளக்குச் சுடரில் பட்டால் அதை இழிவுபடுத்திய குற்றமாகிவிடும். நெருப்பு அக்னி என்ற பூதமும் தெய்வமும் ஆகும். நெருப்பில் எச்சில் துப்பக்கூடாது, துப்பினால் தண்டனையாகத் தொண்டைப்புண் வரும் என்று நம்பப்படுகிறது. எச்சில் கையோடு இருப்பவர், வாயில் உணவு வைத்திருப்பவர் திங்கள், ஞாயிறு இரண்டையும் பார்க்கக்கூடாது (ஆசாரக்கோவை, 6) என்ற கட்டுப்பாடு உள்ளது. எச்சில் கையால் பசு, பார்ப்பார், தீ, தேவர், உச்சந்தலை ஆகியவற்றைத் தொடக்கூடாது (ஆசாரக்கோவை, 5) என்றும் கூறப்பட்டுள்ளது. இந்து மதத்தில் ஞாயிறு, திங்கள், பூதங்கள், பசு முதலானவை தெய்வக் குணங்கள் கொண்டனவாகக் கருதப்படுகின்றன. பார்ப்பார் தெய்வத்தோடு தொடர்பு கொண்டவர்களாகக் கருதப்படுகின்றவர்கள். உடலிலேயே மதிப்பான உறுப்பாக உச்சந்தலை இருப்பதால் அதில் இழிவான எச்சில்படும்படி நடந்து கொள்ளக்கூடாது என்று கண்டிக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் கொடை மடம் வருவது போலப் பக்தி இலக்கியத்தில் பக்தி மடம் இடம் பெறுகிறது. சிவபெருமானுக்குப் படைக்க வேண்டித் திண்ணப்பர் தீயில் வாட்டிச் சுவைத்துப் பார்த்துத் தசைகளை எடுத்துச் செல்கிறார்(திருத்தொண்டர் புராணம்; கண்ணப்ப நாயனார் புராணம்; 118). சிவபெருமானின் தலை மேல் ஊற்றி மஞ்சன நீராட்ட ஆற்று நீரைத் தன் வாயில் கொண்டு செல் கிறார்(திருத். கண். 121). எச்சில்படுத்தப்பட்ட இறைச்சி, நீர் என்பன அன்பால், பக்தியால் அறியாமையால் நிகழ்ந்ததால் மிகவும் ஏற்புடைய பொருள்களாகிவிடுகின்றன. பழங்குடியினர் கண்ணப்பர் என்பதால் அந்தக் குலத்துக்குரிய நெறி போற்றத் தக்க நெறியாகிறது.

கோயில்களில் அன்னதானம் செய்வதாக வேண்டிக் கொண்டவரின் குடும்பத்துப் பெண்களே அன்னியர் உண்ட எச்சில் இலைகளையும் எடுக்க வேண்டிக்கொள்கிறார்கள். கோயில்களுக்கு மாலை அணிந்து விரதமிருந்து குழுக்களாகச் செல்லும்போது பந்தி முடிந்த பிறகு எச்சில் இலையை எடுக்கும் பொறுப்புக் கன்னி சாமிகளிடம் விடப்

படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட கன்னி சாமிகள் இருந்தால் எச்சில் இலை எடுக்கும் உரிமை ஏலத்தின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. குழுவில் உள்ள குருசாமி, முதுசாமிகளின் எச்சில் இலைகளை எடுத்தால் கன்னி சாமிகளுக்குப் புண்ணியம் என்பது சமய வழிபாட்டில் உள்ள அதிகாரப் படிநிலையையே காட்டுகிறது. பழையவர்கள் புதியவர்களைவிடவும் வயதானவர்கள் இளமையானவர்களைவிடவும் உயர்ந்தவர்கள் என்றாகிறது. படையல் செய்து சாப்பிடப்பட்ட பிறகு எச்சில் இலைகள் புனிதப் பொருளாகிவிடுகின்றன. சில வீடுகளில் எச்சில் இலைகள் குப்பைகளில் போடப்படாமல் அதற்கு மட்டும் உரிய தனிக்குழிகளில் போடப்படுகின்றன. எச்சில் இலைகளில்கூட இயல்பானது, தெய்வப் படையல்களுக்குரியது என்ற இரு பாகுபாடுகள் உள்ளன. "தெய்வத்திற்குப் படையல் செய்து உண்ட பிறகு எச்சில் இலைகளை வீட்டின் வெளியில் வலது பக்கமும், இயல்பான நாட்களில் உண்ட பிறகு எச்சில் இலைகளை இடது பக்கமும் போடுவார்கள்" (ஈ.யுவராணி, 13.07.2005). வலது பக்கம் என்பது மங்கலமானது. எச்சில் இலைகளை நாய் நக்காமல் இருக்க அவற்றை வீட்டிற்குள்ளேயே ஒரு இடத்தில் சேர்த்துவைத்து, உலர்ந்த பின் காலடிபடாத கூரை, மேடு முதலான இடங்களில் போடும் மரபு உள்ளது. உலர்ந்த இலைகளை நாய் நக்க வாய்ப்பு இல்லை. அந்த எச்சில் இலைகளை நீரோட்டத்தில் விடுவதும் உண்டு. செவ்வேளின் கோயில் யானை உண்ட எச்சில்உணவு பெண்களால் புனிதப் பொருளாகக் கருதப்பட்டு உண்ணப்பட்டுள்ளது. "யானையின் எச்சில் உணவை உண்ணவில்லை என்றால் கன்னிமை கனிந்தவர் குற்றமற்ற ஆடவர் தோள் எய்த மாட்டார்கள்; மணம் ஆனவர் கணவனின் அன்பைப் பெறமாட்டார்கள்" (பரிபாடல். 10;85-94). வழக்கத்தில் பிறர் எச்சில் என்பது ஒருவருக்கு நோயைக் கொண்டுவரக்கூடியது; தொடக்கூட அருவருப்பானது; பருப்பொருள் என்ற நிலையில் எச்சில் இவ்வாறானது. ஆனால், அதே எச்சில் தெய்வம், வழிபாடு என்று வரும்போது அந்த அருவருப்புத் தூய்மையைக் கொண்டு வருவதாகிறது. தீவினை, அதிருப்தி முதலான அருவ நிலையிலான அழுக்கை நீக்கும் புனிதப் பொருளாக எச்சில் பொருள் ஆகிவிடுகிறது. சமூகத்தின் சுயநலமும் தண்டிக்கக் கருதுகிற குரூரமும் தான் இதற்குக் காரணங்கள். எச்சில் ஒரு தண்டனைப் பொருளாகிறது. எந்தக் குற்றமும் செய்யாது பிறர் எச்சிலை அப்புறப்படுத்தும்போது அந்தத் தொண்டுக்குப் பதிலாக இறை அருள் கிட்டும் என்றாகிறது. எச்சில் புனிதப் பொருளாக இருக்கும்போது அதை உண்டு நன்மை பெறுவது தொத்து மந்திரச் சடங்கு வகையில் சேரும்.

இணைப்புப் பொருள் - நீக்கும் பொருள்

எச்சிலுக்கு உரியவரை வேறு ஏதோ ஒன்றுடன் இணைப்பதற்கு அந்த எச்சில் பயன்படுகிறது. எச்சில் தண்ணீரை ஊற்றுவதன் மூலம் ஊற்றப்பட்டவர் ஊற்றுபவர் மீது விருப்பம் கொள்வார் என்ற நம்பிக்கை உள்ளது. ஊற்றப்பட்டவர் மனதில் அந்த எச்சில்நீர் அவரை அறியாமல் மாற்றத்தை ஏற்படுத்தி, விருப்பம் கொள்ளச் செய்துவிடும் என்று கருதியதாகிறது. ஒரு தலைக் காதலில் இருப்பவர்கள் எச்சில் நீரை ஊற்றுவதை ஒரு குறுக்கு வழியாகப் பின்பற்றியிருக்கலாம். இழிவான எச்சில் நீர் ஊற்றப்பட்டவரிடம் அவரின் விருப்பத்தை எதிர்பார்த்து ஊற்றப்பட்டதாக, இழிவுபடுத்த அன்று என்று சொல்லி அவரை அமைதிப்படுத்தியிருக்கலாம். எச்சில் உணவைக் குழந்தைக்குக் கொடுக்கக் கூடாது என்பது நோய் தொற்றுவதைத் தவிர்ப்பதற்காக மட்டுமன்று. அந்தக் குழந்தையின் மதிப்பு, தன்னிச்சையான குணநலன்கள் முதலானவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்பதாலும்தான் குச்சி, கரண்டி முதலானவற்றின் நுனியில் தூய துணி சுற்றியோ, இல்லாமலோ தேன் அல்லது சர்க்கரைக் கரைசலைத் தொட்டுப் பிறந்த குழந்தையின் நாக்கில் வைத்து மதிக்கத் தக்க ஒருவர் சேனை போடுவார். கழுவிய விரலால்கூடத் தொட்டு வைக்கிறார்கள். இஸ்லாம் மதத்தில் மதிக்கத் தக்க ஒருவர் தன் வாயில் வைத்துக் சுவைத்த பேரீச்சம் பழத்தை எடுத்துக் குழந்தையின் வாயில் வைக்கிறார்கள்(தே.ஞானசேகரன், 2000:274). இதில் சேனை வைப்பவரின் முக்கியத்துவமும், குழந்தையின் முக்கியத்துவமின்மையும் கூடிவிடுகின்றன. தன் பண்புகளை ஒருவர் மற்றொருவருக்கு உணவுப் பொருளை எடுத்துக் கொடுப்பதன் மூலமும் அதை எச்சில்படுத்திக் கொடுப்பதன் மூலமும் கடத்துவதான இருநிலைகள் உள்ளன. காளியின் அருள் காளிதாசனுக்கு எச்சிலின் மூலமாகவே சென்றதாகிறது. எச்சிலை எடுத்துச் சென்று யாரும் செய்வினை செய்துவிடக்கூடாது என்பதற்காகப் பொது இடங்களில் எச்சில் துப்புகிறவர் எச்சில் தடயத்தை அழித்துவிட்டுச் செல்கிறார் (தே.ஞானசேகரன், 2000:274). திருமணத்தின் போது செய்யப்படும் எச்சில் கலப்புச் சடங்குகள் கணவன், மனைவி இருவரையும் இணைத்து வைப்பதற்காகவே செய்யப்படுகின்றன. ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்வது ஒருவருக்குள் ஒருவர் கலப்பது என்ற பொருண்மைகளை உடையனவாக அந்தச் சடங்குகள் உள்ளன. கண்ணேறு கழித்தல் என்பது ஒரு தொத்து மந்திரச் சடங்காகும். கண்ணேறு கழிக்கப்பட வேண்டியவரின் தலையை மிளகாய், சூடம் வைத்து மூடிய கவிழ்ந்த உள்ளங்கையால் மூன்று முறை சுற்றுவர். திருப்பி உள்ளங்கையை

விரித்து அதில் தீட்டுக்குரியவரின் எச்சிலைப் பாவனையால் துப்பச் செய்வர். அவற்றைத் தீயில் போடுவர். இந்தச் சடங்கில் எச்சிலின் செயல்பாடு இணைப்புப் பொருள் அன்று. மூன்று முறை தலையைச் சுற்றும்போது தலை சுற்றுபவரின் தீவினை கையில் உள்ள காரமான, எரியக்கூடிய பொருள்களுக்குத் தாவிவிடுவதாக நம்பிக்கை. அந்தத் தீவினையை இழிவுபடுத்தி விரட்டும் நோக்கத்துடனேயே எச்சில் துப்பும் பாவனை நடக்கிறது. குழந்தைக்கு எச்சில் துப்பும் பாவனை செய்யத் தெரியாது என்பதால் நெருக்கமான ஒருவர் அந்தப் பாவனையைச் செய்வார். பிடிக்காத பொருளால் தன் தலையை மூன்று முறை சுற்றி அந்தப்பொருளில் எச்சில் துப்புவதாகப் பாவித்து அதை எறிந்து விடுகின்றனர். உதிர்ந்த தலைமுடியைத் திரட்டித் தலையை மூன்று முறை சுற்றி, அதில் எச்சில் துப்பும் பாவனை செய்து எறிந்து விடுவது மக்களிடம் உள்ள பழக்கமாகும். இவை போலச் செய்யும் சடங்குகளாகும். இறப்புச் சடங்கில் சுடுகாட்டை நோக்கிப் புறப்படும்போது ஊர், வீட்டைப் பார்த்தபடி உடல் இருக்கும். இடையில் மூன்று முறை சுற்றி வந்த பிறகு சுடுகாட்டை நோக்கி பார்த்துக் கொண்டு செல்லும். மூன்று முறை தலையைச் சுற்றி எறிவது என்பது மூன்று முறை சுற்ற வைத்துப் பிணத்தை விட்டு எறிவது போன்றதாகும். கண்ணேறு, உதிர்ந்த முடி, பிடிக்காத பொருள், அழிக்க நினைக்கும் பொருள் முதலானவை பிணத்திற்குரிய இடத்தில் பதிலீடு செய்யப்படுகின்றன. மூன்று முறை சுற்றுதல் என்பது மங்கல, தெய்வீகச் செயல்களுக்கும் உரியது. இவ்வாறான சடங்குகளில் எச்சில் இழிவுப் பொருளாகவே செயலாற்றுகின்றது. நீக்கப்படும் பொருளை மேலும் மேலும் நீக்குவதற்கான ஊக்கியாகிறது. உதிர்ந்த மயிர்களில் எச்சில் துப்புவது என்பது முடி உதிர்தல் என்ற செயலின் மீது துப்பிய எச்சிலாகும். முடி என்பது முடி உதிர்தல் என்ற செயலுக்கு ஆகி வந்துள்ளது.

வறுமைப்பொருள் - வளமைப் பொருள்

மக்களின் பொருளியல் வளம் சார்ந்தும் எச்சில் பொருண்மைகளைப் பெற்றுள்ளது. இயற்கை வறட்சியை எச்சில், எச்சில் பொருள்கள் குறியீடுகளாக நின்று உணர்த்துகின்றன. மழைக்காக வேண்டிக்கொள்ளும் சடங்குகளில் உண்ட பிறகு, கை கழுவாமல் வருவது மரபாக உள்ளது. பலர் பல வீடுகளில் தானியம் பிச்சையாகப் பெற்று, ஒரு இடத்தில் ஒன்றாகச் சமைத்து உண்டு, ஒப்பாரி வைத்து அழுது, வானத்தை நோக்கி, எச்சில் கையை நீட்டிக் கை கழுவத் தண்ணியில்லை என்று உரக்கக் கத்துவார்கள். நேரடியான இயற்கை வழிபாடு இது. மழைக்காகத் தெய்வங்களுக்குப் பலியிட்டு, வழிபட்டு உண்ட பிறகு, அதே போலக்

கை கழுவாமல் வீடு சென்றுவிடுகிறார்கள்(தே.ஞானசேகரன், 2000;114). நேரடியாக வீடுகளில் சோற்றைப் பிச்சையாக வாங்கி உண்டு, கை கழுவாது செல்லும் வழக்கமும் உள்ளது. கழுவப்படாத எச்சில் கை என்பது நீர் வறண்டு போனதன் குறியீடாக வருகிறது.

குடும்பம் வறுமை நிலைக்குப் போய்விட்ட சூழலில் அந்தக் குடும்பத்தினர் விருந்துமொய் நடத்திப் பணம் சேர்க்கும் வழக்கம் உள்ளது. சாப்பிட வருகிறவர்கள் சாப்பிட்ட பிறகு இலைக்கு அடியில் தங்கள் மொய்யை வைத்து விட்டுச் செல்வர். விருந்து மொய் நடத்தியவர் அவர் எச்சில் இலையைத் தானே எடுத்துவிட்டுப் பணத்தையும் எடுத்துக்கொள்வர். வறுமை நீங்கிய பிறகு குடும்பத்தினர் மொய்ப் பணத்தை உரியவர்களுக்குத் திருப்பிச் செலுத்தியாக வேண்டும். மொய் என்பது பொதுவாகக் குடம், பதிவேடு, நேரடியாகப் பெறுதல் மூலமாகப் பெறப்படுவது மரபு. எச்சில் இலைக்கு அடியில் வைத்துப் பெறப்படுதல் என்பது விருந்து மொய்க்கு மட்டுமே உரியது. பணம் என்ற ஒரே காரணத்துக்காக நடத்தப்படும் விருந்து என்ற இழிவு கருதி விருந்துமொய் எச்சில் இலைக்கு அடியில் விடப்படுகிறது. விருந்தே வைக்காமல் பண உதவியைப் பெறும் ஒரு முறையை உருவாக்காமல் விருந்து வைப்பது என்ற செலவுபிடிக்கும் வேலையை வறுமைக் குள்ளான ஒருவர் செய்யவேண்டியதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. உணவுக்கே வழியில்லாத ஒருவன் எல்லாருக்கும் உணவு படைக்கும் வேலையைச் செய்யச்சொல்லும் ஒரு நடைமுறையை ஒரு சமூகம் உருவாக்கியிருக்கிறது. இதில் விருந்துமொய் வைப்பவர் தன்மானம் பாதுகாக்கப்படுகிறது என்றும் சொல்லலாம். ஒசியில் பணம் பெறவில்லை, விருந்துவைத்துத்தான் பணம் பெற்றிருக்கிறார் என்றாகும். விருந்துக்கு வந்திருப்பவர் எவ்வளவு பணம், நிதி அளிப்பார் என்பது ஒரு எதிர்பார்ப்புத்தான். அது எவ்வளவு முழுமையாக நிறைவேற்றப்படும் என்பது தெரியாது.

"எச்சிக் கல்லை நாயே" என்று சார்ந்து வாழும் ஒருவரைத் திட்டுவது மரபாக உள்ளது. கல்லை என்பது உலர்ந்த சருகுகளால் செய்யப்பட்ட உணவு உண்பதற்கான ஒரு கலன். இந்த வசைச்சொல் உறைந்த வழக்காகத் தொடர்ந்து வருகிறது. எச்சில் இலைகளில், குப்பை தொட்டிகளில் கழிவாக எறியப்பட்ட உணவுகளை உண்ணும் வறிய மக்கள் இன்னும் இருந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

ஒருவர் பிறர் வீடுகளில் உண்ட சிற்றுண்டியில், குடித்த திரவ உணவில் கொஞ்சம் மீதி வைப்பது மரபாக உள்ளது. அவர் தனது வீட்டில் அப்படி மீதி வைத்தால் அதற்காகக் கண்டிக்கப்படுவதும் உண்டு. பிறர் வீடுகளில்

ஒருவர் உணவு உண்ணும்போது சோறு, கூடுதலாக வைக்கப்படும் காய் வகை உணவுகளையும் மீதி வைக்காமல் உண்பது இலக்கணமாகப் பார்க்கப்படுகிறது. உணவு பரிமாறும்போது சில முறை பரிமாறுதலுக்குப் பிறகே அவர் மீதிவைக்காமல் உண்டவராகிறார் என்பதால் அவர் வயிறு நிறைந்து இச்சை தீர்ந்து விட்டது என்று விருந்தோம்பியவர் கருதிக்கொள்ள முடியும். சிற்றுண்டியில் அதற்கு வாய்ப்பு இல்லை. சிற்றுண்டி வழங்கப்படுவதற்கு மட்டுமே உரியவர் என்று ஒருவர் வீட்டினரால் கருதப்படும்போது அவர் மேலும் சிற்றுண்டி தேவைப் படுவதாக உணர்த்துவது பண்பாடானது அன்று. அதனாலும் சிற்றுண்டி யில் எச்சிலாகக் கொஞ்சம் மீதி வைக்க வேண்டியுள்ளது. இப்படி மீதி வைப்பதன் மூலம் விருந்தோம்பியவரால் விருந்தோம்பப்பட்டார் என்ற கருத்துத் தோன்றுகிறது. விருந்தோம்பியவர் விருந்தோம்பப்பட்டவரால் கௌரவப்படுத்தப்பட்டவராகிறார்; தன்னையும் கௌரவப்படுத்திக் கொண்டவராகிறார்.

எந்த நிகழ்வு நடக்க வேண்டுமோ, அந்த நிகழ்வின் மாதிரியைப் பாவனைச் சடங்குகளில் முன் கூட்டியே நடத்திக் காட்டுவர். உண்ணும் போது கையையோ, கலனையோ வழித்து எடுத்து நக்கிச் சாப்பிடுவது பொதுவாகக் கண்டிக்கப்படும். வேறு உணவு இல்லாத வறியவர்கள்தான் அவ்வாறு இச்சை கொண்டு நக்கி உண்பார்கள் என்று ஒரு கருத்து உள்ளது. வளமானவர்கள் நக்கி உண்பது என்பது அவர்கள் நக்கி உண்ணும் அளவிற்கான வறுமையைக் கொண்டு வந்துவிடுவதற்குக் காரணமாகிவிடும் என்று கருதப்பட்டு அச்செயல் கண்டிக்கப்படுகிறது. "நக்கிச் சாப்பிடாதே, பொழைப்பு நக்கிப் போகும்" என்பது சொல் வழக்கு.

கூழ் காய்ச்சிக் குடித்துவிட்டு அது வெளியாருக்குத் தெரியாமல் இருப்பதற்காக அக்கிரகாரப் பிராமணர் சிலர் இலையில் நெய்தடவி எச்சில் இலை போல வாசலில் போட்டு வைத்திருப்பர் என்று ஒரு கருத்துக் கிராமத்தவரிடம் உண்டு. நெல் சோறு, பருப்பு நெய் விட்டுச் சாப்பிடப் பயன்பட்ட இலை இங்கு உள்ளது. வசதியான உணவு வகை களை வறியவர் பார்வைபடாது சாப்பிடுகிறவர்கள்தான் இருக்கிறார்கள். எச்சில் இலை மூலம் தங்கள் வறுமையை மறைக்கும் முயற்சி, அந்த எச்சில் இலை மூலம் வளமை வெளிப்படும் என்பதால் நடக்கிறது.

பெரிய உணவு விடுதிகளில் சிற்றுண்டி ஒவ்வொன்றையும் தனித் தனிக் கலனில் கொண்டு வந்து பரிமாறும் வழக்கம் வந்துவிட்டது. அடுத்த வகை உணவைச் சாப்பிடும்போது முதலில் சாப்பிட்ட பொருளின் மிச்சம், எச்சில் இருக்கும் என்பதால் வேறு தனித்தட்டில்

பரிமாறுகிறார்கள். உண்பவர்களைக் கௌரவப்படுத்தும் ஒரு முறையே இது. வெவ்வேறு உணவுப் பொருள்களை ஒரே நேரத்தில் ஒரே கலனில் பரிமாறும்போதுகூடத் தனித்தனியாக வைத்துப் பரிமாறுவது நாகரிகமானதாக உள்ளது. பிச்சை எடுப்பவர் ஒன்றிரண்டு கலனைக் கொண்டிருப்பார்கள் என்பதால் எல்லா உணவு வகைகளையும் அவற்றில் அவர்கள் பெற வேண்டியிருக்கும். ஒரே கலனில் இட்லி, சோறு, சாம்பார், ரசம் எல்லாவற்றையும் வாங்கிச் செல்வதுண்டு. பல வீடுகளில் ஒரே கலனில் வாங்கப்பட்ட உணவு பல சோறு என்று அழைக்கப்படுகிறது. தொண்டைக்குக் கீழ் போனால் எல்லா உணவு வகைகளும் ஒன்றாகி விடும் என்றும் நரகல்தான் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள் அவர்கள். வறுமைக்கும் உணவுப் பொருள்களை இவ்வாறு கலந்து உண்பதற்கும் தொடர்பு உள்ளது. ஒவ்வொரு உணவுப் பொருளின் சுவையையும் தனித்தனியே பகுத்து உணரவேண்டும் என்பது வளமானவர்களின் நோக்கமாக உள்ளது. சாம்பார், ரசம், மோர் முதலானவற்றுடன் சோற்றைத் தனித்தனியே தட்டுக்களில் இனிப் பரிமாறக்கூடும். மேலான உணவு விடுதிகளில் இட்லி, தோசை, பூரி ஒவ்வொன்றை உண்ணும்போதும் ஒருவருக்கு வேறு வேறு தட்டுகளில் பரிமாறப்படுகின்றன. தன் எச்சிலாக இருந்தபோதும் வேறு வேறு உணவை ஒரே தட்டில் பரிமாறக்கூடாது என்ற நிலை இருக்கிறது.

புறவெளி - அகவெளி

உடலிலிருந்து வெளியேறும் கழிவுகளில் ஒவ்வொன்றுக்கும் ஒரு மதிப்பு உள்ளது. எச்சிலைவிடச் சிறுநீரும் சிறுநீரை விட மலமும் இழிவானவை என்பதால் அவற்றை அப்புறப்படுத்தும் தொலைவு ஒவ்வொன்றுக்கும் கூடுதலாகிறது. நூலகங்களில், அலுவலகங்களில் இருந்தபடியே மூக்குச் சிந்தி, எச்சில் துப்புகிறவர்கள் தனது, பிறர் வீடு களில் அப்படிச் செய்யாதவர்களாக இருக்கலாம். பொது இடங்கள் அவ்வாறுதான் நடத்தப்படுகின்றன. தன்னிலிருந்து உருவாகும் கழிவுகளைத் தன் உடல், தன் உடைமைகள், தன் உறவுகளைவிட்டு அப்பால் கொண்டு சென்றுவிட வேண்டும் என்று சுயநலம் மிக்க மனிதன் கருதுகிறான். வாந்தி, சளி முதலானவற்றைத் துண்டு, கைக்குட்டை முதலானவற்றில் பிடித்து வீட்டில் துவைத்துக்கொள்ளும் நாகரிகம் இன்னும் இங்குச் சிறிதளவுகூடப் பரவவில்லை. உலகம் என்ற சூழலை மக்கள் பார்க்கின்ற பார்வையில் வேறுபாடு உள்ளது. குற்றவாளிகளை நாடு கடத்துவதற்கும் தண்டித்துச் சிறையில் தள்ளுவதற்கும் வேறுபாடு உள்ளது. சமூகம் தனது எல்லைப் பரப்பிலிருந்து குற்றவாளியை

நாடு கடத்தும்போது சமூகம், உலகம் என்ற இரண்டும் முரண்களாக முன்னிறுத்தப்படுகின்றன. குற்றவாளி தனது சமூகப் பரப்பு அல்லாத பரந்த உலகப் பரப்பில் முன்பு போலச் செயல்பட முடிந்தவனாகிறான். குற்றவாளி சிறையிலடைக்கப்படும்போது சமூகம், உலகம் என்ற இரண்டும் முரணாகின்றன. பொது இடங்களில் எச்சில் முதலான கழிவு களை வெளியேற்றுவது உலகச் சூழலை அன்னியமாகப் பார்த்ததாலேயே வருகிறது. தனது நெருக்கடி தீர்ந்தால் போதுமானது என்ற சுய நலத்தாலும் அறியாமையாலும் வருகின்றது. பொது இடங்களில் சராசரி மனிதன் தனது உடலை மட்டுமே அகவயமான பொருளாகக் கருதுகிறான். அவ்விடங்களைப் புறவயமாகக் கருதி எச்சில் துப்புகிறான். யார் எக்கேடு கெட்டால் என்ன என்பதே அவன் கருத்து.

எச்சில் பொருள் கழிவாகும்போது அதை நீக்கவும் தூய்மைப்படுத்தவும் உரியவர்களாக அதிகாரம், சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் உள்ளாகிறார்கள். கணவன், குழந்தைகள் சாப்பிட்ட இலைகளை மனைவி பொதுஇடம் என்றுகூடப் பார்க்காமல் எடுத்துப் போடுகிறாள். மலையாளக் குடும்பத்தினர் உண்ணும் போது அவ்வாறு கணவன் தன் மனைவி உண்ட இலைகளை எடுத்துப் போடுவதைப் பார்க்க முடிந்தது. இந்த ஒன்றில் மனைவியர் கேரளாவில் உரிமை, விழிப்புணர்வு பெற்றவர் என்றோ, கணவர் சம உரிமை அளிப்பவர் என்றோ கருதிக் கொள்ளலாம். குடும்பத்தில் எச்சில் பட்ட பொருள்களைப் பெண்கள் கையாள்கின்றனர். பெரிய விருந்து, விழா முதலான சமூக நிகழ்வுகளில் வர்க்க, சமூக ஒடுக்குமுறைக்கு உள்ளானவர்களே கையாள்கின்றனர்.

உணவை உண்பதற்கும் அது செறிப்பதற்கும் தேவையான ஒரு திரவப் பொருளாக எச்சில் சுரக்கிறது. அது தூய்மைக்கேடு அடையும் நிலையிலேயே கழிவுப் பொருளாக வெளியேற்றப்பட வேண்டியதாக உளளது. ஒருவரது எச்சில் இயல்பான நிலையில் இருந்தாலும் அது பிறருக்கு நோயைக் கடத்தக்கூடிய ஒரு பொருளாகக் கருதப்படுகிறது. உடலின் ஒரு இயல்பான, எளிதாகப் பிரிக்க முடிந்த பொருள் என்பதால் எச்சில் மருந்துப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. வழுவழுப்புத் தன்மையால் அது ஒரு பசைப் பொருளாகவும் உயவுப் பொருளாகவும் பயன்படுகிறது. உடலிலிருந்து வெளியேற்றப் படும் எந்த ஒரு பொருளும் கழிவுப் பொருளுக்குரிய மதிப்பற்ற தன்மையை அடைந்து விடுகின்றது. எச்சிலுடன் தொடர்புபட்ட பிற பொருள்களுக்கும் எச்சிலுக்குரிய மதிப்பே ஏற்படுகிறது. மனித உடல் மொழியில் எச்சில் பல பொருண்மைகளைக் கொண்ட ஒரு

பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. நெருக்கம் உடையவர்கள் எச்சில்பட்ட உணவுப் பொருள்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள். நெருக்கமானவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ள விரும்புகிறவர்கள் எச்சில் உணவுகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அதிகார உணர்வு, வெறுப்புணர்வு முதலானவை எச்சில் துப்பி உணர்த்தப்படுகின்றன. அச்ச உணர்வில் எச்சில் விழுங்கப்படுகிறது. எதிர்ப்புணர்வைக் காட்டவும் எச்சில் காறித் துப்பப்படுகிறது. இழிவுப்பொருளாக இருக்கும் எச்சில் பொருள் அதை வழங்குவோர் தெய்வத்தோடு தொடர்புடையவராக இருந்தால் புனிதப் பொருளாகிறது. தெய்வப் படையல் பொருளாக வைத்து உண்ணப்பட்ட பிறகு மிஞ்சும் உணவுப் பொருள் புனிதப் பொருளுக்குரிய மதிப்பையே பெறுகிறது. எச்சில் உடலிலிருந்து உற்பத்தியாகும் பொருள் பண்புகளைத் தொடர்புபடுத்தவும் ஒரு குறியீட்டுப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

துணை நூல்கள்

1. சிவசுப்பிரமணியம் ஆ., (தொகுப்பு), 2004, நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம்; தொகுதி, 10, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
2. ஞானசேகரன்.தே., 2000, மந்திரம் சடங்குகள் சமயம், பார்த்திபன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.
3. ஞானசேகரன் தே., 1984, வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய நாட்டுப்புறப் பாடல்கள்; பின்னிணைப்பு, மதுரை காமராசர் பல்கலைக்கழக எம்.ஃபில் ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

தகவலாளர் பட்டியல்

1. ஈஸ்வரன்.பா., (21), ந.லட்சுமிபுரம், திருவில்லிப்புத்தூர், விருதுநகர் மாவட்டம்.
2. கீதா.டி., (22), சென்னிமலை, ஈரோடு மாவட்டம்.
3. சங்கீதா.பா., (22), அவல்பூந்துறை, ஈரோடு மாவட்டம்.
4. டென்னிஸன் கஷ்மீர் ராஜா., (22), போத்தனூர், கோவை.
5. பவித்ரா. இரா., (22) வால்பாறை, கோவை மாவட்டம்.
6. பிரபு.செ., (21), ஈரோடு.
7. ரவி.என்., (40), ராஜகோபாலபுரம், நத்தம், திண்டுக்கல் மாவட்டம்.
8. ரங்கநாதன்.ரா., (24), காட்டுப்பாளையம், அந்தியூர், ஈரோடு.
9. ராஜசேகர்.கு., (23) சித்தேரி, சேலம்
10. யுவராணி.ஈ., (21), எண்ண மங்கலம், அந்தியூர், ஈரோடு மாவட்டம்.
11. மைதிலி.ம., (22), மேட்டுப்பாளையம், கோவை மாவட்டம்.

8

இருளர் விளையாட்டுகள்: மெய்ப்பாட்டியல்பொருண்மைகள்

பண்ணை என்ற சொல்லிற்கு விளையாட்டு என்ற பொருண்மை யைத் தொல்காப்பியம் (தொல். உரியியல். 21) தருகிறது. விளையாட்டு ஆயம் என்ற பொருண்மையை இளம்பூரணரும், மன்னரது ஆடல் மகளிருட னான கலை தொடர்பான காம நுகர்வு நிகழ்வுகள் என்று பேராசிரியரும் (தொல். மெய்ப்பாட்டியல். உரை. 1) பொருண்மை தருகின்றனர். பண்ணை என்பது மனிதர் குழுமி இருக்கும் இடம் என்ற பொதுவான பொருண்மை இருக்கிறது. ஆட்டுப் பண்ணை, மாட்டுப் பண்ணை, பால் பண்ணை, சர்வோதய இலக்கியப் பண்ணை என்றவாறான வழக்குகள் இன்றும் உள்ளன. பண்ணையாள், பண்ணைக்காரன் என்று விவசாயத் தொழிலாளிகள் குறிப்பிடப்படுகின்றனர். மெய்ப்பாடு என்பது நிகழ இரு தளங்கள், இரு முனைகள் தேவை. இடையில் உடல் மெய்ப்பாடு உணரப்படவும் உணர்த்தப்படவும் தேவையானது. ஆக இந்த மூன்று வேறு பகுப்புகள் இருந்தால்தான் மெய்ப்பாடு நிகழமுடியும். எந்த ஒரு மக்கள் கூடியுள்ள இடம், அல்லது இரண்டு பேரும் அதற்கு மேற்பட்டவர்களும் இருக்கும் அந்தரங்கம் மெய்ப்பாடு நிகழ உள்ள சூழலாக இருக்கமுடியும். தனி ஒருவர் விளையாட முடியாது. எனவே, விளையாட்டு என்பதும் பண்ணை என்ற பிரிவில் சேரும். விளையாட்டிலும் காம நுகர்விலும் கூத்து, நாடகம் முதலான கலை நிகழ்வுகளிலும் நோ்ந்த மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியம் தொகுத்துப் பட்டியலிட்டு மெய்ப்பாட்டியலில் விளக்கியுள்ளது என்று உரைகள் விளக்குவது பொருத்தமாகப்படவில்லை. அகத்திணைக் குரிய மெய்ப்பாடுகள் என்று தனியே பிரித்துத் தொல்காப்பியம் விளக்கியிருந்தாலும் மெய்ப்பாட்டியலில் விளக்கப்பட்ட பெரும்பாலான மெய்ப்பாடுகள் ஒட்டுமொத்த வாழ்வுக்கும் உரியவை.

நாடகம், மரபு விளையாட்டு என்ற இரண்டும் பொதுவாக வாழ்வியல் நிகழ்வுகளை மீண்டும் நிகழ்த்திக்காட்டுவனவாக உள்ளன. நாட்டுப்புற விளையாட்டில் வெளிப்படும் சமூக நிகழ்வுகள் அந்த விளையாட்டுகளை நாடகம்போலவே கருதச் செய்கின்றன. எனவேதான் நாடகம், கூத்து முதலானவற்றைக் களமாகக் கொண்டு வழக்கமாகப் பேசப்படும் மெய்ப்பாடுகளை விளையாட்டு என்ற களத்திலும் வைத்துப் பேசவேண்டியிருக்கிறது. கோவை தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில் வனத்துறை இருளர் பழங்குடியினருக்காக அமைத்துக் கொடுத்த அட்டுக்கல் கிராம இருளர் சிறுவர்களிடமிருந்து 24 விளையாட்டுகள் தரவுகளாகச் சேகரிக்கப்பட்டன. அந்தத் தரவுகளிலிருந்து பின்வரும் கருத்துக்கள் பெறப்படுகின்றன.

சிறுவர்கள் நாட்டுப்புற விளையாட்டுகளில் தங்கள் வாழ்வியலையும் சமூக நிகழ்வுகளையும் இயற்கையுடனான உறவுகளையும் பதிலீடு செய்கிறார்கள். நாட்டுப்புற விளையாட்டுக் களம் ஒரு நாடக அரங்குபோல இருக்கிறது. நவீன விளையாட்டுகளில் இந்த நாடக அரங்குத் தன்மை இருப்பதில்லை. சடங்குத் தன்மை இருப்பதில்லை. மன உலகில் உள்ள ஒரு நிகழ்வை, வரையறை செய்துகொண்ட ஒரு புற உலக எல்லைக்குள் நிகழ்த்திப் பார்ப்பவைகளாக நாட்டுப்புற விளையாட்டுகள் உள்ளன. மனம், உலகு என்ற இரு முரண்பட்ட தளங்களின் ஒருங்கிணைப்புகளாக நாட்டுப்புற விளையாட்டுகள் உள்ளன. நாட்டுப்புற விளையாட்டுகள் சிறுவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய வாழ்வியல் ஒத்திகைகளாகவும் உள்ளன.

சிறுவர்கள் விளையாட்டுகள் என்றாலும் அவற்றில் சிறுவர்கள் பாத்திரங்களாக வெளிப்படுவதோடு குடும்பம், சாதி, சமூகம், சூழல்களில் உள்ள கருப்பொருள்கள் காலம் முதலான எல்லாம் பொருள்படக் கலந்துள்ளன.



சிறுவர்களின் விளையாட்டு உலகத்தில் இந்த எல்லாக் கூறுகளுக்கும் இடம் உள்ளது. சிறுவர்கள் இந்தக் கூறுகளின் சூழலில், இந்தக் கூறுகளாகத் தங்களை மாற்றிக் கொண்டு விளையாட்டுக்களை அமைத்துள்ளார்கள். பொழுது போக்கு என்ற ஒரு காரணத்திற்காகச் சிறுவர்கள் இந்த விளையாட்டுக்களை விளையாடினாலும் வலுவை அறிதல், அறிவை அறிதல் முதலான வேறு பல காரணங்களும் உள்ளன.

கொம்பேறி மூக்கன் என்ற விளையாட்டு: ஆண், பெண் சிறுவர்கள் கலந்து எத்தனை பேரும் விளையாடலாம். ஒருவர் சிக்கியாக இருப்பார். அவர் மற்றவர்களை ஒவ்வொருவராக அனைவரையும் தொட வேண்டும். மரத்திலும் அதைச் சுற்றிய நிலத்திலும் இந்த விளையாட்டு நடைபெறும். மரத்தடிக்கு அருகில் ஒருவர் நிற்பதற்குத் தகுந்த வட்டம் ஒன்று வரையப்படும். அந்த வட்டத்திலிருந்து ஒன்றிரண்டு அடி நீளமுள்ள குச்சி ஒருவரால் முடிந்த தூரத்தில் எறியப்படும். அவர் குச்சியை எறிந்துவிட்டு மரத்தில் ஏறிக் கொள்வார். பிறர் முன்பே மரக்கிளைகளில் ஏறி இருப்பார்கள். எறியப்பட்ட குச்சியைச் சிக்கி ஓடி எடுத்து வந்து வட்டத்திற்குள் வைத்துவிட்டு மரத்தில் ஏறி ஒவ்வொருவராகத் தொட வேண்டும். சிக்கி அவ்வாறு தொடும் முயற்சியில் ஈடுபடும்போது யாராவது ஒருவர் கீழே இறங்கி வட்டத்திற்குள் வைக்கப்பட்ட அந்தக் குச்சியை மீண்டும் தொலை தூரத்திற்கு எறிந்து விடுவார். குச்சி மரத்தடியில் உள்ள வட்டத்திற்குள் இல்லையென்றால் சிக்கி யாரையும் தொடக்கூடாது. தொட்டாலும் தொடப்பட்டவர் ஆட்டமிழக்கமாட்டார். சிக்கி மீண்டும் மரத்திலிருந்து இறங்கி, ஓடிக் குச்சியை வட்டத்திற்குள் எடுத்து வைத்துவிட்டுத் தொடும் முயற்சியில் மீண்டும் ஈடுபட வேண்டும். சிக்கி எவ்வளவு வலுவானவர் என்றாலும் களைத்துப்போய்விடுவார். அவர் தன் முனைப்பு அழிந்து, களைத்துப் போக வேண்டியிருக்கும். குழுவினர் ஒரு தனிச் சிறுவர்/ சிறுமியை இரங்கத்தக்க நிலைக்கு உள்ளாக்கும் விளையாட்டு இது. இந்த விளையாட்டை விளையாடுவதற்குக் குறைந்தது மூன்று பேராவது இருக்கவேண்டும். ஒருவர் சிக்கி. அதாவது தொடுபவர். மற்ற இரண்டுபேரும் தொடப்படுபவர்கள். தொடப்படுபவர் இருவர் இருந்தால்தான் ஒருவரைச் சிக்கித் தொட முயற்சிக்கும்போது, மற்றவர் குச்சியை வட்டத்திற்கு வெளியில் விட்டெறியமுடியும்.

இந்த விளையாட்டில் விளையாட்டுக் களம் என்பது திறந்த நிலையில் இருக்கிறது. வட்டம், குச்சி என்ற இரண்டும் விளையாட்டுக் களத்தின் மையம் என்றால் விளிம்பு எதுவுமில்லை. தொடப்படுபவர் மையத்தை விட்டு எவ்வளவு தூரமும் ஓடலாம். ஆனால் தொடப்படுபவர் குச்சியை மையத்திற்குள்ளிருந்து எடுத்து தொலைவுக்கு எறியவேண்டிய நிலையில்

இருப்பவர். எனவே அவர் வட்டத்திலிருந்து விலகிச் செல்லமுடியாது. விரட்டப்படும் நிலையில் இருத்தலை தொடப்படுபவர் தொடர்ந்தும் விட்டு விட்டும் உருவாக்கிக்கொண்டிருப்பது அவர் தொடர்ந்து ஆட்டத்தில் ஈடுபாட்டோடு இருப்பதைக் காட்டும். ஏதேனும் ஒரு மரத்தில் ஏறி அமர்ந்துகொள்வது விளையாட்டில் செயல்படாத நிலைக்குப் போய்விடும்.

கொம்பேறி மூக்கன் விளையாட்டில் பல்வேறு முரண்பொருண்மைகள் உள்ளன. இயல்பான தரைத் தளமும் உயரமான மரத்தளமும், வட்டம் என்ற அகவெளியும் தொடப்படவேண்டிய புற வெளியும், இயக்கம் என்ற தொடுதலும் நிலையானது என்ற வட்டம்-குச்சி உறவும் முதலானவை இணைமுரண்களாகும். வட்டத்திற்குள் குச்சி நிலைத்திருந்தால் மட்டுமே சிக்கி இயங்கமுடியும். உயிர்ப்புடையவராக முடியும். குச்சி வட்டத்தை விட்டு வெளியே எறியப்படும்போது, சிக்கி தொடுவதற்குரிய தகுதியை இழப்பவராகிறார். வட்டம், மரம் என்ற இரண்டும் நிலைத்திருப்பவைகளாகும். குச்சி இயக்கமுடையது. பிற ஆட்டக்காரர்கள் இயக்கமுடையவர்கள். குச்சி வட்டத்திற்குள் இருக்கும்போது, சிக்கி இயக்கமுடையவர். குச்சி வட்டத்திற்குள் இல்லாதபோது, சிக்கி இயக்க மற்றவர். சிக்கித் தன்னை இயக்கமுடையவராக்கச் செயல்படும்போது அவர் மற்றவர்களைத் தொட்டு ஆட்டமிழக்கச் செய்யமுடியாது. ஒருவர் மரத்தில் ஏறி மற்றவர்களைத் தொட்டு ஆட்டமிழக்கச் செய்யவதற்குரிய வலிமையைப் பெற்றிருந்தாலும் அந்த வலிமை போதுமானது அன்று. வட்டத்திற்குள் குச்சி இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். அதாவது மற்றொரு தகுதி இருந்தால்தான் ஒரு தகுதியைப் பெறமுடியும். வாழ்வியலின் நிபந்தனைகளை இந்த விளையாட்டு உருவகமாகத் தருகிறது. அழகு, நிதி, சாதி, மதம், வயது, பால், உறவு, முதலான நிபந்தனைகள் இந்த விளையாட்டில் அருவமாக மறைந்திருக்கின்றன.

பூப்பறிக்க வருகிறோம் விளையாட்டு: இரு குழுக்களாகப் பிரிந்து கொண்டு விளையாடும் போதும் மோதல் என்பது தனித்த இருவருக்கு இடையில் நடப்பதாகவும் அமைந்து விடுகிறது.இரண்டு அணியினர் சம எண்ணிக்கையில் பிரிந்து கொள்கின்றனர். சம வலுவுள்ளவர்கள் எதிர் எதிர் நிற்குமாறு இரு வரிசையாக இரு அணியினரும் நிற்பர். ஒரு அணி பின்வாங்கும்போது மற்றொரு அணி முன்னேறிப் பின்வாங்கும் அணியின் குறித்த எல்லைவரை செல்லும்.

அப்போது இரு அணியினரும் உரையாடலாக அமைந்த பாடலைப் பாடுவர்.



அணி X: பூப்பறிக்க வருகிறோம்; பூப்பறிக்க வருகிறோம்;

அணி X: எந்த மாசம் வருகிறோம்; எந்த மாசம் வருகிறோம்;

X: ஆடி மாசம் வருகிறோம்; ஆடி மாசம் வருகிறோம்;

Y: யாரை அழைக்க வருகிறோம்; யாரை அழைக்க வருகிறோம்;

X: சந்திரனை அழைக்க வருகிறோம்; சந்திரனை அழைக்க வருகிறோம்.

Y: சீனிவாசனை அழைக்க வருகிறோம்; சீனிவாசனை அழைக்க வருகிறோம்.

X2, y2 என்ற இருவரது பெயரையும் பாட்டிலேயே சொல்லி விடுவார்கள். அவர்கள் தங்கள் பாதங்களை நடு எல்லையில் அழுத்தமாக ஊன்றிக் கொண்டு கைகளைப் பிடித்துத் தங்கள் எல்லைக்குள் ஒருவரை மற்றொருவர் இழுப்பார்கள். இழுக்கப்பட்டவர் அணி இழுத்தவர் அணிக்கு ஒரு வெற்றிப் புள்ளி வழங்க வேண்டும். விளையாட்டுகளில் வெல்பவர் சிறுவர்களிடையே வலு உள்ளவராகவும் அதிகாரம் கொண்டவராகவும் அறியப்படுகிறார். மதிக்கப்படுகிறார். சிறுவர் குழுவில் உள்ள வலு, அதிகாரப் படிநிலைகளைத் தெரிந்துக் கொள்ள இந்த விளையாட்டுக்கள் துணை செய்கின்றன.

எதிர்க்குழுவில் உள்ளவர்களை ஒவ்வொருவராக ஆட்டமிழக்கச் செய்வதன் மூலம் எதிர்க்குழுவை இல்லாமல் செய்யும் செயல் இது.

சீப்பு விளையாட்டு: ஒரு குடும்பத்திற்குள் உறவுகளில் உள்ள மேலாதிக்கச் சிக்கல்கள் விளையாட்டில் வெளிப்படுகின்றன.சிறுவர்களும் சிறுமிகளும் சேர்ந்து விளையாடும் விளையாட்டு இது. ஒருவரை ஒருவர் எதிரெதிரே பார்த்துக்கொண்டு வட்டமாக அமர்ந்துகொள்கிறார்கள். எல்லோரும்

தங்கள் கால்களை உள்புறமாக நீட்டி அருகில் அமர்ந்திருப்பவரின் பாதங்கள் ஒன்றை ஒன்று பக்கவாட்டில் தொடுமாறு அமர்ந்து கொள்கிறார்கள். இவ்வாறு அமரும்போது, குதிகால் தரையில் பட, கால் விரல்கள் மேல்நோக்கியிருக்க எல்லாருடைய பாதங்களுக்கு இடையில் வட்ட வடிவம் தோன்றுகிறது. பாதங்களுக்கு இடையில் அமைந்த வட்டம் கிணறு எனப்படுகிறது.ஒன்றை ஒன்று பக்கவாட்டில் தொட்டுக் கொண்டிருக்கும்படி அமைந்த பாதங்கள் என்ற உள்வட்டத்தை இணைக்கும் ஆரக்கால்களாக உள்புறம் நீட்டப்பட்ட கால்கள் உள்ளன. விளையாட்டுக்கான களம் இது. விளையாட்டுக்கான களத்தைத் தங்கள் உடலைக்கொண்டு உருவாக்கிக்கொள்கிறார்கள்.



சீப்பு தனக்கு வேண்டும் என்று ஒவ்வொருவரும் அடுத்தவர் காதில் முணுமுணுப்பார்கள். அப்படி முணுமுணுக்கப்பட்டவர் மனைவியோ, கணவனோ, அண்ணனோ, அப்பாவோ, அம்மாவோ அடித்துவிடுவார்கள் என்று தன் காதில் முணுமுணுத்தவரிடம் சொல்வார்கள். ஆனால், கேட்ட சீப்பைக் கொடுத்துவிடுவார்கள். சிறிய சீப்புக்குப் பதில் மிகப் பெரிய சீப்பாகக் கொடுப்பதாகச் சொல்வார். அடுத்தடுத்து எல்லாரும் கேட்டு வாங்கிச் சீவிவிட்டு இறுதியில் சீவுபவர் நடுவில் உள்ள கிணற்றில் சீப்பைப் போட்டுவிடுவார். சீப்பு என்பது குச்சியாகும். இதே போல் கண்ணாடி, பௌடர்களும் வாங்கி எல்லோராலும் ஒப்பனைக்குப் பயன்படுத்தப்பட்டுக் கிணற்றில் போடப்படும். இறுதியில் "அனுமன்தான் செத்துப்போய்விட்டான்" என்று எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து கத்துகிறார்கள்.

அழகுபடுத்திக்கொள்வதற்குத் தெரிவிக்கப்படும் எதிர்ப்பை இந்த விளையாட்டுப் புலப்படுத்துகிறது. கிராமப்புறங்களில் உடல் உழைப்பு அடிப்படையாகும். அழகுபடுத்திக்கொள்பவர் உடல் உழைப்பை விரும்பமாட்டார். வியர்வை சுரத்தல், முடி ஒழுங்கு கலைதல்,

தோல் நிறம் மங்குதல், ஆடை கசங்கி அழுக்குப்படுதல் என்று உடல் உழைப்பின் விளைவுகள் உடல் அழகைக் குறைப்பனவாகும். உடல் நாற்றத்தை ஏற்படுத்துவனவாகும். உழைப்பில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் சமமாகவும் முழுதாகவும் ஈடுபடவேண்டும் என்பது எழுதப்படாத விதி; ஒழுங்குமுறை. அதை மீறுகிறவரைக் கண்டித்து ஒழுங்கிற்குள் கொண்டுவரவேண்டும் என்று குழுவில் உள்ள உழைக்கும் பண்புள்ள அனைவரும் விரும்புவர். கண்டிக்கப்படுபவர் கண்டிப்பவரைவிடச் அதிகார அடுக்கில் சற்றுத் தகுதிக் குறைவானவராக இருப்பார். தம்பியை அண்ணனும் மனைவியைக் கணவனும் மகனைத் தாயும் தந்தையும் மகளைத் தந்தையும் தாயும் கண்டிப்பதற்கு உரிமை உடையவராக இருக்கிறார். எனவே, விளையாடும் சிறுவர் தங்களை மகன், மகள், தம்பி, தங்கை, மனைவி என்று விளையாட்டில் பாவனை செய்துகொள்கிறார்கள். மனைவி, கணவன் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டிக்க உரிமை உடையவர்கள். எனவே விளையாட்டில் இருவரும் கற்பித்துக்கொள்ளப்படுகிறார்கள். அழகுபடுத்திக்கொள்வது பாலியல் விருப்பத்தின் வெளிப்பாடாகவும் பார்க்கப்படுகிறது. சிறுவர் முதல் வயதுக்கு வந்தவர், பெரியவர் வரை யாரும் அழகுபடுத்திக்கொள்வதில் செலுத்தும் மிகை அவர்கள் பாலியல் விருப்பத்தின் வெளிப்பாடாகிறது. பாலியல் உணர்வுகளைக் கட்டுக்குள் வைக்கவேண்டும் என்ற நோக்கிலும் ஒப்பனை செய்துகொள்பவர்கள் கண்டிக்கப்படுகிறார்கள். தாங்கள் கண்டிக்கப்படுவதை விரும்பாதவர்கள் தங்களைக் கண்டிப்பவர்மீது எதிர்ப்புக் காட்டமுடியாத நிலை உள்ளது. சற்று மேலான தகுதி உடையவராக கண்டிப்பவர் இருப்பவதால் அந்த எதிர்ப்பை வேறு ஒரு முறையில் வெளிப்படுத்திக்காட்ட வேண்டியிருக்கிறது. இந்த எதிர்ப்புணர்வு சிறுவர் விளையாட்டில் வெளிப்படுகிறது.

"அனுமன்தான் செத்துப்போய்விட்டான்" என்று விளையாட்டு முடிவில் அனைத்துச் சிறுவர்களும் ஒரே குரலில் ஓங்கிக் கத்தும்போது, அந்த எதிர்ப்புணர்வு வெளிப்படுகிறது. அழகியலுக்குச் சார்பான குரலாக அந்தக் குரல் ஒலிக்கிறது. அனுமன் என்பது ஒரு குறியீடு. அனுமன் வலிமையின் ஒரு குறியீடு. வலிமை என்பது குடும்பத்திற்குள்ளும் சமூகத் திற்குள்ளும் உள்ள கண்டிக்கும் தகுதியுள்ள ஒருவரின் உரிமை. தாய், தந்தை, அண்ணன், கணவன் முதலானவர்கள் செத்துப் போய்விட வேண்டும் என்று மகன், மகள், தம்பி, தங்கை, மனைவி முதலானவர்கள் அறிவுநிலையில் நின்று கருத வாய்ப்பு இல்லை. ஆனால் அதிகாரம் செலுத்துபவர்களின் இல்லாமை அதிகாரம் செலுத்தப்படுபவர்களுக்கு ஒரு விடுதலையைத் தருகிறது. உள்ளுணர்வு அடிப்படையில் அதிகாரம் செலுத்தும் உறவுகளின் குறியீடாக இருக்கும் அனுமன் சாக வேண்டும்

என்று விளையாட்டில் சிறுவர்கள் புலப்படுத்துகிறார்கள். குடும்பத் திற்குள்ளும் இனத்திற்குள்ளும் கண்டிக்கும் அதிகாரமுள்ள ஒருவர் செத்துப் போய்விட வேண்டும் என்று சிறுவர்கள் கருதுவதன் வெளிப்பாடு இந்த விளையாட்டு. அழகியலுக்குச் சார்பானது மட்டுமன்று; இது அதிகார எதிர்ப்பின் ஒரு வெளிப்பாடுமாகும். அனுமன் குறித்த கருத்து இருளர்களிடம் எவ்வாறு இருக்கிறது என்பது ஆராயப்பட வேண்டியது. மலைகளைத் தூக்கிச் சென்றவன் அனுமன் என்பதும் அட்டுக்கல் இருளர் மலைவாழ் மக்களாக இருப்பதும் கருத்தில் கொள்ளப்படவேண்டியனவாகும்.

சம்பந்தி விளையாட்டு: இரு குடும்பங்களுக்கு இடையில் உள்ள மண உறவும் விளையாட்டாக வருகிறது. மணமகன், மணமகள் குடும்பத்தில் யார் குடும்பம் உயர்வு என்று காட்டும் மரபு சிறுவர்களிடம் விளையாட்டாக வெளிப்படுகிறது. சம்பந்திகள் எதிர் எதிரில் அமர்ந்து கொள்கிறார்கள். இடையில் மணமகனையும் மணமகளையும் அமரவைத்துக்கொள்கிறார்கள்.



சம்பந்திகள் நான்கு பேரும் தங்களுக்குள் மாறி மாறிக் கைகொடுத்துக் குலுக்கிக்கொள்வார்கள். பிறகு மணமகன், மணமகள் இருவரும் கைகுலுக்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்கள். பின்வரும் பாடலைப் பாடுவார்கள்.

நாக்கே நக்கேனோ
சிணுக்கோத்தி முன்னாலே

கந்தோட்ட தொட்டாமோ
நந்தவன ஜோ

இந்தப் பாடலைச் சொல்லிக் கொண்டு மணமகளை அவள் பெற்றோரும் மணமகனை அவன் பெற்றோரும் தோளில் வைத்துக் கைகளால் தலைக்குமேல் உயரத் தூக்குவார்கள். யார் அதிக உயரம் தூக்கினார்களோ

அவர்களே உயர்ந்த, செல்வாக்கான வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொள்வர். உயரத் தூக்கிய அணி வெற்றி பெற்ற அணியாகும்.

கொள்பவர், கொடுப்பவர் என்ற மண உறவில் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர் சமூகத் தகுயில் கூடுதலானவர் என்ற போட்டி இரு குடும்பங்களுக்கு இடையில் இருப்பது சடங்கு முறைகளிலும் பரிசுப் பொருள் செய்முறைகளிலும் புலப்படும். அதைச் சிறுவர்கள் தங்கள் விளையாட்டில் காட்சி வடிவில் வெளிப்படுத்துகிறார்கள். திராவிட மரபில் மணமகள் குடும்பம் தகுதி கூடுதலான குடும்பமாக இருக்கவேண்டும் என்பது ஒரு பொது மரபாக இருக்கிறது. தகுதி கூடுதலான குடும்பத்தில் பெண் எடுக்கவேண்டும் என்பது ஒரு உள்ளுணர்வாக இருக்கிறது. சம நிலையில் வேறு நிலையில் உள்ள குடும்பங்களுக்கு இடையிலும் மண உறவுகள் நிகழ்கின்றன.

கோங்கரப் பொட்டியான் விளையாட்டு: வேற்றுச் சாதியினருடனான இருளர் உறவும் விளையாட்டாக வடிவம் பெறுகிறது: சிறுவர், சிறுமியர் சேர்ந்து பாவனையால் சமையல் செய்கிறார்கள். மண் சாப்பாடு, பெரியகல் கறி, இலை வெற்றிலை, சிறுகல் பாக்கு, குச்சி பீடி. பழைய சாப்பாட்டை வெளியில் கொட்டிவிட்டு வருமாறு அழகான சிறுமியைத் தேர்ந்தெடுத்து விளையாட்டுக் குழுவினர் அனுப்பி வைக்கிறார்கள். அந்தச் சிறுமியைத் ஏற்னவே தனியே சென்று அமர்ந்துள்ள கோங்கரப் பெட்டியான் கிள்ளி வைத்து விடுகிறான். யார் என்றே தெரியாத அவனை அழைத்து வந்து விருந்தோம்புகின்றனர். பிறகு, வெற்றிலை கொடுக்கும் முன்பும் பீடி கொடுக்கும் முன்பும் எந்தச் சாதியைச் சேர்ந்தவன் என்று அவனைக் கேட்கிறார்கள். மூன்றாம் முறை கேட்கும் போது கோங்கரப் பொட்டியான் "உங்களை வெட்டும் சாதி" என்று சொல்லிக் கொண்டு அனைவரையும் வெட்ட ஓடுகிறான். இருளர் சமூகமாக உள்ள மற்ற சிறுவர்கள் அவனது வெட்டிலிருந்து தப்பிக்க அவன் முன்பு அமர்ந்திருந்த இடத்தில் சென்று கையைக் கடித்துக் கொண்டு அமர்ந்து கொள்கிறார்கள். வெட்ட வந்த சாதிக்காரனுடன் இருளர் ஐக்கியமாதல் அதாவது கோங்கரப் பொட்டியானை தங்கள் இனத்தில் இருளர் சேர்த்துக் கொண்டதாகிறது.

தங்கள் இனப் பெண்ணிடம் பாலியல் வன்முறையில் ஈடுபடும் ஒருவனை, அவளை அவனுக்கே மணம்முடித்து வைத்து, தங்கள் இருளர் இனத்தில் அவனைச் சேர்த்துக் கொள்ளும் மரபு இருளர்களிடம் உள்ளதா என்று தெரியவில்லை. வெளி ஆட்கள் தங்கள் இனப்பெண்களில்

அழகானவர்களைச் சீண்டுவார்கள் என்ற கருத்து இருளர்களிடம் பதிவாகியுள்ளது இந்த விளையாட்டில் புலப்படுகிறது. வேற்று ஆள் அதிகாரம் கொண்டவனாகவும் தாங்கள் அதிகாரம் குறைந்தவர்களாகவும் கருதும் பண்பும் இருளர்களிடம் இருப்பது இந்த விளையாட்டில் புலப்படுகிறது. அகம், புறம் என்ற முரண்வெளி இந்த விளையாட்டில் உள்ளது. அகவெளிப் பெண், புறவெளி ஆண் என்ற முரண் ஒரு அகச் சமூகம் புறச் சமூகத்தைவிட வலுவற்ற நிலையில் இருப்பதைப் புலப்படுத்துகிறது. வலுவற்ற நிலையில் தாங்கள் இருப்பதாக அகச் சமூக மக்கள் கருதிக்கொண்டிருந்தால் மட்டுமே இவ்வாறான ஒரு விளையாட்டு ஒரு சமூகத்தில் உருவாகும். அகச் சமூகம் ஆதிக்கம் மிகுந்ததாக இருந்திருக்குமானால் அகவெளி ஆண், புறவெளிப் பெண் என்ற முரண் உறவு பால் வேறுபாட்டில் தோன்றியிருக்கும்.

ஆடு-புலி விளையாட்டு/சங்கிலி-புங்கிலி விளையாட்டு: இருளர் தாங்கள் வளர்க்கும் ஆட்டைப் புலியிடமிருந்து காப்பாற்ற முயற்சிப்பதாக ஒரு விளையாட்டு உள்ளது. மலைவாழ் சூழலை அடிப்படையாகக்கொண்டு இந்த விளையாட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்கள் வட்டமாகக் கைகோர்த்து நின்று கொள்கின்றனர். ஆடு நடுவில் நிற்கிறது. புலி வெளியே நிற்கிறது. புலிக்கும் சங்கிலி போல் கைகோர்த்த குழுவினருக்கும் இடையில் உரையாடல் நிகழ்கிறது.



புலி : சங்கிலி புங்கிலி கதவைத் திற

சங்கிலி: நான் மாட்டேன் வேங்கைப் புலி

புலி: ஆட்டுக் குட்டிய கண்டீங்களா

சங்கிலி: ஆமா

புலி : எங்கே

சங்கிலி: தோட்டத்திலே

புலி: உள்ளே வரலாமா? வரக்கூடாதா?

சங்கிலி : வரக்கூடாது

இதற்குப் பிறகு புலி வலுவாகக் கோர்க்கப்பட்ட கைகளால் ஆன சங்கிலியைப் பிரித்துவிட்டு உள்ளே நுழைய முயற்சிக்கும். வலுவாகப் பிணைத்துக்கொள்ளப்பட்ட கைகள் என்ற சங்கிலிகள் உள்ளே நுழைய வழிகொடுக்கா. மீறிப் புலி உள்ளே நுழையும்போது, மற்றொரு புறத்தில் சங்கிலி தளர்த்தப்பட்டு ஆடு வெளியில் விடப்படும். மீண்டும் பிணைத்துக்கொள்ளப்பட்ட சங்கிலி புலி வெளியில் செல்ல விடப்படாது. புலி வலிந்து வெளியேறி ஆட்டை அடிக்க முயற்சிக்கும். ஆடு மீண்டும் சங்கிலிக்குள் நுழையலாம். புலி உள்ளே இருக்கும்போது ஆடு வெளியேயும் புலி வெளியே இருக்கும்போது ஆடு உள்ளேயும் இருக்குமாறு விளையாட்டு மாறி மாறி நிகழும்.

காப்பாற்றுதல்-வேட்டையாடுதல், உள்ளே-வெளியே, ஆடு-புலி, வலு-வலுவின்மை, தடுத்தல்-வெளியேற்றுதல், இரை-உண்ணி, வளர்ப்பு விலங்கு- காட்டு விலங்கு, காடு-வீடு என்று இந்த விளையாட்டில் முரண்கள் நிறைந்துள்ளன. தங்களுக்கான இரையாக இருக்கும் ஆட்டைப் புலிக்கு இரையாகிவிடாது காப்பாற்றுவதாக இந்த விளையாட்டு உள்ளது. தொடரியல் உறவு நிலையில் பார்த்தால் புலியும் மக்களும் வினை நிகழ்த்தும் பொருள்கள். ஆடு செயப்படுபொருள். அது வேட்டையாடப்படும் பொருளாக புலிக்கும் பாதுகாக்கப் படும் பொருளாக மக்களுக்கும் இருக்கிறது. புலிக்கு ஆடு பிறிதின் கிழமைப் பொருளல்ல. மக்களுக்கு ஆடு பிறிதின் கிழமைப் பொருளாக இருக்கிறது. ஆடு மனிதர்களின் உணவுப் பொருள் என்பதால் பாதுகாக்கப்படுகிறது.

மலையிலே தீப்பிடிக்குது: மலை வாழ்க்கையில் உள்ள கேடு, அவற்றின் மீதான மக்களின் அச்சம் சிறுவர் விளையாட்டாக வெளிப்படுகிறது. அட்டுக்கல் இருளர் மலையில் வாழ்ந்தவர்கள். வனத்துறையால் மலை அடிவாரத்தில் குடியிருப்புக் கட்டிக்கொடுக்கப்பட்டுக் கீழிறங்கி வந்து அதில் வாழ்ந்து வருபவர்கள். தீப்பிடித்து மலை எரியும்போது தாங்களும் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் சிறுவர்களுக்கு ஏற்படும். பெரியவர்களுக்கும் ஏற்படலாம்.ஒட்டுமொத்த இருளர் சமூகத்தின் நனவிலி நிலையிலிருந்தும் சமகால வாழ்வுச் சூழலிருந்தும் அதை விளையாட்டு மூலம் சிறுவர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

சிறுவன்கள், சிறுமிகள் இருவரும் சேர்ந்து இதை விளையாடலாம். ஒருவர் தலைவர் போல் இருந்து கொண்டு

மழையிலே தீப்பிடிக்குது
பிள்ளைகளே ஓடிவாங்க

என்று அழைத்தவுடன் அனைவரும் வருவர். வரிசையில் நிற்பர். மீண்டும் தலைவர் போல் இருப்பவர் குரல் கொடுப்பார்.

தலைவர் குரல் ஆணை		குழுவினர் பாவனை
பரத நாட்டியம்	-	குழுவினர் நடனம் ஆடி அசைய வேண்டும்
முடியைப் பிடி	-	குழுவினர் முடி பிடிக்க வேண்டும்
பல்லுத் தேயி	-	குழுவினர் பல் விளக்க வேண்டும்
மூஞ்சி கழுவு	-	குழுவினர் முகம் கழுவ வேண்டும்
ஒன்று	-	அமர வேண்டும்
இரண்டு	-	இருவராகக் கட்டிப் பிடிக்கவேண்டும்
மூன்று	-	மூவராகக் கட்டிப்பிடிக்கவேண்டும்

கட்டிப்பிடிக்கும்போது எஞ்சும் ஒருவர் விளையாட்டிலிருந்து விலக வேண்டும். குழுவினர் எண்ணிக்கையில் குறைந்த எண்ணோ, சிறு எண்ணோ சொல்லப்படும். இருவராக, மூவராகக் குழுவில் ஒன்று சேர முடியாது தனித்து நிற்பவர் விளையாட்டிலிருந்து விலக வேண்டும். ஒன்று என்ற எண் சொல்லப்படுவதில்லை. இயல்பில் எல்லாரும் ஒன்று என்ற எண்ணால் குறிக்கப்படுவதற்கு ஏற்பத் தனித்து இருக்கிறார்கள். அதனால் ஒன்று என்ற எண் தலைவரால் சொல்லப்படுவதில்லை. மொத்தமாக ஏழுபேர் இருக்கும்போது 2 என்ற எண்ணைத் தலைவர் குரல் ஆணையால் தெரிவித்தபிறகு ஒருவர் இரட்டையராக முடியாமல் மிஞ்சுவார். அவர் தீயால் பலியானவர் என்ற கருத்து உருவாகிறது. மூன்று என்ற எண்ணைச் சொன்னாலும் ஒருவர் மிஞ்சுவார். 4 என்ற எண்ணை முதலில் சொன்னால் மூன்றுபேர் மிஞ்சிவிடுவார்கள். மொத்தமாகக் கூடுதலானவர்கள் ஆட்டமிழக்காதவாறு, மிகக் குறைந்த எண்ணிக்கையில் ஆட்டமிழக்குமாறு பொருந்திவரும் ஒரு எண்ணை தலைவர் தெரிவிப்பார். அப்போதுதான் ஆட்டம் ஒரு அளவான நேரத்துக்கு நீளும். இல்லையென்றால் மிகக் குறைந்த நேரத்திற்குள் ஆட்டம் முடிந்துவிடும். தீ என்பது ஒரு பாத்திரமாக இல்லை. சூழலாக இருக்கிறது. அது விளையாட்டில் அருவ நிலையில் பங்கேற்கிறது.

லாக் அண்ட் கீ விளையாட்டு: பழங்குடியினர் விளையாட்டுதான் என்றாலும் நாகரிக மனிதர்களின் விளையாட்டுகளில் உள்ள நுட்பங்கள் அதில் காணப்படவே செய்கின்றன. ஆங்கிலப் பெயரில் அழைக்கப்படும் இந்த விளையாட்டு இருளரிடம் வந்து சேர்ந்திருக்கவேண்டும். இது கடன் பெற்ற விளையாட்டாக இருக்கலாம். பூட்டுச் சாவி விளையாட்டு என்று இந்த விளையாட்டின் பெயரை மொழி பெயர்க்கலாம். இந்த விளையாட்டில் வழக்கம் போல் சிக்கியைச் சாட், பூட், திரி மூலம்

தேர்ந்தெடுக்கின்றனர். இந்த விளையாட்டை சிறுவன்கள், சிறுமிகள் இருவரும் சேர்ந்து விளையாடலாம்.

சிக்கி ஓடுகிறவர் எல்லாரையும் தொட முயற்சிக்க வேண்டும். முதலில் தொடப்படுபவர் சிக்கி ஆவார். விரட்டியவர் விரட்டப் படுபவராக மாறுவார். தொடப்படப் போகிறவர் அமர்ந்து கொண்டால் அவரைத் தொட முடியாது. ஆனால், அவர் மீண்டும் எழுந்து ஓட வேண்டும் என்றால் ஓடுகிறவர் யாராவது ஒருவர் அவர் தலையைத் தொட்டு எழுப்ப வேண்டும். ஓடுகிறவர்கள் சிக்கியிடமிருந்து நெடுந்தூரம் விலகியும் ஓடிவிட முடியாது. ஏன் எனில் சிக்கி "சர்பத்" என்று சொல்லி அமர்ந்து கொள்ளலாம். அப்படி அமர்ந்து கொண்டால் ஓடுகிறவர், அமர்ந்திருப்பவர் எல்லாரும் ஓடிவந்து சிக்கியின் தலையைத் தொடவேண்டும்; அமர்ந்திருக்கும் சிக்கியைக் கடைசியாகத் தொடுபவர் சிக்கி ஆவார். ஒரு சிக்கி அவ்வாறு அமர்ந்துகொள்வது தன்னால் மேலும் தொடர்ந்து ஓடமுடியவில்லை என்று தோல்வியை ஒப்புக்கொண்டது ஆகும். விளையாட்டுக் குழுவில் உள்ள மற்றவர்கள் சிக்கியின் தோல்வியை ஒப்புக்கொண்டு மாற்றுச் சிக்கியைத் தேர்ந்தெடுப்பதற்கான வழியும் அந்த விளையாட்டில் செய்யப்பட்டிருக்கிறது. அருகில்-தொலைவில், ஓட முடிந்தவர்-ஓட முடியாதவர் என்ற முரண் கருத்துகள் இந்த விளையாட்டில் உள்ளன. ஒருவர் தொலைவுக்குத் தொடப்படமுடியாதவராக ஓடி அமர்ந்துகொள்ளலாம். விளையாட்டு இன்பம் என்பது தொடப்படுவதற்கும் தொடுவதற்குமான போட்டியாகும். மற்ற சிறுவர்களைத் தொடாமல் ஒருவர் தொடப்படுவதற்குத் தொடர்ந்து விரட்டப்படுவது விரட்டப்படுபவருக்கு மதிப்பைத் தரும். தொடுவதற்கு ஓடிவந்து கொண்டிருக்கும் சிக்கியின் முன் வலுவுள்ள ஒவ்வொருவரும் வலிய முன்வந்து தன்னைத் தொடுமாறு வாய்ப்புத் தந்து அந்த வாய்ப்புச் சிக்கிக்கு நிறைவேறவிடாமல் விரைந்து ஓடி ஏமாற்றுவார்கள். வேட்டையாடப்படும் விலங்கு வேட்டையாடும் உயிர்க்கொல்லி விலங்கின் முன்வந்து வலியத் தன்னை வேட்டையாடுமாறு கேட்டுப் பின்பு தன்னை வேட்டையாடவிடாமல் செய்யும் வலு அல்லது நுட்பம் இந்த விளையாட்டில் உள்ளது. சிக்கி வலுவில்லாத, ஓடமுடியாத ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தொடுவது அவரது தகுதியின்மையையே காட்டுகிறது. இயக்கம்- நிலை என்ற முரணும் இந்த விளையாட்டில் இருக்கிறது.

உதவி விளையாட்டு: இந்த விளையாட்டை விளையாட இரட்டைப் படையில் சிறுவர்கள் இருக்க வேண்டும். ஒற்றைப்படையாக எஞ்சுபவர்

விளையாட்டிலிருந்து விலக்கிவைக்கப்படுவார். விளையாடும் சிறுவர் களின் எண்ணிக்கை 4, 6,8,10 என்று இருந்தால் எல்லாச் சிறுவர்களும் மிச்சமின்றி விளையாடலாம். இரட்டையர்களுள் ஒருவர் சிக்கியாக மாறுவார். மற்றொருவர் தனியாக மிஞ்சுவார். அந்தத் தனி ஆளைச் சிக்கி தொட வேண்டும். சிக்கியால் தொடப்படாதவாறு மற்றொருவர் தொடர்ந்து ஓடுவார். ஆனால் அவர் களைத்துவிடும்போதும் ஓடியது போதும் என்று கருதும்போதும் சிக்கியால் தொட்டுவிடப்படுகிற சூழலிலும் மற்றொரு இரட்டையரில் உள்ள ஒருவர் பிரிந்துவந்து ஓடியவருடன் இணையும்போது இரட்டையராகி தொடப்பட முடியாதவராவார். பிரிந்து வந்து சிக்கியால் தொடுவதற்காக விரட்டப் பட்டவரை இரட்டையாக்கியவரின் இணையாக இருந்த ஒருவர் எஞ்சி யிருப்பார். எஞ்சியிருக்கும் அவரை சிக்கி தொடுவதற்காக விரட்டிச் செல்லவேண்டும். சிக்கி மாறாமலும் சிக்கியால் தொடப்படுபவர் தொடர்ந்து மாறிக்கொண்டும் இருப்பார்கள். சிக்கியால் தொடப்பட விரட்டப்பட்டவர் காப்பாற்றப்பட்ட அதே நேரத்தில் இணையராக இருந்து பிரிந்து வந்தவர் தன்னுடைய இரட்டையரைத் தொடப்பட வேண்டியவர் என்ற இக்கட்டிற்குள் சிக்கவைத்துவிடுகிறார். இவ்வாறு சிக்கவைப்பது விரட்டப்பட வேண்டியவராக மாறிக்கொள்ளும் ஒருவரது விருப்பத்தைப் பொருத்து அமையும். விரட்டப்படுவதில்தான் விளையாட்டு இன்பம் இருக்கிறது. விரட்டுகிறவரைத் தொடர்ந்து விரட்டவைத்து களைப்படையச் செய்கிற குரூர இன்பமும் அவருக்கு இருக்கிறது. தொடக்கத்தில் உத்தி பிரிக்கும்போது தனது இரட்டைய ராக இருந்த ஒருவரையே இணையாக இருந்த மற்றொருவர் விரட்ட வேண்டிய நிலைக்கு உள்ளாகவேண்டியுள்ளது. சிக்கியால் விரட்டப் படுபவரைக் காப்பாற்றும் முயற்சியை ஒருவர் தன் சொந்த முடிவுப்படி எடுத்து மற்றொரு இணையாக உள்ளவரின் ஒப்புதலைப் பெறாமல் எடுத்தார் என்றால் அந்த இரட்டையருக்குள் முரண்பாடுகள் தோன்ற முடியும். எந்த இரட்டையரும் நிலையானவர்கள் அல்லர்.

தங்கள் வேளாண்மைத் தொழிலையும் விளையாட்டாகச் சிறுவர்கள் மாற்றியுள்ளார்கள். புன் செய் நிலம் வாங்கி அதில் சர்க்கரைக்காய் பயிரிட்டு, வளர்த்து, இறுதியில் கனி பிடுங்கி வந்து சாப்பிடும் நிகழ்வுகளைக் கொண்டதாக விளையாட்டு அமைந்துள்ளது.

தனி மற்றும் குழு: விளையாட்டு இருவேறு முரண்பட்ட பிரிவுகளுக்கு இடையில் நடக்கும் போட்டி. 24 விளையாட்டுக்களில் தனி ஒருவரும் குழுவிற்குமான போட்டியாக அமையும் விளையாட்டுகள் மொத்தம் 18. இரு அணிகளுக்கு இடையில் நடைபெறும் விளையாட்டுகள் 4. போட்டி

என்பது சம தகுதியுடைய இரு குழுக்களுக்கிடையே நடைபெறுவது அல்லது தனித்த இரு மனிதர்களுக்கிடையே நிகழவேண்டும். இதுதான் அறம். இவ்வாறு இல்லாமல் தனி ஒரு மனிதரைச் சிக்கவைத்துவிட்டுக் குழுவினர் அனைவரும் மகிழ்ச்சி காள்வது என்பதாகப் பெரும்பாலான விளையாட்டுகள் உள்ளன. கடுமையான ஒரு போட்டியைத் தனி ஒருவருக்கு உருவாக்கிவிட்டு அதிலிருந்து அவர் விடுவித்துக்கொண்டு வெளி வரவேண்டும் என்பதாக இந்தப் போட்டிகளின் உள்நோக்கம் இருக்கலாம். குடும்பமாகவும் சாதியாகவும் இனமாகவும் இருக்கும் சமூக அமைப்பில் தனிமனிதரின் திறமைகளுக்கு முதன்மை கொடுக்கும் ஒரு களமாக விளையாட்டு முறைகள் உள்ளன. தனிமனித நோக்கு வளராத ஒரு சமூக, வரலாற்றுப் பின்னணியிலிருந்து உருவாகும் விளையாட்டில் தனிமனித முயற்சிகளுக்கு முதன்மை கொடுக்கும் விளையாட்டுகள் மலிந்திருப்பது ஒரு முரண் ஆகும். மஞ்சுவிரட்டில் வரும் ஒரு கோயில் காளை போல எல்லாரையும் எதிர்கொண்டு ஒருவர் வெல்வது வலு என்று கருதப்படுகிறது. குழுவாக உள்ள பலரையும் தனி ஒருவர் எதிர்கொண்டு வெல்லவேண்டும் என்பது ஒரு இலக்கணமாகிறது. குழுவாக இருக்கும் பலரும் ஒரு விளையாட்டிற்குள் இருந்துகொண்டு விளையாடாமல் பார்வையாளராக இருக்கும் ஒரு நிலையும் இருக்கிறது. ஒரு விளையாட்டிற்குள் இருக்கும் பல்வேறு தளங்களுள் சிக்கி மையத் தளத்திற்குள் இருக்கிறார். சிக்கியால் முறியடிக்கப்படவேண்டியவர்கள், வெல்லப்பட வேண்டியவர்கள் மையத்தளத்திற்குள் சென்று சிக்கியை எதிர்கொள்ள முடியாதபோது அந்த எதிர்கொள்ளும் வாய்ப்பை மற்றொருவருக்கு வழங்கிவிட்டுத் தான் புறத்தளத்திற்குள் பின்வாங்கிவிடுகிறார். ஒரு விளையாட்டில் கதா நாயகன் ஆகும் வாய்ப்புச் சிக்கிக்கு இருக்கிறது. அவர் தோற்றுப் போவது என்பது கதா நாயகன் ஆகமுடியாமல் போவது ஆகும். மற்றவர்கள் தோற்றுப்போவது என்பது வேட்டையாடப்படுவது ஆகும். வீரம், அறிவு, கலை, வணிகம் முதலானவற்றில் ஒரு குழுவின் முயற்சி பின்புலமாக இருப்பதை மக்கள் உணரவில்லை. ஒரு மனிதனின் உயர்வுக்கு அவனது தனிப்பட்ட முயற்சிகள் காரணம் என்று ஒரு சமூகத்தின் நனவிலி இருந்துகொண்டிருக்கிறது.

-இன் காலமும் -இல் காலமும்: ஒரு விளையாட்டில் இரு வகையான நேரங்கள் உள்ளன. விளையாட்டின் நேரம் என்பது இரவு, பகல், மாலை நேர விளையாட்டு என்றும் வெயில் கால விளையாட்டு, மழைக்கால விளையாட்டு, அறுவடைக் கால விளையாட்டு என்று பிரிக்கப்படுவது ஆகும். மேலும் சமூக நிகழ்வில் உள்ள சூழலும் நேரத்தின் புறச்சூழல்

ஆகும். குடும்ப விழா, கோயில் விழா முதலானவற்றின் அடிப்படையில் பிரிக்கப்படுவது இது. விளையாட்டில் காலம் என்பது விளையாட்டுத் தொடங்கி முடியும் வரை உள்ள காலம் ஆகும். இது விளையாட்டு வெளிப்படுத்தும் உண்மை நிகழ்வின் காலத்தை எவ்வாறு செம்மை யாக்கம், குறைப்பு, நீட்டம், தொகுப்பு, விரிவு செய்துகொள்கிறது என்பதைப் பொருத்தது. விளையாட்டு இன்பம் முடிந்தவரை நீடிக்கப்பட வேண்டும் என்பதும் முடிந்தவரை குறைக்கப்பட வேண்டும் என்பதும் அந்தந்த விளையாட்டின் ஆட்ட நேரத்தைப் பொருத்தது. சூழலையும் பொருத்தது. சிக்கியாக இருப்பவர் விளையாட்டை விரைந்து முடிவுக் குக் கொண்டுவருவதில் வெற்றி காண்பவர் ஆவார். ஆனால் சிக்கிக்கு எதிராக இருப்பவர்கள் விளையாட்டு உடனடியாக முடிந்துவிடாமல் நீடிக்கவேண்டும் என்று முயற்சி செய்பவர்களாக இருப்பார்கள். எல்லா விளையாட்டுகளுக்கும் இது பொருந்தும். சிறுவர்கள் தங்களைக் கால வளர்ச்சிக்கு உட்படுத்திக் கொள்கிற விளையாட்டும் உள்ளது. தாத்தா விளையாட்டு என்ற விளையாட்டில் எல்லாரும் முதலில் தாத்தாவைக் கிண்டல் செய்கிறவர்களாக இருக்கிறார்கள். இறுதியில் தாத்தா எல்லாரையும் குச்சியால் அடிக்கும்போது தாங்களும் தாத்தாவாகிவிட்டதாக அவர் அமர்ந்த இடத்தில் சென்று அமர்ந்து கொண்டு கையைக் கவ்வியபடி இருக்கிறார்கள். சிக்கி என்பது தாத்தா ஆகும். இதில் காலம் என்பது சிறுவர்கள் பாவனையில் விரைவாகக் கடந்ததாக அமைந்து விடுகிறது. எல்லாரும் ஒருநாள் தாத்தாவாகி வயது முதிர்ந்தவர்களாகிவிடுவார்கள் என்ற கருத்துச் சிறுவர்களுக்கு வந்ததாகிவிடுகிறது. அதனால் தாத்தாவும் இளையவர்களும் வேறுபாடு கொள்வதை விடுத்து வயது முதிர்ந்தவர்களைச் சமமாக நடத்த வேண்டும் என்ற அறநெறி இந்த விளையாட்டில் புலப்படுத்தப்படுகிறது. சிறுவர்களுக்கு முதியவர்களை மதிக்கும் அறம், முதியவர்களை இழிவு படுத்திவிடக் கூடாது என்ற அறம் இந்த விளையாட்டில் வழியே கற்பிக்கப்படுகிறது.

வரலாறு மற்றும் சமகாலம்: விளையாட்டுகள் சடங்குத் தன்மையுடன் கடந்த கால மரபுகளைப் பாதுகாத்து வைத்துள்ளன. சம்பந்தி விளை யாட்டில் சொல்லப்படும் இருளர் பாடலின் (நக்கேனா) சொற்களுக்குரிய பொருண்மை சிறுவர்களுக்குத் தெரியவில்லை. பெரியவர்களைக் கேட்டுத்தான் அதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று சிறுவர்கள் தெரிவிக்கிறார்கள். மலையில் தீப்பிடிக்குது என்ற விளையாட்டில் மரபும் சமகாலமும் இணைந்திருப்பது தெரியவருகிறது. கொம்பேறி மூக்கன் விளையாட்டில் பாம்புக்கும் மனிதர்களுக்கும் இடையிலான முரண் வெளிப்படுகிறது. குச்சி பாம்பின் வட்ட எல்லைக்குள் இருக்கும்போது

அந்தப் பாம்பு ஒவ்வொருவரையும் கடிக்கத் தகுதியுடையதாகிறது. குச்சி வட்டத்திலிருந்து வெளியில் எறியப்பட்டு மனிதர்களுக்குரியதாக இருக்கும்போது, கொம்பேறி மூக்கன் கடிக்கத் தகுதியற்றதாகிவிடுகிறது. குச்சி என்ற ஆயுதம் மனிதர்களின் கையில் இல்லாமல் தரையில் வட்டத்திற்கு வெளியில் கிடப்பது, மனிதர்களின் கையில் அந்த ஆயுதம் இருப்பதாகப் பொருண்மைப்படுகிறது. சிறுவர்கள் கையில் ஆயுதம் என்ற குச்சி விளையாட்டில் இருப்பதில்லை. ஒவ்வொரு சிறுவரும் கையில் ஒரு குச்சியை வைத்துக்கொண்டு விளையாடுவது முடியாமல் இல்லை. எல்லாச் சிறுவர்களின் குச்சிகளும் ஒன்றாகக் கருதப்பட்டு, ஒரு குச்சியாக்கப்பட்டு அது அவர்களின் கையில் இல்லாமலும் வெளியில் விட்டெறியப்படுவதாகிறது. மரங்களில் ஏறுவதற்கு வாய்ப்பாகச் சிறுவர்களின் கையில் குச்சி இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கிறது. கையில் குச்சியை வைத்துக்கொண்டு மரங்களில் ஏறி, கிளைகளில் மாறித் திரியமுடியாது. விளையாட்டில் கொம்பேறி மூக்கன் என்ற பாம்பை எதிர்கொள்ளும்போது, அந்தப் பாம்பு ஒரு மனிதச் சிறுவனாகவோ, சிறுமியாகவோ இருப்பதால் குச்சி ஒரு கற்பிதப் பொருளாகிறது. மனிதச் சிறுவனாக இருக்கும் பாம்பு குச்சியைத் தன் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்வது என்பது மனிதர்கள் குச்சி இல்லாத, ஆயுதமற்ற, பாதுகாப்பற்ற நிலையைக் குறிப்பதாக விளையாட்டில் வெளிப்படுகிறது.

இரு குழுக்களுக்கு இடையிலான முரண்பாட்டில் ஒரு குழுவில் உள்ள ஒருவரை மற்ற குழுவில் உள்ள ஒருவர் வீழ்த்துவது பற்றியதாகப் பூப்பறிக்க வருகிறோம் விளையாட்டு அமைந்துள்ளது. இரு குழுக்கள் என்பது இருளர் இனத்திற்குள் குறிப்பிட்ட சமூகத்திற்குள் இருக்கும் திட்டமிடப்படாது உருவாகி இருக்கிற ஒரு குழு வேறுபாட்டைக் குறிப்பதாகும். சீப்பு, கண்ணாடி, சோப்பு, சுண்ணம் முதலான பொருள் களைப் பயன்படுத்துவதற்குச் சமூகத்தில் எதிர்ப்பு இருப்பது அழகிய லுக்கும் அதிகாரத்திற்கும் இடையிலான முரண்பாடாக இருக்கிறது. அழகியல் நோக்கில் ஒன்றுசேர்கிறவர்கள் ஒரு அதிகாரமாகி அதிகாரத் திற்கு எதிராகக் குரல் கொடுக்கிறவர்களாக மாறமுடிந்திருக்கிறது. சிறுவர்களால் யார் என்று விளக்கமுடியாத அனுமந்தன் என்ற பாத்திரத்தை விளையாட்டில் மொழிக் களத்திற்குள் கொண்டுவந்து, சொல்லால் குறிப்பிட்டு அந்தப் பாத்திரம் செத்துப்போகவேண்டும் என்றும் சிறுவர்கள் குரல்கொடுக்கிறார்கள். வரலாற்று நிலையில் நனவிலி நிலையில் அனுமந்தன் என்ற பாத்திரம் ஒரு குறியீடாக இருளர் இனத் திற்குள் உள்நுழைந்திருக்க வேண்டும். அது சிறுவர் விளையாட்டிலும் ஒரு பாத்திரமாக வெளிப்பட்டிருக்கவேண்டும்.

இணை முரண்கள்: இந்த விளையாட்டுகளில் பல்வேறு இணை முரண்கள் (binary oppositions) உள்ளன. சான்றாக வலு x பலவீனம், இழிவு x மதிப்பு, உள்ளே x வெளியே, நீண்ட நேரம் x குறைந்த நேரம், குறுகியது x நீண்டது, அருகில் x தொலைவில், நிற்பது x அமர்வது, இயங்குவது x நிலைத்திருப்பது, முதுமை x இளமை, தனிமனிதர் x குழு, சூடு x குளிர்ச்சி, இரவு x பகல், வேற்று மனிதன் x ஊர் மனிதன் முதலான முரண்களைக் குறிப்பிடலாம்.

ஒரு சமூகத்தின் விழாக்கள், போர்கள், கொண்டாட்டங்கள், பொழுது போக்குகள், சடங்குகள், குடும்ப நிகழ்வுகள் முதலான எல்லாம் அந்தச் சமூகத்தின் மெய்ப்பாடுகளே ஆகும். தலைவன், தலைவி இருவருக்கும் இடையில் உள்ள பத்துப் பொருத்தங்கள், பொருத்தமின்மைகள் மெய்ப்பாட்டியலில் இதனால்தான் வைக்கப்பட்டுள்ளன. புணர்ச்சி, பிரிவு முதலான குடும்ப நிகழ்வுகளும் மெய்ப்பாடுகளாக வைக்கப் பட்டுள்ளன. உடலுக்குள்ளிருந்து வெளியேறும் உணர்வு என்பதோடு ஒரு சமூத்தின் ஒட்டுமொத்த நிகழ்வுகளும் வெளிப்பாடும் மெய்ப்பாடா கின்றன. கலை, இலக்கியங்கள் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சூழலில் நிகழ்ந்தபோதும் அவை சமூக நிகழ்வுகளின் வெளிப்பாடுகளாகவே உள்ளன எனலாம்.

துணைநூல்

1. வெள்ளைவாரணன் க., (ஆய்வுரை), 1986, தொல்காப்பியம் - மெய்ப்பாட்டியல்: உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

தகவலாளர் பட்டியல்

2006 ஜூலை 5 முதல் 25 வரை பாரதியார் பல்கலைக் கழகத்தில் நடந்த புத்தொளிப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டபோது சமர்ப்பிக்கப்பட்ட திட்டக்கட்டுரை இது. தரவுகள் இடைப்பட்ட நாள்களில் பின்வரும் தகவலாளர்களிடம் (இருளர்கள்) தொகுக்கப்பட்டவைகளாகும்.

1. பிரியா (6), அட்டுக்கல், தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோவை. தநா
2. வெண்ணிலா (10), அட்டுக்கல், தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோவை.
3. ஜெயந்திக்கொடி (10), அட்டுக்கல், தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோவை.

4. வெங்கியங்கிரி (12), அட்டுக்கல், தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோவை.
5. நந்தகுமார் (8), அட்டுக்கல், தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோவை.
6. ராமன் (8), அட்டுக்கல், தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோவை.
7. சதீஷ் (10), அட்டுக்கல், தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோவை.
8. அருணாசலம் (10), அட்டுக்கல், தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோவை.
9. லஷ்மணன் (12), அட்டுக்கல், தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோவை.
10. சீனிவாசன் (18), அட்டுக்கல், தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோவை.
11. சந்திரன் (17), அட்டுக்கல், தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோவை.

9

தொட்டில் சடங்கில்
கொளல் மரபும் கொடை மரபும்

ஒரு பெண்ணின் உடன்பிறந்தவன் அவள் கணவனைக் காப்பதற்காகத் தன் இன்னுயிரை இழக்கவும் செய்வான் அல்லது தன் உயிர் மச்சான் உயிர்போன பிறகு போனால் போகிறது என்று நினைப்பான் என்ற கருத்து "கெடுக சிந்தை கடிது இவள் துணிவே" (புறம். 279) என்ற பாடலில் உள்ளது. இந்தச் செய்யுளில் தாய்க்கு ஒரு சிறுவனும் வருகிறான். சிறுவன், அவன் தாய், தந்தை, தாய்மாமன் ஆகிய நால்வரும் இந்தச் செய்யுளில் வருகின்றனர். தாய்மாமன் கொடை மரபுக்குரியவன். தந்தை கொளல் மரபுக்குரியவன். பெண் கொடை மரபால் கொடுத்துப் கொளல் மரபால் பெற்றுக் கொள்ளப்படுபவள். அக்காள் மகளை மணத்தல் என்பது மிகுந்த வயது வேறுபாட்டுக்குரியதாகிவிடுகிறது. அக்காள் மகளைத் தன் மகனுக்கு மணம் முடித்தலே பொதுவாகப் பொருத்தம் உடையது. திருமணச் சடங்கில் தாய்மாமன் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறான். தொட்டில் சடங்கில் அந்த உறவு மாறிப்போய்விடுகிறது. அதாவது ஒரு பெண்ணின் திருமணச் சடங்கில் முதன்மை இடம்பெறும் தாய்மானும் அந்தப் பெண்ணின் குழந்தைப் பேற்றின் தொட்டில் சடங்கில் இடம்பெறும் தாய்மாமனும் ஒருவரல்ல. திருமணச் சடங்கில் தனக்குரிய மணப்பெண்ணை வேறு ஒருவருக்கு விட்டுக்கொடுத்தல் என்ற நிலையில் தாய்மாமன் இருக்கிறான். அந்தப் பெண்ணுக்கு குழந்தைப் பேறு கிட்டும்போது தாய்மாமனாக இருப்பவன் அந்தப் பெண்ணின் உடன்பிறந்தவனாகிறான்.

பெண் என்பவள் ஒரு பண்டமாற்றுப் பொருள். அவள் கொடுக்கப் படும்போது அவளுக்குப் பிறக்கும் பெண் எடுக்கப்பட வேண்டியவள் என்ற பண்டமாற்று நிலையில் கொடுத்தலும் கொள்ளலும் இரு குடும்பங்களுக்கு இடையில் நடைபெறுகின்றன. இதனால் ஒரு பெண்

பிறந்தால் அவள் தாய்மாமன் குடும்பத்திற்குரியவளாக இயல்பிலேயே தமிழ்ப்பண்பாட்டில் இருக்கிறாள். தாய்மாமன் என்பவன் அந்தப் பெண்ணை மணந்துகொள்ள உரிமை உடையவன். அல்லது அவனது மகனுக்கு மணம்முடித்துக்கொள்ள உரிமை உடையவன். தாய்க்கு இணையான வயதில் உள்ள ஒரு தாய்மாமனை எந்த ஒரு பெண்ணும் மணந்து கொள்ள விரும்பாமல் இருக்கலாம். தாய்மாமன்கள் அதனால்தான் வில்லன்களாகப் புனையப்பட்டுவருகிறார்கள். தாய்மாமன் மகன் அந்தப் பெண்ணுக்கு இணையான வயதில் இருக்க வாய்ப்பிருக்கிறது. எனவே, தொட்டில் சடங்கில் இடம்பெறும் தாய்மாமன் அந்தக் குழந்தையின் தாய்மாமனே தவிர, தாயின் தாய்மாமன் அன்று என்று முடிவுக்கு வரலாம்.

தொட்டில் என்ற சொல் தமிழில் மூன்று வேறு பொருள்களைக் குறித்து வருகிறது. குழந்தைகளைப் படுக்கவைக்கவும், தூங்க வைக்கவும் பயன்படுவதில் மூன்று பொருள்களும் ஒன்றுபடுகின்றன. வீட்டின் மேல் தளத்தில் உள்ள கொக்கியில் அல்லது மேற்கூரையில் உள்ள மரச் சட்டத்தில் துணி என்றால் மடித்தும், மரம் என்றால் பலகை வடிவிலும் கட்டித் தொங்கவிடப்பட்டுக் குழந்தை படுப்பதற்குப் பயன்படுத்தும் பொருள் தொட்டிலாகும். மேல் தளத்துடன் தொடர்பில்லாது தரையில் நான்கு கால்களால் இணைக்கப்பட்ட மேல் குறுக்குச் சட்டத்தில் தொங்கவிடப்பட்டுள்ள பலகை வடிவிலான குழந்தைக்கான படுக்கையும் தொட்டிலாகும். பலகை, உலோகங்களால் தொட்டில் செய்யப்படும்போது நான்கு புறமும் மரம், உலோகத்தகடுகளால் காற்றோட்டமாகத் தடுப்பு அமைக்கப்பட்டிருக்கும். பெரும்பாலும் செவ்வக வடிவில் நான்கு புறமும் தடுப்புச் சுவர்போல அமைந்து குழந்தை எந்தத் திசையில் புரண்டுபடுத்தாலும் கீழே விழுந்துவிடாதபடிக்கு இந்தத் தடுப்புத் தடுத்து நிறுத்திவிடும். சமதளப் பரப்பாக அமையும் எந்தத் தொட்டில் படுக்கையின் அமைப்பிலும் இது கட்டாயமாக இருக்கும். இந்த மூன்று வேறான பொருள்களும் தொட்டில் என்று அழைக்கப்படுகின்றன. துணியால் ஆனதொட்டில் தூளி என்றும், ஏனை என்றும் அழைக்கப்படுகிறது. யானை, ஆனை என்ற சொல் திரிபுகளும் தொட்டில் குறித்து வருவனவாகும். துணியால் ஆன தொட்டில் என்பது குழந்தை இட, வலப் புறங்களில் துணியே தடுப்புச் சுவர்போல அமையும். தலை, கால் புறங்களில் பொதுவாகக் குழந்தை புரண்டுபடுக்க வாய்ப்பு இல்லை. தொட்டில் என்ற சொல்லின் பொருண்மை குறித்துப் பேசுவதும் தொட்டில் என்ற பொருள் குறித்துப் பேசுவதும் தொடர்புடையன.

தொட்டில் குடும்பத்திற்குள் பயன்படுத்தப்படும் ஒரு பொருள் என்பதால், குழந்தையுடன் தொடர்புடைய பொருள் என்பதால் குடும்ப உறவுகளும் சமூக உறவுகளும் இதனுடன் தொடர்புடையனவாக உள்ளன. பொருளாதார வேறுபாட்டு அடிப்படையிலும் பண்பாட்டு அடிப்படையிலும் தொட்டிலை விளக்க வேண்டியிருக்கிறது. வெளி, காலம் என்ற அடிப்படையிலும் தொட்டிலை விளக்க முடியும். மொழி (Verbal), நிகழ்வு (Non-Verbal) என்ற வேறுபாட்டு அடிப்படையிலும் தொட்டிலை விளக்க முடிகிறது.

மொழி என்பது தாலாட்டு, விடுகதை, பழமொழி, உவமை, படிமம் முதலான இலக்கிய வகைகளாகவும் உத்திகளாகவும் விரிவடைகிறது. தாலாட்டு என்பது குழந்தையைத் தூங்க வைப்பதற்காகப் பாடப்படும் பாட்டு. தாலாட்டுப் பாட்டில் தொட்டில் இடம் பெற்றாக வேண்டிய கட்டாயமில்லை. தூங்கப் பயன்படுத்தும் இடம் என்ற அடிப்படையில் தொட்டில் இடம் பெறுகிறது. தாலாட்டுப் பாட்டில் மனித உறவுகளும் உணவும், கடவுளும் பிறவும் பேசப்படுகின்றன.

தொட்டில் செய்யப் பயன்படும் மரங்களாக இலுப்பை, புன்கு, வேம்பு, உதி, தேக்கு, சாதிலிங்கம், சந்தனமரம், வேங்கை, அத்தி, மூங்கில் முதலானவை குறிப்பிடப்படுகின்றன. மரப்பொருள்கள் கொண்டு ஆசாரி தொட்டில் செய்யத் தாய்மாமன் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது பொதுவான மரபாகும். சந்தன மரத்தில் தொட்டில் செய்யப்படுவது உயர்வானது என்று குறிக்கப்படுகிறது. உதி என்ற மரம் வலுவற்றது. இருந்த போதும் அது குறிப்பிடப்பட்டுள்ளது.

தொட்டிலில் துணியை அல்லது பலகையைக் கட்டித் தொங்கவிடக் கயிறு, நார், கம்பி, சுருள் கம்பிகள் (Spring) பயன்படுத்தப்படுகின்றன. துணித்தொட்டில் என்றால் வெள்ளை நிறத்தில் அதற்கென்று தனித்துணி விற்கப்படுகிறது. வாங்க முடியாதவர்கள் போர்வை, வேட்டி, சேலை களாலும் தொட்டில் கட்டுகின்றனர். உறுத்தாத ஒரு நிறம் என்பதால் வெள்ளை நிறம் பொருத்தமானதாகக் கருதப்படுகிறது. தொட்டிலில் உறங்கும் குழந்தைக்குக் காற்றோட்டம் தேவை என்பதால் துணித் தொட்டிலில் ஒரு சிறு தடி ஒன்றனை நுழைத்து இடைவெளியை அதிகப்படுத்திக் காற்றோட்டத்தைக் கூடுதலாக்குகின்றனர்.

தொட்டிலைப் பயன்படுத்துவதில் ஒரு மரபு இருந்து வருகிறது. நவீன காலத்தில் ஒரு குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள். தொட்டில் செய்து அதைப் பாதுகாத்து வைக்கத் தேவையில்லை என்றாகிறது. மரபான ஒரு பழக்கம் என்று அது விடப்படக் கூடாது எனக் கருதப்படுகிறது. மெத்தை

யில் படுக்கவைக்கப்பட்ட பிறந்த குழந்தையின் தலை சப்பையாகி, தலையை உருண்டை வடிவிற்குக் கொண்டு வருவதற்காகத் துணித் தொட்டிலில் மீண்டும் படுக்க வைக்கப்பட்ட குழந்தைகள் உள்ளனர் (தகவலளார்: பூர்ணிமா). தளத்தில் எறும்பு, பூச்சிகள் ஊறும், அவற்றால் குழந்தைக்குப் பாதிப்பு வராமல் இருக்கத் தொட்டில் பயன்படுகின்றது. குழந்தை பிறந்த ஒரு சில மாதங்களுக்குத் தொட்டிலில் போட முடியாது. பிறகு துணித் தொட்டிலில் போட முடியாது. பிறகு துணித் தொட்டிலில் போட்டுக் கொள்ளலாம். (ப.கனிமொழி) என்றும் கருத்துச் சொல்லப்படுகிறது. குழந்தையைத் தொட்டிலைவிட்டு இறக்கியவுடன் தொட்டிலைச் சுருக்கி மேலே கட்டிவிட வேண்டும். (பா.மணிகண்டன்) குழந்தைக்குத் தலைக்குக் குளிக்கும் நாளில் குழந்தையைத் தொட்டிலில் போடக்கூடாது. தொட்டிலில் காற்றுப் புகாது. வியர்வை வந்து சளிப் பிடித்துக் கொள்ளும் (ப.கனிமொழி). மேலும் குழந்தை தொட்டிலில் உறங்கும் போது வடக்குப் பக்கம் தலை இருக்குமாறு படுக்க வைக்க மாட்டார்கள். தலைப்பக்கம் உயரமாகவும் கால் பக்கம் தாழ்வாகவும் இருக்குமாறு தொட்டிலை அமைத்துக் கொள்கிறார்கள். (ப.கனிமொழி). பால் குடித்தவுடன் குழந்தையைத் தொட்டிலில் போடக் கூடாது. (ப. பூர்ணிமா) பால் குடித்த குழந்தையைத் தொட்டில் போட்டுக் குறுக்கு நெடுக்குமாக ஆட்டக் கூடாது (ப.கனிமொழி)

குடித்த பால் வெளிவந்துவிடக்கூடாது என்பதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது. குழந்தைச் சுளுக்கு எதுவும் வந்திருந்தால் தொட்டில் துணியில் படுக்க வைத்து நீக்குகிறார்கள். இருவர் தொட்டில் துணியை இழுத்துச் சமதளப்பரப்பு வடிவில் பிடித்துக் கொள்ள, அதில் மற்றொருவர் குழந்தையைப் படுக்கவைப்பார். இருவரில் ஒருவர் விரித்த தொட்டில் முனையை உயர்த்த மற்றவர் தாழ்த்துவார். குழந்தை தன்னியல்பில் இருபுறமும் மாறி மாறி உருளும். இவ்வாறு உருளும்போது சுளுக்கு நீங்கி விடும். (இரா.அம்சராஜ்) குழந்தைக்குக் குடல் பிறண்டு விடுமானாலும் இவ்வாறு குழந்தையை உருளச் செய்து குடலைச் சரிசெய்கின்றனர். (மு.ஷோபனா) மருத்துவ அடிப்படையில் இது சரியா என்பது ஆராயப் பட வேண்டும். குழந்தையின் தன்னியல்பான உடல் நிலை தொட்டிலில் இருக்கும் போதே இருக்கும் என்று கருதப்பட்டதாகத் தெரிகிறது. மனிதர் கைபடாமல் குழந்தை உடல் தன்னியல்பாக உருண்டு அசையும் போது, அது தன்னியல்பை அடைந்து விடும் என்று நம்பப்பட்டது.

தொட்டில் தொடர்பான செயல்பாடுகள் மரபாகப் பின்பற்றப்பட்டு வரும்போது அவை நம்பிக்கைகளாகவும் சடங்குகளாகவும் பரிணாமம் கொள்கின்றன. பச்சை இலுப்பை மரத்தில் தொட்டில் செய்து குழந்தை

யைப் படுக்க வைத்தால் தாய்ப்பால் சுரக்கும் என்பது நம்பிக்கையாக உள்ளது. இலுப்பை மரத்தில் தொட்டில் கட்டிய செய்தி மலைபடுகடாமில் அடி 230 இல் வருகிறது. 2000 ஆயிரம் ஆண்டுகளாக இந்த மரபு இருந்து வருகிறது.

வெறும் தொட்டிலை ஆட்டக்கூடாது. ஆட்டினால் குழந்தைக்கு வயிறு வலிக்கும் என்று மூத்த தலை முறையினர் அறிவுறுத்துகிறார்கள் (இரா. அம்சராஜ்). வெறும் தொட்டிலில் முழங்காலை வைத்துத் தொட்டிலை ஆட்டினால் பிறகு படுக்கும் குழந்தைக்கு உடல் வலிக்கும் என்றும் சொல்லப்படுகிறது (பூ.சுமன்). மாலை நேரத்தில் குழந்தையைத் தொட்டிலில் போடும் பழக்கம், குழந்தையைத் தூங்கவிடும் பழக்கம் தவிர்க்கப்படுகிறது; கண்டிக்கப்படுகிறது (ப.கனிமொழி). கடவுள் குழந்தையின் கண்ணைக் குத்தும் என்று அச்சுறுத்துகிறார்கள். மரபு மீறல்களால் குழந்தைக்குப் பாதிப்பு வரும் என்று அறிவுறுத்துவதைப் பிறர் பொருட்படுத்தி அக்குழந்தைக்குப் பாதிப்பு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக இவ்வாறு சொல்லப்படுகிறது.

தொட்டிலில் குழந்தை உறங்கும்போதும், விழித்துக் கொண்டிருக்கும் போதும் பிறர் அருகில் இல்லையென்றால் தீய சக்திகளால் குழந்தைக்குப் பாதிப்புகள் வந்து விடக்கூடாது என்பதற்காக தொட்டிலின் அடியில் தளத்தில் இரும்பு, சீமாறு, எலுமிச்சம்பழம் முதலான பொருள்களை போட்டு வைப்பார்கள்(ப.கனிமொழி). இரும்பு வலுவான திடப்பொருள், எலுமிச்சைப் பழம் மந்திரம், மருத்துவப் பண்புகள் கொண்டது. சீமாறு எச்சரிக்கை செய்து, இழிவுபடுத்தும் பொருள். எனவே இப்பொருள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

தொட்டில் ஒரு குழந்தையின் பிறப்புக்கு முன்பும் பின்பும் சடங்குகளில் இடம் பெறுகிறது. தொட்டில் சடங்குகள் பெரும்பாலும் அய்யர், அய்யங்கார் இனத்திலும் செய்யப்படுகிறது (வி.சரசுவதி, 1982). நாளும் கோளும் நலிந்தோர்க்கு இல்லை என்பது பழமொழி. உயர்வகை மக்கள் அதாவது பிராமணர், அரசர், பொருளாதார வசதி படைத்தவர்கள் வாழ்வியலில் எந்த ஒரு நிகழ்வையும் சடங்காக மாற்றும் ஒரு போக்கு மிகுதியாக உள்ளது.

தகவலாளர் பார்வதி பிராமணர் வீட்டில் செய்யப்படும் தொட்டில் சடங்கு பற்றித் தெரிவிப்பதாவது: குழந்தை கர்ப்பிணியின் தாய் வீட்டில் பிறக்கும். குழந்தை பிறந்த 11 அல்லது 12ஆம் நாள் பிற்பகலில் நல்ல நேரத்தில் குழந்தையைத் தொட்டிலில் போடும் சடங்கு நிகழ்த்தப்படும். தொட்டில் என்பது துணியால் கட்டப்படும் தொட்டில் அன்று.

துணித் தொட்டில் தூளி என்று சொல்லப்படும். மூன்று மாதத்திற்குப் பிறகு தூளியில்தான் குழந்தையைப் படுக்கவைக்க முடியும். ஊஞ்சல் அமைப்பில் உள்ள தொட்டிலில் படுக்கவைத்தால் குழந்தை புரண்டு கீழே விழுந்து விடும். ஊஞ்சல் தொட்டிலில் பட்டு விரித்துக் குழந்தையைப் படுக்க வைப்பார்கள். தொட்டிலில் குழந்தை முதன்முதலாகக் கிழக்குப் பக்கம் தலை இருக்குமாறு படுக்கவைக்கப்படும். குளிப்பாட்டி, புது உடை உடுத்து, நகை அணிவித்து, ஆரத்தி எடுத்துப் படுக்கவைக்கப்படும். இந்தச் சடங்குகளை அத்தைதான் செய்ய வேண்டும். அத்தை குழந்தையைத் தன் மடியில் வைத்துக் காப்பு, சங்கிலியைப் பரிசாக அணிவர். குழந்தையைத் தொட்டிலில் இடும் முன்பு அம்மிக் குழவியைக் குளிப்பாட்டிப் பொட்டு வைத்துத் தொட்டிலுக்கு அருகில் கிடத்துவார்கள்.

தொட்டிலில் போடும் முன்பு பாடல்கள் பாடப்படும். இதையும் அத்தையே செய்வார். தொட்டிலின் அடியில் பச்சை நெல்லை ஏற்கனவே பரப்பிவைத்துவிட வேண்டும். அந்த நெல்லைச் சடங்கிற்கு வந்து செல்லும் அனைவருக்கும் சிறு அளவில் பையில் மடித்துக் கொடுத்து அனுப்புவார்கள். தொட்டில் சடங்கில் முப்பயறு என்ற உணவுப் பொருளுக்கும் சிறப்பிடம் உண்டு. கொண்டைக் கடலை, தட்டைப் பயறு, பாசிப்பயறு/சிறு பயறு என்ற மூன்றையும் வறுத்து அவித்து, வெல்லம் கலந்து குழந்தைக்கு முதலில் அத்தை ஊட்ட வேண்டும்.

குழந்தைக்கு அருகில் அதை ஒரு கிண்ணத்தில் வைக்க வேண்டும். இவ்வாறு வைக்கப்பட்ட முப்பயறைக் குழந்தை பெறாத பெண்கள் உண்டால் குழந்தைப் பிறக்கும் என்பது ஒரு நம்பிக்கை. அதனால் உண்கிறார்கள். முப்பயறு அனைவருக்கும் உண்ண வழங்கப்படும். சடங்கிற்கு வந்திருப்பவர்கள் குழந்தையின் வாயில் வெல்லத்தை வைத்து, பரிசுப் பணம் அல்லது பொருள் தருவார்கள். மேற்கண்ட தகவல்களில் குழந்தை இல்லாத பெண்கள் குழந்தைக்கு வைத்த முப்பயறை உண்பது தொத்து மந்திரச் சடங்கில் சேரும். அம்மிக் குழவியைக் குளிப்பாட்டித் தொட்டிலுக்கு அருகில் வைத்தல் என்பது பாவனைச் சடங்கில் சேரும். வடிவில் மென்மையான குழந்தையை ஒத்தது குழவி. ஆனால், குழவி போல வலுவாக அது மாற வேண்டும் என்பது கருத்து எனலாம்.

பிற சாதியினரில் தொட்டில் போடும் வழக்கத்தில் தாய்மாமனுக்கு முதன்மையளிக்கப்படுகிறது. பிராமணரில் அத்தைக்கு முதன்மையளிக்கப் பட்டுள்ளது. எதிர்காலக் குடும்ப உறவுகள் அமையும் வாய்ப்புகளில் உள்ள வேறுபாடுகளையே இந்த வேறுபாடு காட்டுகிறது. அத்தைக்கு முதன்மை கொடுப்பது என்பது தந்தையை அடிப்படையாகக் கொண்டது. மாமனுக்கு முதன்மை கொடுப்பது என்பது தாயை அடிப்படையாகக்

கொண்டது. அத்தையை அடிப்படையாக வைத்து எதிர்கால உறவுகள் ஒரு குழந்தைக்கு அமையவேண்டும் என்ற கருத்துப் பிராமணர்களுக்கு உள்ளது. மாமாவை அடிப்படையாக வைத்து எதிர்கால உறவுகள் ஒரு குழந்தைக்கு அமையவேண்டும் என்ற கருத்து பிராமணர் அல்லாதவர்க்கு உள்ளது. தொட்டில் என்பது பெண்கள் தொடர்பானது என்பதால் அத்தைக்கு முதன்மை கொடுக்கப்பட்டிருக்கலாம். இந்தியச் சூழலில், தமிழ்ச் சூழலில் பிராமணர்கள் தாய்மாமனுக்கு முதன்மை கொடுக்கும் மரபும் இருந்துவருகிறது.

தொட்டில் கட்டும் சடங்குப் பிறப்புக்கு முன்பும் நிகழ்த்தப்படுகிறது. குழந்தை இல்லாத தம்பதியினர் பெண்கள் கோயில்களில் சென்று மரத்தில் துணியால் சிறு தொட்டில் கட்டிக் குழந்தை பிறக்க வேண்டும் என வேண்டிக் கொள்கின்றனர். குறிப்பிட்ட கோயில்களில்தான் இது நிகழ்த்தப்படுகிறது. ஆண், பெண் தெய்வம் என்று வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. பிராமணர் வீடுகளில் பூசை அறையில் தொடர்ந்து 21 அல்லது 27 நாட்களுக்குத் தொட்டில் கோலமிட்டு வழிபட்டால் குழந்தை பிறக்கும் என்று இது நிகழ்த்தப்படுகிறது (பெண்மணி, 2003. டிசம்பர் 121 -22). தொட்டில் என்ற பொருள் வீட்டுக்கு வெளியே நிகழ்த்தப்படுகிறது. பிராமணருக்குள் வீட்டுக்குள் அது ஓவியமாக - கோலமாக நிகழ்த்தப்பட முடிகிறது. கடவுள், வழிபாடு முதலியவற்றுடன் பிராமணர் கொள்ளும் நெருக்கத்தை இது காட்டுகிறது.

கோயிலில் குழந்தை பிறப்புக்கு முன்பும் பின்பும் இருவேறு தொட்டில் கட்டும் வழிபாடுகளும் நிகழ்த்தப்படுகின்றன. சேலம் இடைப்பாடியில் இருந்து 14 கி.மீ தூரத்திலுள்ள கல்வடங்கம் கிராமத்தில் ஓடும் காவிரி ஆற்றங்கரையில் அங்காளம்மன் கோயில் இருக்கிறது. இந்தக் கோயிலுக்குப் பெரும்பாலும் குழந்தைப் பாக்கியம் இல்லாத பெண்களே அதிகமாக வருகின்றனர். இக்கோயிலுக்குள் மதுரை வீரன், பாவாடைராயன், கருப்பண்ணன், இருளப்பன் சுவாமி சிலைகளுக்கு நடுவே பேச்சியம்மன் சிலை உள்ளது. குழந்தைப் பாக்கியம் வேண்டிப் பெண்கள் இந்தப் பேச்சியம்மன் கோயிலில் கல் தொட்டில் கட்டுகின்றனர். வேண்டுதல் பலித்து விட்டால் மரத் தொட்டில் கட்டுகின்றனர். தான் உடுத்தியுள்ள சேலையின் முந்தானையைச் சிறிதாகக் கிழித்து அதில் அங்குள்ள சிறிய கூழாங்கல்லை வைத்து முடிச்சிடுகின்றனர். பிறகு சிறிய தொட்டில் போல அதைச் செய்து பேச்சியம்மனை வணங்கி அதன் எதிரே கூரையில் கட்டித் தொங்க விடப்பட்ட இரும்பு கம்பியில் கல் தொட்டிலைக் கட்டுகின்றனர்.

இறப்புச் சடங்கிலும் தொட்டில் இடம்பெறுகிறது. குழந்தைகள் இறந்துவிட்டால் தொட்டில் கட்டி அதில் குழந்தையைக் கிடத்தித் தூக்கிச் செல்கின்றனர். காடாத் துணித் தொட்டில் தாய்மாமனால் வாங்கி வரப்படும். தாய்மாமனே அடக்கம் செய்யும் இடத்திற்குத் தூக்கிச் செல்ல வேண்டும். பிணத்தைப் பங்காளிகள் தூக்கிச் செல்வது ஒரு மரபு.

தொட்டில் என்பது மனிதர்களின் சமூக, இட வேறுபாடுகளையும் பொருளாதார வேறுபாடுகளையும் மரபு மற்றும் நவ நாகரீக வேறுபாடுகளையும் வெளிப்படுத்தும் ஒரு பொருளாக இருக்கிறது எனலாம்.

சங்க இலக்கியத் தொகுப்புகள் போலத் தொல்காப்பியம் களவுக்கு முதன்மை கொடுத்துள்ளது; களவு, கற்பு இரண்டிலும் தலைவன் - பாங்கன், தலைவி - தோழி - தாய் என்ற உறவுகள் கருதப்பட்டுள்ளன. கொளல் மரபு, கொடை மரபு என்ற குடும்பப் பின்னணி தவிர்க்கப்பட்டுள்ளது. அரிதான குறிப்புகள் அவை பற்றி உள்ளன. சமூக மரபுகளை இலக்கிய, இலக்கண மரபுகள் பதிவு செய்யாமல் தவிர்த்துள்ளன.

தகவலாளர்கள் பட்டியல்

1. இரா.அமல்ராஜ், 26, தர்மபுரி
2. பா.அமுதா, 25, தர்மபுரி
3. ப.கனிமொழி, 27, தேனி
4. நா.சுகந்தி காயத்ரி, 23, பட்டுக்கோட்டை
5. பூ.சுமன், 23, கிருஷ்ணகிரி
6. பார்வதி, 65, கோயம்புத்தூர்
7. நா.பிரபு, 26, ராசிபுரம்
8. ப.பூர்ணிமா, 25, பொள்ளாச்சி
9. கோ.பெருமாள், 25, பொள்ளாச்சி
10. பா.மணிகண்டன், 25, பொள்ளாச்சி
11. இரா.மூர்த்தி, 24, திருவல்லிப்புத்தூர்
12. வி.ம.ரம்யா, 23, பரமத்தி வேலூர்
13. ப.லலிதா, 25, கோயம்புத்தூர்
14. மு.ஷோபனா, 24, திருச்செங்கோடு

10

உம்- கருப்பொருண்மையும் கிளைப்பொருண்மைகளும்

இடைச்சொற்களை எல்லாம் வேற்றுமைச்சொல் என்றே தொல் காப்பியம் (தொல்-2; 448) குறிப்பிடுகிறது. தான் சார்ந்துவரும் சொல்லின் இலக்கணப் பொருண்மையை வேறுபடுத்துவதால் வேற்றுமை எனப்பெயர் பெற்றது. உண்மையில் வேற்றுமைகள் என்று சொல்லப் படும் இடைச்சொற்கள் எல்லாம் சொற்களுக்கு இடையிலான, சொற்கள் குறிக்கும் பொருள்களுக்கு இடையிலான உறவைக் குறித்து வருவனவாகும். இடைச்சொற்களைச் சொல்லியல் வேற்றுமை என்றும் தொடரியல் வேற்றுமை என்றும், இரண்டாகப் பகுக்கலாம். முற்று விகுதி, கால இடைநிலை முதலானவற்றைச் சொல்லியல் வேற்றுமை என்றும் வேற்றுமை உருபு, எச்சவிகுதிகள். உம், ஏ முதலான ஓட்டுக்கள் தொடரியல் வேற்றுமைகள் என்றும் வகைப்படுத்தப்பட வேண்டிய வையாகும்.

இந்தக் கட்டுரையில் உம் என்ற தொடரியல் வேற்றுமையின் சில வருகைகள் மட்டும் விளக்கப்படுகின்றன. உம் என்பது தனித்த பேராய்வுக்கு உரியது. எனவே, எல்லா வேற்றுமைகளையும் விளக்கும் முயற்சி தவிர்க்கப்பட்டுள்ளது.

உம் என்ற இடைச்சொல்

உம் என்ற இடைச்சொல்லுக்குச் சொல்லப்பட்ட பொருண்மை களை கருப்பொருண்மை, கிளைப்பொருண்மைகள் என்று வகைப் படுத்தலாம். எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்று எட்டுப் பொருண்மைகளில் உம் வரும் (தொல்- 2; 250) என்று விளக்கப்பட்டுள்ளது. முற்றுப்பொருண்மையே உம்மின் கருப்பொருண்மை. அதாவது, "குறிப்பிட்ட தொகுதியில் உள்ள

உள்ளுறுப்புகள் எல்லாம் ஒன்றாக அடங்கும்'' (கு.பரமசிவம், 1983, 280) என்ற பொருண்மையாகும். அனைத்து உள்ளுறுப்புகளையும் குறிக்கும் சொல் எனலாம். ஒரு தொகுதியில் குறைந்தது இரு உள்ளுறுப்புகளாவது இருக்க வேண்டும். பன்மை என்பது தொகுதி எனப்படாது. பன்மைப்பொருளைக் குறித்து வரும் சொல் உம் பெறாது. பன்மை தொகுதியாக இருந்தால்தான் அப்பன்மைச்சொல் உம் பெற முடியும். தொகுதி என்பது வரையறுக்கப்பட்டது. இது வரையறை, சூழலுக்கு ஏற்ப வேறுபடலாம்.

இத்தனை என்று எண்ணிக்கை அறியப்பட்ட சினைப்பொருள்களோ, முதல் பொருள்களோ மொழியில் ஒரு பெயரால் குறிக்கப்படும்போது, உம் பெறும். அவ்வாறு அப்பெயர் உம் பெறுவதற்குப் பெயர் குறிக்கும் பொருள்கள் தொகுதியாக ஒரு வினையில் ஈடுபட்டனவாக இருக்கவேண்டும் (தொல் - 2; 33).

1. (அ) நங்கை முலையிரண்டும் வீங்கின (இளம் -2; 33)
   (ஆ) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் (இளம் - 2; 33)

பெண்ணுக்கு முலை இரண்டு மட்டும் என்பதால் முலை என்ற தொகுதியில் இரண்டு என்பது முற்றுப்பெற்ற எண்ணிக்கையாகிறது. தமிழ்நாட்டில் பெருவேந்தர் மூவர் மட்டும் என்பதால் தமிழ்நாட்டு மன்னர் என்ற தொகுதியில் மூன்று என்பது முற்றுப்பெற்ற எண்ணிக்கை யாகிறது. எண்ணிக்கை அடைச்சொல்லிலும் எண்ணிக்கையை முழுமையாகப் பெற்ற பொருள் அடை பெற்ற பெயரிலும் இரு முலைகள், மூன்று வேந்தர்கள் என்று சொல்வது முறை. "இரு முலைகளும், மூன்று வேந்தர்க்கும்'' என்று உம் அடைபெற்ற பெயருக்குப் பிறகு வரும். "நங்கையினது இரண்டும் வீங்கின'' என்றும் வரலாம். எண்ணுப்பெயர் ஆகுபெயராக நின்று பொருளைக் குறித்து வந்தது என்றாகும்.

2. (அ) ஐந்தலை நாகம் உடன்றது (சேனா - 2; 33)
   (ஆ) நான்மறை முதல்வர் வந்தார் (சேனா - 2; 33)

என்ற வாக்கியங்களில் ஐந்தலையும், நான்மறையும் என்று உம் கொடுக்க முடியாது. ஐந்தலை, நான்மறை என்பன தொகுதிகள் தாம். உடன்றது நாகம், வந்தவர் முதல்வர் என்ற வினை சினைகளுக்கு உரியதாக இல்லாதிருப்பதால், அதாவது ஐந்தலை, நான்மறை என்ற சொற்கள் முதல் பெயர்களுக்கு அடைகளாக வரும் தொகுதிப் பெயர்களாக இருப்பதால் இவ்வாக்கியங்களில் உம் வர வாய்ப்பு இல்லை.

3. (அ) நாகத்தின் ஐந்து தலைகளிலும் மூக்கு இருந்தது.
   (ஆ) முதல்வர் நான்மறைகளிலும் வல்லவர்

என்று உம் ஐந்தலை, நான்மறை என்ற இரு சொற்களிலும் வாக்கிய அமைப்பும், பொருண்மையும் (2) மாறும்போது, வரலாம். முலை யிரண்டும், வேந்தர் மூவரும் என்று எண்ணுப்பெயர் பெயராக வரும்போதுதான் உம் பெறும்; அடையாக வரும்போது அன்று.

4. (அ) கழுதை நான்கு காலாலும் ஓடியது.
(ஆ) குழந்தைகள் மூன்றும் புது அம்மாக் கேட்டன

தொகுதி என்பதும் சூழலைப் பொருத்தும் மாறுபடுகிறது. கால் என்ற தொகுதி கழுதைக்கு நான்கு; மனிதருக்கு இரண்டு; சிலந்திக்கு எட்டு; "சிலந்தி ஆறு கால்களாலும்" என்று சொல்ல முடியாது. மூன்று குழந்தைகள் மட்டும் உள்ள குடும்பத்தில் குழந்தை மூன்று என்பது தொகுதி. பத்துப்பேர் உள்ள குடும்பத்தில் ஒன்பது என்பது கூடத் தொகுதியில்லை.

உம்முக்குச் சொல்லப்பட்ட பொருண்மைகளுள் முற்று, எண், எச்சம், சிறப்பு, எதிர்மறை என்ற ஐந்து பொருண்மைகள் பொருத்தமாக உள்ளன.

ஒரு தொகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளுறுப்புகள் ஒரு வாக்கியத் திற்குள் அடுத்தடுத்த ஒவ்வொரு பெயர்களாக வந்து, அப்பெயர்கள்தோறும் உம் வந்தால் அது எண் உம் ஆகும். பெயர்கள் எண்ணப்படுவதன் நோக்கம் தொகுதியில் உள்ள எல்லா உறுப்புகளும் என்ற மொத்தத்தை அடைவது தான்.

5. (அ) நிலனும் நீரும் தீயும் வளியும் விசும்பும் (இளம் - 2; 250)
(ஆ) சேரனும் சோழனும் பாண்டியனும் வந்தனர்

பூதங்கள் ஐந்தும் எண்ணப்பட்டன. பெருவேந்தர் மூவரும் எண்ணப் பட்டனர். ஒரு தொகுதியில் இரு உறுப்புகள் ஒரு வாக்கியத்தில் அடுத்தடுத்து இரு பெயர்களால் குறிக்கப்பட்டாலேயே அது எண் உம் ஆகிவிடும்.

ஒரு தொகுதியில் உறுப்புகளுள் ஏதேனும் ஒரு உறுப்பு மட்டும் வாக்கியத்தில் இடம் பெற்று, அவ்வுறுப்பு உம் பெற்று வந்தால் அந்த உம் எச்ச உம் ஆகும்.

6. சாத்தனும் வந்தான்; கொற்றனும் வந்தான் (நச். 2; 257)

சாத்தன், கொற்றன் என்ற இருபெயர்களை அடுத்து வந்த உம்கள் ஒன்றுக்கொன்று எச்ச உம் ஆகும். இரு வாக்கியங்களில் ஏதேனும் ஒரு வாக்கியம் வெளிப்பட்டு நின்றாலும் போதும். மற்றொரு வாக்கியம்

சூழலாலும் பெறப்படலாம். வெளிப்பட்டு நிற்கும் வாக்கியத்தில் உள்ள உம் எச்ச உம் ஆகும்.

ஒரு தொகுதியில் அடங்கும் உள்ளுறுப்புகள் எல்லாம் ஒரு செயலுக்கு அல்லது ஒரு பண்புக்குப் பொதுவானவைகளாக இருந்து, அவற்றுள் ஒன்று மட்டும் அச்செயலுக்கு அல்லது அப்பண்புக்குப் பொதுவானதாக இல்லாமல் இருக்கலாம். அவ்வாறு பொதுவாக இல்லாத அந்த உறுப்பை அந்தச் செயலுக்கு அல்லது அந்தப் பண்புக்குப் பொதுவானதாகக் குறிப்பிடும்போது அந்த உறுப்பைக் குறிக்கும் பெயர்ச்சொல்லை அடுத்து உம் கொடுக்கப்படும். அந்த உம் சிறப்பு உம் ஆகும்.

7. (அ) குறவரும் மருளும் குன்றம் (இளம் - 2; 250)
(ஆ) ரகோத்சலான்னா அப்பாவுக்கும் தெரியல
(இ) பூசையும் புலால் தின்னாது.

உழவர், ஆயர், பரதவர் முதலான மக்கள் குழுக்கள் அனைத்தும் ஒரு தொகுதி. ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு உள்ளுறுப்பு. ஒவ்வொரு உள்ளுறுப்பும் குன்றத்தைப் பார்த்து மருள்வது இயல்பு. மருள்வது எல்லாவற்றிற்கும் பொதுவானது. குறவர் என்ற உள்ளுறுப்புக் குன்றத்தில் வாழ்வது. குன்றத்தைப் பார்த்து மருள்வது அதன் இயல்பன்று; மருள்தல் என்ற எல்லா உறுப்புகளுக்கும் பொதுவான பண்பில் அது அடங்காது. மருளாதவரே மருளும் குன்றம் என்று சொல்வதற்காகக் "குறவரும் மருளும் குன்றம்" (7அ) என்று சொல்லப்பட்டது. மற்றவரும் மருளும் குன்றம் என்று சொல்லாமலேயே விளங்கும். மருளாதிருத்தல் என்பதில் குறவர் என்று சொல்லாமலேயே விளங்கும். மருளாதிருத்தல் என்பதில் குறவர் என்ற உள்ளுறுப்புச் சிறப்பானது. எனவே, அவ்வுறுப்புக்கு உம் கொடுக்கும்போது, அது சிறப்பு உம் ஆகிறது. சிறப்புப்பொருள் உம் பெறும்போது, தன் சிறப்புத் தன்மையை இழந்த பொதுப்பொருள் ஆகிவிடுகிறது. எல்லாம் தெரிந்திருத்தல் என்பது அப்பாவின் சிறப்புப் பண்பு. எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்பதில்லை என்ற பொதுப் பண்பு பிறர்க்குரியது. அப்பொதுப்பண்பை ஒரு சிறப்புப்பொருள் தன் சிறப்பை இழந்து பெறும்போது, அச்சிறப்புப் பொருளுக்கு உம் கொடுக்கப்படும்(7ஆ). பூசை புலால் தின்னும் பொருள்களில் ஒன்றாக இருப்பதால் அது புலால் தின்னாத போது, எச்சம் உம் பெறும் என்று விளக்குவது பிறழ்வானது (7இ).

எச்ச உம் தொழில்பெயரை (செயல், செய்தல்) அடுத்து வந்தால், அது எதிர்மறை உம் ஆகும். செயின், செயற்கு, செய்வதற்கு, செய்ததற்கு, செய்தவன் முதலான வாய்பாடுகளை அடுத்து வரும் எச்ச உம் எதிர்மறை உம் என்றே படும்.

8. (அ) செப்பே வழீஇயினும் வரைநிலை இன்றே (தொல் - 2; 15)
(ஆ) கொற்றன் வருவதற்கும் உரியன் (இளம் - 2; 250)

எதிர்மறை உம்மையில் எதிர்மறை, உடன்பாடு என்ற இரண்டும் ஒரு தொகுதியின் இரு உறுப்புகள். வழுவுதல், வழாதிருத்தல் என்ற இரண்டும் ஒரு தொகுதி. வழுவினாலும் என்றாலும் வழாவிட்டாலும் என்றாலும் முறையே வழுவுதல், வழாமை என்ற இரண்டும் பெறப் படும். வராதிருப்பதற்கும் வருவதற்கும் என்ற இரண்டும் ஒரே தொகுதி. ஒன்றால் வெளிப்படுத்திக் கூறினாலும் இவ்விரு உறுப்புகளும் பெறப்படும் (8ஆ).

9. தேவரே தின்னினும் வேம்பு கைக்குமே (தெய் - 2; 252)

என்ற வாக்கியத்தில் வந்த உம் எச்ச உம் ஆகும். மனிதர் தின்னினும், நரகர் தின்னினும் என்று உம் வேறு, வேறு வாக்கியங்களில் வரும் உம்களைத் தழுவி நின்றதால் எச்ச உம் ஆயிற்று. தொழில்பெயரை அடுத்து வரும் உம் அத்தொழிலை நிகழ்த்திய பொருளின் எதிர்த்தொழிலை தொகுதியின் மற்றொரு உறுப்பாகக் குறித்து வரும்போது மட்டுமே எதிர்மறை உம் ஆகிறது. வேறு பொருள்கள் நிகழ்த்திய அத்தொழிலை உறுப்புகளாகக் குறித்து நிற்கும்போது, எச்ச உம் என்றே ஆகிறது.

சிறப்பு உம்மையையும் எதிர்ப்பொருண்மையோடு தொடர்புபடுத்தி விளக்கலாம். சிறப்பாக உள்ள ஒரு பொருள் சிறப்பை இழக்கிறது. அப்பொருளுக்குச் சிறப்பாக இல்லாத வேறு ஒரு பொருள் அப்பொருளிடம் அச்சிறப்பைப் பெறுகிறது. குறவர், குன்றம் என்ற இரண்டும் இவ்வாறு தொடர்புபடும் பொருள்களாகும். மருளாதிருத்தல், மருள்தல் என்ற இரு வினைகளால் இரு பொருள்களுக்கு இடையில் சிறப்பு, சிறப்பின்மை என்ற தொடர்புகள் ஏற்படுகின்றன. சிறப்பு உம் ஏற்கும் ஒரு பெயர் தனது சிறப்பை இழக்கிறது. சிறப்பு உம் ஏற்பது ஒரு பெயர்; எதிர்மறை உம் ஏற்பது தொழில்பெயர். செயற்கு முதலான வாய்பாட்டு வடிவங்கள் என்ற அளவில் அவை வேறுபாடு உடையன. சிறப்பு உம், எதிர்மறை உம் என்ற இரண்டும் எச்ச உம் ஆகவும் இருக்கும்.

10. (அ) உழவரும் மருளும் குன்றம்; பரதவரும் மருளும் குன்றம்...
குறவரும் மருளும் குன்றம்
(ஆ) கொற்றன் வருவதற்கும் உரியன்; அவன் வாராமைக்கும் உரியன்.

என்ற இரு வாக்கியத் தொகுதிகளிலும் வந்த ஒவ்வொரு உம்மும் எச்ச உம் ஆகும். சிறப்பு உம், எதிர்மறை உம் என்ற இரண்டும் எச்ச உம்முக்குள் அடங்கின. சிறப்பு உம்மில் உள்ளுறுப்புகள் இரண்டுக்கு

மேற்பட்டும் வரலாம். எச்ச உம் என்பது சிறப்பு உம், எதிர்மறை உம் என்ற இரண்டாகவும் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சேரனும், சோழனும், பாண்டியனும் என்ற ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாக்கியத்தில் வரும்போது, அவ்வாக்கியத் தொகுதியில் சிறப்பு உம் இல்லை. தேவர் தின்னினும், நரகர் தின்னினும், மனிதர் தின்னினும் என்ற ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாக்கியத்தில் வரும் வாக்கியத்தொகுதியில் எதிர்மறை உம் இல்லை.

எண் உம், எச்ச உம் என்ற இரண்டையும் தொடர்புபடுத்த முடியும். உள்ளுறுப்புகள் ஒரு வாக்கியத்திற்குள் வைத்துத் தொகுக்கப்படுவதற்காக ஒவ்வொரு உள்ளுறுப்பிலும் உம் கொடுத்தால் அது எண் உம் ஆகும். உள்ளுறுப்புகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு வாக்கியத்தில் வைத்துத் தொகுக்கப்பட்டால் அது எச்ச உம் ஆகும். சிறப்பு உம், எதிர்மறை உம் என்ற இரண்டும் எண் உம்களாக வைத்துத் தொகுக்கப்பட முடியாது; அதாவது, சிறப்பு உம், எதிர்மறை உம் என்ற இரண்டும் எண் உம்மாக ஒரு போதும் இருக்க முடியாது.

எச்ச உம், எதிர்மறை உம் என்ற இரண்டும் ஒரு வாக்கியத் தொகுதியாக வருவதில்லை. (தொல்-2; 278) வந்தால் வாக்கியத் தொகுதி வழுவாகிறது.

11. (அ) சாத்தனும் வந்தான்; கொற்றனும் வரலும் உரியன் (இளம்-2;278)

(ஆ) சாத்தனும் வந்தான்; கொற்றன் வரலும் உரியன்

ஒரு பொருள் ஒரு வினையை நிகழ்த்தவும் நிகழ்த்தாமல் இருக்கவும் ஆகிய இரு வாய்ப்புகளும் உள்ள நிலையில் அதே வினையை நிகழ்த்திய மற்றொரு பொருளுடன் அந்தப் பொருள் ஒரே வினையை நிகழ்த்திய பொருள்கள் என்ற ஒரு தொகுதியின் உள்ளுறுப்புகளாக வைத்துப் பார்க்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை.

12. (அ) சாத்தனும் வரலும் உரியன்; கொற்றனும் வரலும் உரியன்

(ஆ) சாத்தனும் வாரான்; கொற்றனும் வாரான்

என்று வாக்கியத் தொகுதிகள் வழாநிலையில் அமைய முடியும். வருவது, வராமல் இருப்பது என்ற இரண்டுக்குமான வாய்ப்பை இரு பொருள்களும் பெறுவதால், ஒரு தொகுதியில் அடங்கும் உள்ளுறுப்புகள் என்ற கருத்திற்குப் பொருந்தி வருகின்றன(12அ). எதிர்மறை வினையை நிகழ்த்தும் நிலையிலும் இரு பொருள்களும் ஒரு தொகுதியின் உள்ளுறுப்புகளாக அமையலாம் (12ஆ).

எச்ச உம் பெற்று வரும் வாக்கியத் தொகுதி ஒரு வினையால் முடிவு பெற்றிருக்க வேண்டும்; வேறு, வேறு வினை முடிவுகளைப் பெற்று வருமானால் வழுவாகிவிடும் (தொல்-2; 430). வாக்கியத்தொகுதி வழுவாகிவிடும் என்பது உம் பெறும் பெயர்ச்சொல் குறிக்கும் பொருள்கள் ஒரு தொகுதியின் உறுப்புகளாக இல்லை என்பதேயாகும்.

13.(அ)சாத்தனும் வந்தான்; கொற்றனும் வந்தான் (இளம்- 2; 430)
(ஆ) சாத்தனும் வந்தான்; கொற்றனும் வரும் (இளம் - 2; 430)
(இ) சாத்தனும் வந்தான்; கொற்றனும் அழுதான்

வாக்கியங்களின் வினைமுடிவுகள் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற கால வேறுபாட்டுக்கு உரியனவாக இருக்கலாம். பால், எண், திணை, இடம் என்ற வேறுபாடுகளுக்குரியனவாகவும் இருக்கலாம். வினையடி மட்டும் அதாவது வினைப்பொருண்மை மட்டும் வேறுபடக்கூடாது (13 இ).

சிறப்புப்பொருள்களும் எதிர்மறைப் பொருள்களும் எண்ணப் படலாம். ஆனால், ஒவ்வொரு சிறப்புப் பொருளும் தான் சிறப்புப் பொருளாக இருக்கும் தொகுதியில் உள்ள உறுப்புகளோடு வைத்து எண்ணப்படாது; எதிர்மறைப் பொருளும் தான் எதிர்மறைப் பொருளாக இருக்கும் தொகுதியில் உள்ள மற்றொரு உறுப்போடு வைத்து எண்ணப்படாது.

13. (அ) மாதவி தேனினும் மலரினும் இசையினும் இனியள்
(ஆ) சாப்பிடாமலும் தூங்காமலும் குளிக்காமலும் சூது ஆடுவேன்.

தேன் சுவைப்பொருள்களின் தொகுதியில் சிறப்புப்பொருள். சுவைப் பொருள் பயன்படுத்தப்படும் சூழலுக்கு ஏற்ப, பால், அமிழ்து, பழம் என்பனவற்றுள் ஒன்றாக இருக்கலாம். மலர் மணப் பொருள்களின் தொகுதியில் சிறப்புப் பொருள், இசை ஓசைகளின் தொகுதியில் சிறப்புப்பொருள். மாதவியோடு ஒப்பிடப்படும் பொருள்களின் தொகுதி என்ற அடிப்படையில் தேன், மலர், இசை முதலான பொருள்கள் சம மதிப்புடைய உறுப்புகள் ஆகும். "தேனினும், மலரினும், இசையினும்" என்று தொடர்ந்து ஒரு வாக்கியத்திற்குள் வரும்போது (14 அ) ஒவ்வொரு பெயரும் பெற்ற உம், எண் உம் என்றே சொல்லப்படும்; எச்ச உம் என்று சொல்லப்பட முடியாது.

14. (அ)உழவரும் பரதவரும் குறவரும் மருளும் குன்றம்
(ஆ) சாத்தன் வருவதற்கும் வாராமைக்கும் உரியன்

என்ற சிறப்பு உம், எதிர்மறை உம் என்ற இரண்டும் தன் தொகுதியில் உள்ள பிற உறுப்புகளோடு வைத்து எண்ணப்படுவது வழு.

15. (அ) மாதவி தேனினும் இனியள்; மலரினும் இனியள்; இசையினும் இனியள். -எச்ச உம்

(ஆ) மாதவி தேனினும் இனியள்; குழம்பினும் இனியள்; சோற்றினும் இனியள்; கூழினும் இனியள். - சிறப்பு உம்

16. (அ) மாதவி தேனினும் மலரினும் இசையினும் இனியள். -எண் உம்

தேன் என்ற ஒரு பொருளே சூழலுக்கு ஏற்ப எச்ச உம், சிறப்பு உம், எண் உம் என்ற மூன்று வேறு உம்கள் பெற்று, வேறுபட்டு வருகிறது. தொகுதிப் பொருள் எது என்பதைப் பொருத்தும் அது வாக்கியத்தில் சொல்லப்படும் முறையைப் பொருத்தும் இவ்வாறான வேறுபாடுகள் தோன்றுகின்றன. ஒரு தொகுதியில் ஒரு சூழலில் ஒரு பொருள்தான் சிறப்புப் பொருளாக இருக்க முடியும் என்று வைத்துக் கொள்ளலாம்.

17. (அ) சாப்பிடாமலும் சூது ஆடுவேன்; தூங்காமலும் சூது ஆடுவேன்; குளிக்காமலும் சூது ஆடுவேன் - எச்ச உம்

(ஆ) சாப்பிடாமலும் சூது ஆடுவேன்; சாப்பிட்டுவிட்டும் சூது ஆடுவேன் - எதிர்மறை உம்

(இ) சாப்பிடாமலும் தூங்காமலும் குளிக்காமலும் சூது ஆடுவேன்- எண் உம்

ஒரு தொகுதியில் சிறப்புப் பொருளாக இருக்கும் ஒரு பொருள் வேறு, வேறு தொகுதிகளில் உள்ள சிறப்புப் பொருள்களோடு எண்ணப் படலாம். அவ்வாறு எண்ணப்படும்போது, அது வேறு தொகுதி எனப்படும். சிறப்புப்பொருள் அந்த வேறு தொகுதியில் எச்ச உம் ஆகச் சொல்லப்படும்போது, தான் சிறப்புப்பொருளாக இருக்கும் தொகுதியில் உள்ள பிற பொருள்களோடு சூழலாலும் தொடர்புபடாது; அப்பொருள் எண்ணப்படும் பொருள்களுள் ஒன்றாக இருப்பது காரணமாகும். எண்ணப்படும்போது, சிறப்புப் பொருள்கள் சிறப்பு உம் என்ற உம்மை இழக்கின்றன; எண் உம்மைப் பெறுகின்றன. எதிர்மறை உம்மையும் இவ்வாறு விளக்கவேண்டும். சாப்பிடாமலும் என்ற சொல் எச்ச உம்மாகவோ, எண் உம்மாகவோ பயன்படுத்தப்படும்போது, எதிர்மறை உம் என்ற உம்மை இழக்கிறது; எச்ச உம், எதிர்மறை உம் என்ற இரண்டும் வேறொரு தொகுதியின் உள்ளுறுப்புகளால் பெறப்படும் மொழி அமைப்புகளாகும். ஒரு பொருள் தனது தொகுதியில் சிறப்புப்

பொருளாக இருந்து எச்ச உம்மாகவும் இருப்பதற்கும் வேறொரு தொகுதியில் எண்ணும்மாகவும் எச்ச உம்மாகவும் இருப்பதற்கும் உள்ள வேறுபாடு கணக்கில் கொள்ளப்படவேண்டும். சாப்பிடாமலும் என்ற எதிர்மறை உம் வேறு வாக்கியத் தொகுதிகளில் எச்ச உம், எண் உம்மாக வரும்போது, தனது தொகுதியில் உள்ள மற்றொரு உறுப்பான உடன்பாட்டு உம்மைப் பொருண்மையைப் பெறுவதில்லை.

தொகுதி, உறுப்பு என்ற பாகுபாடு நிலையானதன்று. ஒரு தொகுதி மற்றொரு தொகுதியின் உறுப்பாகலாம். ஒரு உறுப்புத் தனக்குள் உள்ள உறுப்புகளுக்குத் தான் தொகுதியாகலாம். முற்று உம் தவிரப் பிற எல்லா உம்களும் தொகுதியைச் சென்றடைவதை நோக்கமாகக் கொண்டு வருகின்றன. முற்று உம் தானே தொகுதியாக இருக்கிறது. ஒரு பொருள் தனித்துப் பயன்படும்போது, அப்பொருளைக் குறிக்கும் பெயர் உம் பெறுவதில்லை. ஒரு பொருள் ஏதேனும் ஒரு தொகுதியின் உள்ளுறுப்பாகப் பார்க்கப்படும்போது, அப்பொருளைக் குறிக்கும் பெயர் முற்று உம் தவிர்த்த ஏதேனும் ஒரு உம் பெற்று வருவதாகவே இருக்கும். எனவே, மொழியில் ஒரு பெயர் உம் பெற்று வந்தால் அது ஒரு தொகுதியின் உள்ளுறுப்பாகப் பார்க்கப்பட்டுள்ளது என்றும் உம் பெற்று வரவில்லை என்றால் தனிப்பொருளாகப் பார்க்கப்பட்டுள்ளது என்றும் கருதலாம். ஒரு பெயர் தனித்து உம் பெற்று வந்தால் அது உள்ளுறுப்புகளின் தொகுதியாகப் பார்க்கப்பட்டுள்ளது என்றாகும். ஒரு பெயர் தனித்து உம் பெறுதல் என்பது அப்பெயர் இடம் பெற்ற வாக்கியச் சூழலாலும் அப்பெயர் தனித்தே உம் பெற்று வந்துள்ளது என்று கொள்ளப்படுவதற்குரியதாக இருக்கவேண்டும்.

ஒரு வாக்கியத் தொகுதியாக அடுத்தடுத்து வரும் இரு வாக்கியங்களில் உள்ள இருபெயர்களுள் ஒருபெயர் மட்டும் எச்ச உம் பெறுமென்றால் முதல் வாக்கியத்தில் வந்த பெயர் அந்த எச்ச உம்மைப் பெறாது; அடுத்த வாக்கியத்தில் வந்த பெயரே அந்த எச்ச உம்மைப் பெறும். (தொல் -2; 279)

18. (அ) சாத்தன் வந்தான், கொற்றன் வந்தான். (சேனா.2; 284)
(ஆ) கொற்றனும் வந்தான், சாத்தன் வந்தான் (சேனா.2; 284)
(இ) சாத்தனும் வந்தான், கொற்றன் வந்தான்

ஒரு பொருள் வினை நிகழ்த்தும் போது, அது ஒரு பொருளாகவே பார்க்கப்படுகிறது. எனவே, அந்தப் பொருளைக் குறிக்கும் பெயர் உம் பெறுவதில்லை. அதே வினையை மற்றொரு பொருளும் அடுத்து நிகழ்த்தும் போது, ஒரே வினையை நிகழ்த்தும் பொருள்கள்

என்ற அடிப்படையில் ஒரு தொகுதி உருவாகிவிடுகிறது. எனவே, இரண்டாவது பொருள் அந்த வினையைச் செய்வதைக் கூறும்போது, தொகுதியின் உறுப்புகளுக்குக் கொடுக்க வேண்டிய உம் என்ற சொல்லை அந்த உறுப்பைக் குறிக்கும் பெயருக்குக் கொடுக்க வேண்டியதாகிறது. இருபொருள்கள் அடுத்தடுத்து நிகழ்த்திய ஒரு வினை முறையே அடுத்தடுத்த வாக்கியங்களில் கூறப்படுகிறது. இரு வாக்கியங்களையும் முன், பின்னாக மாற்ற முடியாது. தனிப்பொருள்கள் தொகுக்கப்பட்டுத்தான் தொகுதி உருவாக்கப்படுகிறது. இரண்டாவது பொருள் என்ற மற்றொன்றும் சேரும்போதுதான் தொகுதி பற்றிய எண்ணம் தோன்றுகிறது. தொகுதியில் இருந்து ஒரு பொருள் தனிப்பொருளாகப் பார்க்கப்பட முடியாது. தொகுதி உருவாகாத நிலையில் ஒரு தனிப்பெயருக்கு உம் கொடுக்கப்படாது என்ற அடிப்படையில்தான் வாக்கியத் தொகுதியில் முதலில் வந்த பெயருக்கு உம் கொடுக்கப்படவில்லை. வாக்கியத் தொகுதியில் தொடக்கத்தில் வரும் பெயர் உம் பெறுமானால் அப்பெயர் குறிக்கும் பொருள் தொடக்கத்திலேயே தொகுதியின் உறுப்பாகப் பார்க்கப்பட்டுள்ளது என்றாகும்.

ஐயம், தெரிநிலை, ஆக்கம் என்ற மூன்றும் உரைகள் கொடுத்து விளக்கியுள்ள சான்றுகளின்படி, உம் என்ற சொல்லின் பொருண்மைகள் என்று கொள்வதற்குப் பொருத்தமில்லாதவை. செய்யுளிலும் வழக்கிலும் இப்பொருண்மைகள் உம் என்ற சொல்லுக்குப் பொருத்தமானவை என்றால் அதை நிறுவுவதற்குரிய சான்றுகளைத் தரவேண்டும். உரைகள் கொடுத்து விளக்கியுள்ள சான்றுகள் பின்வருவனவாகும்.

19.(அ)பத்தானும் எட்டானும் கொடு (இளம்-2; 250)

(ஆ) உலகம் பார்ப்பான் போல்வதோர் மதுகையுடையன்; அடக்கமும் உடையன்; எண்மையுடையன்

(இ) *காவலில் இவளும் அல்லள். இவனும் அல்லன் (தெய் - 2;252)

என்ற வாக்கியங்களில் வந்துள்ள உம்கள் ஐய உம்கள் என்று கொள்ளப் பட்டுள்ளன. உம் ஐயப் பொருண்மையில் வராது. ஐயப்பொருண்மை (பத்தோ, எட்டோ, இவளோ, இவனோ) ஐயத்திற்குரிய பொருள்களுள் ஏதேனும் ஒன்றை மட்டும் பதிலில் தேர்ந்தெடுக்க வாய்ப்பு அளிக்கிறது. ஏனைய ஐயப்பொருள்களை நீக்குகிறது. உம் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களில் வரும்போது அவற்றைத் தொகுக்கும் பொருண்மையை உடையது. தொகுக்கும் பொருண்மையை உடைய உம் நீக்கும் பொருண்மையான ஐயத்தில் வராது. "பத்தானும் எட்டானும்" என்றோ

"வருவதற்கும் வாராமைக்கும்" என்றோ ஒரு வாக்கியத்திற்குள் உம் பெற்ற சொற்கள் வருமானால் அவை,

20.(அ) பத்தானும் கொடு; எட்டானும் கொடு
(ஆ) வருவதற்கும் உரியன்; வாராமைக்கும் உரியன்

என்று இருவேறு வாக்கியங்களின் இணைப்புகள் என்று கொள்ள வேண்டும். வாக்கிய இணைப்புகளாக இவ்வாறான உம் பெற்ற சொற்கள் அடுக்கி வரும்போது, அவை எண்ணுப் பொருண்மையில் வந்தன எனப்படா. பத்து என்பது ஒரு தொகுதியில் உள்ள இழிவுச் சிறப்புப் பொருள்; எட்டு என்பது மற்றொரு தொகுதியில் உள்ள இழிவுச் சிறப்புப் பொருள்; "ஆன்" என்ற உறுப்பு "ஆவது" என்ற பொருண்மையை உடையது. "பத்தானும் எட்டானும்" என்பதில் ஐயப்பொருண்மை உள்ளது என்பது ஐயமாக இருக்கிறது. அணங்குகொல், மயில்கொல்; குற்றியோ, மகனோ என்பனவற்றில் வருவது ஐயப்பொருண்மை. "பத்தானும் எட்டானும் கொடு" (20 அ) என்பதில் முன்னிலை ஏவல்தான் முடிவாக இருக்கிறது. ஆன், ஆவது என்பன இழிவுச் சிறப்பைக் குறித்து வருகின்றன என்று கொள்ள வாய்ப்பு உள்ளது. பத்தும் கொடு, எட்டும் கொடு என்றால் முற்று உம்களாகி வழுவாகிவிடும். பத்து, எட்டு என்ற உறுப்புகள் எண்ணிக்கையில் மிகச் சிறுபான்மை என்னும் அளவிற்குப் பெரிய எண்ணிக்கை உடைய தொகுதி இங்கு இருக்கிறது. இது மேலும் விளக்கப்படுவதற்குரியது. "இவளும் அல்லள்; இவனும் அல்லன்" (20 இ) என்பது எச்ச உம் ஆகும்.

21.(அ) திருமகளும் அல்லள்; அரச மகளும் அல்லள் (நச் - 2; 257)
(ஆ)நெடியனும் வலியனும் ஆயினான் (இளம் - 2; 250)

என்ற இரு வாக்கியங்களில் முறையே உம்கள் தெரிநிலை, ஆக்கப் பொருண்மைகளில் வந்துள்ளன என்று விளக்கப்பட்டுள்ளன. இவ்வும்கள் முறையே எச்ச உம், எண் உம் என்று கொள்ளப்பட வேண்டும்.

அசைநிலை, இசைநிறை என்ற பொருண்மைகளில் உம் வரும் என்று சொல்லி, விளக்க எடுத்துக்காட்டப்பட்ட சான்றுகள் (Natrajan T. 1977; 201) முற்றும்மைக்குரிய சான்றுகளாக உள்ளன. இதன்படி, இவ்விரு பொருண்மைகளும் உம்மைக்குப் பொருந்தாத பொருண்மைகள் எனலாம்.

22.(அ) பிறந்த எல்லாரும் சாகிறவர்கள்
(ஆ) ஒவ்வொருவரும் துப்பாக்கி வைத்திருக்க வேண்டும்
(இ) என் இறப்புக்கு யாரும் வராதீர்கள்
(ஈ) கடவுள் எங்கேயும் இல்லை.

என்ற வாக்கியங்களில் வந்த உம்கள் எல்லாம் முற்று உம்களாகும். ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும் என்பன தொகுதியின் ஒவ்வொரு உறுப்பும் கூடி எல்லா உறுப்புகளும் என்ற பொருண்மையில் உம் பெற்றாலும் எழுவாய்களாக வரும்போது வந்தான், வந்தாள் என்று ஒருமை வினைமுடிவே பெறுகின்றன. இது மேலும் விளக்கப்பட வேண்டும். எப்பொழுதும், எல்லாவற்றையும், பலரும் என்ற உம்கள் முற்று உம்களாகும். அங்கேயும், இப்பொழுதும், இன்றும் என்ற உம்கள் எச்ச உம்களாகும். அங்கேயும், இங்கேயும் என்று அடுக்கி வந்தால் எண் உம் ஆகும்.

உம்மையை விளக்குவதற்கு முதலில் தீர்மானித்துக் கொள்ளப்பட வேண்டிய தொகுதி பற்றிய வேறு கருத்துக்களும் உள்ளன. காரணம், காரியம் என்ற இரண்டும் ஒரு தொகுதியின் உள்ளுறுப்புகளாகின்றன.

23. (அ) ஞாயிறும் எழுந்தது; தாமரையும் மலர்ந்தது
(ஆ) அமாவாசையும் வந்தது; கிறுக்கும் பிடித்தது

காரண வினையை நிகழ்த்தும் பொருள்களும் (ஞாயிறு, அமாவாசை) காரிய வினையை நிகழ்த்தும் பொருள்களும் (தாமரை, கிறுக்கு) உம் பெற்றன. காரண, காரிய அடிப்படையில் தொடர்புபடுத்தினால் "சாத்தனும் வந்தான், கொற்றனும் அழுதான்" என்ற வாக்கியம் (13 இ) வழுவில்லை என்றாகும். காரணம், காரியம் என்ற இரண்டையும் உறுப்பாகக் கொண்ட தொகுதி வாக்கியத் தொகுதியாக வரும்போது, அவ்வாக்கியத் தொகுதியின் வாக்கியங்கள் ஒரே வினைமுடிவைக் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. வினைமுடிவுகள் காரண வினை, காரிய வினை என்பனவாக இருக்கலாம். காரிய வினைகளாகவும் இருக்கலாம்.

24. (அ) பைம்புதல் வேங்கையும் ஒள்ளினர் விரிந்தன; நெடுவெண் திங்களும் உளர் கொண்டன்றே (சேனா-2; 436)

(ஆ) ஏரியும் காய்ந்தது; ஆறும் வறண்டது; வயலும் உலர்ந்தது; பயிர்களும் செத்தன

இரவு என்ற காலம் காரணமாக இருந்தும் அது வாக்கியத் தொகுதியில் இடம் பெறவில்லை. வேங்கையும் திங்களும் என்று காரியங்களை நிகழ்த்தும் பொருள்கள் மட்டும் உம் பெற்று வந்தன. இரவு என்ற ஒரு காலம் காரணம் என்பது சூழலால் பெறப்படும்(சேனா-2; 436) நீரில்லாதது காரணம். அதன் விளைவுக்குட்பட்ட பொருள்கள் ஏரியும், ஆறும், வயலும், பயிர்களும் என்று உம் பெற்று வந்தன. காரண, காரியப் பொருள்கள் உம் பெற்றுத்தான் வரவேண்டும் என்பதில்லை. அவை

தொகுதியின் உறுப்புகளாகக் கருதப்படும்போது, உம் கொடுத்துச் சொல்லப்படும். இங்கு (24) விளக்கப்பட்ட உம்கள் எச்ச உம்கள் ஆகும்.

எதிர்மறை உம்மை தன்னை ஏற்றுவருவது எதிர்மறை வினையாக இருந்தால் அவ்வினை பெரும்பாலும் நிகழும் என்பதைக் குறித்து நிற்பதாகிறது; உடன்பாட்டு வினையாக இருந்தால் அவ்வினை பெரும்பாலும் நிகழாது என்பதைக் குறித்து நிற்பதாகிறது.

25. ஈற்றுமிசை உகரம் மெய்யொடும் கெடுமே (தொல் -2; 233)

என்ற உம்மை எதிர்மறை உம் என்று கொள்ள முடியாது. எதிர்மறை உம்மில் உள்ள இரு உறுப்புகளும் ஒன்றுக்கொன்று பதிலீடாக வருவதற்குரியனவாகும்; அதாவது, உடன்பாடு உள்ளது எனில் எதிர்மறை இருக்காது; மெய்யோடும் கெடும் என்பதில் பெயர்ச் சொல் உம் ஏற்று வந்துள்ளது. எதிர்மறை உம்மில் வினையெச்சங்கள், தொழில்பெயர், வினையாலணையும் பெயர் முதலானவை உம் பெற்று வரும். மெய்யொடும் என்ற உம்மில் மெய் கெடும், மெய் கெடாது என்ற இரண்டிற்கும் வாய்ப்பு உள்ளது; ஆனால், உகரம் கெடும் என்று மட்டும்தான் இருக்கிறது.

26. (அ) உகரம் (தனித்தும்) கெடும்; உகரம் மெய்யொடும் கெடும்
(ஆ) மழை (தனித்தும்) பெய்யும்; மழை இடியொடும் பெய்யும்.

என்ற விளக்கினால் மெய்யொடும் என்பது எச்ச உம் ஆகும்; இடியொடும் என்பது எச்ச உம் ஆகும். இடி இடித்தல், இடிக்காமை என்ற இரண்டிற்கும் இங்கு வாய்ப்பு உள்ளது. ஒடு வேற்றுமை பெற்ற பெயர் உம் பெற்றால் அது எதிர்மறை உம் ஆகும் என்று எதிர்மறை உம்மைக்கான வரையறையை மேலும் விரிவுபடுத்திக் கொள்வது பற்றி ஆராய வேண்டும். ஒரு வினையை இரண்டாவது பொருளும் நிகழ்த்தும்போது தொகுதி என்ற கருத்து தோன்றுவதால் மெய், இடி என்ற இரண்டும் உம் பெற்றன என்று விளக்க முடியும். இவ்வாறு விளக்கினால் மெய்யொடும், இடியொடும் என்பன எச்ச உம்களே ஆகும்.

27. (அ) சட்டி சுட்டதும் கை விட்டது
(ஆ) கயவரைக் கண்டதும் சுடு
(இ) காற்று வந்ததும் கொடி அசைந்ததா

என்ற வாக்கியங்களில் வந்துள்ள உம்கள் உம்முக்கு இதுவரை சொல்லப்பட்ட பத்துப் பொருண்மைகளிலும் அடங்கவில்லை. உம் என்பது இங்கு அடுத்த நிகழ்ச்சி நேர இடைவெளியின்றி, ஒரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து நிகழ்ந்தது என்பதைக் குறிக்க அந்த ஒரு நிகழ்ச்சியைக்

குறிக்கும் சொல்லுடன் வருகிறது; அந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கும் சொல் செய்தது என்ற வாய்பாட்டுச் சொல்லாகும். உம் ஏற்று வரும்போது, வினையெச்சம் போல் செயலாற்றுகிறது. சுட்டதும், கண்டதும், வந்ததும் என்ற உம்கள், எதிர்மறை உம்கள் என்ற இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி ஆராயவேண்டும்; தற்போதைக்கு இதை (27) வினையெச்சம், வினையடை என்று கொள்ள வேண்டும்.

பயன்பட்ட நூல்கள்

1. சுந்தரமூர்த்தி கு., (வி.உ.) 1987, தொல்காப்பியம் - சொல்லதிகாரம்: இளம்பூரணர் உரை, கழகவெளியீடு, சென்னை.
2. சுந்தரமூர்த்தி கு., (வி.உ.), 1959, தொல்காப்பியம் - சொல்லதிகாரம்: சேனாவரையர் உரை, ஆ. பூவராகம் பிள்ளை (விளக்கவுரை), கழகவெளியீடு, சென்னை.
3. சுந்தரமூர்த்தி கு., (வி.உ.) 1979, தொல்காப்பியம் - சொல்லதிகாரம்: தெய்வச்சிலையார் உரை, கழகவெளியீடு, சென்னை.
4. சுந்தரமூர்த்தி கு., (வி.உ.) 1987, தொல்காப்பியம் - சொல்லதிகாரம்: நச்சினார்க்கினியர் உரை, கழகவெளியீடு, சென்னை.
5. பரமசிவம் கு., 1983, இக்காலத் தமிழ்மரபு, அன்னம் (பி)லிட், சிவகங்கை.
6. Balasubramanian K., 1978, The Concept of Sentence Structure in Tolkappiyam, Studies in Early Dravidan Grammars, S.Agasthialingam, N.Kumaraswamy Raja (ed.) Annamalai University, Annamalai Nagar.
7. Natrajan T., 1977, The Language of Sangam Litrature And Tolkappiyam, Madurai Publishing House, Madurai.

12

சிலப்பதிகாரக் கதைப்பனுவல்களும் பொருள் மயக்கங்களும்

தோல், தொன்மை(தொல். செய்யுளியல். 229, 230) என்ற இரு செய்யுள் வகைகளும் கதை தழுவியனவாகக் காப்பியம் போன்று பேரிலக்கிய வகையாக இருப்பதாகத் தொல்காப்பியம் அவற்றிற்குத் தரும் விளக்கங்களிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. ஒரே கதை வேறு வேறு இலக்கிய வகைகளாகவும் வேறு வேறு இலக்கிய ஆசிரியர்களாலும் படைக்கப்பட்டிருந்தது குறித்துக் குறிப்பு எதுவும் தொல்காப்பியத்தில் இல்லை என்றாலும் அக்காலத்தில் அவ்வாறான படைப்புகளும் இருந்திருக்கமுடியும் என்றே கருதவேண்டியிருக்கிறது. சங்க இலக்கியத்தில் ராமாயணக் கதை, பாரதக் கதை குறித்த குறிப்புகள் உள்ளன. நாட்டுப் புறக் கலை, இலக்கிய ஆக்கங்கள் பற்றித் தொல்காப்பியம் பட்டிய லிட்டுச் சென்றுள்ளது. கதைத் திரிபுகள் இதனால் அந்தக் காலத்திலும் இருந்திருக்கும் என்று உறுதியாகக் கொள்ளலாம். சிலப்பதிகாரக் கதைப் பனுவல்களின் இலக்கியப் பொருள் ஒன்றாக இல்லை. வேறு வேறாகத் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. இலக்கியப் படைப்பாக்க முயற்சியிலேயே இந்தத் திரிபுகள் படைப்பாசிரியர்களால் செய்யப்பட்டுள்ளன.

ஒரு பெண்ணிடம் வீரத்தை எதிர்பார்க்கும் பண்பு ஒரு ஆணிற்கும் ஒரு சமூகத்திற்கும் இருந்துள்ளது என்பது கண்ணகி கதைகளிலிருந்து தெரிகிறது. அக இலக்கியங்களில் பெண்ணுக்குச் சொல்லப்படும் இலக்கணங்களில் வீரம் என்பது பேசப்படுவதில்லை. ஆனால் புற இலக்கியப் பதிவுகளில் மூதின் முல்லைத் துறைகளில் ஒரு பெண் மனத்துணிவுள்ளவளாகப் பேசப்பட்டுள்ளாள். தன் மகன், கணவன், உடன்பிறந்தவன் முதலானவர்களை நாட்டு மன்னன் நிகழ்த்தும் போரில் இழப்பதற்கு வருந்தாதவளாகவும் குழந்தையைப் பிறப்பிப்பது நாட்டு மன்னனுக்கான போரில் ஈடுபடவேண்டும் என்பதற்காக என்றும் குடும்பத் தலைவிகள் பேசுகின்றனர். ஆனாலும் அவள் நேரில் எதிர்நிலைத்

தலைமை மாந்தர்களையோ, உறவுக்குரிய மாந்தர்களையோ எதிர்த்துச் செயல்பட்டதாகப் பதிவுகள் இல்லை. ஒவ்வொரு மறவனும் தன் உயிரை மன்னனுக்காக விட்டுவிடத் தயங்காதவனாக இருக்கவேண்டும் என்று புலவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதே கருத்துத்தான் நாட்டு நலன் கருதும் ஒரு குடும்பத் தலைவிக்கு இருக்கவேண்டும் என்று புலவர்களும் அரசர்களும் கருதியிருப்பதாகத் தெரிகிறது.

பண்பாட்டு நிலையில் கட்டுப்பாடுகளுக்குரிய பெண் அரசியல் நிலையில் அதிகாரமுள்ள ஒருவராக நடந்துகொள்வது இயலாத ஒன்று. சாதிக் கட்டுப்பாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் நிறைந்த ஒரு சமூகத்தில் மிகுதியான கட்டுப்பாடுகளுக்குரிய ஒருவர் அதிகாரத்தை வெளிக்காட்டுவதோ, முரண்படுவதோ முடியாதது. ஒரு அமைப்புக்குள் உள்முரண்பாடுகளுக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப் படாத ஒருவர் அந்த அமைப்பின் வெளி முரண்பாடுகளுக்குள்ளும் அதிகாரத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருக்கப்போவதில்லை. வெளி அமைப்புடனான உறவில் அதிகாரத்தைக் காட்டுதலும் அந்த அமைப்பைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதும் தன் அமைப்பைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஒருவருக்கு வழிவகுக்கும். எனவே, அவர் தன் அமைப்பிற்குள் பணிவாக இருந்தால் மட்டுமே புற அமைப்புகளுடன் அதிகாரம் செலுத்த அனுமதிக்கப்படுவார். ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் இருவருக்கும் இது பொருந்தும்.

ஒரு ஆண் வீரனாக நடந்துகொள்வது அவன் இயல்பு. ஒரு பெண் வீரமாக நடந்துகொள்வது பண்பாட்டு வழக்கப்படி அவள் இயல்பாக இருக்கமுடியாது. ஒரு பெண் வீரமாக நடந்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பது அவள்மீது சுமத்தப்படும் கூடுதல் பொறுப்பு. தன் இயல்பிலிருந்து ஒருவர் எதிராக நடந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பதாகும் அது. ஒரு ஆணுக்கு ஏற்படும் இழப்பை ஒரு பெண் சரி செய்யவேண்டும் என்பதும் ஒரு ஆணை அவனைச் சேர்ந்தவள் பாதுகாக்கவேண்டும் என்பதும் கண்ணகி கதைகளில் தெரிகிறது. ஒரு குழந்தையை வளர்த்து எடுப்பது ஒரு பெண்ணின் பொறுப்பு. குட்டியை ஆணிடமிருந்தும் சமூகத்திடமிருந்தும் பிற உயிரிகளிடமிருந்தும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு ஒரு விலங்குக்கு இருக்கவே செய்கிறது. ஆனால் மனித இனத்தில் குடும்பமும் சமூகமும் உருவாகிவிட்ட சூழலில் குழந்தையைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆணுக்கும் சமூகத்திற்கும் உரியதாகிறது. அதிகாரமற்றுப் பணிந்து சேவை செய்யும் ஒருவரிடம் அதிகாரம் நிறைந்த ஒருவரிடம் பெற வேண்டிய பாதுகாப்பையும் எதிர்பார்ப்பது அதிகாரத்தின் இழிவையே காட்டுகிறது. சீதைத் தன் கற்பால்

ராவணனை அழிக்கவில்லை. அதிகாரத்தை ஆணுக்கு விட்டுவிட வேண்டும் என்பது கருத்து. கண்ணகி கதை வேறுபட்டது.

பெண் தெய்வங்கள் ஒட்டுமொத்தச் சமூகத்தையும் பாதுகாக்கவேண்டும் என்று மக்கள் கருதுவதற்கும் கண்ணகி கதைக்கும் தொடர்பு உள்ளது. குழந்தையாக இருந்தபோது கிடைத்த பாதுகாப்பு, கணவனாக பின்பும் ஒருவனுக்கு மனைவி வழியாகக் கிடைக்கவேண்டும் என்று ஒரு ஆணும் ஒரு சமூகமும் கருதுவது தெரிகிறது. கணவன் உயிருடன் இருக்கும்போது, அடங்கியும் கணவன் உயிருடன் இல்லாதபோது, எழுச்சியுடனும் இருக்கும் முரண்பட்ட நிலை கண்ணகி கதைகளில் உள்ளது. சீதை கணவன் இருப்பதால் தன்னை அடக்கிக் கொள்கிறாள். தந்தையின் முன் மகனும் அண்ணனின் முன் தம்பியும் அதிகாரம் உள்ளவர் முன் அதிகாரம் குறைந்தவரும் அடக்கிக் கொள்வது இயல்பானது. கணவன் உயிருடன் இருக்கும்போதே, இருக்கும்படி அவனது நற்பெயரைப் பாதுகாக்கும் தீரச் செயலை மனைவி செய்திருக்கலாம். அதிகபட்ச இழப்புக்குப் பிறகு கிளர்ந்து எழுதல் என்பது அடக்கப்பட்டதால் வருவதாகும். பொறுமையின் உச்ச எல்லையைத் தெரியப்படுத்த அதிகபட்சக் கொடுமை காட்டப்பட வேண்டும் என்றாகிறது. உள்ளடங்கி இருக்கும் ஆற்றல் பெரிது என்று காட்டுவதற்காக அது பொறுமையாகச் சொல்லப்படுகிறது. எந்த ஆற்றலுக்கான அறிகுறியும் இல்லாததிலிருந்து எல்லாவிதமான ஆற்றலும் வெளிப்படுவதாகச் சொல்வது அந்த ஒன்றைச் சிறப்பிக்கச் சொல்லப்படுகிறது. கற்புதான் அந்த ஆற்றல்.

கணவன் உயிருடன் உள்ளபோது, மனைவியின் கற்பு நிறுவப்படலாம். மனைவி உயிர் விடுவதன் மூலம் கணவன்மேல் கொண்ட கற்புப் பொதுவாக நிறுவப்படுகிறது. அல்லது கணவன் மனித இயல்புக்கு மாறாக இருக்கவேண்டியிருக்கிறது. மனித உருவுக்கு மாறாக இருக்க வேண்டியிருக்கிறது. தகுதியில்லாதபோதும் கணவன் என்ற ஒரு காரணத்திற்காக ஒருவனை மனைவி போற்றுகிறாள் என்று காட்டுவது கற்புப் பற்றிய புனைவுகளுக்கு அடிப்படையாக உள்ளது. கணவன் ஒழுக்கக் கேடானவனாகவாவது இருப்பான். சிலப்பதிகாரத்தின் மையக் கருத்து அல்லது பாவிகம் குடும்பம் ஆகும். மனைவிக்குக் கணவனுடனான கற்பு உறவை வலியுறுத்துவது சிலப்பதிகாரத்தின் மைய நோக்கம் ஆகும். நீதி தவறிய பாண்டியனைப் பழிவாங்கியது ஒரு நிகழ்வு. அது மைய நிகழ்வு அன்று. பாண்டியனைப் பழி வாங்குவதற்காகக் கண்ணகி பிறந்தாள் என்று காட்டுவது கதையின் நோக்கம் அன்று. ஆனால் நாட்டுப்புறச் சிலப்பதிகாரக் கதைகளில் பாண்டியனைப் பழிவாங்குவதற்காகக் கண்ணகியும் கோவலனும்

பிறந்தார்கள் என்று இருக்கிறது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி கற்பை நிறுவுவதற்குப் பாண்டியனும் அவன் நீதி தவறுவதும் கருவிகளாகின்றன. சிலப்பதிகாரக் கதைப்பாடல்களில் பாண்டியனை அழிப்பதற்காகக் கோவலனும் மாதவியும் கருவிகளாகின்றனர். சிலப்பதிகாரக் கதையே பாண்டியனை அழிப்பதற்கான கதையாக மாறிவிடுகிறது. கண்ணகி கற்பை நிறுவுவதற்கான கதையாக இல்லை. கண்ணகி காளியின் அவதாரம் என்பதால் அவள் கோவலனுடன் உடலுறவு கொள்ளமுடியாது. கண்ணகி மதுரைக்கு வருவதற்கான காரணம் கோவலன் மதுரைக்கு சிலம்பை விற்க வரும்போது உடன்வர வேண்டும் என்று காட்டுவதற்கு ஆகும். மாதவி கோவலனைக் கொடுமைப்படுத்தி மாதுக்கடனுக்கு உள்ளாக்கினால்தான் அவன் அந்தக் கடனை அடைக்க மதுரைக்குப் பொருளீட்ட வரவேண்டியிருக்கும். மாதவி கோவலனை மதுரைக்குச் செலுத்தும் ஒரு கருவியாகிறாள்.

பல சிலப்பதிகாரக் கதைப் பாடல்களில் கண்ணகி காளியின் பிறப்பாகிறாள். எனவே காளிக்குக் கற்பு உள்ளது என்று நிறுவப்பட வேண்டியதில்லை. பாண்டியனை அழிப்பதற்கான ஒரு கருவியாகக் கோவலன் கொலை இருக்கிறது. கணவனைக் கொன்றவனைப் பழிவாங்க வேண்டும் என்ற ஒரு காரணத்திற்காகக் கண்ணகிக்குக் கோவலன் என்ற ஒரு கணவன் தேவைப்படுகிறான். பாண்டியன் கொடுங்கோலன் என்பதால் அவன் அழிக்கப்பட வேண்டியவனாகிறான். பாண்டிய அரசனும் மதுரை மக்களும் தீயவர்கள் என்று கோவலன் கதை(சூ. நிர்மலா தேவி, 2003)யில் ஆய்ச்சி கோவலனை எச்சரிக்கிறாள்:

> பொல்லாத மதுரையிலே போகாதே மகனே யென்றாள் *(1094)*
> பேச்சிட்டே வழக்கிடுவார் பெரும்பாவிப் பாண்டியர்கள் *(1097)*
> கொம்படித்தே வழக்கிடுவார் கொடும்பாவிப் பாண்டியர்கள் *(1098)*
> பாம்படித்தே வழக்கிடுவார் பழிகாரப் பாண்டியர்கள் *(1099)*
> மாபாவி மதுரையிலே வாணிபமே செய்யயிலே *(1100)*
> தீபாவிச் செட்டிமக்கள் செப்பிடுவார் பாண்டியர்க்கே *(1101)*

கோவிலன் சரித்திரத்தில் (பீ. டாக்டர் நசீம்தீன், 1992) எண்ணெய் வணிகன் காளி பக்தனாக வந்து அரச கட்டளையை மீறுகிறான். எண்ணெய் விற்பனையை மதுரையில் செய்யக்கூடாது என்ற கட்டளைக்குப் பணியாததால் தண்டிக்க உத்தரவிடப்பட்ட வணிகன் காளி கோயில் சிலையை அடைக்கலம் அடைகிறான். பாண்டியன் தனது மந்திரவாள் கொண்டு வணிகனை வெட்டுவதால் காளி பாண்டியனைப் பழிவாங்க வஞ்சினம்கூறிப் பாண்டியன் மனைவி கொப்புலிங்கி வயிற்றில் பிறந்து, அவனைப் பழிவாங்குகிறாள்.

கோவலன் கர்ண்ணகை கதை(தி. நடராசன், 1978)யில் பாண்டியனின் வலிமையைக் குறைப்பதற்காக மாயவன் காலகேந்திரனைக் கோவலனாகவும் துர்க்கையைக் கர்ண்ணகையாகவும் பிறக்கச் செய்தான் என்று உள்ளது.

பாண்டியனெ பலதளிக்க
ஆரே யினி நாமள் பிறவி செய்வோம்
என்று நினைத்தல்லொ மாயவரும்
கேந்திர காலெனெயுகமழித்து
கோவலெரெ பிறவி செய்தாரு
துகெயெரே யுகமழித்து
கர்ண்ணெகைய்யெ பிறவி செய்தாரு(3-9)

துர்க்கை கண்ணகியாகப் பிறப்பதால் கற்பை நிறுவக் கோவலனைக் கொல்லவேண்டிய தேவையில்லை. பாண்டியனைப் பழிவாங்கல் மூலம் அழிப்பதற்கான ஒரு காரணமாகவே கோவலன் கொலை இந்தக் கதைப் பாடலிலும் உள்ளது.

கதைப் பாடல்களில் பாண்டியன் மனைவி வயிற்றில் துர்க்கை அல்லது காளி மகளாகப் பிறப்பதற்கும் சிலப்பதிகாரக் கதையில் கண்ணகி தான் பாண்டியன் மகள் என்று கூறிக்கொள்வதற்கும் வேறுபாடு உள்ளது. கண்ணகி கதைப் பாடல்களில் மகள் முறையாக வரும்போது, பாண்டியனால் மனைவியாகவும் ஆசை நாயகியாகவும் இருக்குமாறு அவள் கேட்டுக்கொள்ளப்படுகிறாள். பாண்டியனின் பண்பை மிகுதியும் கொடூரத் தன்மையுடையதாகக் காட்டுவதற்கும் மகளின் மேல் காமம் கொள்ளும் ஒருவன் கொல்லப்படவேண்டும் என்ற எதிர்ப் பண்பை உயர்த்துவதற்கும் இந்தத் தந்தை-மகள் உறவு பயன்படும். சீதை ராவணனின் மகளாகப் பேசப்படுவது போலக் கண்ணகியும் பேசப்படுகிறாள். ஆற்று மண்ணில் புதைத்து வைக்கப்பட்ட குழந்தை உள்ள கூடை, நீரால் இழுத்துச் செல்லப்படுவதன் மூலம் அல்லது ஆற்று நீரில் மிதக்க விடப்பட்ட குழந்தை காப்பாற்றப்படுகிறது. குடும்பத்திற்கும் குலத்திற்கும் ஆகாது என்று கணியர்களால் கணித்துச் சொல்லப்படும் குழந்தையைத் தந்தை கொல்ல உத்தரவிடுவதும் ஏவலரின் கருணையால் அது தப்பிப் பிழைப்பதும் அடிக்கருத்தாக உள்ளது. எதிர்நிலைப் பாத்திரங்கள் கொல்லப்பட்டபின் பெண்ணுக்கும் ஆணுக்கும் உள்ள உறவு மகள்-தந்தை உறவாகப் புனையப்படுவது அடிக் கருத்தாக உள்ளது. கொன்றவர்களுக்கும் கொல்லப்படுகிறவர்களுக்கும் இடையிலான உறவை தந்தை-மகள் என்ற நெருங்கிய உறவாக்குவதன் மூலம் முரண்பாடு இல்லாமல் போகிறது. சமாதானம்

ஏற்படுத்தப்பட்டுவிடுகிறது. மதுரைவீரன், காத்தவராயன் முதலான கதைகளில் இது போன்ற ஒரு நல்லிணக்கம் உள்ளது. குடும்ப நல்லிணக்கம், சாதிய நல்லிணக்கம் என்று இதை வேறுபடுத்தலாம். சாதிய நல்லிணக்கத்தில் கொல்லப்பட்டவர் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் உயர்சாதிப் பிறப்பு என்று புனையப்படுவது ஒரு அடிக்கருத்தாக இருக்கிறது.

வரலாற்றுப் புதினங்களிலும் நாட்டுப் புறக்கதைகளிலும் புராணக் கதைகளிலும் கதா நாயகியின் தந்தை எதிர்நிலைப் பாத்திரமாகவும் கதாநாயகன் அந்தப் பாத்திரத்தை எதிர்த்துப் போராடுவதாகவும் மகள் தன் தந்தையை எதிர்க்கும் கதாநாயகனைக் காதலிப்பதாகவும் உள்ள அடிக்கருத்து எல்லாக் காலத்திற்கும் எல்லாக் கலை வடிவங்களுக்கும் உரியதாக இருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் பிறந்த பெண் குழந்தைகளைத் தங்கள் குடும்பத்தை அழிக்கவந்த, குடும்ப கௌரவத்தை அழிக்க வந்த ஒருவராக நினைக்கும் உள்ளுணர்வு இதுபோன்ற கதைகளில் தேர்ந்துகொள்ளப்பட்டிருக்கலாம். ஒரு பெண்ணின் காதல் முரண்பட்டுக்கொள்ளும் இரு ஆண்களுக்கு இடையில் தந்தையா, காதலனா என்று சிக்கித் தவிப்பதைப் பதிவுசெய்வது ஒரு படைப்பு மனத்தின் ஆசையாக இருக்கிறது. மகளால் தந்தை கொல்லப்பட்டது எனும்போது, அதில் ஒரு நியாயம் இருப்பதாகச் சமாதானம் செய்யப் பட்டதாகிறது. பழிவாங்கப்பட வேண்டியது இல்லை என்றாகிறது.

கண்ணகி கதையில் இருக்கும் பழிவாங்குதல் என்ற வன்மம் நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் இல்லை. பழிவாங்குதல் என்பதை மகனும் பங்காளிகளும் சாதிக்காரர்களும் செய்வார்கள். கணவனைப் பறிகொடுத்த மனைவி நேரடியாகச் செய்வது பொதுவாக வழக்கமில்லை. கண்ணகி பாண்டியனை நேரில் சென்று வழக்காடிப் பழிவாங்குவது சிலப்பதிகாரக் கதைகளில் பொதுவாக உள்ளது. இந்த எதிர்பார்ப்பு பெண்கள்மேல் சுமத்தப்படும் பெண்களுக்கான கூடுதல் இலக்கணம். சராசரிப் பெண்மேல் சுமத்தப்படுவது பெண் தெய்வத்தின்மேல் சுமத்தப்படுவது என்ற இரண்டிற்கும் வேறுபாடு உள்ளது. அரசனை எதிர்த்து, அழித்து வெற்றிபெறுபவள் ஒரு சராசரிப் பெண்ணாக இருக்கமுடியாது, தெய்வப்பிறவியாக இருக்கவேண்டும் என்று புனைவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கணவனோடு ஒப்பிடும்போது, தெய்வத்தையும் அரசனையும் கீழாக நினைக்கும் மனைவி கற்புக்கான இலக்கணமாகிறாள். கண்ணகி அவ்வாறான கற்பு உடையவள். குடும்பத்தை மையப்படுத்தும்போது, அரசனையும் தெய்வத்தையும் தந்தைக்குக் கீழான படிநிலையில்

மகன், மகள் வைத்துப்பார்க்கவேண்டும் என்று கதைகள் உள்ளன. குடிமக்கள் என்று வரும்போது அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்று பழமொழி உள்ளது. அரசன் முறை தவறி நீதி வழங்குவான் என்றும் அதனால் பிழையாகத் தண்டிக்கப்பட்டுவிடுவோம் என்றும் மக்கள் நனவிலி நிலையில் உள்ளனர். சிலப்பதிகாரத்தில் இந்தக் கருத்து அடிக்கருத்தாக ஓடிக்கொண்டிருக்கிறது. சிலப்பதிகாரக் கதைப்பாடல்களில் அரசன் அநீதிதான் வழங்குவான் என்ற கருத்துப் பதிவாகியுள்ளது. பொதுமக்கள் அரசனின் நீதி அநீதியாக இருக்கும் என்று நினைப்பது ஒரு நனவிலி நிலையாகும். சிலப்பதிகாரம் செவ்வியல் இலக்கியம். புலவர்கள் எழுதி அவை முதலானவற்றில் வைத்துப் பேசப்படுவது. எனவே அரசனுக்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்க முடியாது. அரசவை நடவடிக்கை தெரியாத நிலையில் அதைத் தங்களுக்கு எதிரான ஒரு அடக்குமுறை அமைப்பாகப் பார்க்கும் பார்வைக்கு அரசியல் காரணங்கள் மட்டுமில்லை. வரி, மதிப்பு முதலான சமூகக் காரணங்களும் இருக்கலாம். எனவே, மக்கள் அரசு மீது அது உடைத்தெறியப்படவேண்டிய ஒரு அமைப்பாக எதிர் எண்ணம் கொள்வது இயல்பு.

கோவலன் சரித்திரம் முதலான சில கண்ணகி கதைகள் முழுவதும் பாண்டிய நாடு என்ற எல்லைக்குள் மதுரை ஒட்டிய பகுதிக்குள் நடந்து முடிந்துவிடுகின்றன. வண்டியூரில் கண்ணகி பிறக்கிறாள். வண்டியூர் மதுரைக்குள் ஒரு பகுதியாக இன்று ஆகிவிட்டது. கவுந்தி, மாடல மறையோன், மாங்காட்டு மறையோன் என்று யாரும் கதைக்குத் தேவையில்லாதவர்களாகிவிடுகிறார்கள். இந்தக் கதைகளில் தமிழ்த் தேசியம் இல்லை. மூவேந்தர்கள் இல்லை. மக்களின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தும் நோக்கில் இந்தக் கதையைப் பாடல்களாகவும் நாடகமாகவும் ஆக்கியிருக்கிறார்கள். சுருங்கிய எல்லைப் பரப்புக்குள் நிகழும்போது, அதற்கான அரசியல் உறவுகளில் உள்ள அழுத்தம் பாண்டியன்-மக்கள் என்ற முரண்பாட்டைத் தோற்றுவித்துவிடுகிறது.

இவ்வாறான ஒரு அரசை, அரசனை எதிர்ப்பது ஒரு பெண்ணால் இயலாது என்று மக்கள் கருதுவது இயல்பு. அல்லி அரசாணிமாலை, தடாதகைப்பிராட்டி கதை, பெண்ணரசியர் கதை முதலானவற்றில் உள்ள தலைவியர் ஆண் வெறுப்புடன் இருப்பவர். தனி ஆட்சி செய்பவர். இவர்கள் இறுதியில் ஆணால் அடக்கப்படுபவராகவும் வெல்லப்படுபவராகவும் காட்டப்படுகின்றனர். ஆண் துணையின்றி இருக்கும் பெண்களுக்குரிய அதிகாரம் முறியடிக்கப்படவேண்டும் என்றும் ஒரு சமூகம் கருதுகிறது. ஒரு பெண் என்பவள் அரசியாக

இருந்தாலும் குடும்பப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்று அவள் குடும்பப் பொறுப்புகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாள். அட்டுக்கல் பகவதி அம்மனைக் குளிர்விக்கப் பாடப்படும் நாட்டுப்புறப் பாடல்கள் அவளின் காம வேட்கையைத் தீர்ப்பதற்கான பாடல்களாக மாறிவிட்டிருக்கின்றன. ஒரு பெண்ணின் வெகுளியை அவளது காமமாக உருமாற்றம் செய்துகொள்ளும் இழிவான ஒரு மரபு இது. எந்த ஒரு உக்கிரமான உணர்வு நிலையையும் காமத்தின் மூலம் இயல்பான நிலைக்குக் கொண்டுவரமுடியும் என்பது இந்தியப் புராண, வாழ்வியல் மரபுகளிலும் உள்ளது. சமூக, அரசியல் காரணங்களால் கிளர்ந்து எழும் ஒரு பெண்ணைக் காமப் புனர்ச்சியின் மூலம் அடக்க நினைப்பது ஆணின் அதிகாரமாக இருக்கிறது.

கொற்றவை, மிளிர்கல் முதலான சிலப்பதிகாரம் தொடர்பான புதினக் கதைகளில் பெண்கள் கண்ணகியுடன் தொடர்புபடுத்தப் படுகின்றனர்.

கொற்றவையில் கண்ணகி கொற்றவை தெய்வத்துடன் இணைத்துப் பேசப்படுகிறாள். கன்னித் தெய்வத்துடன், கன்னியாகுமரியுடன் இணைத்துப் பேசப்படுகிறாள். கண்ணகி கன்னித் தெய்வத்தின் அவதாரமாகப் புனையப்படுகிறாள். புதினத்தின் இறுதிப் பகுதியில் கதை சொல்லி கன்னியாகுமரி நகருக்குச் சுற்றுலாச் செல்வதாகவும் உடன் வந்த மனைவி, மகள் இருவருடனும் தாய்த் தெய்வத்தின் கூறுகளை, பண்புகளை உணர்வதாகவும் காட்டப்படுகிறது. தன் மகளின் பாதங்களும் கன்னித் தெய்வத்தின் பாதங்களும் கதை சொல்லியால் ஒப்பிட்டு உணரப்படுகின்றன. சிறுமியாக இருக்கும் மகள் தென்புலக் கடலையே உற்றுநோக்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறாள். தென்புலக் கடல் என்பது தென்புலத்தாரின் ஆவிகளால் நிறைந்துள்ளது என்றும் தொன்று தொட்டு இறப்போரின் ஆவிகள் சென்று சேரும் இடம் என்றும் தொன்று தமிழ் இனத்தின் வாழ்விடமாகத் தென்கடல் இருந்தது என்றும் கூறப்படுகிறது. கணவன், குழந்தை என்று சுற்றத்தார் இருந்தபோதும் பெண்கள், மனைவிகள் தங்களை யாரும் நெருங்கவிடாத தனிமைக்கு உட்படுத்திக்கொண்டவர்கள் என்று கதைசொல்லியால் வலியுறுத்தப்படுகிறது. சுற்றுலாக் கால நிகழ்வுகளில் ஒன்றாகப் பேய் பிடித்த பெண் குருதியை அள்ளி உண்பவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். பேயோட்டும் மூதாட்டி பேய்பிடித்த பெண் வெருண்டு வரும்போது, அவள் கணவனை ஒளிந்துகொள்ளச் சொல்லிவிடுகிறாள். கணவனுக்கு, ஆணுக்கு எதிரான ஒரு பெண்ணின் வெறியின் முன்பு ஆண், கணவன் தோற்றுவிடுவான், தோற்கடிக்கப்படுவான் என்று கதைசொல்லி

உணர்த்துகிறார். கொற்றவைப் புதினத்தின் கதை சொல்லி கூறுவது: "மெல்லப் மெல்லப் பெண்கள் தங்கள் கட்டுகளை அவிழ்ப்பது போலத் தெரிந்தது. கூவி நகைத்தும் உடைகள் நனைந்து விலகுவது அறியாமல் துள்ளிக் குதித்தும் பெண்கள் மகிழ்ந்தாடினர். அவர்கள் எப்போதும் அஞ்சும் ஆண் விழிகளை அப்போது அறியவில்லை." (கொற்றவை, ப. 593). அட்டுக்கல் கோயில் அன்னையின் சிலையைக் கருவறைக்குள் பார்க்கும் டச்சுப் படைத்தலைவன் தன் அன்னைத் தெய்வத்தின் தோற்றத்தை அது தருவதாகப் பின்வாங்கிவிடுகிறான். ஆயிரக்கணக் கான மக்களையும் படைமறவர்களையும் கொன்று, அரண்மனையை எரியூட்டி, நகரை எரியூட்டி, பெண்களை வல்லுறவு கொண்டு கொன்று, பொருள்களைக் கொள்ளையிட்டு வரும் டச்சுப் படைத் தலைவன் பகவதியம்மன் முன் அஞ்சுகிறவனாகப் படைக்கப்பட்டுள்ளான். இந்தியத் தேசியமோ, தமிழ்த் தேசியமோ அன்று. உலகப் பெண் தேசியமாக இது இருக்கிறது. பெண் தெய்வம் என்ற நிலையில் கன்னி மேரியும் அன்னை கன்னியாகுமரியும் ஒன்று என்ற நிலைப்பாடு கொற்றவையில் இருக்கிறது. அட்டுக்கல் பகவதி அம்மன் தன்னைக் கன்னி மேரி உருவில் இருப்பதாகட் டச்சுப் படைத்தலைவனுக்குக் காட்சி தருகிறாள். தன் மக்கள் அழிக்கப்பட்டபிறகு கன்னிமேரி உருவில் தோன்றி, டச்சுப் படைத்தலைவனிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும் அல்லது அவனுக்குத் தன்னை உணர்த்தவேண்டும் என்ற நிலையில் பகவதி அம்மன் படைக்கப்பட்டுள்ளாள். இன்னொரு வகையில் ஆண்-பெண் என்ற இரட்டை நிலையில் உலகளாவிய பெண் ஒன்று சேர்தலும் ஆணிடமிருந்து பிளவுபடுதலும் இதில் இருக்கின்றன. இந்து, கிறித்துவம் என்ற பேரெல்லைகளைக் கடந்ததாகத் தாய்த் தெய்வம் இருப்பது காட்டப்படுகிறது. கன்னிமேரியாகவும் கன்னியாகுமரியாகவும் வேறுபட்ட உருவங்களில் இருந்தாலும் அவை பெண்மை என்ற ஒரே ஒரு தெய்வீகத்தின் வெளிப்பாடுகள்தான் என்று கருத்துப் பதிவு செய்யப்பட்டுள்ளது. உலகப் பெண்கள் எல்லாம் அந்தத் தெய்வீகத்தின் வெளிப்பாடுகள் என்று கொற்றவை பேசுகிறது.

மிளிர்கல் புதினம் தோழர் ஒருவர் தன் ஒத்த சிலருடன் புகார் தொடங்கி அட்டுக்கல் பகவதியம்மன் கோயில் வரை கண்ணகியின் வழித்தடத்தில் பயணம் செய்து பெற்ற அனுபவங்களைக் கதை சொல்லியாக இருந்து பதிவு செய்வதாக இருக்கிறது. மாணிக்கப் பரல் உள்ள சிலம்புக் கதையுடன் மிளிர்கல் தேடும் கொங்கு நாட்டுத் தொழில் தொன்றுதொட்டு இருந்துவந்துள்ள வணிகம், கல் தொழில் தொடர்புகளுடன் இணைக்கப்படுகிறுது. நவீனக் காலத்தில் பட்டை தீட்டும் தொழில் வடமேற்கு மாநிலங்களிலிருந்து கொங்கு நாடு வரை

பரவி இருப்பதும் தொழிலாளர் சுரண்டப்படுவதும் புதினத்தின் மற்றொரு மையப் பொருளாக கதைப் போக்கில் வந்துகொண்டிருக்கின்றது. மிளிர்கல் தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும் சுரண்டலுக்கு எதிராகவும் போராடப் போகிற ஒரு சக்தியாக முல்லை என்ற கதையின் நாயகி முடிவு எடுப்பதாக, முடிவு ஏற்படுவதாகக் கதையின் முடிவு அமைந்துள்ளது. தோழர்கள் மேற்கொண்ட உண்மைப் பயணத்தில் உடன் பெண்கள் யாரும் வரவில்லை. இருந்தாலும் ஒரு பெண் மாந்தரைக் கதையில் புனைவாகச் சேர்த்து, இறுதியில் அந்தப் பெண் மையப் பாத்திரமாக, கண்ணகியின் மறு உருவமாகப் போவதாகப் படைக்கப்பட்டுள்ளாள். கண்ணகி கணவனுக்கு ஏற்றப்பட்ட இழிவைப் போக்குவதற்கு அரசனை எதிர்த்துப் போராடினாள். மிளர்கல்லில் உழைக்கும் மிளர்கல் தொழிலாளர்களுக்கு ஆதரவாக, சுரண்டும் வணிக முதலாளிகளுக்கு எதிராகப் போராடப் போகிறவளாக உருவாக்கம் பெறுகிறாள். தோழர்களுடன் பொழுதுபோக்காகப் பயணம் மேற்கொண்டவள் படிப்படியான மனித நேய ஈர்ப்பினால் புரட்சிப் பெண்ணாகிறாள். ஒரு பெண் போராளியாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, அவள் சமூகத்தைக் காக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புத் தோழர்களுக்கும் இருக்கிறது.

கண்ணகியைச் சராசரிப் பெண்ணுடன் இணைத்துக் காணும் மிளர்கல் கதை ஒருபுறம் கீழ் நிலை நோக்கிச் செல்கிறது. கொற்றவை கதையில் கண்ணகி கொற்றவை தெய்வத்துடன், கன்னியாகுமரித் தெய்வத்துடன் இணைத்துப் பார்க்கப்படும் நிலை உள்ளது. மனைவி, மகள் முதலான சராசரிப் பெண்களுடன் கன்னியாகுமரியின் ஒரு மாற்று உரு நிலை என்ற முடிவு கொற்றவையில் இருக்கிறது. கண்ணகி என்பவள் தெய்வத்தின் ஒரு நிலை என்று முழு நிலையின் ஒரு கூறாக அவள் பார்க்கப்படுகிறாள். அவள் தனித்து ஒரு ஆற்றலாகப் பார்க்கப்படவில்லை. மிளர்கல் கதையில் கண்ணகி கொற்றவையின், கன்னியா குமரியின் ஒரு வடிவமாகப் பார்க்கப்படவில்லை. பாண்டிய மன்னன் கொடுங்கோலன் என்று அவனை ஒழிக்கக் கண்ணகி அவதாரம் எடுப்பதாக மக்கள் கொள்வதும் மிளர்கல் கதையும் ஏறத்தாழ ஒன்றுபோல் உள்ளது. கொற்றவை கதையில் பெண் என்பவள் தாய்க்கோழி. மற்ற அனைவரும் முதன்மையாக ஆண்கள் அந்தக் கோழியின் சிறகுக்குள் அடைந்துகொள்ளும் குஞ்சுகள். கொற்றவைப் புதினம் ஆண்-பெண் என்ற பால் வேறுபாட்டின்மேல் கட்டப்பட்டுள்ளது. மிளிர்கல் புதினம் முதலாளி-உழைப்பாளி என்ற வர்க்க வேறுபாட்டின்மேல் கட்டப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் குடும்பம்-அரசு என்ற நிறுவன வேறுபாட்டின்மேல் கட்டப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரக் கதைப்பாடல்கள் அரசு-மக்கள் என்ற அதிகாரம்-உரிமை என்ற வேறுபாட்டின்மேல் கட்டப்பட்டுள்ளன.

துணை நூல்கள்

1. சண்முக சுந்தரம் காவ்யா, 2010, கண்ணகிக் கதைகள் காலந் தோறும், காவ்யா, 16, இரண்டாம் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை 600 024
2. சண்முக சுந்தரம் காவ்யா, 2011, திராவிடத் தெய்வம் கண்ணகி, காவ்யா, 16, இரண்டாம் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை 600 024
3. டாக்டர் நசீம்தீன் பீ., 1992, கோவிலன் சரித்திரம், அன்னம் புத்தகமையம், 51-1, தெற்கு உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை 600 017
4. நடராசன் தி., 1979, கோவலன் கர்ண்ணகை கதை, ஈஸ்வரி வெளியீடு, 128- ஐயப்பன் நகர், திருப்பாலை, மதுரை- 625 014
5. நிர்மலாதேவி, சூ., 2003, கோவலன் கதை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சிஐடி வளாகம், தரமணி, சென்னை 600113
6. முருகவேள் இரா., 2014, மிளிர்கல், பொன்னுலகம் பதிப்பகம், 4/413 பாரதி நகர், 3ஆவது வீதி, பிச்சம் பாளையம் அஞ்சல், திருப்பூர் 641 603
7. ஜெயமோகன், 2005, கொற்றவை, தமிழினி, 67 பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 60014.

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

பேராசிரியர் ரா. செயராமன் அவர்கள்
திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில்
தமிழ்த்துறை தலைவராகப்
பணியாற்றி வருகிறார்.
மரபிலக்கணம், மொழியியல் ஆகிய
இரு துறைகளிலும் ஆழமான
ஆய்வுகளைச் செய்து வருகிறார்.
தமிழுக்கான கோட்பாட்டு
உருவாக்கத்தில் இவரது பங்களிப்பு
தவிர்க்கவியலாத அளவு
முதன்மை பெறுகிறது.

எந்த ஒரு ஆய்விலும் பேருண்மை என்பது முரண் வடிவில் இருந்து கொண்டிருக்கிறது. ஒற்றைக் கருத்து வடிவில் அந்த முடிவு இல்லை. உண்மை என்பது எதிர் எதிராகப் பிளவுபடுவதில் இருந்துகொண்டிருக்கிறது. மேலும் அது நிலையில்லாமல் இயங்கிக் கொண்டும் இருக்கிறது. தனக்கு ஏற்றபடித் திரிக்கப்படும்போது இயற்கை மனிதார்த்த நிலையில் மீண்டும் பிளவுபடுகிறது. மனிதனும் இயற்கையாக இருப்பதால் எந்த ஒரு மனிதரும் செய்யும் திரிபு இயற்கையின் திரிபாகச் சென்று சேர்கிறது. எந்த ஒரு புரிதலும் கோலம் போடுவதற்காக வைக்கப்படும் புள்ளிகள் போலத் தொடர்ச்சி அற்றதாக இருக்கிறது. புள்ளிகளைத் தொடர்புபடுத்திக் கருதுவதன் மூலம் அமைப்புகளும் முழுமைகளும் வடிவங்களும் புரிந்துகொண்டதாகக் கருத்து உருவாகிறது.

ISBN: 978-93-851651-8-4

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES